# அரசகுல யூதன்

அல்லது

# அடிமையை மணந்த சீமான்.

By

Mr. வி. மரிய இருதயம் பிள்ளை,
மதுரை.

✲

Published by
ஸ்ரீமதி மரிய இருதயரஞ்சிதம் அம்மாள்
மதுரை.

1939

Rights Reserved.

661

# அரசகுல யூதன்

அல்லது

# அடிமையை மணந்த சீமான்.

8

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அவ்வை
தி.சு. சண்முகம் நூலகம்.
தமிழியல் துறை

By

Mr. வி. மரிய இருதயம் பிள்ளை

மதுரை.

✲

"அரசகுலயூதன்" என்னும்
இப் புத்தகத்தின் சகல உரிமைகளும்
எனது மனைவி ஸ்ரீமதி மரிய இருதய ரஞ்சிதம்
அம்மாளுக்குச் சேர்ந்தவை.

---

1939

All Rights Reserved.

விலை { உள் நாடு ரூ. 0–12–0
வெளி நாடு ரூ. 1– 0–0

# "ARASA KULA YUDHAN"

BY

**Mr. V. Maria Iruthayam Pillai.**

## PREFACE.

My first idea was to comply with the request of the Author by dipping into the book here and there and forming a fairly correct impression of the work as to its manner and matter. But it could not be. I laid it down only after I came to the end of the story at a single sitting.

The story is that of the well-known **Ben-Hur**, by Lew Wallace, the American soldier and writer. This, however, is no translation. Taking the framework of the story, the Author has retold it in a manner all his own.

The hero யூதா (Juda) is the son of the richest of the Jews in Jerusalem, Ben-Hur by name, who is of Jewish royal blood. His father was the friend of Caesar and some of the noblest of the Romans, who all esteemed him for his virtues. The son is worthy of his noble father. The story begins by introducing us to the widowed mother Sarah, living with her only son and daughter and living only for their sake after the death of such a dearly loved husband.

An accident puts the whole family into the power of Juda's whilom friend and present foe, a young Roman adventurer named Massela, who, in league with the new Roman Governor of Jerusalem, secures the ruin of the family. Massela and his unscrupulous ally rob them of their property, the mother and

அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்.



daughter are thrust into a loathsome dungeon out of which they emerge only as lepers, and Juda is condemned to work as a galley-slave: and all this without even the form of a trial, and the Emperor at Rome being kept in utter ignorance of all these happenings.

Then comes the end of Juda's slavery, thanks to a nobleminded Roman naval officer, Quintus Arius, who adopts him as his own son. But now begins the grief of the hero, for he has never forgotten his imprisoned mother and sister and his ignorance of their fate keeps him restless. He comes to Antioch, meets his father's trusted agent, sees his beautiful daughter, Esther and falls in love with her. But this does not diminish his passionate longing to find out the fate of his mother & sister and avenge their wrongs. Meanwhile he sees his hated enemy, Massela, and resolves to take his revenge, which he does in a chariot race, maiming him for life.

A letter of Massela now luckily falls into the hands of one of Juda's friends, which proves Juda's innocence, and a petition is sent to the Emperor. The wicked Governor is dismissed and the wrongs done to the family repaired.

This is the time of Lord Jesus' ministrations and his coming to Jerusalem is availed of to rid the ladies of their fell disease: and the story ends happily after this, Juda himself becoming a devout follower of Jesus.

Passages referring to the hero's grief at the fate of his mother and sister prove the capacity of the Author in dealing with our primary emotions. Here is not only the hand of an artist, but also the sincerity of a man who writes simply what he feels.

The book contains several descriptions of natural scenery, which seem to be far removed from the rehashes we are familiar with. Tamil, perhaps, lends itself only too readily for balance and antithesis, alliteration and onomatopoeia, and a writer in that language, it would appear, could not be too chary in using these literary ornaments.

The other title of the novel apparently serves a double purpose: it is an explanation and it points a moral. Esther, whom Juda marries, is the daughter of a freed slave who, by his character and worth, rose to be the friend and confidant of his master. When what belongs to the hero is restored to him, Esther has only herself and no fortune to offer to her lover.

The great filial and fraternal love of the hero runs like a golden thread from start to finish, the love element, as generally understood and treated in books of the kind, kept in the back-ground to set off the love of the son to his mother and of the brother to his sister. This is the main interest of the story and this also is the outstanding impression left by the book.

A good story treated adequately, and a book eminently suitable for introduction as a text-book in our Schools.

A. M. S. RAGHAVAN, B.A., L.T.,
Head-master.
Arunachalam Chettiar's High School,
PALLATHUR.
(Ramnad Dt.)

✝

சேசு நாயகா நம:

# முன்னுரை.

அன்புடையீர்!

ஆழி சூழ் அவனியில் மனு மக்களாய்ப் பிறந்த ஒவ்வொருவருக்கும் நல் வாழ்வுக்கு இன்றியமையாச் சாதனமாயிருப்பது கல்வியே. அக் கல்வியைப் பயிலுவதும், நீதி நெறிகளை உணருவதும், நன்னெறி பற்றி ஒழுகுவதுமே உயர்வைக் கொடுக்கும். பாவமென்னும் கொடிய கூற்றுக்கு அடிமைப்பட்ட மனுக்குலத்தை மீட்கவும், இறவா இன்பம் பயக்கும் மோக்ஷ சாம்ராஜ்யத்திற்கு மனுமக்களை உரிமையாளராக்க அன்புருவாய் அவதரித்த ஆண்டவரை சகலரும் நன்குயறிந்து மகிழச் செய்வதும் கல்வியே. இக்கல்வி மக்களின் நிறத்துக்கும், திறமைக்கும், நிலைமைக்கும், நாட்டின் வழப்பத்திற்கும் தகுந்தாற்போல பலவித உருக்கொண்டிருக்கிறது. இஃதெவ்விதமிருப்பினும், நன்மை தீமையென்ற பாகுபாடுகளை எடுத்துணர்த்தி ஆருவது அறிவாகிய பகுத்தறிவை வளரச் செய்து சகலருக்கும் மேன்மையைக் கொடுத்து நன்மையை உண்டாக்குவதே உண்மைக் கல்வியாம்.

ஆனால் இந் நாட்களிலோ, அறிவின் முதிர்ச்சியாலேற்பட்ட வேறோர்வித கல்வி தோன்றி, மனிதரை பூத பௌதீக ஆராய்ச்சியில் ஈடுபடுத்தி, தெய்வமுமில்லை பூதமுமில்லை, சகலமும் இயற்கையின் தோற்றமே எனப் புகட்டி, நாஸ்திகத்தனத்தை உணர்த்தி, நாட்டில் பெருந் தீங்கை விளைவித்து வருகிறது. இத் தீமையின் பயனாய் உலகமெங்கும் பரவியிருந்த நடு நிலை நற் சமாதானம் நாளுக்கு நாள் நசித்துப் போய்க்கொண்டிருக்கிறது. மக்களிடையே நவநாகரீகமும் பாவ அக்கிரமமும் மிகுந்து விட்டது. பாவமாகக் கருதப்பட்ட செய்கைகளெல்லாம் குற்றமற்றவையாகிவிட்டன. அமைதியுடன் இன்ப வாழ்வெய்தியிருந்த மக்களின் உள்ளத்தில் குரோதம், பழி, வர்மம் எனுங் கொடிய குணங்கள் குடிபுகுந்து விட்டன. எப்பக்கத்திலும் போர் முரசு சப்தித் தொலிக்கிறது. எங்கு பார்த்தாலும் பஞ்சம், பிணி, துன்பமே பெருகியிருக்கிறது. இதற்கெல்லாங் காரணம் தெய்வ பக்திக் குறைவே.

மாதம் மும்மாரி பெய்த நம் பாரத நாட்டில், வானம் வழங்காமல் வறண்டதற்குக் காரணம் நாஸ்திகக் கூற்றுவனின் தோற்றந்தான். தொன்று தொட்டு தெய்வ பக்தியிற் சிறந்து விளங்கும் நம் தாய் நாட்டிலும் நாஸ்திகக் கொள்கைகள் தலையெடுத்துலாவ ஆரம்பித்திருப்பதும் பெருங் கொடுமையே. நற்புத்திகளைப் புகட்டும் நூல்கள் இருந்த விடந் தெரியாமல் மறைந்து கொண்டிருக்கின்றன. அக்கிரம தப்பறைகள் நிரம்பிய புஸ்தகங்கள் ஏராளமாக வெளிவந்து மலிந்துகிடக்கின்றன.

பல ஜாதி மதங்கள் நிரம்பியிருப்பதும், தனி உலகம் போன்றதும், இயற்கை யின்பங்களை நிறையக் கொண்டதும், பல் நிற மக்களும் குடி புகுந்து வாழும் உயர்வைக் கொடுப்பதுமான இந்திய நாட்டில், மக்களிடையே ஒரு சார்பார் ஆத்மபலங்குன்றி, துஷ்டர்களாய் மாறி, பெருந் துன்பம் விளைவிக்கின்றனர். வேறநேகர் சகோதர ஒற்றுமைக்குக் கேடாய் தன் ஜாதி, தன் மதம், என்னும் உன்மத்தர்களாகி, முன்னேறும் மார்க்கமின்றி ஒன்றுக்கு முதவாதவர்களாகி, கடவுள் கொடுத்துள்ள அபார சக்திகளை அபத்தமாக்குகின்றனர். இவ்வித மாறுபாடுகளை ஒழிக்க முயலுவதும், யார் யார் எவ்வெக் கொள்கைகளை யுடையவர்களாயிருப்பினும், வேற்றுமை சற்றும் பாராட்டாமல் நாமெல்லோரும் கடவுளின் பிள்ளைகளென்ற எண்ணமுடையவர்களாய் ஒழுகுவதே உயர்வைக் கொடுக்கும். இவைகளை அடிப்படையாகக் கொண்டு நான் எழுதியுள்ள **"அரச குல யூதன்"** என்ற புஸ்தகத்தை சகலரும் வாசித்து இன்பமடையக் கேட்டுக் கொள்ளுகிறேன். இப்புஸ்தகத்திலிருப்பது கட்டுக் கதையல்ல. ரோமர் ஆட்சியில் நடந்த ஓர் உண்மையான நிகழ்ச்சியே. இஃது ஆங்கில பாஷையிலும் பல ஆண்டுகளுக்கு முன்பே வரையப்பட்டிருக்கிறது.

இப்புஸ்தகத்திற்குப் பிழை திருத்தம் செய்து எனக்கு உற்சாக மூட்டிய கானாடுகாத்தானிலிருக்கும் வித்வான் ஸ்ரீமான் **V. K. A. சிவசுப்பிரமணிய பிள்ளை** அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைச் செலுத்துகிறேன்.

**வி. மரிய இருதயம்,**

(தற்சமயம்) காரைக்குடி.

அவ்வை
தி. க. சண்முகம் நூலகம்.
திருப்பத்துறை.

# CONTENTS.

| அத்தியாயம். | | பக்கம். |
|---|---|---|
| 1. | சிநேகமும் பகைமையும் | 1 |
| 2. | தாயும் மகளும் | 10 |
| 3. | ராஜப் பிரதிநிதி பவனி அல்லோல கல்லோலம் | 22 |
| 4. | பட்டகாலிலே படும் கெட்டகுடியே கெடும் | 28 |
| 5 | தண்டு வலிக்கும் அடிமை | 36 |
| 6. | அடிமையின் கஷ்ட நிவாரணம் | 48 |
| 7. | காணாமற்போன புதையலைக் கண்டவன் | 59 |
| 8. | வழிப்போக்கன் முல்லா | 74 |
| 9. | உற்சவமும் உறவும் | 79 |
| 10. | நல்லவர் உறவும் நற்போதகரின் செய்தியும் | 92 |
| 11. | மகளின் ஏக்கம் தந்தையின் தாகம் | 107 |
| 12. | காதல் வெளியாதல் | 116 |
| 13. | பந்தய இரதவோட்டம் | 134 |
| 14. | பழைய வீடு | 150 |
| 15. | குஷ்டரோகிகள் | 166 |
| 16. | சுகமும் சுபமும் | 177 |

மதுரை காமராசர் பல்கலைக்கழக
அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்.
தமிழியல் புலம்

# அரசகுல யூதன்

அல்லது

# அடிமையை மணந்த சீமான்

✲

## முதல் அத்தியாயம்.

### சிநேகமும் பகைமையும்

பூமியில் பாவாக்கிரமம் அதிகரித்து மக்கள் பாழும் நரகிற் காளாவதைக்கண்ட கருணையங் கடவுள் மன்னுயிரை மீட்கத் தன்னுயிரைக் கொடுக்குந் தியாகபுருஷராக சேசுக் கிறிஸ்து எனும் திருநாமம் பூண்டு அவதாரம்செய்த காலத்திலே தான் உரோமை மன்னர் உலகம் எத்திசையும் ஆண்டுவந்தனர். யூதேயா நாடும் அவர்கள் ஆளுகைக் குட்பட்டிருந்தது. இந் நாட்டின் பெருமை எளிதில் இயம்புந்தரமன்று. அரேபியா தேசத்தின் வடமேற்கில் இஃதோர் பாகம். உன்னத மகான் களை உலகிற்குதவிய புண்ணியபூமி. இப் பரந்த உலகில் மத்திய ஸ்தானம் வகிக்கும் மஹோன்னத பீடம். உலகோருக்கு இகபர சுகம் கொடுக்க, நல்வழிகாட்ட, நற்போதகம்ஊட்ட, அக்கிரம தப்பறைகளை விரட்டியோட்ட, சத்திய திருச்சபையைப் பூமியில் நிலைநாட்ட, சர்வசுகிர்த இலக்ஷண குணசிரேஷ்டராய் தயைசாந்த வடிவாய் அவதரித்த ஆண்டவர் சேசுக்கிறீஸ்து பெருமானை நல்கிய ஜெருசலேம் நகர் இத்தேசத்தின் ஆணிமுத்தென தலைநகராய் விளங்காநின்றது.

அப்பட்டணத்தினருகே சீயோன் மலையென்று ஒரு குன்றுண்டு. அம்மலையின் சிகரத்திலிருந்து பட்டணத்திற்குப் போகும் வழியில் ஓங்கிவளர்ந்த மரங்களையுடையதும், கண்களைக் கவரும் இன்பக் காக்ஷியளிக்கத் தக்கதுமான பல நந்தவனங்கள் அழகாய் அமைந்துநின்றன. அவைகளுள் மலைச்சரிவிலிருந்த தோட்டமே மிகவும் பெரியதாயிருந்தது. அங்கு நறுமணங் கமழும் நானாவித மலர்கள் நிரம்பிய உயர்தரப் புட்பச்செடிகளும் அவைகளைச் சுற்றிலும் பட்டுக்கம்பளங்களை விரித்தாற்போன்ற பசும்புற்றரைகளும், அப்புற்றரைகளில் மேய்ந்துதிரியும் மான், மறை, குதிரை, ஆடு, மாடு முதலிய மிருகங்களும், ஆங்காங்கு வரிசை வரிசையாக கல-கலவென ஒன்றோடொன்று இழைந்து மோதி ஆடி சப்திக்கும் வானளாவ ஓங்கி உயர்ந்து பருத்துத் திரண்ட எண்ணிறந்த மரங்களும், அம்மரங்களைப்பற்றிப் படர்ந்திருக்கும் கொடிகளும், காணற்கரிய காட்சியாயிருந்தது. கிள்ளை தத்துவதும், மாங்குயில் கூவுவதும், பல்நிறக்குருவிகள் மரக்கிளைகளிலிருந்து இனிமையாகப் பாடுவதும், குரங்குகள் கீச்சுக் கீச்செனக் கூச்சலிடுவதும், குதிரைகள் கனைப்பதும், நாய்கள் குரைப்பதும், பன்றிகள் உறுமுவதும், கன்றுகள் கதறுவதும், சீயோன்மலை இச்சப்தங்களை இரட்டித்து எதிரொலியிடுவதுமான இன்பத்தொனி எங்கும் பரவிநின்றது.

ஆங்காங்கு தெளிந்த நீரையுடைய வாவிகள் பல பளபளவென விளங்கின. அவைகளின் கரைகளில் தவளைகளின் தனிதமும், தண்ணீரில் மூழ்கி மூழ்கி எழுந்திருக்கும் மீன்கொத்திக் குருவிகளின் வனப்பும், அக்குளங்களைச் சுற்றிச் செறிந்துமலிந்து கிடக்குங் கோரை, நாணல், மூங்கில் முதலியவைகளின் ஆர்ப்பும், கெண்டைமீன்கள் தண்ணீருக்குமேல் குதித்துவிழும் நேர்த்தியும் சிரகி, நாரை, காகம், பருந்து முதலிய பக்ஷிஜாதிகள் ஒன்றோடொன்று சண்டையிட்டு புழு, பூச்சி, மீன் முதலியவைகளைக் கொத்தித் தின்னும் விந்தையும், கரையோரங்களில் உள்ள பசும் புல்லை மேய்ந்து தின்னும் ஆடுகளின் அலம்பலும், மலையடிவாரத்தில் கிளம்பும் நரிகளின் ஊளையும், எருமைகளின் இயம்பலும்,

கோவேறுகழுதைகளின் கர்ணகடூரமான கானமும், தோட்டத்தி லுள்ள புஷ்பங்களின் இன்பத்தேனை யுண்டு உல்லாசமாய்ப் பறந்து திரியும் வண்டுகளின் ரீங்காரமும், வனப்புட்களின் வாத்தியம் போன்ற பலதொனிகளும் அருகிலிருக்கும் மலையினின்று கீழே வழிந்து இழியும் ஓடைகளின் ஒலியும், இவைகள் சிலவிடங்களில் உயரத்திலிருந்து கீழேயிருக்கும் பாறைகளில் விழுந்து பாய்ந்து தெறிப்பதனால் உண்டாகும் துளிகள் சூரிய ரஸ்மிபடும்போது நவரத்தினங்களை நிகர்த்து ஜொலிப்புடன் ஒளியிட்டுப் பிரகாசிப் பதும் யாவர்மனதையும் பரவசப்படுத்தும்.

சர்ச்சனர்க்கும், துர்ச்சனர்க்கும், கற்றவர்க்கும், அற்ற வர்க்கும், தூயவர்க்கும், தீயவர்க்கும், சிறியோருக்கும், பெரியோ ருக்கும், ஆண் பெண்பாலர் சகலருக்கும் நற்சுகங்கொடுக்கும் இப் பூங்காவனம் ஆதாம் ஏவாள் உய்யும்வண்ணங் கடவுள் படைத்த சிங்காரத்தோப்பு இதுதானோவென்று தயங்கச்செய்யும் தன்மை யுடையதாயிருந்தது.

இப் பூந்தோட்டத்தின் முன்னே பெரியஆலமர மொன் றிருந்தது. அம் மரத்தின் விழுதுகள் ஒன்றில் ஒரு சிறுவன் உட்கார்ந்து ஊஞ்சலாடிக் கொண்டிருந்தான். அவனுக்கு வயது பதினேழிருக்கும். வெண்மையான நீள அங்கியொன்றை அணிந் திருந்தான். தன் ஜாதி வழக்கம்போல் தலையில் முக்காடிட்டிருந் தான். இவன்தான் யூதவம்சத்தவரான பிரபல வர்த்தகர் பென்ஹூர் என்ற பிரபுவின் ஒரேபுத்திரன் யூதா. இவனும் இவன் தங்கை திருஷாவும் சிறுபிள்ளைகளாயிருக்கும்போதே பென்ஹூர் என்ற பிரபு இறந்துபோனார். கணவனையிழந்த இவர் கள்தாய் கொண்டதுக்கம் கொஞ்சமல்ல. தன்னருமைக் குழந்தை களுக்கு நல்லறிவு, நற்பழக்கம், நற்செயல் முதலியவைகளையூட்டி நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்து தன் கண்ணின் மணிகளெனக் காத்துவந்தாள்.

பாலப் பருவமுதல் யூதா மேஸலாவென்ற உரோமச்சிறுவ னுடன் பழகி வந்தான். காளளைவில் இருவரும் இணைபிரியாச்

சிநேகிதராயினர். மேஸலா யூதேயாவில் கப்பம் வாங்கும் உத்தியோகஸ்தனின் குமாரன். இவன் யூதாவைக் காட்டிலும் இரண்டு வயதுக்கு மூத்தவன். மேஸலாவுக்குப் பன்னிரண்டு வயதானவுடன் அவன் தந்தை அவனைக் கல்வி கற்க உரோமை நகருக்கு அனுப்பிவைத்தார். உயிருக்குயிராயிருந்த தனது நண்பன் தன்னைவிட்டுப் பிரியும்பொழுது யூதா அவனைக் கட்டிப் பிடித்து "கோ" வென அழுதான். அவன் யூதேயாவுக்குத் திரும்பி வரும்வரை வேறுயாருடனும் நட்புக்கொள்ளுவதில்லை யென பிரதிக்கினை செய்தான். அப்படியே அவன் எவருடனும் பழகாமல் தன் தங்கை திருஷாவுடன் உபாத்தியாயரிடங் கல்வி கற்பதிலும், ஓய்வான நேரங்களில் தன் தங்கையை வாத்தியம் வாசிக்கவும், பாட்டுகள் பாடவும் சொல்லி அவைகளைக்கேட்டு இன்பமடைவதிலும், பந்துவிளையாடுவதிலும், போதுபோக்கினன் தன் சகோதரி நூல், துணி, பட்டு முதலியவைகளிற் செய்யும் சித்திரவேலைகளைத் தானும்செய்ய முயற்சிப்பான். வீணை வாத்தியம் வாசிக்கக் கற்றுக்கொள்ளப் பெரிதும்விரும்புவான். மாலைக் காலங்களில் தனியே மேற்கூறிய பூந்தோட்டத்திற்குப்போய் உலாவிவருவான். அங்கு பலசிறுவர்கள் தங்கள் சிநேகிதர்களுடன் யாதொரு கவலையுமில்லாமல் துள்ளிக்குதித்து ஓடிவிளையாடுவதைப் பார்த்துத் தன்னுடன் அவ்விதம் விளையாட மேஸலா அங்கில்லையே யென்றெண்ணி வருத்தமுறுவான்.

இவ்விதம் ஐந்தாண்டுகள் கழிந்தன. மேஸலாவும் கண்டோர் கண்களைக் கவரத்தக்க அழகிலும் ஆற்றலிலும் மேன்மையுடைந்தவனாய் ஜெருசலேமுக்கு திரும்பிவந்தான். அவனுக்கு இப்பொழுது வயது பத்தொன்பது. அவன் தேகபலமும் மனோதைரியமும் பேரழகும் படைத்த ஓர் உயர்குலமகனாய் விளங்கினன். அவனைப் பார்க்கும் யாவரும் விரும்பத்தக்க பேரழகிற் பிறங்கினன். தனது நேசன் சகலகலா வல்லபனாகி யூதேயாவுக்கு திரும்பிவந்திருப்பதையும் கூடியசீக்கிரம் உத்தியோக பதவியிலமருவானென்பதையும், யூதா அறிந்து பேரானந்தங்கொண்டான். மேஸலாவுக்கோ தனது பாலிய நண்பன் யூதாவின் நினைவு சிறிதுமில்லை. தன் தந்தையைப்போல வித்தையிலும், புத்தியிலும்,

சாமர்த்தியத்திலும், வீரதீர பராக்கிரமத்திலும், சிறந்தவனென தாக வெண்ணி அகங்காரங்கொண்டான். விரைவில் அரசாங்கத் தில் ஓர் உயர்பதவி கிட்டும் என்று நினைத்தான். சேனைகளை நடத்தும் தந்திரத்தில் கெட்டிக்காரனென தாக வீண்கர்வங்கொண் டான். உரோமையிலிருந்து திரும்பிய சிலதினங்களாகத் தன் தந்தையின் அந்தஸ்திற்கொத்த உரோமர்களின் வீடுகளுக்கு விருந்துண்ணச் சென்றிருந்தான். பலதடவைகளில் யூதா மேஸலாவின் வீட்டிற்கு அவனைத்தேடிப் போனான். ஆனால், அவனைக் காணமுடியாமற் றயங்கினான். தனது நண்பன் தன் னைக்காணவும் வரவில்லையே யென்றேங்கினான். ஒன்றும் புரி யாமல் மனங்கலங்கினான்.

இப்படியிருக்கையில் ஒருநாள் மாலை சுமார் நான்கு மணிக்கு மேற்கூறியவிதம் நந்தவனத்தின் முன்னுவிருந்த ஆல மரத்தின் விழுதொன்றில் ஊஞ்சலாடியவிதம் யூதா தனதுநண்பன் மேஸலாவுடன் சிறுபருவம்முதல் தான்கொண்ட நேசப்பாங்கை யும் அவன் தற்போது தன்னை நினையாதிருக்கும் தன்மையையும் எண்ணி வருந்தினான். அந்நேரத்தில் தனியே ஒருவன் தோட் டத்திற்குள் நுழைவதைக் கண்டான். சற்று உற்றுநோக்கி அவன் தன் சிநேகிதன் மேஸலாவெனத் தெளிந்தான். உடனே அவன் பின்னே ஓடி அவனை இறுகக்கட்டிப் பிடித்தான். "மேஸலா! என் அருமை நேசா! உன்னை மறுபடியுங்காணக் கருணைபுரிந்த கடவுளுக்குக் கோடானுகோடி நமஸ்காரம். சிறுவயது முதல் என்னுடன் உயிருக்குயிரான சிநேகங்கொண்டிருந்த நீ இவ்வைந் தாண்டிற்குள் எவ்வளவு மாறுதலடைந்துவிட்டாய். என்மேல் உனக்கிருந்த பேரன்பு எங்கே? பேரறிவும், பேராற்றலும், பேரழ கும், பெருந்தகைமையும், படைத்துச் சிறந்துவிளங்கும் நீ இன்று ஓர் அழகிய அரசிளங்குமரனுய் விளங்கும் பெருமை உன் அன்பில் ஈடுபட்டிருக்கும் என்னை மறக்கச் செய்ததோ!" எனப்பலவாறு அரற்றினான்.

மேஸலா சிறிது சிரமத்துடன் யூதாவின்கரங்களினின்றும் தன்னை விடுவித்துக்கொண்டு "இதென்ன அநாகரீகம்! உன்ஜாதி

யினருக்குத்தான் நல்ல பழக்க வழக்கமில்லையானாலும் என்னுடன் பழகின உனக்கும் என் நல்லொழுக்கம் தெரியாமற்போயிற்று. பெண்பிள்ளைகள் போல் வாயில் வந்ததெல்லாம் பிதற்றுகிறாயே. கண்டவர் பரிகாசம் செய்யவா என்னைக் கட்டிப்பிடிக்கிறாய். நாம் இருவரும் என்ன இன்னும் விளையாட்டுப்பிள்ளைகளா?" எனக் கேட்டான். யூதனுக்குப் பேச நாவெழவில்லை. மேஸலாவின் குணம் முழுதும் மாறிவிட்டதை அறிந்தான். அதற்குக் காரணம் அவன் கற்றுக்கொண்ட அரைகுறைக் கல்விதானெனத் தீர் மானித்தான். செய்வதின்னதெனத் தோன்றாமல் திகைத்தான்.

அச்சமயத்தில் தோட்டத்திற்குள்ளிருந்து சில சிறுவர்கள் ஒரு பைத்தியக்காரனைத் துரத்திக்கொண்டு வெளியில்வந்தார்கள். அவன் பகரும் வேடிக்கைமொழிகள், செய்யும் சேஷ்டைகள் முதலியவைகளால் சந்தோஷம் மேலிட்டுக் குதித்துக் கூத்தாடி ஆரவாரம் செய்துகொண்டு வந்தனர். பைத்தியக்காரனோ "என் மகனே, என் செல்வமே என்கண்ணே, காதே, மூக்கே, வாயே, கையே, காலே, என் உயிரைக்காணுமே நீ உயிர் வாழ்ந்து என்ன பலன்..............எதை நினைத்து நானழுக. இந்தச் சின்னப்பயக என்னை விரட்டுறதை நினைத்தழுவா. அவுங்க வீடு குட்டிச்சுவ ரானதை நினைத்தழுவா. மோசே சட்டத்தை எல்லோரும் மீர்றதை நினைத்தழுவா. நான் மொட்டத்தலையனா யிருக்கிறதை நினைத்தழுவா. இந்தத்தோட்டம் இருக்கிற நேர்த்தியைக் கண் டழுவா. இவுங்க ரெண்டுபேரும் (மேஸலாவையும் யூதாவையும் சுட்டிக்காண்பித்து) இம்முனு நின்னுக்கிட்டிருக்கிறதை நினைத் தழுகவா. டனுக்கு டனுக்கு ஜினுக்கு ஜினுக்கு பீம் பிம் பீம் பீப்!" என்று சொல்லிக்கொண்டே ஓடினான். சிறுவர்களும் "உய்!!" என்று உற்சாகத்துடன் கூச்சலிட்டுக்கொண்டு அவன்பின்னே ஓடினார்கள்.

அப்பொழுது மணி-5½ இருக்கலாம். தோட்டத்திலிருந்த சகலரும் பட்டணத்தை நோக்கிப் புறப்பட்டுவிட்டார்கள். யூதா வும் மேஸலாவும் தனியே மௌனமாய் அங்கு நின்றனர். யூதன் தான்கொண்ட எண்ணம்முழுதும் ஏமாற்றமானதை நினைத்து

வருந்தலானன். மேஸலாவும் தனது பாலியநண்பன் மனம் கலங்கி வருந்துவதைக் கண்ணுற்றான். அவன்கரத்தைப் பிடித்து இழுத்தான்.

மேஸலா:—யூதா, நாம் இன்னும் சிறு பிள்ளைகளல்லவே. இவ்வாலிபப் பிராயத்தில்தான் நமது ஜீவியத்திற்குத் தேவையான அநேகவிஷயங்களைக் கற்றுக்கொள்ள வேண்டும். அவற்றுள் சிலவற்றை உனக்குச் சொல்லிக் கொடுக்கிறேன். வா அந்த மரத்தடியில் உட்காரலாம்.

யூதா:—இல்லை. இல்லை. நான் வீட்டிற்குப் போகவேணும். எனக்குச் சொல்லிக்கொடுக்க உபாத்தியாயர் உண்டு. நான் உன்னிடங்கொண்ட சிநேகம் சூரியன்முன் பனிபோலாயிற்று. முழுதும் ஏமாற்றமடைந்தேன். எனதறியாமையே இதற்குக் காரணம். மேட்டிமை, பெருமை, அகங்காரம், கருவம் இவைகளே உரோமரின் உயர்குணங்கள்.

மேஸலா:—உனக்கென்ன பைத்தியம் பிடித்துவிட்டதா? வாயில் வந்தபடி உளருதே. உன் அறியாமைக்குக் காரணம் வயதுக்குத்தக்க படிப்பின்மைதான்.

யூதா:—நீ மட்டுந்தான் படித்திருப்பதாய் எண்ணிவிட்டாய். கடந்த ஐந்துவருஷங்களாக படிப்பில்லாதிருந்தேனென நினைத்துவிட்டாயோ. ஆனல் எனது குருவுக்குமுன் உனக்குக் கல்வி புகட்டிய குருசிங்கத்தின்முன் எலி என்று நினைத்துக்கொள்ளு.

மேஸலா:—யூதா நீ உலக அனுபவமற்றவன். விசாலமான கல்வி கற்கும் மார்க்கமில்லாதவன். ஒன்றுந் தெரியாத உன்னிடம் வார்த்தையாடுவதிலென்ன பயன். உரோமர்களின் சீரும் சிறப்பும், பேரும் பெருமையும், உனக்கென்ன தெரியும். கீழ்த்திசையிலுள்ள நாடுகளை ஜெயித்து, ஜெயக்கொடி நாட்டிய மகா அலெக்ஸாந்தரின் வேலையைத் தொடர்ந்து அவரால் கைப்பற்றப்படாத நாடுகளைக் கைப்பற்றியும், கண்டு பிடிக்கப்படாத தீவுகளைக் கண்டு உலகத்திற்கறிவித்தும், உலகத்தில் சமாதா

னத்தை உண்டுபண்ணி மக்களை அமைதியுடன் உய்யச் செய்யவும், கங்கணங் கட்டிக்கொண்டிருக்கும் உத்தம உரோமர்களை இழிவு படுத்திப் பேசுகிருய். நான் உன்னைச் சிநேகித்திருந்ததிற்காக இன்று மன்னித்தேன். கூடிய விரைவில் வெளி தேசங்களுக்குப் புறப்படவிருக்கும் யுத்த சைனியங்களுக்கு நான் தளகர்த்தஞகப் போகிறேன். வெற்றியுடன் திரும்பினல் எனக்குப் பெரிய பதவிகள் கிட்டும். நீ படித்த படிப்பைக்கொண்டு என்ன செய்யப்போகிருய். உனக்கு மற்றவர்களைப் பழிப்பதும் உண்பதும் உறங்குவதுமான சோம்பேறி வேலைதான் தெரியும்.

உரோமனுடைய வார்த்தைகளைக் கேட்ட யூதனின் கண்கள் சிவந்து கலங்கின. பதிலுரைக்க முடியாமற்றயங்கிஞன்.

மேலலா:—உரோமர்களின் தன்மையைச் சொன்ன நான் யூதர்களின் நிலைமையையும் தெரிவிக்கிறேன் கேள். கடவுள் படைத்த சகல பொருட்களிலும் காலத்திற்கேற்ற மாறுதல்களுண்டு. ஆனல் யூதர்களோ ஒரு மாற்றமுமில்லா மடையர்கள். அவர்களின் வாழ்வு ஒரு வட்டத்தைப் போன்றது. சுற்றிச்சுற்றி ஓரேவிடந்தான். தங்கள் தேசம் தவிர வெளியுலகம் அவர்களுக்குத் தெரியாது. எத்தேசத்தவரும் அவர்களை விரும்புவதில்லை. சித்திரவேலையும் சிற்பவேலையும் அவர்களுக்குப்பாவமானசெய்கைகள். கட்டிடங்கள் கட்டுவதில் கீர்த்தி வாய்ந்த ஏரோதரசனைப் பாவி யென்றழைத்த பாமரர். கோவிலே கெதியென்று பாசாங்கு செய்து அங்கு அவர்கள் தெய்வத்திற்கும் அஞ்சாமல் கட்டிக்கொள்ளும் பாவங்கள் கொஞ்சமா! பஞ்சமா பாதகர். அநியாய வட்டி வாங்கித் தம்மினும் வறியோரை வாட்டுவதே அவர்களின் அயராதவேலை. கோவில்தவிர வெளியில் எங்கும் பிரசங்கிக்கும் வன்மையற்றவர்கள். யாருமறியாத ஆபிரகாமும், ஈசாக்கும், யாக்கோபுமே, அவர்களுக்கு நல்வழி காட்டுபவர்கள். அமர்க்களத்தில் ஆறுநாளடைந்த வெற்றியை ஏழாவதுநாள் இழந்துபோகும் தீரர்கள். ஒரே வார்த்தையில் யூத வம்சம் ஒரு மாற்றமுமில்லா மடையர்கூட்டம்.

"சீ! சீ!! நிறுத்தடா உன் பிரசங்கத்தை. என்னையும் என் குலத்தையும் இழிவுபடுத்திப் பேச உனக்கென்ன அவ்வளவு ஆணவம். எங்கள் நாட்டில் பிழைக்கவந்த பரதப்பயல் உனக்கிவ்வளவு கர்வமா? உன் பேச்சுக்களுக்குத் தக்க சன்மானம் இந்தா பெற்றுக்கொள்ளு" என்று சொல்லிக்கொண்டே யூதா மேஸலாவின் கன்னத்திலடித்தான். அவன் அதைத் தடுத்துக் கொண்டான். புலிபோல் இருவரும் கோபாவேசமாய் ஒருவர் மீதொருவர் பாய்ந்தனர். இருவருக்கும் பலத்த மல்யுத்தம் நடந்தது. படைப் பயிற்சி படைத்த உரோமனுடன் யூதன் தீரமாய்ச் சண்டை செய்தான். தன் ஜாதியைப்பற்றி குறைவாக அவன் பேசிய வார்த்தைகளால் உண்டான கோபமும் மனவெழுச்சியுமே யூதனுக்குப் போதுமான பலத்தையும் தக்க தைரியத்தையும் கொடுத்தது. சற்று நேரத்தில் இருவரும் களைத்துப்போய் கீழே விழுந்து தரையின் மேல் புரண்டு உருண்டனர். பிறகு எழுந்து நின்று அவரவர் ஆடைகளில் படிந்த மண்ணைத் தட்டிப்போக்கிக் கொண்டு நின்றனர். மீண்டும் சண்டையிட பலமற்றுப் போயினர். யூதாவுக்கு மட்டுங் கோபந் தணியவில்லை. பற்களை நெற நெறவெனக் கடித்தான். கைகளை இறுகப் பிசைந்தான். கண்களை உருட்டினான். "அடே உரோமப் பதரே, இன்று முதல் நீயென் ஜென்ம சத்துரு. யூத வம்சத்தைக் கேவலமாய்ப் பேசிய உன்னைச் சும்மாவிடேன். என் ஆசை தீர உன்னை நாசமாக்க இன்றே கங்கணங் கட்டிக் கொள்ளுகிறேன்." என்று கர்ஜித்தான். மேஸலா அசட்டுத்தனமாக தலையை அசைத்துக்கொண்டு பயந்து விரைந்து ஓடினான். யூதாவோ மதம் பொழியும் மதகஜம் போன்று உன்மத்தனாய்த் தன் வீட்டைநோக்கி நடந்தான்.

---

# இரண்டாவது அத்தியாயம்.

## தாயும் மக்களும்

உஸ்....ஸ்....ஸ் என்றிரைந்தசையும் விருக்ஷஜாதிகளும், அவைகளில் தங்கித் தங்களைப் பகல் முழுதுங் காத்த கடவுளைத் தோத்திரித்து சங்கீதம் பாடுவதை நிகர்த்த சிறு சிறு குருவிகளின் இன்னிசைபொருந்திய ஓசையும், ஆகாயத்தில் தோன்றும் வானவில் வர்ணங்களைத் தாழ்த்தக்கூடிய வித வித வர்ணங்களமைந்த அலங்கிருத மலர்களின் மாலை மதுவையுண்டு கிளம்பும் வண்டினங்களின் 'ரீங்' கென்ற தொனியும், மலர்களிலிருந்து கிளம்பும் மனதிற்குகந்த நறுமணங்கமழும் நாற்றமும், சுகந்தருங் காற்றுடன் விரவிப் பொலிந்து வீசும் மேன்மை கொண்டதோர் தோட்டத்தை வளைத்து மறைத்துக் காத்து நிற்பதுபோன்ற பிரமாண்டமான அரண்மதிற்கள் ஜெருசலேம் பட்டணத்தின் மத்தியில் காணப்பட்டன. அதன் வடபக்கமிருந்த சுவற்றின் மத்தியில் அமையப்பெற்ற கோட்டைக் கதவுகள் திறந்து வைக்கப்பட்டிருந்தன. அவைகளின் பின்புறத்தில் வெள்ளைச்சுண்ணந் தீட்டப்பெற்று ஆகாயத்தை அளாவி உயரமானதொரு மாளிகைதோன்றினது. அதின் மேற்கூரை ஓடுகளால் வேயப்பட்டிருந்தது. இதுதான் பென்ஹூர் பிரபுவின் "இன்பநிலையம்" என்றவீடு.

தோட்டத்தின் பின்புறமிருந்து யூதா வீட்டை நோக்கி வேகமாய் வந்துகொண்டிருந்தான். அங்கங்கே வேலைகளைக் கவனித்துக்கொண்டிருந்த பணியாளர்களும், அடிமைகளும், அலுவல்களை நிறுத்தி செய்த மரியாதைகளை வழக்கத்திற்கு மாறாக அவன் கவனிக்காது செல்லுவதைக்கண்டு ஆச்சரியமடைந்தனர். ஆனல், அவனே பின்பக்கமிருந்த படிகளின் வழியாக வீட்டின் மேல் உட்புறக்கட்டுக்கேறி அங்கிருந்த விசாலமானதொரு அறைக்குள் போனான். அங்கு விரித்து வைக்கப்பட்டிருந்த ரத்ன

கம்பளத்தின் மேல் உட்கார்ந்தான். கவலையுடன் கைகளால் முழங்கால்களைக் கட்டிப்பிடித்துத் தலையைக் கைகளின்மேல் வைத்துக் குனிந்தபடியே உட்கார்ந்திருந்தான்.

அச்சமயம் கையில் விளக்குடன் ஒரு வேலைக்காரி அவ் வறைக்குள் நுழைந்தாள். அவளுக்கு சுமார் 50-வயதிருக்கும். பருத்த திரேகமுள்ளவள். பெரிய தொள்ளைகளுள்ள அவள் காதுகளும், தடித்த உதடுகளும், மூக்கும், தலையிலிருந்த வெள்ளைத் தொப்பியின் கீழே வளைந்து வளைந்து சுருண்டு தொங்கும் அவளது தலைமுடியும், அவள் எகிப்து தேச மங்கையெனத் துலக்கின. பென்ஹூர் பிரபு அடிமையாயிருந்த இவளை விலைக்கு வாங்கினர். சில வருடங்கள் முன்பே, இவளது உண்மை விசுவாசத்தைக் கண்டுமகிழ்ந்த பிரபு, அவளுக்கு சுய உரிமைகொடுத்து எகிப்துதேசம் போக அனுமதியளித்தார். பிறந்ததுமுதல் தான் அன்புடன் வளர்த்த அருமை திருஷாவையும் யூதாவையும் விட்டுப்பிரிய மனமின்றி அங்கேயே தன் வாழ்நாளைப் போக்குவதாய் தெரிவிக்கவே, பிரபுவின் குடும்பத்தார் சகலரும் அவளை வேலைக்காரி யென்றெண்ணாமல் அவளிடம் சொந்தம் பாராட்டி வந்தனர். இவள் பெயர் அமரா. தான் அன்புடன் சீராட்டிப் பாராட்டி வரும் அருமைத்தனையன் யூதா, கவலையுடன் தலைகுனிந்திருப்பதைக்கண்டு; கொண்டுவந்த விளக்கை ஒரு ஸ்தம்பத்தில் வைத்து விட்டு, யூதாவின் கால்களைப் பிடித்து அன்புடன் அசைத்தாள்.

அமரா:— இதென்ன ஒரு மாதிரியாய் இருக்கிறாய்? என்றுமில்லாத வாட்டம் இன்றுவரக் காரணமென்ன?

யூதா:— அமரா, என்னை உபத்திரவம் பண்ணாதே. உனக்கேதாவது வேறு வேலையிருந்தால் அதைக் கவனி.

அமரா:— என்ன? எனக்கு வேறு வேலையா! உனக்கு ஊழியஞ் செய்வதுதானே என் வேலை. என் தங்கம், கண்ணே, உன் மனக்கவலை என்ன சொல்லு. சாயந்திரம் வெகு நேரமாக உன்னை அம்மா தேடினாங்க. நீ இங்கே வந்தது அவுங்களுக்குத் தெரியாது.

யூதா நிமிர்ந்து பார்த்தான். அவன் கண்கள் சிவந்திருந்தன. முகம் சகிக்கமுடியாத கவலையுடனிருப்பதை வெளியிட்டது. மெலிந்த குரலில் பேச ஆரம்பித்தான்.

யூதா:— அமரா, நான் அம்மாளை உடனே பார்க்க வேண்டும்.

அமரா:— வேண்டாம். உன்னை இக்கோலமாக அவுகளைப் பார்க்க விடமாட்டேன். முதலில் வேறே உடைகளை உடுத்திக்க. முகங் கை கால்களை சுத்தம் செய்துக்க. அப்புறம் நீ ஏதாவது சாப்பிடவேண்டும்.

யூதா:— ஆனால் எனக்குப் பசியில்லை.

அமரா:— என்றாலும் ஏதாவது கொஞ்சம் சாப்பிடு. இல்லாவிட்டால் நான் அம்மா அவுங்களை இங்கே வரவிடமாட்டேன்.

யூதா:— சரி சரி தொல்லைப் படுத்தாதே கொஞ்சமா........ ஏதாவது கொண்டுவா.

உடனே அமரா வேகமாய் வெளியில் போனாள். சுறுக்காய் ஒரு கையில் தண்ணீர் ஜாடியும், மற்றொரு கையில் வெண்மையான ஆடைகளையும், துவாலை ஒன்றுங் கொண்டுவந்து வைத்தாள். யூதா உடனே தூசி படிந்த தன் உடைகளைக் களைந்து, புது ஆடைகளைத் தரித்தான். பால் நிறைந்த கும்பா ஒன்றும், கொஞ்சம் ரொட்டியும், சில பழங்களையும், ஒரு வெள்ளித் தட்டில் அமரா ஏந்தி வந்து அவன் அருகில் வைத்தாள். அவன் கைகளையும் கால்களையும் அலம்பி துவாலையால் துடைத்தாள். யூதனும் மாலையில் தனக்கு நிகழ்ந்த காரியங்களை நினைத்துக் கொண்டே சாப்பிட ஆரம்பித்தான். விருப்புடன் புசிக்கவில்லை. அமராவின் பலவந்தத்திற்காகவே சில ரொட்டித் துண்டுகளை மட்டும் புசித்தான். முகம் விகார மடைந்திருந்தது. ஏங்கி ஒரு பெருமூச்சு விட்டான். உடனே அமரா யூதாவின் நெற்றியில் கையை வைத்துப் பார்த்தாள்.

அமரா:—என்ன நெற்றி சுடுகிறதே! என் ராஜாவே, உனக்கு வந்த கவலை யென்ன?

யூதா:—ஆயா, நமது வீட்டுக்கு, முன் அடிக்கடி வந்து போவானே அந்தப்பயல் மேஸலா......

அமரா:—ஆமா அவனுக்கென்ன? நீயும் அவனும் கூட்டாளி ஆச்சே. அவனுக்கென்ன உடம்புக்கு முடியலியா?

யூதா:—அவன் கெட்டான் மடயசாம்பிராணி. டம்பாச் சாரிப்பயல். மேட்டிமைக்கார நாய். 'யூதர்கள் மடையர் கூட்டம்' என்முன்.

அமரா:—நீ அவனோடு சிநேகமாயிருக்கிறது பிடிக்கலேன்னு ஓங்கிட்டே, எத்தனை தரஞ் சொன்னேன். கேட்டையா. என்ன செஞ்சான் சொல்லு. இன்னமே நம்ப வீட்டுக்கு வந்தான்னு தடப்பக்கட்டையால்..........

யூதா:—........(புன்சிரிப்புடன்) அந்த மடையன் இனி இங்கு வரமாட்டான்.

அமரா:— அவன் வராமேயிருக்கனும்னுதானே சாமியைக் கும்பிட்டேன். அவனுஞ்சரி, நல்ல பாம்புஞ்சரி.

அமராவின் வார்த்தைகளால் யூதா சிறிது கவலை மாறினவனாய்ச் சாப்பிட்டு முடித்தான். அமரா அவன் கைகளைத் தண்ணீரால் கழுவித் துடைத்தாள். "இதோ அம்மாளை வரச்சொல்றேன், நீ சந்தோஷமாச் சிரிச்சினாத்தான் நான் போவேன்." என்றுள். அவனும் முகமலர்ச்சியுடன் "போ ஆயா, தைர்யஞ் சொல்ல நீயிருக்கும்போது எனக்கென்ன கவலை." என்றுன். அமராவும் ஆனந்தமடைந்தவளாய், "அம்மா வடகடாசி அறையிலிருக்காங்க வாரயா" என்று கேட்க, யூதா "நல்லது வா போகலாம்." என்று சொல்லிக்கொண்டே அவள் பின்னே வெளியிற் சென்றுன்.

நீல வர்ணம் பூசிய சுவர்களை யுடையதும் அங்கங்கே விசித்திரமான பல சித்திர வேலைப்பாடுகளை யுடையதும், சலவைக் கற்களால் பாவப்பட்டு வழ வழப்பான தரையை யுடையதும்,

நான்கு பக்கங்களிலும் கண்ணாடி ஜன்னல்களையும், சாளரங்களையும், உடையதுமான ஓர் அழகிய அறையின் மத்தியில் பெரியதொரு மெழுகு திரி ஜ்வாலையுடன் பிரகாசித்துக்கொண்டிருந்தது. அக்கூடத்தில் மூலைக்கொன்ருய், பட்டு மெத்தைகளையுடைய நான்கு பெரிய கட்டில்கள் தோன்றின. அவைகளில் மிருதுவான திண்டுகள் பல அழகாய் போடப் பட்டிருந்தன. அவைகளினருகில் தண்ணீர் ஜாடிகளையும், முகங்கழுவுங் கோப்பைகளையும், வெண்மையான துவாலைகளையுந் தாங்கிய சிறிய தட்டு மேஜைகளிருந்தன. அவ்வறையின் மத்தியில் அலங்கார வேலைப்பாடமைந்த ஒரு சோபாவில் வெண் பட்டாடை தரித்த ஒரு மாது உட்கார்ந்திருந்தனள். இவளுக்கு வயது நாற்பத்தைந்து இருக்கும். ஆழ்ந்த யோசனையுடனிருப்பதாகத் தோன்றிய இவள்தான் யூதாவின் தாய் ஸாராள். யூதா அவ்வறைக்குள் நுழைந்ததும் அம்மாது சிரோன்மணி எழுந்து கைகளை முன்னால் நீட்டியவண்ணம், "மகனே, என் செல்வமே, ஏனிவ்வளவு நேரம். எங்கு போனாய்?" என்று கேட்டுக்கொண்டே முன்னே சென்ருள். யூதாவும் "தாயே அம்மா" என்று ஓலமிட்டு ஓடிவர, அவளது கைகளால் அரவணைக்கப்பட்டான். அருகிலிருந்த ஒரு ஆசனத்தில் இருவரும் அமர்ந்தனர். மகனது தலையைத் தாய் தன் மார்போடணைத்து உச்சிமோந்து முத்தமிட்டாள். அவன் கண்கள் கலங்கி இருப்பதைக் கண்டாள்.

ஸாராள்:—கண்மணி, நீ இன்று முகவாட்டமாயிருக்கக் காரணமென்ன?

யூதா:—அம்மா, என் மனதில் ஒரு பெரிய கவலை ஏற்பட்டிருக்கிறது. என் வேண்டுகோளுக்கு இசைவதாய்ச் சொன்னால்தான் தெரிவிப்பேன்.

ஸாராள்:—அப்பா மகனே, உனக்காகவே உயிருடனிருக்கும் நான் நீ கேட்டதை எப்போதாவது கொடாமலிருந்ததுண்டா. விஷயமென்ன சொல்லு?

யூதா:—ஒன்றுமில்லை அம்மா. இன்று மாலை நந்தவனத்துக்குப் போயிருந்தேன். மேஸலா என்ற மட்டிப்பயலை அங்கு சந்தித்தேன். யூதர்கள் திரேக உழைப்பில்லாத சோம்பேறிகளென்றும், நல்லொழுக்கமில்லாத மடையர் கூட்டமென்றுங் கேவலமாகப் பேசினான். தன் தேசத்தவரே உலகில் உயர்ந்தோரென முழங்கினான். தன்னைப்போல் யுத்த வீரன் இல்லையென்று வீரியம் பேசினான். அதுமுதல் எனக்கு ஒரு எண்ணம் ஏற்பட்டிருக்கிறது. நானும் அவனைப்போல வீரனாக வேண்டும். அவன் கொட்டத்தை அடக்கவேண்டும். அப்போதுதான் என் மனக்கவலை தீரும். உத்திரவு கொடுங்கள். அம்மா, நான்..............................

ஸாராள்:—என் அருமைச் செல்வமே, இந்த வீண் கவலை உனக்கெதற்கு? நம் இனத்தவரை இழிவாகப் பேசுபவர்கள் பேசட்டும். அத்தோஷம் அவர்களைத்தான் பாதிக்கும். அவனை ஏன் நம்முடன் ஒப்பிட்டுப் பார்க்கிறாய். உனக்கு இங்கென்ன குறைவு. கடவுள் நம்மை எவ்வளவோ மேன்மையான நிலைமையில் வைத்திருக்க வீணாக உன் மனதை ஏன் புண்படுத்திக் கொள்ளுகிறாய்.

யூதா:—இப்படிச் சொல்லி என்னை ஏமாற்ற வேண்டாம். அம்மா, முதலில் அவனைப்போல நானும் ஒரு போர் வீரனாக வேண்டும். அதற்குப் பின் அவன் கொட்டத்தை அடக்க வேண்டும். எல்லா யூத வாலிபர்களும் என்னைப்போல வீரர்களாக முயற்சிப்பார்களானால் கூடிய விரைவில் நம் நாடு உரோமரின் கொடுங்கோலினின்று விடுதலையாகும். உரோமர்கள்மட்டுந்தானா நிபுணர்கள். அவர்கள் அரசாளவும், நாம் அடிமைகள்போல அஞ்சி நடுங்கவும் எந்த நீதி மார்க்கத்தில் எழுதியிருக்கிறது.

ஸாராள்:—மகனே, உரோமர்கள் பரம்பரை வீரர்கள். அதிகாரிகள். அவர்களின் ஆளுகையில் நாம் பல நன்மைகளையும் அடைந்திருக்கிறோம். சீர் குலைந்த நம் நாட்டில் சமாதானத்தை

யுண்டு பண்ணினூர்கள். நீ போர் வீரனுகும் வீண் எண்ணத்தை விட்டு மனச் சமாதானத்துடனிரு. சமஸ்த தேசங்களிலும் ஜாதி வேற்றுமையும் உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்ற பாகுபாடுகளுந் தாண்டவமாடுகின்றன. ஒவ்வொருவரும் தாங்களே கெட்டிக் காரரென வீண் பெருமை கொள்ளுவதும் உலக இயல்பு. ஒவ்வொரு ஜாதியினரும் யாதாமொரு துறையில் சிறந்தவர்களாகவே துலங்குகின்றனர். மனிதர்களில் உயர்வு தாழ்வு இருக்க வேண்டுவதவசியமே. அப்போதுதான் உலகில் நீதி, நியாயம், நடுநிலே, நற்சயாதானம் நிலவி நிற்கும். ஆனுல் ஒவ்வொருவருக்கும் உயர்வைக் கொடுப்பது அவரவர் நற்செய்கைகளேயாம். ஒழுக்கமுடையோரே உயர் குலத்தவர். உயர்குடியிற் பிறந்த ஒருவன் துர்நடத்தைக்காரனுகவும் அக்கிரமியாகவு மிருப்பானே யானுல் அவனே இழிகுலத்தானெனவும் நீசனென்றும் நிச்சயிப்பதே நியாயம். ஆகவே அவரவர் பிறந்த குலத்தைக் காரணமாக வைத்து யாரையும் உயர்ந்தவர் தாழ்ந்தவரென்று மதிப்பிடுவதாகாது. உரோமர்கள் போர் புரிவதிலும் நாட்டை யாளுவதிலும் தீரர்களானுல், யூதர்கள் ஏனைய விவகாரங்களில் மேம்பாடுடையவர்கள்தான். அநேக பெரிய சாஸ்திரிகளும், நிபுணர்களும், யுத்தவீரர்களும் நம் நாட்டில் தோன்றி அரிய காரியங்களேச் செய்திருக்கிருர்கள். உரோமர்களின் பெருமையை நம்முடன் ஒப்பிட்டுப் பார்த்தால், அது வீண் டம்பமேதான். நமது தீர்க்கதரிசிகளுக்கு முன் உரோமச் சக்கிரவர்த்தி எவனும் நிகராகான். திரிகால ஞானம் புகன்ருேர்களும், உலக ஆதி முதல் அந்தம்வரை நடைபெறும் காரியங்களே உலகிற் கறிவித்தோரும் நம் தேசத்து மகான்களன்றி வேறுயார்? ஆனுல் தற்காலத்தில் யுத்தமே பிரதானமாகக் கருதப்படுகிறது. ஆதியில் கல்விக் கலேயை உலகிற் குதவியவர்கள் கிரேக்கர்கள். இவர்களிடமிருந்தே உரோமர்கள் பல கலேகளேயுங் கற்றுக் கொண்டனர். தற்போதோ புஜ பல பராக்கிரமிகளாய் ஏனைய நாடுகளேக் கைப்பற்றி அவைகளே அடக்கி ஆளுவதே இவர்களின் செல்வாக்காயிருக்கிறது. இவர்கள் முன் உலகமே நடுங்கி நிற்கிறது. நம் நாடும் இவர்கள் ஆட்சிக்குட்பட்டிருக்கிறது.

யூதா:—அது எப்படியிருந்தாலுஞ்சரி. என்னை அவமானப் படுத்திய அந்த மேஸலாவைப் பழி வாங்காமல் விடேன். இது சத்தியம். அந்தப்பயலின் கொட்டத்தை யடக்க இன்றே கங்கணங் கட்டிக்கொண்டேன். அடே மேஸலா, யூதனை யூதா உன்னை என்ன செய்யப் போகிறான் பார்.

ஸாராள்:—கண்மணியான என் மகனே, வெகுநேரமாகிவிட்டது. நாளைக்கு யோஜித்துக் கொள்ளுவோம். சந்தோஷமாகப் போய்ப் படுத்துத் தூங்கு.

தாய் மகனை மார்புடன் அணைத்து மறுபடியும் முத்தமிட்டாள். யூதாவும் ஒருவாறு மனந்தேறியவனாய்த் தன் தாயின் பாதங்களைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக்கொண்டு, அங்கிருந்த கட்டிலொன்றில் ஏறிப்படுத்து அயர்ந்து நித்திரை செய்தான்.

## II

மறுநாட்காலையில் பொழுதும் விடிந்தது. கீழ்த் திசையில் அருக்கன் அலங்காரமாய் அநேக வர்ணங்கள் இசைந்திலங்க அருணோதயத்தை யுண்டு பண்ணினான். இரவெல்லாம் ஓய்ந்திருந்த பறவைகளின் இனிய தொனிகள் பல்லிசை போன்று விளங்கின. புறாக்களும், மைனாக்களும் பின்புறம் தோட்டத்திலிருந்த குளத்தில் தங்கள் இறக்கைகளை அலசிக்கொண்டு உட்கார்ந்திருந்தன. மல்லிகை மலர்களின் மருவிலா நாற்றமும், மலர்ந்த ரோஜாவின் மனதுக்கிசைந்த மணமும், சாமந்தி, முல்லை, சம்பங்கி, பிச்சி, பன்னீர் முதலிய புட்பங்களின் நறுமணமும் தென்றற் காற்றுடன் கலந்து வீட்டிற்குள் வீசி சகலருக்கும் இன்பமளித்தது. யூதா படுக்கை விட்டெழவில்லை. அவன்முன்னால் ஓர் ஆசனத்தில் கையில் வீணையுடன் வெகு சௌந்தரிய ரூபலாவண்யமுள்ள யுவதி ஒருத்தி உட்கார்ந்திருந்தாள். அவளுக்கு வயது பதினைந்து இருக்கலாம். மெல்லிய உடலும், தளிர் நடையும், மயிலழகும் உடையவள். இவளுடைய நீண்டு கருத்த கூந்தல் இரு பிரிவாகக் காதுகளை மறைத்து தோள்களின் முன்

அழகுபடத் தொங்கின. அவளது இரு நேத்திரங்களும் கயற் கண்களையும் சேற்கெண்டையின் விழிகளையும் பழிக்குந் தன்மை யதாய்த் தோன்றின. புருவங்கள் கருவில்லைப் போலவும் நாக சர்ப்பத்தின் வால்போலும் நேர்த்தியுடன் விளங்கின. மஞ்சள் நிறத்துடன் பழ மழ வென்றிருந்த அவளது முகத்தின் கன்னங் கள் செந்நிறத்துடன் பவளத்தையும், தாமரையையும் ரோஜாப் புட்பத்தையும் போன்று காந்தியுடையவையா யிருந்தன. ஆலிலை போன்ற வயிறும், மின்னல் போன்ற இடையும், வாழை மடலை நிகர்த்த இரு கரங்களும், மெல்லிய நடையும், நிகரற்ற நியதமும், நேரிலா நிமலமும், சரியிலா சாந்தமுள்ள பார்வையும், அளவிலா அழகும், கண்டோர் மனதைக் கவரத் தக்கவைகளா யிருந்தன. இந்நங்கையே நமது கதா நாயகனின் தங்கை திருஷா. தனது தமயனை உற்று நோக்கிய வண்ணம் வீணையை மீட்டி தெய்வ ஸ்துதி யொன்றைப் பாடி முடித்தாள்.

யூதா எழுந்து உட்கார்ந்தான். தன் முன் அமர்ந்திருந்த தங்கையின் மாசற்ற முகத்தை அன்புடன் உற்று நோக்கினன்.

யூதா:—பேஷ் திருஷா, இன்னுமொருதரம் பாடு. புதிய பாட்டுப்போலிருக்கிறதே.

திருஷா:—ஆமாம் நேற்றுத்தான் இப்பாட்டைக் கற்றுக் கொண்டேன். ( மறுபடியும் அப் பாட்டை திருஷா பாடினள்.)

யூதா:—எவ்வளவு அருமையான பொருள் நிறைந்த பாட்டு. கேட்கக் கேட்க பரமானந்தமாயிருக்கே.

திருஷா:—இப்படி ஆனந்தமடைவதை தள்ளிப்போட்டு எங்களையும் பரிதபிக்கவிட்டு எங்கோ போகப் போகிறாயாமே.

யூதா:—(சிரித்த முகத்துடன்) ஒவ்வொருவரும் ஏதாவது தொழில் கற்றுக்கொள்ள வேண்டுமல்லவா. அதற்காக நான் உரோமாபுரிக்குப் போவதாய் தீர்மானம் செய்திருக்கிறேன்.

திருஷா:—அப்படியானல் நானும் உன்னுடன் வரலாமா?

யூதா:—வேண்டாம் நீ அங்கு வரக்கூடாது. நான் யுத்தப் பயிற்சி பெறப் போகிறேன். சில வருஷங்களுக்குப் பிறகு, அதாவது நான் யுத்த வீரனான பிறகு நீ என்னைக் காணமுடியும்.

திருஷா:—நீ யுத்த வீரனாகவா போகிறாய்! அண்ணா, வேண்டாம். நீ போகவேண்டாம். உன்னைப் பிடித்துக் கொன்று போடுவார்கள்.

யூதா:—எல்லா வீரர்களும் போரில் மடிகிறதில்லை. சகலரும் சில காலமோ, அல்லது நித்தியமாகவோ பிரிந்துபோவது ஆண்டவன் அருள். நீயும் வெகுகாலம் எங்களுடனிருக்கவு மாட்டாய்.

திருஷா:—அண்ணா, அதென்ன அப்படிச் சொல்லுகிறாய். உன்னையும் அம்மாளையும் விட்டு விட்டு ஒருபோதும் பிரிய மாட்டேன்.

யூதா:—ஆமாம் உனக்குக் கல்யாணமாகும் வரைதான். அதன் பிறகு கொண்டவன் பின்னேதான் போவாய்.

திருஷா:—(வெட்கத்துடன்) போ அண்ணா. பரிகாசம் பண்ணாதே. உன் எண்ணமெல்லாம் சூரியனுக்கு முன் மேகம் போலத்தானாகும்.

யூதா:—திருஷா, அது எப்படி? விளங்கச் சொல்லு. புது உபமானமாயிருக்கே.

திருஷா:—ஆமாம் சில தினங்களுக்கு முன்புதான் ஒரு பழைய புஸ்தகத்திலிருந்து அதை வாசித்துத் தெரிந்துகொண்டேன். அதிகாலையில் சூரிய வெளிச்சம்பட்டதும் சில பொருள்கள் பொன்மயமாவதைப் பார்க்கிறோம், ஆகாயத்தில் அந்தரமாய் மிதந்துபோவதுபோலத் தோணும். மேகங்களும் சூரியனின் பிரகாசத்தால் செம்பொன் நிறமாகி தங்கள் இஷ்டமான உருவத்தோடு தோன்றுகின்றன. சில நிமிஷங்கள் அவையெல்லாம் ஒன்றுசேர்ந்து ஒரு மனிதன் குல்லாயுடன் குதித்து

நிற்பதுபோல இருக்கும். மறு நிமிஷம் அந்த மனிதனின் குல்லாய் கலைந்து போகும். அப்படியே ஒன்றுக்குப் பின்னே ஒன்றாய் இருந்தவிடந் தெரியாமல் எல்லாம் ஓடிவிடும். இதைப் போலத்தான் மனிதர் மனதில் தோன்றும் நினைவுகளும் மாறும்.

யூதா:—திருஷா, நீ கெட்டிக்காரி. நாளுக்கு நாள் நல்ல விஷயங்களைச் சுளுவாய்த் தெரிந்துகொள்ளுகிறாய். உரோமர்களைப்போல யூதர்களும் கல்லூரிகளையும் கலாசாலைகளையும் ஏற்படுத்தினால் எவ்வளவோ மேலான விஷயங்களை யெல்லாம் கற்றுக்கொள்ளலாம்.

திருஷா:—அண்ணா, இன்னும் சொல்லுகிறேன் கேள். இந்த மேகங்களைப் போலவேதான் நமது உலக வாழ்க்கையும். காலையில் பொன்போலக்காணும் மேகங்கள் பொழுது போகப் போக, வெள்ளியின் நிறமாகவோ, மஞ்சள், சாம்பல், வெள்ளை முதலிய நிறங்களாகவோ நேரத்துக்கொரு வர்ணமாகவே காணப்படுகின்றன. சூரியன் மறைந்தவுடன் இக் காட்சிகளும் ஒழிந்து போகின்றன. இது போலவேதான் சூரியனான உயிர் மேகம் போன்ற நமது உடலில் இருந்து ஊஞ்சலாடி வயதுக்குத் தகுந்த வனப்பைக் கொடுக்கிறது. ஆவி உடலைவிட்டுப் பிரிந்தாலோ அவ்வுடலை விரும்புவார் யாருண்டு. சில நாட்கள் வீட்டிலேயே இருக்கட்டுமென்றால், பெற்ற தாய் தந்தையோ, கொண்ட மன்னவனோ, மனைவியோ எவரும் ஒப்புக்கொள்ளாமல் அருவருப்பே கொள்ளுவார்கள். அச் சடலத்தை விரைவாக அப்புறப்படுத்தவே முயற்சிப்பார்கள். மேகங்களைப் போலவிருக்கும் நம்முடைய வாழ்நாள் எத்தனை சந்தைக்கு. இன்றைக்கிருப்பவர்கள் நாளைக்கு இல்லை. இன்றில்லாதவர்கள் நாளைக்குப் பூமியில் பிறக்கிறார்கள். ஆகையால் நாம் ஒவ்வொருவரும் நிலையற்ற உலக வாழ்வில் பற்றாசை வைக்காமல் நித்தியப் பேரின்பத்தைக் கொடுக்கத்தக்க ஆண்டவனுடைய அன்பைப் பெற முயற்சி செய்யவேண்டும். யூதர்களைக் கோவில் பூனைகளென்று சொல்லுகிறார்கள். ஆனால் யூதர்களுக்குக் கடவுள் ஒரு குறையும் வைக்கவில்லை. நீ யுத்தவீரனானால் உன் விரோதி

களைக் கொலை செய்யவேண்டுமென்றே உனக்கு ஓயாத கவலை உண்டாகும். கடவுளைப்பற்றிய எண்ணம் காற்றோடே பறந்து போய்விடும்.

யூதா:—திருஷா, உன் அறிவுள்ள சொற்களைக் கேட்கக் கேட்க ஆனந்த முண்டாகின்றது. இவ்வளவு அருமையான ஞானத்தைப் போதிக்கும் புஸ்தகத்தை நானும் பார்க்கவேணும்.

திருஷா:—நல்லது. முதலில் காலைப் போஜனத்தை முடித்துக் கொள்ளு. பிறகு புஸ்தகத்தைப் பார்க்கலாம்.

இவ்விதம் இருவரும் பேசிக்கொண்டிருக்கும் பொழுதே அமரா அங்கு வந்தாள்.

அமரா:—விடிஞ்சு வெகுநாழி யாச்சுதே. ரெண்டுகண்ணுஞ் சேந்து நொண நொண தொண தொணன்னு பேசிக்கிட்டிருந்தா ஒங்க ஒடம்பு என்னாத்துக்காகும். ஏந்து வாங்க அம்மா காத்திருக்காக.

திருஷாவும் அமராவும் முன்னே செல்ல யூதா வேறு ஆடைகளை அணிந்துகொண்டு படுக்கை அறையைவிட்டு வெளியே போனான்.

---

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்.
திருநெல்வேலி

# மூன்றாம் அத்தியாயம்.

## ராஜப் பிரதிநிதி பவனி அல்லோலகல்லோலம்.

யூதா மேஸலாவுடன் விரோதியான மூன்றாம் மாதத்தில் ஜெருசலம் பட்டணவாசிகள் மத்தியில் "புதிய கவர்னர்" "புதிய கவர்னர்" என்று எங்கு பார்த்தாலும் ஒரே பேச்சாக இருந்தது. "வரப்போகிற கவர்னர் எப்படிப்பட்டவனோ" என்பாரும் "லஞ்சம் வாங்கி சட்ட விரோதமாய் நடப்பானோ. அல்லது நீதி நியாயமுள்ளவனோ. அதுவன்றி தெய்வமில்லை யென்றியம்பும் நாஸ்திகனோ" என்று ஆவலுடன் கேட்போரும் "ஒழுங்கில்லாதவனானால் உடனே அரசருக்கு மகஜரனுப்பவேண்டியது தான்" என்று கூறுவோரும் "எப்படி யிருந்தால் தான் நமக்கென்ன" வென்று பேசுபவரும் கூட்டங் கூட்டமாகப் பட்டணத்தின் பிரதானமான தெருக்களில் குழுமி யிருந்தனர்.

அப்பட்டணத்து அதிகாரிகள் வெகு ஊக்கமாகக் கவர்னரின் மாளிகையையும், தெருக்களையும் அலங்கரிப்பதிலேயே கண்ணுங் கருத்துமாயிருந்து கவர்னர் வரும் தினத்தை வெகு ஆவலுடன் எதிர்பார்த்திருந்தனர். அம்மஹோத்சவ தினமும் வந்தது. அன்று சூரியோதயத்திற்கு முன்னரே நகர பரிபாலகரின் உத்திரவுப்படி கவர்னர் பவனி வரும் வீதிகளிலெல்லாம் தோரணங்கள் கட்டப்பட்டன. அங்கங்கே வாழை, கமுகு, ஈஞ்சு முதலியவைகள் நாட்டப்பட்டன. சில விடங்களில் மலர் மாலைகளைத் தூக்கினர். அங்கங்கே அகிற்கட்டையைப் புகைத்தனர். சந்தனம், பன்னீர் முதலியவற்றை வாரியிறைத்தனர்.

எங்கு பார்த்தாலும் கல கலவென்றொலிக்குங் காகிதப் பூச் சிங்காரமும், வழ வழவென்றிருக்கும் சிறந்த தீப ஸ்தம்பங்களும், அவைகளில் தொங்கும் தக தகவெனும் வெள்ளித் தங்கத் தாள்

களின் வேலைப்பாடுகளும், பட பட வெனும் பல சித்திரக் கொடிகளும்; தட தடவெனும் தாழை மடற்றோரணமும், பவனி வருங் கவர்னரை நல்வரவு கூறுந் தன்மையாயிருந்தன.

சற்று நேரத்தில் 'சரிகம' வெனும் சங்கீதநாதமும், 'பதநிச' வெனும் பதிலுரைக்கும் வாத்தியங்களும், சரி சரி' யெனப் புகழ் பாடும் பேரிகைகளும், தாரை, கொம்பு முதலிய எக்காள வாத்தியங்கள் கிண்ணென்று வானைப் பிளந்து முழங்குதலும், கேட்போர் மனதை மகிழ்விக்க, பல்வேறு வாத்தியங்கள் தொனிக்க, "ஜெய" "ஜெய" வென்ற பேரொலி எங்கும் முழங்க, இராஜப் பிரதிநிதி வருங்காக்ஷியைக் காணக் கூடியிருந்த கும்பல் கும்பலான ஜனங்களிடையே வர வர வென வாசனைத் திரவியங்கள் பல கலந்து வீசி யாவரையும் இன்புறச் செய்தது. இராணுவ அதிகாரி யொருவன் ஈட்டி கேடயந்தாங்கி வெகு ஒய்யாரமாய்க் குதிரை மீதேறி முன்னே செல்ல, போர்ச் சேவகர்கள் பலர் வரிசை வரிசையாக அணி வகுத்து வில், வேல், வாள், அம்பு, ஈட்டி, கண்டகோடரி, கேடயம், முதலியவைகளைத் தாங்கியவர்களாய் நடந்து வந்தனர்.

உரோமை அரசின் சின்னமான பருந்துச் சிலை யொன்றை ஒரு பல்லக்கில் சிலர் தூக்கி வந்தனர். அவர்களின் பிறகே பல பிரபுக்கள், பெரிய குடித்தனக்காரர்கள், உத்தியோகஸ்தர்கள் சகலரும் அவரவர் அந்தஸ்திற்கொப்ப அலங்காரமாயுடுத்திக் கொண்டு நடந்து சென்றனர். தலைக் கவசமணிந்த போர்வீரர் பலர் ஆயுதபாணிகளாய் வீதியின் இருபுறத்திலும் தாங்கள் ஏறியிருந்த குதிரைகளை மெதுவாய் நடத்தினார்கள். கூட்டத்தின் நடுவே கெம்பீரமானதொரு குதிரையின் மீது பொன்னுடையுடுத்திய ஒரு பூமான் வீற்றிருந்தான். இடையில் ஒரு உடைவாளைத் தரித்தும், பளீர் பளீரென மின்னித் தக தகவென்றொளி வீசும் தங்கச் செங்கோலொன்றைக் கையில் பிடித்த வண்ணமிருந்தான். கண்டோர் பயந்து நடுங்கும் பயங்கரப் பார்வையுடன் தோன்றினான். இவன் தான் புதிய கவர்னர் வலிரியஸ் கிராட்டஸ்.

நடன மாதர் பலர் அவனைச் சூழ்ந்து நின்று நடித்தனர். வெண் சாமரை வீசினர். சோபனப் புகழ் பாடினர். ஆனால் இந் நகர் வலங் காணவந்த ஜனங்களிடையே அங்கங்கே "துஷ்டன், சண்டாளன், நீதி நியாயந்தெரியா நிஷ்டூரன், பஞ்சமா பாதகன், இவனுக்கேன் இந்த ஆடம்பரம்." என்று அநேகர் சபித்ததின் தொனி பவனி வருங் கவர்னரின் காதில் விழுந்தது.

இந்நகர் வலம் யூதாவின் வீடிருந்த தெருவின் பக்கம் திரும்பினது. அப்போது யூதா போஜன மருந்திக்கொண்டு வீட்டின் கீழ்த் தட்டில் உட்கார்ந்திருந்தான். வாத்தியங்கள் முழங்கும் சப்தங் கேட்டு, "ஓகோ புதிய கவர்னர் வந்து விட்டானு" என்று சொல்லிக் கொண்டே வீட்டின் மேற்கூரைக்கு ஓடினான். அக்காக்ஷியை நன்றாய்க் கவனிக்க வேண்டுமென்ற ஆவலினால் கூரையின் ஒரு கோடியிலிருந்த கைபிடிச் சுவரைப் பிடித்து எட்டிப் பார்க்கும் நினைவோடு சுவற்றை எட்டிப் பிடித் தான். அச் சுவற்றின்மேல் உடைந்த பலமான ஓடு ஒன்றிருந் தது. சுவற்றைப் பிடித்த வேகத்தில் அந்த ஓடு யூதாவின் கையால் கீழே தள்ளப்பட்டு ஜனங்களின் மத்தியில் நாயக மாய் விளங்கும் கவர்னரின் தலையில் விழுந்தது. அடியின் வேகத்தால் பலமான காயமுண்டாக அவனும் மயங்கிக் குதிரை யினின்றுங் கீழே விழுந்தான். ஜனக் கும்பலில் பலத்த கூச்சல் கிளம்பியது.

யூதா பயத்தால் நடுங்கினான். தன் பின்னால் நின்று கொண்டிருந்த தன் தங்கை திருஷாவின் கையைப் பிடித்திழுத்த வண்ணம், "சுறுக்காக வா. நில்லாதே. என் அஜாக்கிரதை யால் அவனைக் கொன்று போட்டேன். அரசாங்கத்தார் நம் மைச் சும்மாவிட மாட்டார்களே. நம் உயிர்களுக்கும், காணி பூமி சகலத்திற்கும் நானே நாசத்தை உண்டு பண்ணிக் கொண் டேனே. அந்த மேஸலா நான் செய்ததைக் கண்டு கொண் டானே. ஐயையோ என்ன துன்பம் நேரிடுமோ அம்மா, அம்மா," என்றலறிக்கொண்டே தன் தங்கையுடன் படிக்கட்டு

களின் வழியே நடுக்கத்துடன் கீழே ஓடி வந்தான். திருஷா வும் பயத்தால் நடுக்கங்கொண்டு தன் தமயன் பின்னே இறங்கி வந்தாள்.

இராஜப் பிரதிநிதிக்குப் பிறகே பத்தடி தூரத்தில் அதிகக் கம்பீரத் தோற்றமுள்ளதொரு குதிரையின்மேல் ஏறியிருந்த மேஸலா தன் பார்வையை யூதாவின் வீட்டு ஓட்டுக் கூரையிலிருந்தவர்களின் மேல் செலுத்தியிருந்தான். ஓடு சரிந்து விழுவதையும் பார்த்துவிட்டான். ஆனால் சகலரும் ஓடு எங்கிருந்து எப்படி விழுந்தது என்று தெரியாமல் திகைத்தனர்.

கீழே விழுந்த இராயனை மெய்க்காப்பாளர்கள் எடுத்தனர். அங்கு நின்ற சகலரும் ஆச்சரியமும் திகிலும் கொண்டு அசைவின்றி நின்றனர். வீரர் குதிரைகளினின்றுங் குதித்துத் தாவினர். கோபாவேசமாய் ஜனக் கும்பலில் பாய்ந்து பிடி அடி யென்று சொல்லிக்கொண்டே அங்குமிங்கும் ஓடினர். ஜனங்களும் நாலா பக்கங்களிலும் பயத்தால் ஓட்டமெடுத்தனர். எங்கு பார்த்தாலும் அல்லோல கல்லோலமாயிருந்தது. அந்நேரத்தில் மேஸலா கோபாக்கிராந்தனாய்த் துள்ளிக் குதித்துப் பெருத்த ஆரவாரம் செய்து சில சேவகர்களுடன் யூதாவின் வீட்டிற்குள் நுழைந்தான். வழியில் நின்றுகொண்டிருந்த வேலையாட்களையும் அடிமைகளையும் வீரர்கள் அடித்தார்கள் வீடு முழுதும் பெருங் கூக்குரலாயிருந்தது. யூதாவின் தாயை இரு போர் வீரர் உடையைப்பற்றி இழுத்துவந்து மேஸலாவின் முன்னே கொண்டு வந்தார்கள். அப் பெண்மணியோ காரணமொன்று மறியாது பித்துப் பிடித்தவளைப்போல் "ஆ" வென அலறினாள். விஷய மென்னவென்று சொல்ல வெகு வினயமாய் மன்றாடினாள். கொடியன் மேஸலாவின் முன் கரங்கூப்பி முழந்தாள் படியிட்டுக் கீழே விழுந்தாள். இதுவரை தன் தங்கையுடன் ஒளிந்து கொண்டிருந்த யூதா, தாயின் பிரலாபங் கேட்டு சகிக்க இயலாதவனாய்க் கூட்டத்தை விலக்கிக் கொண்டு ஓடிவந்து "அம்மா! அம்மா" வென்றலறிக்கொண்டு

தன் தாயை வாரியெடுத்துத் தூக்கினன். திருஷாவோ கண்ணீருங் கம்பலையுமாய் "ஐயையோ அம்மா" என்றழுது பிரலாபித்தாள். "பிடியுங்கள். கட்டுங்கள். இவன் தான் அச் சண்டாளன்" என்ருன் மேஸலா.

சிலர் கயிறுகளால் யூதாவின் கைகளை முதுகின் பின்னே பிடித்துக் கட்டினர். "நான் வேண்டுமென்று செய்யவில்லை. என்னை வேணுமானல் தண்டனைக்குள்ளாக்குங்கள். குற்றமற்ற என் தாயையும், தங்கையையும் விட்டு விடுங்கள்" என்று மன்ருடினன் யூதா. மேஸலாவோ கோபாவேசங்கொண்ட வெறியனைப் போல உறுமிக் கண்களில் தீப்பொறி பறக்கச் சீறிச் சினந்து தனது சத்துருவை ஏறிட்டுப் பார்த்தான். மீசையை முறுக்கிக்கொண்டே "இவர்களையும் இழுத்துப் போங்கள்!" என்று உத்திரவிட்டான்.

அப்படியே தாயையும் மக்களையும் போர்வீரர் வீட்டினின்றும் வெளியே இழுத்துச் சென்றனர். வேலையாட்களும், அடிமைகளும் வெளியே துரத்தப் பட்டார்கள். அமரா என்பவள் மட்டும் வெளியில் போக இசையவில்லை. தன் எஜமானியையும் அவர்களின் நேச மக்களையும் சேவகர் பிணிக்கும் போதும், வெளியில் இழுத்துப்போன பொழுதும் ஒப்பாரி வைத்தழுதாள். அவளை வெளியில் துரத்த முயன்றும் அவள் எவர் கையிலும் சிக்கவில்லை. வீட்டிற்குள் அன்னுகாரமின்றி செத்து மடியட்டுமென்று அவள் நுழைந்த அறையின் கதவுகளைப் பலமாயடைத்துப் பூட்டினர். அவ் வீட்டிற்குள்ளிருந்த பல பல பண்டபாத்திரங்களும், பெட்டிகளும், பெட்டகங்களும், தவச தானியங்களும், சகலவித சாமான்களும் வெளியேற்றப் பட்டன. ஆடு, மாடுகள், குதிரைகள், கோவேறு கழுதைகள், நாய்கள் முதலிய நாற்கால் பிராணிகளும், வான்கோழி, வாத்து, முயல்போன்ற ஜந்துக்களும் அப்புறப்படுத்தப்பட்டன. ஆஸ்தி பாஸ்திகள் நிறையப் பெற்று அழகுடன் தோன்றிய அம்மாளிகை க்ஷணப் பொழுதில் இருளடைந்ததுபோலத் தோன்றியது. எல்லோரும் வீட்டை விட்டு வெளியேறினதும், வெளிவாசலை அடைத்துப்

பூட்டி ராஜமுத்திரை யிட்டனர். "இது சக்கரவர்த்தியின் சொத்து" என்ற வாசகத்தையுடைய ஒரு பட்டயத்தையுங் கத வின் மேல் தொங்கவிட்டார்கள்.

பெருமையுடனிருந்த அம்மாளிகை வறுமை நோயுற்றது போலத் தோன்றியது. அதைக் கண்ணுற்ற யூதர்கள் சகலரும் விசனமடைந்தனர்.

---

# நான்காம் அத்தியாயம்.

---

## பட்ட காலிலே படும் கெட்ட குடியே கெடும்.

நிஷ்டூரனின் கையிலகப்பட்ட தாயும் மகளும் சற்றேனும் நீதி நியாயமின்றி யூதேயாவில் பெயர்பெற்ற அந்தோனியோ வின் கோபுர மென்ற சிறைச்சாலையில் அடைக்கப்பட்டார்கள். அங்கு பிரமாண்டமான பல இருட்டறைகளிருந்தன. இங்கு இராஜத் துரோகிகளாகத் தண்டிக்கப்பட்ட குற்றவாளிகளை அடைப்பது போலக் குற்றமற்ற திருஷாளும் அவளது அருமைத் தாயுமங்கிருந்தவொரு இருட்டறைக்குள் தள்ளப்பட்டார்கள். ஒவ்வொரு அறைக்குள்ளிருக்கும் கைதிகளுக்கும் ஆகாரங் கொடுப்பதற்காயமைக்கப்பட்ட சிறு துவாரம் தவிர, வெளிச்சம், காற்று உள்ளே நுழைய வேறு யாதொரு வழியுமில்லாத இருட்டு ஸ்தலமாயிருந்தது. என்னே உலக வாழ்வு! நேற்று பஞ்சு மெத்தையில் படுத்துறங்கி அறுசுவையுடன் உண்டு களித்து இராஜபோகமனுபவித்து வந்த பென்ஹூர் பிரபுவின் மனையாளும் மகளும் இன்று ஈரந் தோய்ந்த சதுப்பு நிலத்தில் இருக்கவுங் காலம் வந்ததே!! கஷ்டமென்பதைக் கேட்டறியாத இவர்கள் கொண்ட முகவாட்டமும், அனுபவித்த துயரும் கொஞ்சமல்ல. சற்று நேரங்கூட மகனைப் பிரிந்திருக்கச் சகியாத தாய், பிரிவாற்றாமையால் பட்ட துயர் கூறுந்தரமல்ல. ஆ! ஆ! அநியாயம்!! உரோமர் ஆட்சியின் அனுகூலங்கள் இவைதானோ? நீதி மன்றம் எங்கே? சட்டதிட்டமெங்கே? சண்டாளன், மேஸலாவின் சூழ்ச்சி இன்னல் என்பதையறியாப் பேதையரை நரக துன்பத்திற் காளாக்கியதோ. ஐயோ பாவம்!!! அவள் என்ன செய்வாள். தன் அருமை நாயகர் சின்னஞ்சிறு குழவியரைத் தனக்குத் துணையாய் வைத்து உயிர் துறந்ததை நினைத்தழுவாளோ, தன் நேசநாதன் தவிர ஏனையோர் தொட்டறியாத் திருமேனியைத் துஷ்டர் தீண்டித் துன்புறுத்தியதை நினைத்தழுவாளோ, தன் ஏக

புத்திரன் தன்னை விட்டுப் பிரிந்ததை நினைத்தழுவாளோ, பதினைந்து வருடங்களாகச் சுகமாகவும் குதூகலமாகவும் இன்பமாய் மாளிகையில் வளர்ந்த தன் அருமை மகள் இப்பொழுது தன்னுடன் வருந்தியழுவதையுந் துயரால் துடித்தேங்குவதையும் பார்த்தழுவாளோ, செய்வதின்னதெனப் புரியாமல் 'அம்மா, அம்மா' வென்றலறும் அருமை மகளைத் தேற்றும் வகையறியாமல் தவிப்பாளோ! கால்களிரண்டும் முழங்காலுக்குக் கீழ் உணர்ச்சிப் பெரும் வேதனையுண்டுபண்ணுவதைச் சகிக்காமல் துயருறுவாளோ! 'என்மகனே, என் செல்வமே, என் உயிரே, ஐயோ உன்னை என்று காண்பேன்' என்றேங்குவாளோ, விடுதலை யுண்டோ அன்றி அங்குதான் அவலமாய்ச் செத்துமடிய வேண்டியதுதானோ வென்றெண்ணிப் புலம்புவாளோ, பட்டகாலிலே படும். கெட்டகுடியே கெடும் என்றபடி இன்னல் மேல் இன்னல், துன்பத்தின் மேல் துன்பம், துயரத்தின் மேல் துயரம், கஷ்டமென்பதே கண்டறியா ஒப்பற்ற தயாளகுண சம்பன்னியான அக் குணவதியும் அவளது அருமந்த புத்திரியும் செய்வதின்னதெனத் தோன்றாமல் தயங்கினர். பசியும் குளிரும் சகிக்க மாட்டாதவர்களாய்ச் சோர்ந்து மயங்கிக் கீழே சாய்ந்தனர். அந்தோ கொடுமை! கொடுமை!!

சற்றுநேரம் சென்று சிறைச் சாலை மணி அடிபடும் சப்தம் கேட்டு திடுக்கிட்டெழுந்தனர். "சாப்பாடு! சாப்பாடு!!" என்று சத்தமிட்டுக்கொண்டே துவாரத்தின் வழியாக ஒருவன் கோப்பை ஒன்றை நீட்டினன். அதை வாங்கித் தாயானவள் கீழே வைத்தாள். திருஷா அதென்னவென்று உற்றுப் பார்த்து "அம்மா பன்றிகளுக்கு வைக்குந் தவிடு போலிருக்கிறதே" என்றாள். "இல்லை, இல்லை. இதுதான் இராஜத் துரோகிகள் அருந்தும் அமிர்த போஜனம்" என்றான் வெளியில் நின்றுகொண்டிருந்த வேலையாள். "கண்மணி! எத்தனை ஏழை மக்கள் கால் வயிறு கஞ்சிகூட இல்லாமல் செத்து மடிய, நாம் மட்டும் பசியின் கொடுமை சிறிதும் அறியாமல் சகல சுகபோகங்களையுமனுபவித்தோம். அடிமைகளையும், பணியாட்களையும் பட்டினி

கிடந்து வேலை செய்யவும் பார்த்துக் கொண்டிருந்தோம். பொருளற்றவருக்குப் பொருள் கொடுத்தோமில்லை. உடுக்கத் துணியில்லாதவருக்கு ஆடைகளுதவினோமில்லை. பசிப் பிணியால் நொந்தவரைத் தேற்றினோமில்லை. சுகவீனராய்த் தெருவில் அலைந்தவர்களுக்கு இருக்க இடங் கொடுத்தோமில்லை. தாகமாயிருந்தவருக்கு நமது கையால் தண்ணீர் கொடுத்தோமில்லை. சற்றேனும் ஈவிரக்கமின்றி நாம் மட்டும் சம்பிரமமாகச் சகல போகமும் அனுபவித்தோம். அவைகளுக்குத் தக்க சன்மானத்தை ஆண்டவன் நமக்கு இன்றளித்திருக்க வீணாகப் புலம்பியழுவதிற் பயனொன்றுமில்லை. முழுமுதற் கடவுளாம் மூவுலக நாதனைப் போற்றுவதும், புகழ்வதும்தான் நமக்கினி நற்சுகங் கொடுக்கும். இப் போஜனத்தை யுண்ணுமுன் அவரன்பையுங் கிருபா கடாக்ஷத்தையும் நமக்களித்த அவரை மன்றாடுவோமாக.

"எங்களைப் படைத்துக் காத்து ஆண்டு நடத்திவரும் ஆண்டவனே, அற்பராம் நாங்கள் செய்த பாபங்களுக்குத்தக்க தண்டனையை அனுபவிக்கிறோம். ஆனால், இவைகளைப் பொறுமையுடன் சகிக்கப் போதுமான சாந்தகுணம் எங்களிடமில்லை. நாங்களும்மை நம்பியதும், நம்புகிறதும், நம்புவதும் நீரே அறிவீர். தயை நிறைந்த தற்பரனே, அருள் சுரக்கும் ஆண்டவனே, எமக்குற்ற துயர்நீக்க உம்மை மன்றாடுகிறோம். அகிலாண்டகோடி பிரமாண்ட நாயகனே, அநாத ரக்ஷகனே, அருட்பிரவாகனே, அல்லலகற்றும் அற்புதனே, அன்பே, அருளே, அடைக்கலமே, அருளானந்தமே, அரும் பொருளே அப்பனே, ஆதரவற்ற எம்மை முன்போல் ஆட்கொண்டு ஆதரிக்க வேண்டும் ஆண்டவனே," என்று பரிவுடன் ஸாராள் ஜெபஞ்செய்து முடித்தாள். அன்று முழுதும் அன்னாகாரமில்லாதிருந்ததால் இருவருக்குந் தாங்கமுடியாத பசி ஏற்பட்டிருந்தது. கொடுக்கப்பட்ட உணவை உட்கொண்டு தரையில் தமது வஸ்திரங்களை விரித்து இருவரும் படுத்துறங்கினர்.

## II

தாய் தங்கையினின்றும் பிரிக்கப்பட்ட நம் கதா நாயகனின் கதி என்னவாயிற்று! சண்டாளரின் கையிலகப்பட்ட

மறு தினமே விசாரணை தீர்ப்பு ஒன்றுமில்லாமல் பத்து குதிரை வீரர்களுக்கு அதிபனான ஒரு கொற்றவாலிடம் அவன் கையளிக்கப்பட்டான். ஈவிரக்கமற்ற கல்நெஞ்சனான அக் கொற்றவால் கொடூரமான செய்கைகளை மனங் கூசாமல் செய்யத்தக்க கொலைக்காரனாகக் காணப்பட்டான்.

அன்று பகலவன் வெகு உக்கிரமாக எரித்துக்கொண்டிருந்த உச்சிப் பொழுது நேரத்தில் அவன் தன்னிடம் ஒப்புவிக்கப்பட்ட குற்றவாளியின் ஆடைகளைக் களைந்து இடையில் ஒரு சிறு துணியைமட்டும் உடுத்திக்கொள்ளச் செய்தான். அவன் உத்திரவுப்படி சில வீரர் யூதாவின் இரு கைகளையும் பிணித்துக்கட்டி அதை ஒரு நீண்ட கயிற்றால் சுருக்கிட்டுக் கட்டிக் கயிற்றின் மறு நுனியை ஒரு குதிரையின் கழுத்தோடு சேர்த்துக் கட்டினர். பின்னர் கொற்றவால் தனது பத்து வீரர்களுடன் குதிரையின் மீதேறி ஜெருசலம் நகரின் பிரதான வீதிகளின் வழியாக யூதாவை நடத்திச் சென்றான். பட்டணத்து ஜனங்கள் தெருக்களின் இருபுறமும் கும்பல் கும்பலாய் நின்று அப்பரிதாபமான காக்ஷியைக் கண்ணுற்றனர். யூதனின் சுற்றத்தாரனைவரும் மிகவும் வருந்திக் "கோ"வெனக் கதறி அழுதனர். பட்டணத்துக் கோட்டை வாசலைத் தாண்டியதும் அக் குதிரைப்படை நஸரேத் தென்னும் சிற்றூரை நோக்கிப் புறப்பட்டது.

பாதையோ கரடு முரடானதாகவும், தூசி நிரம்பியதாகவும் காணப்பட்டது. குதிரைகள் வேகமாகச் செல்ல ஆரம்பிக்கவே குற்றவாளி குதிரையின் வேகத்தாலிழுக்கப்பட்டு, உடலில் ஆடையுமின்றி, கால்களில் பாதரக்ஷையுமற்று, தலையில் உரையொன்றுமில்லாமல் வெய்யலின் உக்கிரத்தால் தாக்கப்பட்டு மேனி நோக, திரேகாதியங்கமும் வேர்வை பீரிட்டோட, சற்று நேரத்தில் பெரும் புகை போல எழுந்து கிளம்பிய தூசி யூதன் கண்களின் பார்வையை மறைக்க, சுவாசமும் விடமுடியாமல் தத்தளித்துக் குதிரையின் ஓட்டத்திற்குத் தக்கபடி அவன் ஓட

முடியாமல் கால்கள் வலுவற்றுக் கீழே விழுந்து தரையில் இழுக்கப் பட்டான். வெகு தூரம் அப் பாதகர் அவனை இவ்வித கடின தண்டனைக்குள்ளாக்கினர்.

நஸரேத்தூருக்கு சுமார் ஒரு பர்லாங்கு தூரம் இருக்கும் பொழுது யூதன் மெய் சோர்ந்து மயங்கித் தரையில் வேரற்ற மரம் போலப் பொத்தென விழுந்தான். உருண்டு புரண்டு எழுந்திருக்க முடியாமல் வேதனையின் மிகுதியால் ஓலமிட்டலறினான். அதைக் கண்ட கொற்றவால் குற்றவாளியின் உயிருக்கு ஆபத்து வருமெனப் பயந்து தனது குதிரையை நிறுத்தினான். வீரரும் அவரவர் குதிரைகளை நிறுத்தினர். யூதன் சூரிய வெப்பத்தால் சூடாக்கப்பட்ட தூசி படிந்த பாதையின் மத்தியில் முகங்குப்புற விழுந்து கிடந்தான். வீரர் தங்கள் அதிகாரியின் உத்திரவுப்படி அவனைத் தூக்கி நிறுத்தி அருகிலிருந்த கிணற்றுக்கு அழைத்துச் சென்றனர்.

கொற்றவால் தன் இடையில் தொங்கின கொம்பை எடுத்து ஊதினான். கொம்பின் சத்தங்கேட்ட நஸரேத்தூரார் ஆண், பெண், குழந்தைகள் சகலரும் சில நிமிஷங்களில் விஷயமென்னவென அறிய அங்கு வந்து சேர்ந்தனர். உடலில் ஆடையின்றி திரேகம் முழுதும் தூசியால் மறைக்கப்பட்டு மூச்சுவிட முடியாமல் கஷ்டப்பட்டு தரையில் கிடந்து தத்தளிக்கும் ஒரு சிறுவனைக் கண்ணுற்றனர்.

"இவ்வித பலத்த தண்டனையடைய இச் சிறு பையன் அவ்வளவு பெரிய குற்றம் என்ன செய்திருப்பான். இந்த முரட்டு உரோமயரை பார்க்கவே பயமாயிருக்கிறதே." என்றாள் அக் கூட்டத்திலிருந்த ஒரு பெண். "அதோ பார் அந்தப் பெரியவர், தச்சு வேலைக்காரர் வருகிறார். அவரைக் கொண்டு விஷயம் என்ன வென்று விசாரித்துத் தெரிந்து கொள்ளலாம்" எனப் புகர்ந்தாள் மற்றொரு பெண்.

இவர்கள் குறித்துப் பேசிய பெரியவர் வயது மிகுந்த ஒரு வயோதிகர். அவரது தலைப்பாகையின் கீழே துய்ய வெள்ளை நிற மான முடி வளைந்து வளைந்து தொங்கினது. இன்னுமதிக வெண் மையாயிருந்த வெள்ளிக் கம்பிகளை நிகர்த்த அடர்ந்த அவரது நீண்ட தாடி அவரணிந்திருந்த சாம்பல் நிறமான, உறுதியான அங்கியின் முன்னே அழகுபடக் காணப்பட்டது. வயது மிகுதியி னும் அவர் சுமந்து வந்த ஆதிகாலத்துக் கோடாலி, ரம்பம் உளி, சுத்தியல், கத்தி, முதலிய ஆயுதங்களின் கனத்தினாலும் வெகு தளர்வான நடையுடன் வந்து கொண்டிருந்தார். முதலில் பேசின பெண் அவரிடம் ஓடி "ஓ தாத்தா, நல்ல சூசைநாதா, இங்கே ஒரு கைதியைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அவனைப் பார்த்தால் பாவமாயிருக்கு. அவன் யாரென்று தெரியவேண்டும். அவனை எதுக்காக கைதி செய்தார்களோ! இவர்கள் அவனை என்ன செய்யப்போகிறார்களென்று நாங்களறிய வேண்டும். தயவு செய்து கேட்டுச் சொல்லுங்கள்" என மன்றாடினாள்.

அப்பெரியவரும் கைதியிருக்குமிடத்தையடைந்து அவனை ஏறிட்டுப் பார்த்தார். அவர் முகத்தில் ஒருவித மாற்றமுங் காண வில்லை. உரோமை உத்தியோகஸ்தனையணுகி "தேவனின் சமா தானம் உமக்குண்டாவதாக," என்றார். அவன் அதற்கு மாறுத் தாரமாக 'அவ்விதமே. தேவர்கள் அதை உமக்களிப்பார்களாக'. எனப்பகர்ந்தான். "உமது கைதி மிகவும் சிறியவனாக இருக்கி றானே" என வயோதிகர் கேட்டார். "ஆம் பார்வைக்கும் வயதுக் கும் தான்" எனப் புகன்றான் உரோமையன். "இவன் செய்த குற்றமென்ன வென்பதை நானறியலாமா?" வென நாயகமாக கேட்டார் பெரியவர். "இவன் ஒரு கொலை பாதகன்" என்றான் உத்தியோகஸ்தன். ஜனங்கள் எல்லோரும் ஆச்சரியத்துடன் "கொலைபாதகனா!" என எதிரொலியிடக் கேட்டனர். சூசைமா முனிவரோ மிகவும் அமைதியுடன் "இவன் இஸ்ராயேலித்தனா?" என வினவினர். "உமது ஜாதிப் பேர்களொன்றும் எனக்குத் தெரியாது. இவன் ஒரு யூதன். ஜெருசலத்திலிருந்த இராஜவம்சத் தவரான பென்ஹூர் பிரபுவின் மகன். நேற்று இவனது

மாளிகையின் கூரையின் மேலேறி ஒரு ஓட்டினால் கிராட்டஸ் இராயனின் தலையைப் பார்த்து அடித்து அவரைக் கொன்றே போட்டான்.'' என்றான் உரோமையன். "அப்படியானால் இராயன் சாகவில்லையே'' எனக்கேட்டார் பெரியவர். "இல்லை" யென மொழிந்தான் மற்றவன். "அதற்கு இதுவோ தண்டனை" என வினவ, "இது மட்டுமா? இவன் சாகும் வரை கப்பலில் அடிமையாகத் தண்டிக்கப்பட்டிருக்கிறான்.'' எனக் கூறினான் கொற்றவால். 'ஐயோ பாவம்! சுவாமி தான் இச் சிறுவனுக்குதவி செய்யவேண்டும்.' எனப் பகர்ந்தார் தயை மிகுந்த சூசைமாமுனி.

அவருடன் கூடவே வந்த ஒரு வாலிபரை அங்கு நின்ற எவரும் கவனிக்கவில்லை. அவர் தமது தோளின்மேல் தாங்கிவந்த கோடலியைக் கீழே வைத்துவிட்டுக் கிணற்றின் ஓரமாய் இருந்த கல்லின்மேல் உள்ள தண்ணீர் நிறைந்த ஜாடி ஒன்றை சுறுக்காக யெடுத்துவந்து வீரர்களையும் பொருட் படுத்தாமல் கைதியின் அருகே அமர்ந்து அவன் வாயில் ஜாடியை வைத்து ஜலத்தை பருகும்படி செய்தார். சகிக்கமுடியாத அவஸ்தை அடைந்திருந்த அவனுடைய தோளின்மேல் அன்பாய்த் தமது கரத்தை வைத்தார். நிர்ப்பாக்கிய நிலையிலிருந்த யூதனும் தனக்கு அன்பு காட்டிய வாலிபரின் திருமுகத்தை உற்று நோக்கினான். அவரது வலிந்த உடலும், திடமான புஜமும், உயர்ந்த தோளும், அருளாய் அமைந்த சிரசும், அதற்கேற்ற நவமான இருநேத்திரங்களும், சிவந்த வாயும், சிறந்த மூக்கும், முத்துக்களை நிகர்த்து ஒளிவீசும் சீரான பற்களும் மிகக்கம்பீரமான அழகுடன் கூடி விளங்கிய அவரின் தோற்றம் யூதாவின் நேயத்தைக் கொள்ளை கொண்டது. அன்பே உருவெடுத்த அம்மனுமகனின் திருமுகத்தைக் கண்ணுற்ற யூதனுக்கு புத்துயிருண்டாயிற்று. மெய் வருத்தம் நீங்கியவனாய்க் காணப்பட்டான். அவ்வளவு பேரழகு படைத்த பிரகாசம் பொருந்திய முகத்தை அவன் ஒருபோதுங் கண்டதில்லை. தன்னைத் துன்புறுத்திய துஷ்டரின்மேல் கொண்டிருந்த குரோதம், பழி, வர்மம் யாவும் காற்றாய்ப் பறந்துபோகவே சிறுகுழந்தையின் வஞ்சகமில்லா மாசற்ற குணம் அவன் மனதில் குடிபுகுந்தது. யூதன் ஜலம் பருகி முடித்தவுடன் தண்ணீர் ஜாடியைக்

கீழே வைத்துவிட்டு, அக்கரத்தால் மனுமகனுன சேசுநாதர் அவனுடைய நெற்றியை அன்பாய்த் தடவி தூசி படிந்த அவனது சிரசின்மேல் சிறிது நேரம் அதை நிறுத்தி யூதனே ஆசீர்வதித்தார். பிறகு மௌனமாய் எழுந்து, ஜாடியை அது முன்னிருந்த விடத்தில் கொண்டுபோய் வைத்துவிட்டு, முன்போல் தோளின்மேல் கோடலியை வைத்துக்கொண்டு சூசைமாமுனிவருடன் அப்பால் சென்றுர்.

அங்கு நின்ற சகலரும் உரோமை வீரரும் அவர்களின் தலைவனும் சிறிது நேரம் மௌனமாய் நின்றனர். அவ்விருவரும் அப்பால் செல்லுவதை இமைகொட்டாமல் பார்த்து அசைவற்று நின்றனர். சற்றுநேரம் சென்று வீரர்கள் கிணற்றிலுள்ள ஜலத்தை யெடுத்து தாகசாந்தி செய்தனர். குதிரைகளுக்கும் குடிக்கக் கொடுத்தனர். குரூர சித்தமுள்ள கொற்றவாலின் குணம் சற்றே மாறினதாகத் தோன்றினது. அவனே தரையின்மேல் படுத்திருந்த யூதாவைத் தூக்கி நிறுத்தி ஒரு வீரனுக்குப் பின்னல் குதிரையின்மேல் உட்காரவைத்துக்கொண்டு தனது பரிவாரத்துடன் அவ்விடத்தை விட்டு அப்பால் சென்றுன்.

நஸரேத்தூராரும் நற்குணவதியான மரியம்மாளின் உத்தம புத்திரனுடைய உதாரகுணத்தையும் தர்ம சிந்தையையும் மிகவும் புகழ்ந்து பேசிக்கொண்டே அவரவர் இல்லம் சென்றனர்.

---

## ஐந்தாம் அத்தியாயம்.

### தண்டுவலிக்கும் அடிமை.

யூதேயா நாட்டைச் சேர்ந்த கடல்களில், கடல் கொள்ளைக் காரரின் கொடுமை மிகுந்திருந்தது. நாடு கடத்தப் பட்ட குற்ற வாளிகளும், கொலை, களவு முதலிய குற்றங்களைச் செய்து தண் டிக்கப்பட்டு சிறையிலிருந்து தப்பியோடியவர்களும், உரோமரின் அரசாட்சிக்குட் பட்டிருக்கச் சகியாதவர்களுமே இக்கொள்ளைக் கூட்டத்தில் சேர்ந்திருந்தனர். இவர்களால் கப்பல் வியாபாரிக ளுக்கும், அரசாங்கத்தாருக்கும், கடற்கரையோரமுள்ள நகர வாசிகளுக்கும் ஏற்பட்ட கஷ்ட நஷ்டம் கொஞ்ச நஞ்சமல்ல. உரோமர் ஆட்சியிலேற்பட்ட அநேக நன்மைகளுள் கப்பல் கொள் ளைக்காரரை ஒழிக்க அவர்கள் எடுத்துக்கொண்ட தீவிர முயற்சிக ளும் அவற்றாலவர்களடைந்த ஜெயமுமே முக்கியமாகக் குறிப்பிடத் தக்கவை. இக்கதை நிகழ்ச்சியின் காலத்தில் கொள்ளைக்காரரின் உபத்திரவம் உச்சத்திலிருந்தது. அவர்களை அடக்கி யொடுக்குவ தில் குவிண்டஸ் ஆரியுஸ் என்னும் தளபதி மிகவும் பிரக்கியாதி பெற்றிருந்தார். கடற்போரில் இவருக்கு நிகரானவர் எவரு மில்லை. இவர் உரோமை தேசத்தவர். இவர் ஜாதிமத துவேஷமில் லாமல் சகலருடனும் நட்புக்கொள்ளும் சற்குணமுள்ளவர். இவ ரது பருத்த உடலும் அகன்ட மார்பும், உயர்ந்த பரிமாணமும், பிறரை அடக்கியாளுங் குறிகளையுடைய முகமும், பார்ப்போ ருக்குப் பயத்தை விளைவிக்குந் தன்மையாகத் தோன்றின. ஆயி னும் அன்புந், தயையும், பொறுமையுமுள்ள புண்ணிய புருடர். போர் புரியும்போது புலிபோலத் தோன்றுவார். ஓய்வுக்காக வேற்படும் விடுமுறை காலத்தில் உயர்வு தாழ்வின்றி சகலருட னுங் கலந்து பேசி சந்தோஷிப்பார். துயருற்றவருக்குத் துணை யாய் நின்று பல நன்மைகள் புரிவார். வருத்த முற்றவர் களுக்கு இன்முகங்காட்டி அன்புடனுபசரிப்பார். பக்ஷமுடன்

சகலரையும் பரிவுடன் கவனிப்பார். இவர் அதிகாரத்துக்குட் பட்ட சகலரும் அடைந்த அனுகூலங்கள் அனந்தம். இவரைப் போற்றிப் புகழாதவர் எவருமிலர். ஆயுதப் பிரயோகத்திலும், படைப் பயிற்சி யூகத்திலும் தீரமாய்ப் போர் புரிவதிலும் இவர் காண்பிக்கும் சாமர்த்தியம் செப்புந்தரமல்ல. இத்துணை திறமை வாய்ந்த தளபதி இட்ட வேலையைச் சட்டெனச் சகல ரும் சந்தோஷத்துடன் செய்வர்.

மிசின்னம் என்ற பட்டணத்தின் சமீபத்திலிருந்த கடற் கரை முனைக்கு சற்று தூரத்தில் ஒரு தலைமை சண்டைக் கப்பல் தோன்றியது. அதைக் கவனித்துப் பார்ப்போருக்கு அது உரோமரின் கப்பலெனத் தெளிவாய்த் தெரியும். இக்கப்பலும் வேறு பல சிறு கப்பல்களும் அக்கலங்களிலுள்ள போர்வீரர் கள், கப்பலோட்டிகள், மற்றும் பணியாளர்களும் இரண்டு தினங் களுக்கு முன்பு தான் குவிண்டஸ் ஆரியுஸ் வசம் ஒப்புவிக்கப் பட்டனர். தலைமையான கப்பலில் தண்டு வலிப்பவர்கள் மட்டும் இருநூறுபேர்களாகும். இவர்களில் பலர் விலைக்கு வாங்கப்பட்ட அடிமைகளும், ஏனையோர் குற்றங்களுக்காக அரசாங்கத்தாரால் தண்டிக்கப்பட்ட கைதிகளுமாவர். நம் கதா நாயகனான யூதாவும் அவர்களில் ஒருவனாயிருந்தான். போர்வீரரால் வீட்டினின்றுங் கட்டி இழுத்துப் போகப்பட்ட இவன் யாதொரு விசாரணையும் தீர்ப்புமின்றி கப்பலில் தண்டு வலிக்கும் அடிமையாக்கப்பட்டான். வருடங்கள் மூன்றாயின. இவன் பட்டபாடுகளும் அடைந்த துன் பங்களும் கொஞ்சமல்ல. சண்டையில் செத்துமடியட்டு மென்ற நோக்கத்துடன் இவனது விரோதியான மேஸலா படைக் கப்பலுக்கு இவனை அனுப்பிக்க ஏற்பாடு செய்தான்.

சற்று தூரத்தில் தோன்றிய கப்பல் கரையை நோக்கி வந்து கொண்டிருந்தது. அங்குள்ள வேலைக்காரர்கள் சகலரும் உற்சாகமாகப் பல பாட்டுகள் பாடிக்கொண்டு அவரவர் வேலை களை ஒழுங்குடன் செய்தார்கள். கப்பல் கரையோரமாக ஓர் இடத்தில் நிறுத்தப்பட்டு நங்கூரம் பாய்ச்சப்பட்டது. தளபதியும்

சந்தோஷங்கொண்டார். வீரர்களின் மனோ திடத்தையும் வேலை யாட்களின் அயராத உழைப்பையும் தண்டு வலிப்போரின் திறமையையுங்கண்டு மகிழ்ந்தார். இவர்களின் ஒத்துழைப்பால் கொள்ளைக்காரரை எளிதில் வெல்லலாமென எண்ணமிட்டவராய் கப்பல் நின்றவுடனே தண்டு வலிப்பவர்களின் சமீபமாகச் சென்றார். அவர்கள் மேல் இரக்கங்கொண்டவராய் உருக்கத்துடன் ஒவ்வொருவரையும் உற்று நோக்கினார். அவர்களுடைய புஜபல பராக்கிரமமுள்ள அங்க அமைப்புகளைக் கண்டு ஆனந்தமடைந்தவராய் அவர்களைக் கவனித்துக் கொண்டே சென்றார். அறுபதாவது நம்பரிலிருந்த முகவசீகரமுள்ள ஒரு வாலிபனைக் கண்டார். அவன் தான் யூதா. இவ்வளவு இளம் பிராயத்தில் அதுவும் யூதனான இவன் எப்படி அடிமையாக்கப் பட்டானென அறிய ஆவல் கொண்டார். அவன் முகக் களை அவனை ஓர் உயர்குல மகனென வெளியிடுவது போலிருந்தது. அவனது திரேக அமைப்பும், உயரமற்ற மட்டமான உருவமும், பரந்த மார்பும், கூரிய மூக்கும் பெருத்த கண்களும், கண்டோர் மனதைக் கவருந்தன்மையன. தளகர்த்தனின் கட்டளையை எதிர்பார்த்தவனாய் கப்பல் மாலுமி அவர் பின்னே நின்றுகொண்டிருந்தான். யூதா மாலுமியைப் பார்த்து "ஐயா புது எஜமானனிடம் என் வேண்டுகோளைத் தெரிவித்தீர்களா?" என்றான். குவிண்டஸ் அவனைப் பார்த்து "ஓ சிறுவனே, உனக்கென்ன வேண்டும். கூசாமல் என்னிடம் கேள்" என்றார். யூதாவும் தலைவணங்கி ஆசாரங்காட்டி "ஆண்டவனே, கப்பலில் தண்டு வலிக்கும் நாங்கள் கடந்த இரண்டு தினங்களாக ஒரே பக்கத்திலிருந்து வேலை செய்து வருகிறோம். ஒரு பக்கமாகச் சாய்ந்து வேலை செய்து வந்தால் மறுபக்கம் வேலை செய்வது கஷ்டமாக இருக்கிறது ஆகையால் எங்களை தினம் ஒரு பக்கமாக மாற்றி மாற்றி வேலை வாங்கும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறேன்." எனப் புகன்றான். "ஆமாம் அப்படித்தான் செய்யவேண்டும். மாலுமி, நாளை முதல் இது போல் செய்" என்றார் தளகர்த்தர். மாலுமி, "புத்தி" என்றான். குவிண்டஸும், மாலுமியும் கொஞ்சதூரம் சென்றனர். "மாலுமி" என்றழைத்தார் குவிண்டஸ். "ஆஜர்" என்றான் மாலுமி.

குவிண்டஸ்:— 60 நிர் தண்டு வலிக்கும் அடிமை புத்தி சாலியாகக் காணப்படுகிறான். எவ்வளவு காலமாக உனக்கு அவனைத் தெரியும்.

மாலுமி:— கடந்த மூன்று மாதங்களாகத் தெரியும். மிகவும் கீழ்ப்படிதலுள்ளவன். யாருடனும் அவன் அதிகமாகப் பேசுவதில்லையாகையால், அவனைப்பற்றி யாரும் விசேஷமாகத் தெரிந்து கொள்ள மார்க்கமில்லை.

குவிண்டஸ்:— அவன் யாரென்பதை நானறியவேண்டும். நாளைக்குக் காலையில் அவனை என் அறைக்கு அனுப்பு.

மாலுமியும் தலையை அசைத்துக்கொண்டு தலைவணங்கி அப்பால் சென்றான். இரவு மணி ஏழு. கப்பலிலுள்ளவர்களுக்குள் விளையாட்டும், களியாட்டும், பாட்டும், படிப்பும், தலையாட்டும், வாயினாலும் கையினாலுந் தாளங்கள் போட்டானந்திப்பும், ஆரவாரமும் அதிகமாயிருந்தது. யூதாவோ இவைகளில் கலந்து கொள்ளவில்லை. கப்பலில் யாருமில்லாத தனியிடத்தில் உட்கார்ந்து தேம்பித் தேம்பி அழுதுகொண்டிருந்தான். துக்கம் அதிகரிக்கவே அவன் "ஐயோ! அம்மா, தங்கா, என்னுடைய பாபம் உங்களையும் பிடித்ததே. உங்களுக்கென்ன கெதி நேரிட்டதென்பதையறிவிக்க உற்றதுணையெனக் கொருவருமில்லையே. என் உயிரினுமினிய தாயே, இவ்விதம் நிகழுமென்றுகனவிலுங் கருதினேனில்லையே. நான் கொண்ட நினைவுகளெல்லாம் நாசமாய்ப் போயினவே. கஷ்டமென்பதையே கேட்டறியாத நீங்களிருவரும் எங்கு எப்படியிருக்கிறீர்களோ. எவ்வித ஆபத்திலகப்பட்டீர்களோ. என் பகைவன் மேஸலாவுக்கு யோக காலம் நம்மை இக்கெதிக் காளாக்கி விட்டதே. என்னை ஈன்றெடுத்த தாய் க்ஷணநேரமும் பிரிந்திருக்கச் சகியாத மாதா இவ்விரண்டு ஆண்டுகளாய் எவ்வித துயருற்றிருக்கிறார்களோ, உயிருடனிருக்கிறார்களோ, அன்றி உயிர் துறந்தார்களோ, ஒன்று மறிய வழியில்லையே," எனப் புலம்பி அழுது கொண்டிருந்தான்.

யூதாவின் கண்களிலிருந்து கண்ணீர் தாரை தாரையாய் வழிந்தது. தாயையுந் தங்கையையும் பிரிந்த துக்க மொரு

பக்கம். தனியனுய் அநாதைபோல அடிமையான துயரம் மற்ருேர் பக்கம். தனது மாற்ருன் மேல் பழி தீர்த்துக் கொள்ள முடியாத விசனம் வேருெரு பக்கம் அவன் மனதை வாட்டி வதைத்தது. பாவம் என்ன செய்வான்! கடவுளை நினைத்தான். கண்களில் நீர் ததும்பியது. மெய் மறந்தான். ஒன்றும் தோன்ருமல் "ஓ" வென அலறிஞன். உடனே கப்பல் மாலுமியும் சில வேலையாட்களும் அங்கு ஓடி வந்தனர். யூதா உரத்த குரலுடன் "ஆ தெய்வமே, பூலோக பரலோக பரிபாலனு, பாபிகளைக் கண்டிக்கவல்ல பரிபூரணு, தயாளத்துவ சர்வகுண சம்பன்னு, பித்தனைப் போலப் பிதற்றுமென்னை அன்புடன் பாரும். காலமும் அற்று, கதியுமற்று, போக வழியுமற்று, புகலிடமுமற்று தயங்கு மென்னைக் கண்டு மன மிரங்காதிருப்ப தென்னே! ஏக நாதா, அனுதையான என் தாயும் தங்கையுமிருக்கும் விதத்தை யறிவிக்க எனக்கிங்கு யாருமில்லையே. கண்ணிலுமினிய என் தாய், கார்த்து வளர்த்த என்னருமைத் தாய், இருக்குமிடம் தெரியவில்லையே. என்ன செய்வேன். யாரிடம் நோவேன்" எனப் பலவாருய்ப் புலம்பி யழுதான். அங்கு நின்றவர்கள் அவனைத் தூக்கியெடுத்து நிறுத்தினர். அவனுக்கு ஆறுதல் புகன்றனர். மாலுமியும் அவனை நோக்கி "யூதா கவலைப்படாதே. உன் துயர் விரைவில் தீர்ந்துவிடும். புதிய படைத் தலைவர் உன்மேல் அன்புகொண்டிருக்கிருர். காலையில் உன்னைத் தனியே அவரிடமனுப்பி வைக்கும்படி எனக்கு உத்திரவிட்டிருக்கிருர்." என்ருன். அச்சமயத்தில் கப்பல் மணியுங் கல கலவென அடித்தது. நற்சகுனம் என யூதா சற்று மனந்தேறியவனுய் அங்கு நின்றவர்களுடன் சென்று இரவு போஜனத்தை முடித்துக் கொண்டு படுத்துறங்கினுன்.

## II

காலை சுமார் 7 மணிக்கு யூதா மாலுமியிடம் சொல்லிக்கொண்டு தளகர்த்தனின் அறைக்குள் சென்ருன். மிகவும் பயபக்தியுடன் அவருக்கு சாஷ்டாங்க நமஸ்காரம் புரிந்து "எஜமானே அடியேனை அழைத்த காரணம் யாது? தாங்கள் காலாலிட்ட வேலை

யை அடிமை தலையால் செய்து முடிக்கக் காத்துக்கொண்டிருக்கிறேன். தேவரீர் சித்தம் எதுவோ" எனக் கூறி கைகளைக் கட்டி வாய் பொத்தி வெகு மரியாதையுடன் நின்றான்.

குவிண்டஸ்:— அப்பா உன்னைப் பார்த்தால் யூதனைப் போலத் தெரிகிறதே. நீ யார்? உனக்கு எந்த ஊர்?

யூதா:— ஆண்டவனே, நான் ஜாதியில் யூதன் தான். நான் பிறந்து வளர்ந்ததெல்லாம் ஜெருசலத்தில்.

குவிண்டஸ்:—என்ன ஜெருசலமா! அங்கு பென்ஹூர் என்ற பெரிய தனவந்தர் இருந்தார். யூதர்களின் இராஜகோத்திரத்தைச் சார்ந்தவர். வெகு உத்தமர். நற்குண நற்செய்கையுள்ளவர். ஒரு பெரிய கப்பல் வியாபாரி. உயிருடனிருக்கும்பொழுது அநேக முறை ஜெருசலேமுக்கு வரவேண்டு மென்று என்னை விரும்பியழைத்தார். ஆனால் அங்கு போக எனக்கு சமயம் வாய்க்கவில்லை. அவர் இறந்து அநேக வருடங்களாகின்றன. சரி நீ எந்த கோத்திரத்தைச் சார்ந்தவன். நீ தண்டு வலிக்கும் அடிமையானதெப்படி?

யூதாவின் முகம் மாறினது. வெட்கத்தால் தலை குனிந்தான். அவனது அழகிய இரு நேத்திரங்களிலிருந்தும் தாரை தாரையாய்க் கண்ணீர் வடிந்தது. நாக்குழறி "நான் நான்" என்றான். துக்க மிகுதியால் விம்மி விம்மி அழுதான். மார்படைத்தது. பேசமுடியாமல் பெருமூச்சு விட்டுக் கதறினான். குவிண்டஸ் பிரபுவும் அவனை அன்புடன் அரவணைத்து தட்டிக்கொடுத்த வண்ணம் "சிறுவனே ஏனழுகிறாய். பயப்படாதே. உன்னை நான் காப்பாற்றுகிறேன். நீ யாரென்பதைச் சொல்." எனப்பலவிதமாக ஆறுதல் கூறி அவனைத் தேற்றினார். யூதனும் தன்னை அன்புடன் பாராட்டும் தலைவனின் முகத்தை உற்றுநோக்கி சற்று தைரியங் கொண்டவனாய் "நான்தான் அந்தப் பென்ஹூர் பிரபுவின் ஒரே மகன்" என்று சொல்லிக்கொண்டே மீண்டும் பெருத்த ஓலமிட்டழுதான்.

குவிண்டஸ்:—(பேராச்சர்யத்துடனும் விசனத்துடனும்) என்ன! பென்ஹூர் பிரபுவின் புத்திரனு! அப்படியானல் நீ இக் கெதிக்கு எப்படி ஆளானுய்?

யூதா புதிய கவர்னர் பவனி வருங் காக்ஷியைக் காண வீட்டின் கூரைமேலேறியதையும், ஓடு தவறி கவர்னரின் தலையில் விழுந்து அவர் மூர்ச்சையானதையும், அக் காரணத்தால் விசாரணே யொன்று மில்லாமல் அடிமையாக்கப்பட்ட விருத்தாந்தங்களேயும் ஒன்றும் விடாமல் சொல்லி முடித்தான்.

குவிண்டஸ் பிரபுவின் அன்பு நிறைந்த முகம் மாறினது; கோபக் குறிகள் காணப்பட்டன. யூதனே வெறுப்புடன் நோக்கினர். "அடா பாவி, நீதானு அச் சண்டாளன்: உன்னே இன்னும் உயிருடனு விட்டு வைத்தார்கள். அன்றே உன்னே சிரச்சேதம் செய்திருக்க வேண்டும்" என்று கோபமாகக் கூறினர். யூதாவுக்குப் பயம் அதிகரித்தது. செய்வதின்ன தெனத் தெரியாமல் சித்தங்கெட்டு தத்தளித்தான். சரேலெனத் தளகர்த்தனின் பாதங்களில் விழுந்து கெட்டியாகப் பற்றிக் கொண்டு "நீதியுள்ள எஜமானே, என்னே மன்னியும்; நான் நிரபராதி, குற்றமற்றவன். புதிய கவர்னரைக் கொலேபுரிய முயல சிறுவனுகிய எனக்கு யாதொரு காரணமுமில்லேயே. என் அஜாக்கிரதையால் ஏற்பட்ட அசந்தர்ப்பமே தவிர வேறென்றுமில்லே. என்னே மன்னிக்க உமக்கு மனமில்லேயானுலும் குற்றமற்ற என் தாயையும், தங்கையையும் காப்பாற்றும். என் தந்தையுடன் நீர் கொண்ட சிநேகத்திற்காக அவர்களே உயிர் வாழச் செய்யும். உமது கோபத்திற்காளான கொடியனுன என்னே உமது இடையிற் றெங்கும் வாளால் இரண்டாகத் துண்டித்து விடும். கொல்லும், கொல்லும், என்னேக் கொல்லும்." என மன்ருடி அழுதான். குவிண்டஸும் சிறிது சாந்தமடைந்தார். "அப்படியானல் நீ குற்றமில்லாதவனு? உன்னே விசாரித்து நீதி மன்றத்தில் தீர்ப்பிடவில்லேயா?" எனக் கேட்டார். "ஐயா, மெய்யான தேவன் சாக்ஷியாக நான் மாசற்றவன்.

இதை நம்பும். நியாய ஸ்தலத்தில் நீதிபதியின் முன் என்னை நிறுத்தவுமில்லை; விசாரணை செய்யவுமில்லை" எனப் பகர்ந்தான் யூதா.

குவிண்டஸ்:—செய்த குற்றத்தை தீர விசாரிக்காமல் உன்னைத் தண்டித்தார்களா?

யூதா:—விசாரணை செய்யவில்லை. உண்மையாய் உறுதியாய் இல்லை. குற்றமற்ற என் அன்னையையும் சகோதரியையும்கூட அந்தோனியோவின் சிறைச்சாலையிலடைத்து விட்டார்களாம். அவர்களைப் பிரிந்து நானனுபவிக்கும் மனோபாதை கொஞ்சமல்ல. ஐயா, துர்ப்பாக்கியனான என்னை இக் கடலின் மீன்களுக்கு இரையாக்கிவிடும்; என்னருமைத் தாயையும், தங்கையையும் காப்பாற்றும். உமக்குக் கோடி புண்ணியமுண்டு. என் தந்தையைவிட இராஜ விசுவாசமுள்ளவர்கள் இந்நாட்டில் வேறு யார்? அவர் புத்திரனாகிய நான்மட்டும் ஏன் இராஜ துரோகம் செய்ய வேண்டும்; இவ்விளம்பிராயத்தில் இராஜப் பிரதிநிதியைக் கொல்லவேண்டுமென்ற குரோதம் சிறுவனாகிய என் மனதிலேற்படக் காரணமில்லையே. அதுவும் பட்டப் பகலில் ஆயிரக் கணக்கான ஜனங்கள் புடைசூழ போர்வீரர், சேவகர்கள் திரளாய் நின்று ஆர்ப்பரிக்க, இந் நாட்டிற்கே முதல் முதல் விஜயஞ் செய்த வலிரியஸ் கிராட்டஸ் பிரபுவின் மேல் கோபங்கொண்டு அவரைக் கொலை செய்ய எத்தனிக்க அப்பெருங் கூட்டத்தின் மத்தியில் என்னையுமறியாமல் அவரைக் கொலைபுரிய முயல அவ்வளவு பலத்த முகாந்திரம் என்ன உண்டு. உரோமைச் சக்கிரவர்த்தியின் உண்மை இராஜ விசுவாசியின் மகனான நான் என் ஜாதியினரின் பழக்க வழக்கங்களை நிந்தித்துப் பேசி உரோமர்களின் வீர தீர புஜபல பராக்கிரமங்களையும் அவர்களின் உயர் தன்மைகளையும் பெரிதும் பாராட்டி வந்தேனே. கல்வி கற்க உரோமை நகருக்குப் போக அனுமதி யளிக்கும்படி என் தாயைப் பல முறையும் மன்றாடினேனே. சிறு பருவம் முதல் உரோமர்களுடன் பழகிவந்த நானோ உரோமைச் சக்கிரவர்த்தியின் விரோதி. என் வார்த்தைகளை நம்பும்; நான் சொல்வதெல்லாம் உண்மை, சத்தியம்.

குவிண்டஸ்:—நீ வேடிக்கை பார்க்கக் கூரை மேலிருந்த போது யாராவது உன்னுடன் அங்கிருந்தார்களா ?

யூதா:—நானும் என் தங்கை திருஷாவும் தவிர வேறு யாரும் அங்கில்லை.

குவிண்டஸ்:—உனது தாய் ?

யூதா:—வீட்டின் கீழ்த்தட்டில் எனக்கு அன்னம் படைக்கும்படி வேலையாளிடம் சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

குவிண்டஸ் ஆரியுஸ் பிரபு யூத சிறுவனின் களங்கமற்ற வார்த்தைகளை நம்பினர். அவனுக்கு விரோதியாய் இருப்பவர்களின் சதி மோசமாய் இருக்குமென எண்ணினர். அவனையும் அவன் தாய் தங்கையையும் விடுவிக்க முயற்சி செய்ய வேண்டுமென்ற உறுதிகொண்டார். தமது அத்தியந்த நண்பரும், ஸீஸருக்கு மிகப் பிரியமானவரும், யூத குலத்தவரிற் சிறந்த வள்ளலும், உத்தம குணங்கள் நிரம்பியவரும், தாராள தர்ம சிந்தையுள்ளவருமான பென்பெஹூர் பிரபுவின் குடும்பமா சீரற்று, சிறப்பற்று, நிலையற்று, ஒன்றுமில்லாமல் போக வேண்டும்! அவரிடம் கொண்ட அன்பின் பெருக்கால் தளகர்த்தரின் மனம் துடித்தது; தனது நண்பரின் மனைவி மக்களை விடுவிக்க என்ன வகைகள் செய்யலாமென எண்ணினர். வெகு நேரம் மௌனமாயிருந்தார். யூதாவின் கண்களினின்று கண்ணீர் பிரவாகம் வழிந்தோடியது. செய்வதின்னதென அறியாமல் தேம்பித் தேம்பி அழுதான். தளகர்த்தனது கால்களில் மறுபடியும் விழுந்தான். "என் மேல் இரக்கமாயிரும்." என மன்றாடினன். பிரபுவின் மனம் இளகியது. யூதாவைத் தன் கைகளால் தொட்டுத் தூக்கினர். "யூதா பயப்படாதே, கடலை விட்டு வெளியேறினதும் கடவுள் உன் கஷ்டத்தைத் தீர்ப்பார். தைரியமாயிரு; எழுந்துபோய் முன் போல உன் வேலையைச் செய்." என்றார். யூதனும் எழுந்து நின்று தனக்கு தேறுதல் மொழி புகன்ற தனது பேருபகாரியை வியந்தான்; மனத்தில் வணங்கினன். அப்பால்போக அவன்

கால்கள் அசையவில்லை. "என் நிற்கிறாய். இன்னும் உனக்கு என்ன வேண்டும்." என்றார் குவிண்டஸ். "ஐயா என்னைப்பற்றி எனக்குக் கவலையில்லை, கொள்ளைக்காரருடன் நடக்கவிருக்கும் போரில் நான் செத்துமடிவது நிச்சயம்: தேவரீர் கிருபை கூர்ந்து என் தாயும், தங்கையும் சிறைச்சாலையிலிருந்து நீங்கவும், முன்போல அவர்கள் சுகமாய் வாழவும் உதவி புரிய வேண்டும்." என்று கெஞ்சினான்.

அச்சமயத்தில் ஒரு போர்வீரன் வேகமாய் உள்ளே வந்து தலை வணங்கி நின்றான். "விசேஷமென்ன?" என்றார் பிரபு.

போர்வீரன்:— கொள்ளைக்காரரின் கப்பல் யூபியாவிற்குச் சமீபமான விடங்களில் கூட்டம் கூட்டமாக நிற்கின்றன. நமக்கு துணையாக அனுப்பப்பட்ட நூறு கப்பல்களும் வந்து சேர்ந்து விட்டன.

குவிண்டஸ்:—அப்படியானால் உடனே வேலையைத் துவக்குவோம். (யூதாவைப் பார்த்து) நீ போய் ஜல்தியாக மாலுமியை இங்கு வரச்சொல்லு.

யூதாவும் வெளியில் சென்று மாலுமியைத் தளகர்த்தனிடம் அனுப்பினான்.

குவிண்டஸ்:—மாலுமி, நங்கூரத்தை எடுத்து கப்பலில் பாய் விரிக்கும்படி செய். கப்பல் கிழக்கே போக வேண்டும். வீரர்களுள்ள மற்ற சிறு கப்பல்களும் நம்முடன் புறப்பட வேண்டும். அதற்கறிகுறியாக எக்காளங்கள் முழங்கட்டும். ஜல்தி: (தனக்கிட்ட கட்டளையைச் செய்ய மாலுமியும் தளபதிக்கு மரியாதை செய்து அவ்விடத்தை விட்டு அகன்றான்.)

போர்வீரன்:—கொள்ளைக் கூட்டத்தார் பெருங் கூட்டமாய் இருப்பதாகத் தெரிகிறது. அவர்களுடன் பகற் காலத்தில் போர் புரிவதே நலம்.

குவிண்டஸ்:—பெருங்கூட்டமா? அப்படியானால் அவர்களுடன் சண்டையிட நாம் செய்திருக்கும் ஏற்பாடுகளைத் தெரிந்து கொண்டு சர்வ ஜாக்கிரதையாக இருக்கிறார்களென்றே நினைக்கிறேன்.

போர்வீரன்:—ஆமாம், அதற்குச் சந்தேகமில்லை. அவர்கள் வெகு தந்திர முள்ளவர்கள். எதற்கும் அஞ்சாத நெஞ்சழுத்த முள்ள சண்டாளர்கள்; கொடிய துஷ்டர்கள்.

குவிண்டஸ்:—எப்படியானாலும் நாம் அவர்களுடன் போர் புரிந்தே தீரவேண்டும். அரசர் முன் நாமிட்ட சூளுறவுப்படி ஜெயம் அன்றேல் மரணம். நமது படையிலுள்ள சகலருக்கும் ஊக்கத்தையும், உற்சாகத்தையும் ஊட்ட வேண்டும். கொள்ளைக் காரரின் வீரியத்தைப் பற்றி யாரும் பேசிக் கொள்ளாமற் பார்த்துக் கொள்ள வேண்டும். நம்மிடமுள்ள கப்பல்களை இரு பிரிவாகப் பிரித்து யூபியா தீவிற்கு வெகுதூரத்திற் கிப்பாலிருந்தே ஒன்றன் பின்னொன்றாய் அத் தீவை வளைந்து நெருங்கிப் போகச் செய்ய வேண்டும். இவ்விதம் செய்து விடுவோமானால் ஜெயம் நமக்கு நிச்சயம். கொள்ளைக்காரர் நம்மிலும் அதிகமா யிருந்த போதிலும் தவறாமல் நம்மிடம் அகப்பட்டு மடிந்து போவார்கள்.

அப்போது கப்பலில் எக்காளங்கள் ஊதப்பட்டன. குவிண்டஸ் பிரபுவும் அவருடனிருந்த போர் வீரனும் அறையை விட்டு வெளியே சென்றார்கள். கப்பலும் பாய் விரித்தோடினது. தளகர்த்தனிட்ட உத்திரவுப்படி அவருடனிருந்த போர்வீரன் சமயத்திற்குச் சமயம் வெள்ளைத் துணி ஒன்றை வீசி சமிக்ஞைகள் மூலம் இதர கப்பல்களுக்கு தலைவனது உத்திரவுகளைத் தெரிவித் துக் கொண்டேயிருந்தான். அவைகளும் காற்றின் வசதியால் வெகு துரிதமாய்ச் சென்றன. உச்சிப் பொழுதில் யூபியா தீவின் கரை தென்பட்டது. அதன் ஓரத்தில் பல மரக் கலங்கள் மிதந்து கொண்டிருந்தன. கொள்ளைக் கூட்டத்தார் அச்சமயம் கரையில் கூடியிருந்தனர். கப்பல்களை வேகமாகச் செலுத்த தண்டு வலிப் பவர்களுக்கு உத்திரவு இடப்பட்டது. சண்டைக்கு வேண்டிய முஸ்தீப்புகள் எல்லாக் கப்பல்களிலும் தயாராயின. சண்டை துவக்குமுன் வழக்கம்போல கப்பல்களிலுள்ள தண்டு வலிக்கும் அடிமைகள் இருப்பிடம் விட்டு அகன்று போகாமல் கப்பலோடு கப்பலாய்ச் சேர்த்துக் கட்டப் பட்டார்கள்.

அந்தோ பரிதாபம்! அறுபதாம் நம்பரிலிருந்த யூதாவை யும் கட்ட நெருங்கினர்கள். உயர்குலக் கோமகனுப் பிறந்து உல்லாச வாழ்வின் இன்பத்தை நுகர்ந்து தன்னைச் சூழ்ந்து அடிமைகள் அடிபணிந்து ஊழியம் செய்திருந்த தொருகாலம் மாறி அடிமையினும் கேடாய் இன்று சங்கிலிகளால் கட்டப் படவும் ஒரு காலம் வந்ததேயென எண்ணி ஆறுய்த் துயரடைந் தான்; தன்னையு மறியாமல் ஓலமிட்டான். குவிண்டஸ் பிரபு சத்தம் வந்த திசையை நோக்கினர். யூதாவைக் கட்ட நெருங் கியவனைக் கூப்பிட்டு "அவனைச் சங்கிலியால் கட்டாதே." என்ருர். அவனும் அப்படியே அவனை விட்டு விட்டு ஏனைய அடிமைகளை சங்கிலிகளால் இறுகப் பிணித்துக் கட்டினன். யூதா பேருவகை அடைந்தான். தன் கஷ்ட காலம் சீக்கிரம் நீங்கிவிடுமெனத் தீர்மானித்தான்; தாயையும் தங்கையையும் சந்திக்கும் காலம் நெருங்கி விட்டதாக நினைத்தான். தன்மேல் இரக்கம் காண்பித்த பிரபுவை மனமார வாழ்த்தினன். அன்று நடக்க விருக்கும் போரில் தனது உபகாரி குவிண்டஸ் ஆரியுஸ் பிரபுவுக்குத் தவருமல் ஜெயம் அளிக்கும்படி ஆண்டவனை உருக்கமாய் பிரார்த்தித்தான்.

# ஆரும் அத்தியாயம்.

## அடிமையின் கஷ்ட நிவாரணம்.

யூபியா தீவின் கரையில் கூடியிருந்த கொள்ளைக் கூட்டத்தாரின் தலைவன் தூரத்தில் ஒன்றன்பின் ஒன்ருய்த் தீவை வளைந்து வரும் பல கப்பல்களைக் கண்டான். "அபாயம்! அபாயம்!! ஓடுங்கள், கப்பல்களைப் பாய்விரித் தோட்டுங்கள். அதோ படைக் கப்பல்கள் நம்மை நோக்கி வருகின்றன. பலங்கொண்ட மட்டும் அவர்களைத் தாக்குவோம்; முடியாத போனல் கடலில் விழுந்து மடிவோம்." என இடி முழக்கம் போலக் கர்ஜித்தான்.

உடனே சகலரும் கப்பல்களிலேறினர்கள். காற்று எதிர்புறமாய் அடித்தது; அவர்களின் மரக்கலங்கள் வேகமாய் முன்னேர முடியாமல் தத்தளித்தன. தலைவனின் கட்டளைப்படி சகலரும் ஆயுதங்களைத் தரித்தார்கள். நெருங்கிவரும் கப்பல்களிலுள்ளவர்களுடன் சண்டையிடத் தயாராயினர். எங்கும் போர் முரசு பெரும்புயல் போலப் பயங்கரமாய் ஒலித்தது. எப்பக்கத்திலும் ஒரே கூச்சலாயிருந்தது. போர்ச் சேவகர்கள் பெருத்த சப்தமிட்டு ஆர்ப்பரித்தனர். தீவை வளையச் சென்ற படைக் கப்பல்கள் கொள்ளைக் கூட்டத்தாரின் கப்பல்களை அதிர்ஷ்டவசமாக வளைந்து கொண்டன.

யுத்தம் பலமாக ஆரம்பித்தது, கடும்போர் மூண்டது. உரோமர் கப்பல்களிலிருந்து அம்புகள் விர் விர்ரெனக் கிளம்பி கொள்ளைக்காரரின் கப்பல்களில் பாய்ந்தன. அங்கிருந்து "ஆஆ....ஊ...." என்ற சப்தங்கள் கிளம்பின. கொள்ளையரும் வில்லை வளைத்துச் சரமாரியாக பாணங்களை எய்தனர். உரோமை வீரர் தமது தலைவரின் உற்சாகமான வார்த்தைகளால் தூண்டப்பட்டு மூர்க்கத்தோடும்; ஆக்குரோஷத்தோடும் விடாமல் போர் புரிந்தனர். வெகுநேரம் சண்டை பலமாய் நடந்தது.

நேரம் ஆக ஆக பொழுதும் சாய்ந்தது. இருளும் அதிகரித்தது. இருதரப்பாரும் கப்பல்களில் தீவட்டிகளைக் கொளுத்தினர். கடலில் கொந்தளிப்பு அதிகமாயிருந்தது. கப்பல்களில் மிகுந்த அசைவேற்பட்டது. சாயந்திரம் வீசிக்கொண்டிருந்த மந்தமாருதம் பெருத்த சண்டமாருதமாய் மாறியது. சமுத்திர ஜலமும் 'போம் போம்' என அலறிற்று. இருபக்கமும் பலர் பலத்த காயமடைந்தனர். குற்றுயிராகச் சிலர் 'கூ........கூ' வென குரூர ஒலத்துடன் சமுத்திரத்தில் விழுந்து மாண்டனர். எங்கு பார்த்தாலும் கர்ண கடூரமான வசைச் சொற்களும் ஓலமுமே மிகுந்திருந்தது. நடு நிசி நேரம் நெருங்கியது: சண்டை செய்பவர்களின் ஆங்காரக் கோபத் தொனி அடங்கவில்லை. அச்சமயத்தில் தென்பகுதியில் வளைந்து நின்ற உரோமர் கப்பல்கள் காற்றால் விலகின; கொள்ளைக்காரருக்கு வழிவிட்டு நின்றன. கொலை களவுக் கஞ்சாத துஷ்டர் ஓடிப்போக எத்தனிப்பதைக் குவிண்டஸ் பிரபு கண்டார். தமது கப்பலை விரைவாய் ஓட்டி அவ்விடத்தை யடைந்தார். கொள்ளைத் தலைவனும் அவன் ஆட்களும் தீரமாய் அப்படைக் கப்பலுக்குள் பாய்ந்தனர்; அவர்களில் பலரைப் போர்வீரர் வாளால் சிதைத்து வீழ்த்தினர். அவர்களின் வீரம் பொருந்திய பெருந் தொனியும், மாண்டு விழுவோரின் நலிந்த குரலும் எங்கும் பரவியது. உள்ளே நுழைந்த கொள்ளைத் தலைவனுடன் குவிண்டஸ் வெகு தீரமாய்ச் சண்டையிட்டு அவன் உயிரை மாய்த்து வீழ்த்தினர். கொள்ளைக்காரர்கள் மேலும் சண்டைசெய்ய முடியாதெனத் தெரிந்ததும், கப்பலில் தீ வைத்துவிட்டு ஒரே கும்பலாய்க் கடலில் குதித்து தங்கள் கப்பல்களை நோக்கி நீந்திச் சென்றனர். உரோமர் சேனாதிபதியோ சளைக்காமல் கடலில் குதிக்கும் பகைவர்களை தமது வாளால் வெட்டி வீழ்த்திக் கொண்டேயிருந்தார். "தீ! தீ!" என்ற சப்தம் கேட்டு திரும்பிப் பார்க்கையில், தமது கப்பலின் கீழ்த் தட்டு பற்றிக்கொண்டு எரிவதைக் கண்டார். செய்வதின்னதெனத் தெரியாமல் திகைத்தார். சற்று நேரத்தில் கப்பல் இரண்டாக விரிந்தது. பலர் கடலில் விழுந்து மூழ்கினர்.

தண்டு வலிக்கும் அடிமைகள் அனைவரும் நீக்கிரையாயினர். யூதா மட்டும் அபாயமின்றி கடலில் நீந்திக் கொண்டிருந்தான். அப்பொழுது தீப்பற்றி எரிந்துகொண்டிருந்த பாய் மரத்தின் ஒரு பலமான பாகம் முறிந்து அவனுக்கு அருகில் விழுந்து மிதந்துகொண்டிருந்தது. அவன் அதை இழுத்து அதன்மேல் ஏறிக்கொண்டு லகுவாய் நீந்திச் சென்றான்.

கொஞ்சதூரம் போனதும் தன் பக்கத்தில் தலைக் கவசமணிந்த ஒரு வீரன் எரியும் கப்பலிலிருந்து தள்ளப்பட்டு விழுவதைக் கண்டான். தக்க வெளிச்சமில்லாததால் அது யாரெனத் தெரிந்து கொள்ள முடியவில்லை. தண்ணீரில் விழுந்த அம்மனிதன் தத்தளிப்பதைக் கண்டு இரக்கம் மேலிட்டவனாய் அவனைப் பிடித்திழுத்து மரத்தின்மேல் படுக்க வைத்தான். அம்மனிதன் மூர்ச்சையற்றிருப்பதை அறிந்தான். போகும் வழி தெரியாமல் மரத்தையும் அதன் மேலிருந்த மனிதனையும் ஒரு கையால் பிடித்தவண்ணம் மற்ற கையினால் தண்ணீரைத் தள்ளித் தள்ளி நீந்திக் கொண்டே யிருந்தான். கடல் அலைகளும் அவனுக்கு உதவியாக அங்குமிங்கும் அடித்துக் கொண்டே அவர்களை வெகு தூரம் கொண்டு போய் விட்டது. சண்டை நடக்கு மிடத்திலிருந்து கிளம்பிய ஓசை கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்தது. உயிர் தப்பினோம் என்று யூதா பெரு மகிழ்ச்சி யடைந்தான். சில மணி நேரங்களுக்கெல்லாம் கரை சமீபித்தது; மரத்தின் மேலிருந்த மனிதனைத் தூக்கிக் கொண்டு கரை யேறி ஒரு மணல் மேட்டை யடைந்தான். கொண்டுவந்த மனிதனைக் கீழே கிடத்தினான்: களைப்பின் மிகுதியால் அம்மனிதன் பக்கத்திலேயே படுத்து அயர்ந்து நித்திரை போனான்.

பொழுதும் புலர்ந்தது. சூரியன் கீழ்த் திசையில் உதயமானான். சூரிய வெப்பம் சுள்ளென விழவே யூதா திடுக்கிட்டெழுந்து ஆவலாகத் தான் காப்பாற்றிய மனிதனை உற்றுப் பார்த்தான். தலையில் கவசமிருந்ததால் யாரென்று அறிய முடியவில்லை. ஆனால் அம்மனிதன் உயிருடனிருப்பதையும் மூச்சு விடுவதையும் கண்டான். உடனே அவனது தலைக் கவசத்தைக்

கழற்றினன். தான் உயிர் காப்பாற்றிய மனிதன் தனது பேருபகாரியான குவிண்டஸ் ஆரியுஸ் தளபதியெனக்கண்டு பெருமகிழ்வு அடைந்தான். சுறுக்காக சிறிது தூரம் தேடிச் சென்று தலைக் கவசத்திலேயே தெளிந்த நீரைக் கோரிக் கொண்டுவந்து குவிண்டஸ் பிரபுவின் முகத்தில் தெளித்தான். அவர் வாய்க்குள்ளும் சிறிது ஜலத்தை வார்த்தான். பிரபுவும் மயக்கம் தெளிந்து எழுந்து உட்கார்ந்தார். "ஆ! இதென்ன! இங்கெப்படி வந்தேன்! கப்பல்களெல்லாம் எங்கே?" எனக் கேட்டார். யூதனும் கப்பலில் தீப்பற்றிய பின் நிகழ்ந்தவைகளையும் தான் அவருடன் கரை சேர்ந்த விதத்தையும் தெரிவித்தான். குவிண்டஸ் பிரபு யூதாவைக் கட்டிப் பிடித்துக் கொண்டு "சிறுவனே, உனது உத்தமமான உதார குணத்தை மெச்சுகிறேன். ஆனால், நான் கொண்ட விரதமல்லவோ தவறிப் போயிற்று. என்ன செய்வேன்". என்று சொல்லிக் கொண்டே பெருங் கவலையடைந்து ஒரு கையால் தன் நெற்றியைத் தாங்கிய வண்ணம் குனிந்து மௌனமாய் நின்றார்.

யூதா:—பிரபு, ஏழையாகிய நான் உங்களை இங்கு எடுத்து வந்தது குற்றமானால் என் உயிரை இப்போதே மாய்த்து விடும்.

குவிண்டஸ்:—என் உயிரைக் காப்பாற்றிய உன்னைக் குற்றம் சாட்டுவதோ. இல்லை, இல்லை. நீ மஹா தைரியசாலி. உன் ஊக்கமான செயலும் உண்மையுள்ள விசுவாசமும் என்னைத் தலை குனியச் செய்துவிட்டது.

யூதா.—ஐயா, நீங்கள் கப்பலிலிருந்து தண்ணீரில் விழுந்து தத்தளித்தபோது உங்களை இன்னாரெனத் தெரிந்து கொள்ளவில்லை. நமது கப்பலிலுள்ள உரோமைப் போர்வீரர்களில் ஒருவரென்றே நினைத்தேன். தண்ணீர் கொண்டுவர தலைக் கவசத்தை கழற்றியபோது தான் இன்னாரென அறிந்து ஆனந்தித்தேன்.

குவிண்டஸ்:-அடடா, அதுவும் அப்படியா. அமர்க் களத்தில் ஒப்பாரி வைப்பாருமில்லை, குற்றுயிராயிருப்போரை எடுத்துச் செல்வாருமில்லை. என்ன இரக்க சிந்தை! தர்மகுணமுள்ளவனும் தயாள புருஷனுமான உனக்கோ நீதி மன்றத்தில்

கேள்வி இல்லாமல் போய்விட்டது. உண்மையாக நீ குற்றமற்றவன். உனது விரோதிகளின் சூழ்ச்சி உன்னை இந் நிலைமைக்குக் கொண்டு வந்து விட்டது. இல்லை. இல்லை. பொருமை கொண்ட துஷ்டர்கள் கண்காண நீ மேன்மை யடையும் பொருட்டே இவ்வித நிலைமை உனக்கேற்பட்டிருக்கிறது. உயிரையே திரணமாக மதித்து கடும்போர் நடந்துகொண்டிருந்த கடலிலிருந்து ஒரு உரோமைப் போர்வீரனை உயிர் காப்பாற்றிய உனது உயர் தன்மையை எவ்விதம் புகழ்வேன். உரோமன் உன் உறவினனும் அல்ல. உன் ஜாதியானும் அல்ல. உனது தேசத்தவனுமல்ல. உற்ற நண்பனுமல்ல. அறிமுகமில்லாத அன்னிய தேசத்தவனுக்கு உதவிபுரிய ஏவிய உன் பரோபகார தர்ம சிந்தையை என்னென்றுரைப்பது. தேவர்களுக்குமரிதான இவ்வளவு மேன்மையான குணம் படைத்த உன்னை உரோமரும், யூதரும், ஏன் உலகமே போற்றிப் புகழ வேண்டியதிருக்க, அவலமாய்ச் செத்து மடியவோ தண்டுவலிக்கும் அடிமையாக உன்னைத் தண்டித்தார்கள். அத்துரோகிகள் இந்நேரம் இங்கிருப்பரேல் அவர்கள் உடலை இக்கட்கத்தால் சின்னபின்னமாய்ச் சிதைத்து விடுவேன். என்ன அக்கிரமம்! உரோமை மன்னரின் நீதி இது தானு! (சிறிது நேரம் எதையோ சிந்தனை செய்தவராய்) ஆம்! ஆம்! சந்தேகமில்லை. ஒழுக்கம் சிறிது மில்லாதவர்களும், அற்பர்களும் துஷ்டசித்தம் உள்ளவர்களும், பணவாசை பிடித்தவர்களும், போதுமான கல்வி கற்காதவர்களுமான மடையர்கள் இராஜப் பிரதிநிதிகளாக யூதேயா நாட்டுக்கு அனுப்பப் படுவதுதான் காரணம். நாடெங்கும் திருடர்களும், கொள்ளைக் காரர்களும், மிகுந்திருக்கின்றனர். இது கொடுமையிலும் கொடுமை! யூத சிகாமணி, பென்ஹூர் பிரபுவின் உத்தம சற்புத்திரா, நீ ஓர் விலை மதிக்கப் படாத மாணிக்கம். அருமைக் கண்மணி, என் அருகில் வா. எனது உண்மையான நண்பர் பென்ஹூர் பிரபுவின் மகன் எனக்கும் மகனே.

இவ் விதமாக குவிண்டஸ், யூதாவைப் போற்றிப் புகழ்ந்து கொண்டாடி அவனை அன்புடன் அரவணைத்து தந்தைக்குரிய வாஞ்சையோடு உச்சி மோந்து உபசரித்து அவன் கன்னத்தில்

ஓர் அன்பான முத்தம் ஈந்தார். தான் விரலிலணிந்திருந்த மோதிர மொன்றைக் கழற்றி அவன் கைவிரலில் மாட்டினார். அப்பா மகனே, இன்று முதல் நீ என் பிள்ளை. எனக்கோ மனைவி மக்கள் யாருமில்லை. உன்னையே இன்று என் புத்திரனாக ஸ்வீகரித்துக் கொள்ளுகிறேன். இம்மோதிரம் அதற்கு அத்தாக்ஷி" என்றார். யூதா ஆச்சரியமடைந்தான். ஆனந்தம் மேலிட்டவனாய்ச் செய்வதின்னதெனப் புரியாமல் பிரமை பிடித்தவன் போல மிரள மிரள விழித்தான். தன்னையே அறியாமல் கரங்களைக் கூப்பியவண்ணம் தரையில் முழங்காலிட்டு "என் ஆதியே, என் அந்தமே, எனக் கின்பந்தரும் சுக வாழ்வே, எனது சகலானுகூல சஞ்சீவியே, என் கண்ணின் மணியே, ஏகபரம் பொருளே, எல்லாம் உமது சித்தம். சிறுவன் என்னை ஆட்கொண்டு என்மீது கிருபை மழை பொழிந்து உலகோருக்கு ஊழியம் புரிய உத்தமராம் குவிண்டஸ் பிரபுபோல, நானொரு போர்வீரனாகும்படி உமது எண்ணிலா வரங்களை ஏழைக் கீந்திடுவீர். பாவி நான் பரதவிக்கும்போது பரிதாபங் கொண்டு ஈரமிக்க நெஞ்சுடன் என் மீதிரக்கமுற்று தேறுதலளித் திலங்கும் பெருங் கொடையாளர் குவிண்டஸ் ஆரியுஸ் மகிபருக்குக் குறையாத நன்மைகளைக் கொடுத்தருளும். அவருக்கு நீடூழி வாழ்வும் நிலையுள்ள மனவமைதியும் நிலை பெயரா நன்மதிப்பும் நல்கும். உமது சித்தமே எனது பாக்கியம்: உமது பேரில் பக்தி பூண்டொழுகுவதே என் சிலாக்கியம்; உம்மை என்றும் போற்றிப் புகழ்ந்திருப்பதே எனக்குச் சன்மார்க்கம்" எனப் பலவாறாகக் கடவுளைத் தோத்திரஞ் செய்தான். அந்நேரத்தில் குவிண்டஸ் சமுத்திரத்தையும் யூத சிறுவனையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டே நின்றார். அவர் பெருங் கவலையுடனிருப்பதாக யூதனின் கண்களுக்குப் புலப்பட்டது. எழுந்து நின்று அவரை வெகு உருக்கமாக உற்று நோக்கினான். 'அப்பா, மகனே, கடவுள் உன்னைக் காத்து இரக்ஷிப்பார். என் உயிர் இன்றே உடலைவிட்டுப் பிரியட்டும்' என்றார் குவிண்டஸ் பிரபு.

யூதா:—என்ன! தங்கள் உயிர் பிரிவதா!! எனது கஷ்டங்களெல்லாம் நீங்கிவிட்டன வென்றல்லவோ இன்பக் கனவு கண்டு கொண்டிருக்கிறேன்.

குவிண்டஸ்:— உண்மையாகவே உன் கஷ்டங்கள் நீங்கி விட்டன. யூதா, பயப்படாதே; உடனே மிசின்னம் நகருக்குப்போ. அங்கு என் மாளிகையிலிருக்கும் காரியஸ்தனிடம் நீ அணிந் திருக்கும் மோதிரத்தைக் காண்பி. அவன் எனக்குச் சேர்ந்த சகல செல்வத்தையும் உன்னிடம் ஒப்புவிப்பான். உன்னை என் னுடைய பிள்ளையாக ஏற்றுக் கொண்டு உனக்குச் சகல ஊழியங் களும் செய்வான். சகல சுக போகங்களுடன் நீ சுகமாய் வாழக் கடவாய். ஆனால் தோல்வியடைந்த நான் மட்டும் உன்னுடன் வரமாட்டேன்.

யூதா:—அப்பா, உங்களை விட்டு நான் ஒரு க்ஷணமும் பிரிந் திருக்க மாட்டேன். எனக்கு இன்ப வாழ்வும் வேண்டாம். செல்வம், சுகபோகம் ஒன்றும் வேண்டாம். உங்களுடனிருப்ப தொன்றே எனக்கு வேண்டும். அதுதான் மேலான சுகம்.

குவிண்டஸ்:—கூடாது, கூடாது, நீ என்னுடன் இருந்தால் உன் அருமைத் தாயையும் தங்கையையும் எப்படிக் காப்பாற்ற முடியும். இன்னும் சில நிமிஷங்கள் வரைதான் நீ என்னுடன் இருப்பாய்.

யூதா:—நீங்கள் கூறுவதொன்றும் விளங்கவில்லை. தெளி வாய்ச் சொல்லுங்கள்.

குவிண்டஸ்:—நான் எனது உயிரைப் போக்கிக் கொள்ளப் போகிறேன்.

யூதா:—என்! எதற்காக! உயிரைப் போக்கிக் கொள்வதா! கூடாது; முடியாது: வேண்டாம். (என்று சத்தமிட்டுக் கொண்டே பிரபுவை இறுகக் கட்டிப் பிடித்தான்.)

குவிண்டஸ்:—தோல்வியடைந்த உரோமன் உயிருடனிருப் பதா? இனி உயிர் வாழ்வது பெருத்த அவமானத்திற்கிடமாகும். விடு, விடு நான் செத்து மடியவேண்டும்.

பிரபு யூதாவின் பிடிப்பினின்றும் விலகிக் கொண்டார்.

யூதா:—ஐயா நில்லுங்கள். கொஞ்சம் பொறுங்கள். இதோ நானும் கூடவருகிறேன். (என்று சொல்லிக் கொண்டே தன் விரலில் மாட்டப்பட்ட கணையாழியைக் கழற்றிக் கடலில் வீசினான்.)

பிரபுவுக்கோ கோபம் பொங்கி யெழுந்தது. என்ன மதியீனம்; நீயும் கெட்டாய். நானும் இதோ சாகிறேன்" என்று சொல்லிக் கொண்டே குவிண்டஸ் தன் உடைவாளை உருவியெடுத்து மார்புக்கு நேரே உயர்த்தினார். யூதா சரேலெனப் பாய்ந்து வாள் பிடித்திருந்த அவர் கரத்தைப் பலமாய்ப் பற்றி இழுத்தான்.

யூதா:—என் எஜமானே, வேண்டாம்; வேண்டாம். இது கூடாத எண்ணம்: அடாத செய்கை; கடவுளுக்கு விரோதமானது. வேண்டுமானால் முதலில் என்னைக் கொல்லும். பிறகு நீர் தற்கொலை செய்துகொள்ளும். நீர் எனக்கு யூதேயா நாடு முழுவதையும் கொடுத்தாலும் உம்மை விட்டு ஒருபோதும் பிரியேன்.

குவிண்டஸ்:—நீ ஒன்றும் அறியாச் சிறுவன். உரோமரின் வாழ்வும், உயர்வு தாழ்வும் உனக்கென்ன தெரியும். என் கையை விட்டு விட்டு விலகி நில்லு.

யூதா:—முடியாது, கூடாது, வேண்டாம்.

என்று கத்திக்கொண்டே பிரபுவின் கத்தி பிடித்த கையை வெகு பலமாய்ப் பற்றி இழுத்தான் யூதன். பிரபுவுக்கோ அப்பிடியினின்றும் தன்னை விடுவித்துக் கொள்ளப் பலமில்லாது போயிற்று. அப்பொழுது சமுத்திரத்தில் வெகுதூரத்திற் கப்பாலிருந்து எக்காளத் தொனி கேட்டது. இருவரும் சப்தம் வந்த திசையை நோக்கினர். வெகுதூரத்தில் ஒரு கப்பல் வருவதைக் கண்டனர்.

யூதா:—வருகிற கப்பல் பகைவருடையதா யிருக்குமானால் நாமிருவரும் அவர்கள் கையில் சிக்கிமாய்வதே மேன்மை.

குவிண்டஸ்:—ஆமாம். அதுதான் நல்ல யோஜனை.

யூதா:—அப்படியானால் தங்கள் உடைவாளை என்னிடங் கொடுத்துவிட்டு அமைதியுடன் உட்கார்ந்திருங்கள். நான் அந்த மணல் மேட்டில் நின்று இக்குட்டையை வீசி சமிக்ஞை காண்பித்து அவர்களை இங்கு வரும்படி செய்கிறேன்.

குவிண்டஸ்:—சரி அப்படியே செய். இந்தா உடைவாள்.

யூதன் உடைவாளை வாங்கிக்கொண்டு கரையின் உயரமான ஒரு இடத்திலிருந்து கப்பலை நோக்கி துணியைத் தலைக்கு மேல் வீசிக்கொண்டே நின்றான். கப்பலும் அவன் நின்று கொண்டிருந்த இடத்தை நோக்கி வந்து கொண்டிருந்தது. சிறிது நேரம் அக்கப்பலைக் கூர்ந்து கவனித்துப் பார்த்தான். திடீரெனத் துள்ளிக் குதித்துக் கொண்டு குவிண்டஸிடம் சந்தோஷமாய் ஓடினான். "குவிண்டஸ் ஆரியுஸ் தளபதிக்கு ஜே! ஜே!!" என ஆர்ப்பரித்து நின்றான்.

குவிண்டஸ்:—யூதா என் உளருகிறாய். உனக்குப் பைத்தியம் பிடித்து விட்டதா என்ன?

யூதா:—இல்லை, இல்லை. நமக்கேதான் ஜெயம். அதோ வருகிற கப்பலில் பல ஜெயக்கொடிகள் பறக்கின்றன. அதின் பாய்மரத்தின் மேல் தலைக் கவசம் ஒன்று தொங்குகிறது. கவலையை விட்டு எழுந்து நின்று என்னுடன் சந்தோஷமடையுங்கள். தேவனுக்குத் துதி சொல்லுங்கள்.

தளபதியும் எழுந்து நின்று பார்த்தார்; யூதா சொன்னது உண்மையென வறிந்தார். "தேவர்களுக்குப் புகழ் உண்டாகுக. நாம் உயிர் பெற்றோம்." என மகிழ்வுடன் பகர்ந்தார். யூதா சந்தோஷத்தை அடக்கமாட்டாமல் ஆனந்தக் கூத்தாடினான். கையிலுள்ள துணியை வேகமாக வீசினான். சுமார் இரண்டு மணி நேரத்திற்குள் கப்பலும் கரைவந்து சேர்ந்தது. கப்பலிலிருந்த உரோமை வீரர்கள் காணமற்போன தங்கள் தலைவரையும் யூதாவையுங் கண்டு மகிழ்வுடன் அவர்களை வரவேற்றனர். கொள்ளைக்காரரைத் தோற்கடித்து அவர்களின் கப்பல்களைக்

கைப்பற்றிய விதத்தையும் எடுத்துரைத்தனர். தளகர்த்தனும் தனக்கு நேர்ந்த விபத்தையும் யூதாவின் அரிய செய்கையையும் கூறினர்: அங்குள்ள சகலரும் யூதாவை மிகவுங் கொண்டாடினர்.

உரோமர் கப்பல்களெல்லாம் சமுத்திரத்தின் ஓரிடத்தில் ஒன்று சேர்ந்தன. அன்று மாலையில் மிசின்னம் பட்டினத்துக் கரையை அடைந்தன. 'படைக் கப்பல்கள் ஜெயத்துடன் திரும்புவதை யறிந்த மிசின்னம் நகரவாசிகள் கரையில் திரளாய்க் கூடியிருந்தனர். குவிண்டஸ் ஆரியுஸுக்கு மலர்மாலைகளைச் சூட்டினர். வீரர்களின் மேல் புஷ்பங்களை வாரி வாரி இறைத்தனர். "ஆரியுஸுக்கு ஜே! ஆரியுஸுக்கு ஜே!!" எனப் பெரு முழக்கம் செய்தனர். குவிண்டஸ் வெற்றியடைந்த விதத்தையும் போரில் தனக்கு நேர்ந்த விபத்தையும் யூதா தனக்குதவி செய்த விபரங்களையும் பற்றி யாவருங் கேட்கும்படி உபன்னியசித்தார்.

யூதாவுடன் மாளிகை சேர்ந்து, சில தினங்களின் பிறகு குவிண்டஸ் சகலருங் காணத் தன் பிள்ளையாக யூதாவை ஸ்வீகரித்துக் கொண்டார். தனது திரண்ட சொத்துக்களெல்லாம் தனக்குப் பின் யூதாவுக்கே சொந்தமானவை யென்று பிரகடனம் செய்தார். தாய் தங்கையைக் காண வேண்டுமென்ற தன் ஸ்வீகார மகனின் கவலையை விரைவில் போக்கிவிடுவதாகத் தேறுதல் கூறினர். அவனும் சற்று கவலை நீங்கி உரோமை நகருக்குச் சென்று கல்வி கற்று ஆயுதப் பயிற்சியும் அடைந்தான்.

ஐந்து வருடங்கள் கழிந்தன. தனதருமைத் தாய் தங்கையின் நிலைமையைப் பற்றி தெளிவான தகவல்கள் கிட்டாமல் தயங்கினன். போதாக் குறைக்கு குவிண்டஸ் ஆரியுஸும் திடீரென நோயுற்று உயிர் துறந்தார். யூதா ஆருத்துயரடைந்தான்; மனவமைதியின்றி அல்லும் பகலும் ஓயாக் கவலையில் மூழ்கி தன் உயிரினும் இனிய அன்னையும் சகோதரியும் எவ்வித நிலைமையில்,

எங்கு எப்படி யிருக்கிறார்களோ வென்று எண்ணி யெண்ணி ஏங்கினான். தனது காரியஸ்தனிடம் சொல்லிக் கொண்டு மனதிலேற்பட்ட கவலைகளை மாற்றும் பொருட்டு பொழுது போக்காக அந்தியோக்கியா பட்டினத்திற்குச் சென்றான்.

---

# ஏழாம் அத்தியாயம்.

## காணமற் போன புதையலைக் கண்டவன்.

**பல** கலைகளுக்கு உறைவிடமா யிருந்ததும், கண்ணுக் கினிய காக்ஷிகளைக் கொண்டதும், அழகிய மாட மாளிகைகளையுங் கூட கோபுரங்களையு முடையதும், தொன்று தொட்டு நிலைத்து நின்றதுமான அந்தியோக்கியாப் பட்டணத்தைக் கண்ணுறும் யாவரும் அதின் உன்னத தோற்றத்தையும் உயர்வான தன்மைகள் பொருந்திய நலங்களையும் என்றும் மறவா திருப்பரென்றால் அதின் பெருமையை அளவிட்டுச் சொல்லவுங் கூடுமோ. அழகுக்கு அழகு செய்ததை யொப்ப நகரத்தை இரு பிரிவாக வகுத்து ஓராண்டஸ் என்ற நதி ஒய்யாரமாக ஓடி சமுத்திரத்தில் சங்கமமாகும் நேர்த்தியும், கரைகளின் இருமருங்கிலும் நேத்திரானந்தத்தை விளைவிக்கும் உன்னத தோற்றமும் கண்டோர் மனதைக் கவருந் தன்மையதாயிருந்தது. இப்பெரிய ஆற்றின் வழியாக ஒரு நாள் காலையில் நகரத்தை நோக்கி ஒரு கப்பல் வந்து கொண்டிருந்தது. அக்கப்பலின் மேல்தட்டின் ஒரு கோடியில் பெருங்கவலையுடன் நின்றுகொண்டிருந்தான் யூதா. அங்கங்கே பிரயாணிகளில் பலர் இருவர் மூவர் நால்வராகச் சேர்ந்து பல பல விஷயங்களைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்கள். தனிமையாக நிற்க மனமற்றவனும் யூதா யாருடன் பேசலாம், எப்படி அவர்களுடன் உறவாடி கலந்து கொள்ளலாமென்ற சிந்தனையுடன் தான் நின்றுகொண்டிருந்த இடத்தைவிட்டு நகர்ந்தான். சற்று தூரத்தில் ஒரு கப்பல் தோன்றினது. அக்கப்பலைப்பற்றி இரண்டுபேர் சம்பாஷிக்கலாயினர். அவர்கள் பேசுவதைக் கவனிக்க யூதா அவர்களருகே போய் நின்றான்.

இமாம்:—அதோ வருதே கப்பல் அதுவும் இதுமாதிரி ஆள் ஏறுற கப்பல்தானே.

ஈசாக்:—இல்லே, இல்லே. அது ஒரு வியாபாரக் கப்பல் அதோபார் கப்பல் மேலே மஞ்சள் கொடி. அதுதான் அதுக்கு அடையாளம்.

இமாம்:—அப்போன்னு கொடிபறக்குற கப்பலுங்கள்ளே ஆளே இருக்காதா?

ஈசாக்:-போடா அசடே, ஆளில்லாமே கப்பல் எப்படி ஓடும்.

இமாம்:—தெரியாமத்தான் கேக்கிறேன். இதுக்குமுன்னே நான் கடலும் பார்த்ததில்லே, கப்பல் பேச்சுங் கேட்டதில்லே. ஒன்னேப்போலே ஊர் சுத்தியாயிருந்தாவுளோ எல்லாம் தெரிய முடியும். அது போகட்டும் அந்தக் கப்பல் சொந்தக்காரன் யாரு? அவனும் அது உள்ளறக்கத்தானே குடியிருப்பான்.

ஈசாக்:—இல்லே, இல்லே. அந்தக் கப்பல் முதலாளி இந்தப் பட்டணத்துக்குள்ளே பெரிய பங்களாக் கட்டிக்கினு அதிலே குடியிருக்கான். அவனுக்கொரு மகள் இருக்கா. அவளேப் போல அழகி அகப்படுகிறது கஷ்டமாம். அவளேக் கல்லாணம் பண்ணனும்னு எத்தனேயோ பேரு என்னென்னமோ செஞ்சு பாத்தானுவ. பாச்சா பலிக்கல்லே.

இமாம்:—அந்தக் கப்பல் மொதலாளி பேரென்ன?

ஈசாக்:—சிமாண்டனிஸ்.

இமாம்:—அவருக்கு எத்தனே கப்பலுங்க இருக்கு?

ஈசாக்:—பத்துப் பதினேஞ்சுக்குக் குறையாது. ஆனல் இதெல்லாம் அவனுக்குச் சொந்தமானதில்லே. இவன் ஒரு பெரிய முதலாளி கிட்ட முதல்லே வேலேக்கிருந்தான்: அவர் கடல்லே பிரயாணஞ் செய்யரப்போ தண்ணியிலே கப்பல் முழுகிப் போச்சு. அவரும் இறந்து போனரு. அவர் பெஞ்சாதி புள்ளெங்க எல்லாம் ஜெருசலத்திலே இருந்தாங்க. அவர் மகன் அந்தவூர் கவர்னர் தொரையைக் கல்லுனலே அடிச்சுக் கொன்னுபுடப் பார்த்தானும். அதுக்காவ அவுங்களேயெல்லாம் பிடிச்சு அடிச்சு போன எடங்

தெரியாமே செஞ்சு போட்டானுவ. அவுங்க சொத்துங்களை எல்லாம் சர்க்காரிலே புடிங்கிக்கிட்டானுவ. கப்பலுங்களையும் பறிமொதல் பண்ணிப் புட்டாங்க. சிமாண்டனிஸையும் புடிச்சுத் துன்பம் செஞ்சு அவர் மொதலாளியைச் சேர்ந்த சொத்துகளைக் குடுத்து விடனும்னு இம்சித்தானுவ. அவரைப் படுத்தினபாடு அப்பப்பா சொல்ல முடியாது. எலும்பு நொறுங்க அடிபட்டும் அவர் கொஞ்சமும் விட்டுக் குடுக்கலே. சர்க்காருக்குஞ் சலிச்சுப் போச்சு. இவரைச் சும்மா விட்டுட்டாங்க. அவர் இப்போ வீட்டைவிட்டு வெளியே போகமுடியாமே மொடமா யிருக்குறுரு. ஆளுங்களெவச்சு வியாபாரத்தப் பலமாச் செய்யுறுரு. பவுன் மேலே பவுன் ரூவா மேலே ரூவா வந்து குவியறது.

இவற்றை யெல்லாம் மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்த யூதா ஈசாக் கென்பவனை அணுகி, "அந்த வியாபாரியுடைய முதலாளி பெயர் உமக்குத் தெரியுமா?" எனக் கேட்டான்.

ஈசாக்:—ஆஹா நல்லாத் தெரியும். அவரையும் எனக்குத் தெரியும். தருமப் பிரபு. அவர் உதவியைப் பெருதவுங்க பாவம் செஞ்சவுங்க. அவர்பேரு....''பென்ஹூர்".

யூதா:—(ஆச்சரிய மடைந்தவனாய் அதை வெளியிட்டுக் கொள்ளாமல்) ஆமா அவர் பெண்ஜாதி பிள்ளைகள் இப்போது எங்கிருக்கிறார்களென்ற விஷயத்தை யாரிடம் தெரிந்து கொள்ளலாம்.

ஈசாக்:—ஏன், அதுதான் எல்லாருக்குந் தெரியுமே. உரோம கவர்னரைக் கொல்ல நினைச்சவுங்களை சர்க்காரு சும்மாவா விடும். இன்னேரம் கொன்னு போட்டிருப் பாங்களே.

இமாம்:—அடே ஈசாக்கு, அந்த சிமாண்டனிஸ் வீட்டை எனக்கு காட்டுறியா.

ஈசாக்:— இந்த ஊருக்குள்ளே அது தான் ரொம்ப ஷோக்கான வீடு. அவசியம் காமிக்கிறேன். கப்பல் கெடி வந்துருச்சு. மூட்டையை தூக்கிக்கினு வா போகலாம்.

கப்பல், பட்டணத்தினருகே வெகு அழகாய் அமையப் பெற்ற துறைமுகத்தை அடைந்தது. பிரயாணிகள் சகலரும் ஒருவர் பின்னொருவராய் கப்பலை விட்டிறங்கி கரை சேர்ந்தனர். யூதாவோ தன்னுடன் பேசிய ஈசாக் கென்பவனையும் இமாம் என்பவனையும் பின் தொடர்ந்தான். பட்டணத்துக் கோட்டைகளைக் கடந்து மூவரும் வீதிகளுக்குள் சென்றனர். வீடுகள் வரிசை வரிசையாக நேர்த்தியாய் தோன்றின. தெருக்கள் விசாலமானவையாயும் வெகு சுத்தமாகவும் அழகமைந்த பல மாளிகைகளை உடையவைகளாயுமிருந்தன. மூவரும் ஓரிடத்தில் நிற்க, "இது தான் சிமாண்டனிஸ் வீடு." என்று சொல்லி ஈசாக் கென்பவன் பெரிய மாளிகை யொன்றை சுட்டிக் காட்டினான்.

இமாம்.—அதென்ன? அந்த வாசலில் ஒருத்தன் கையில் தடியோடிருக்கான். அவன் தான் வீட்டுக்காரன் போலிருக்கு யாரையோ அடிக்கிறதுக்கு உட்கார்ந்திருக்கான் போலிருக்கு. நம்மையும் அடிச்சாலும் அடிப்பான்; இந்தப் பாதை போக வேண்டாம் வா, அடுத்த தெரு வழியாய்ப் போவோம்.

ஈசாக்:—சிச்சீ, முட்டாள். நீ நாட்டுப் புறத்தான். பட்டணத்துப் போங்கு உனக்கென்ன தெரியும். அங்கே இருப்பவன் இந்தவூட்டுக் காவல்காரன்.

இமாம்.—அப்படின்னு அந்த வீட்டுக்குள்ளற ஒத்தரும் போகப்படாதா.

ஈசாக்:—வீட்டு எசமான் உத்திரவு கொடுத்தாத்தான் உள்ளே போக உடுவான்.

இமாம்:—அவனுக்கு என்ன சம்பளம்?

ஈசாக்:—மாசம் பத்து ரூபாய்க்கு குறையாது.

இமாம்:—இவ்வளுவு சுளுவா சும்மாயிருக்கிற வேலைக்கு அவ்வளவு சம்பளமா. ஆ!

ஈசாக்:—இந்த வேலைத் தும்பமும் பொறுப்பும் உனக்கு என்னடா தெரியும்? வா போவோம்.

வழிப் போக்கர்கள் அப்பால் சென்றனர். யூதா மட்டும் தனியே சில நிமிஷங்கள் அம்மாளிகையைப் பார்த்துக்கொண்டே நின்றான். அவன் மனதில் பலபல எண்ணங்கள் தோன்றி மறைந்தன. முக்கியமாக தன்னருமைத் தாயும் தன் நேசமுள்ள தங்கையு மிருக்குமிடத்தை சிமாண்டனிஸ் தனக்கு அறிவிக்க கூடுமா என்ற கவலையே மிகுந்திருந்தது. அறிமுகமில்லாத தன் தந்தையின் காரியஸ்தனிடம் தான் இன்னானென்பதை எப்படி அறிவிப்பது? தன் தந்தையின் சொத்துக்களை கேட்க வந்திருப்ப தாக நினைத்து தனக்கு ஏதேனும் கெடுதி செய்வானோ; அவன் களங்கமில்லா நெஞ்சமுள்ளவனோ, கபடமுள்ள எண்ணமுடைய வனோ, தனக்கு நன்மை செய்ய நினைப்பானோ, அல்லது சனியன் வந்து குறுக்கிட்டதே யென்று துன்பஞ் செய்வானோ, என்று பலவிதமாக சந்தேகப்பட்டுக் கொண்டே மாளிகையின் வாயிற் காப்போனை அணுகினான்.

யூதா:— வீட்டு எஜமானர் உள்ளே இருக்கிறாரா?

காவற்காரன்:— (எழுந்து நின்று) ஆமாங்கோ. இங்காலே குந்திக்குன்னு இருங்க. நான் போய் கேட்டுக்கிட்டு வாரேன் உங்கபேரு, ஊரு?

யூதா:— என் பெயர் யூதா. தற்போதிருப்பது உரோமை.

காவற்காரன்:—பேரு ஊதா, ஊரு உரோமம். நல்லதுங்கோ இதோ ஒரு நொடியில் வந்துடுரேன்.

காவற்காரன் உள்ளே ஓடினான். சுறுக்காகத் திரும்பி வந்தான். ஒரு படிக்கட்டைக் காண்பித்து மேலே போகும்படி ஜாடை செய்தான். யூதாவும் அப்படிகளிலேறி அவ்வீட்டின் மேல் தட்டிலிருந்த வாசகசாலையை நிகர்த்த ஒரு விசாலமான அறைக்குள் புகுந்தான். நாலா பக்கங்களிலும் பேரேடு குறிப்பு கள் போன்ற கணக்குப் புஸ்தகங்கள் நிரம்பிய கண்ணாடி பீரோக் கள் காணப்பட்டன. அங்கங்கே கணக்கப் பிள்ளைகள் உட்கார்ந்த வண்ணம் அவரவர் அலுவல்களைக் கவனித்துக் கொண்டிருந் தனர். அம்மாடத்தின் மத்தியில் விசேஷ அமைப்புடன் கூடி

யதும், கால்களின் கீழ் உருளைகளையுடையதுமான ஒரு நாற்காலியில் நெடு நாள் நோயால் பீடிக்கப்பட்டவனைப் போன்று பலஹீனமான திரேகியாய் எலும்பும் தோலு மட்டுமுள்ள ஒரு மனிதன் உட்கார்ந்திருந்தான். அத் தோற்றம் யூதாவுக்கு பரிதாபத்தையும் துயரத்தையும் பெருந் திகிலையும் உண்டாக்கினது. நாற்காலியிலிருந்த மனிதனை அவன் இரண்டொரு நிமிஷங்கள் உருக்கமாய்ப் பார்த்தான்.

யூதா:— இம்மனையின் எஜமானுகிய உமக்கும் உமது குடும்பத்திலுள்ள சகலருக்கும் கடவுளின் பேரன்பு என்றும் நீடித்திருப்பதாக.

சிமாண்டனிஸ்:— உரோமையிலிருந்து வரும் நீர் யாரென்பதை முதலில் நானறிய வேண்டும்.

யூதா:— நான் உமது ஜாதியினன் தான். அசல் யூதன். உம்முடன் நான் தனியே பேசவேண்டும்.

சிமான்டனிஸ் அங்கிருந்தவர்களை நோக்கினுன். குறிப்பறிந்து அவர்கள் உடனே வெளியிற் சென்றனர்.

சிமாண்டனிஸ்:— (ஒரு நாற்காலியைக் காண்பித்து) தயவு செய்து அந்த ஆசனத்திலமரும். யூத குலத்தவர் யாராயிருந்தாலும் என தன்புக்கும் ஆதரவுக்கும் உரிமையுள்ளவர்களே........ ............எஸ்தர், எஸ்தர், திராட்ச ரசம் கொண்டுவா.

"அப்பா, இதோ கொண்டு வருகிறேன்" என்ற ஒரு மெல்லிய குரல் இன்பமாய் கீழ் வீட்டிலிருந்து சப்தித்தது.

சிமாண்டனிஸ்:—என் மகள் இங்கிருப்பது உமது பேச்சுக்கு இடையூருக யிருக்குமோ?

யூதா:—இல்லை, இல்லை.

அம்மாடியின் ஒரு பக்கத்தில் மூடியிருந்த கதவு படீரென்று திறக்க, கதிரவன் பிரகாசமே காலை நேரத்தில் சிவப்பு வர்ணமுள்ள மேகத்தினிடையே தோன்றினுற்போல ஒரு யுவதி

தோன்றினுள். திராக்ஷாரசம் நிரம்பிய கூஜா ஒரு கையிலும் மற்றொரு கையில் ஒரு வெள்ளிக் கோப்பையும் பிடித்திருந்தாள். அவளது உயர்ந்த பரிமாணமும், அதற்குத் தகுந்தவிதமாய் உருக்கி வார்த்ததை யொத்த திரேகக்கட்டுடன் கூடிய பொன் மேனியும், செந்தாமரை மலரைப் போன்ற அதரமும், சந்திரனைப் பழித்து விளங்கும் அவளது மலர்ந்து குளிர்ந்த முகமும், சூல்கொண்ட மேகமெனக் கறுத்து நீண்ட கூந்தலும், மீனை நிகர்த்து செவிகளைத் தாவியவண்ணம் நீண்டு அழகுடன் ஜொலிக்கும் இரு நேத்திரங்களும், ஒப்பிடமுடியாத களங்கமற்ற வசீகர தேஜசும், விவரிக்க முடியாத அழகுடனும் தோன்றிய அம் மங்கையை யூதா கண்ணுற்ருன். தன்னையும் அறியாமலே அப்பூங் கொடியாளுக்கு மரியாதை செய்ய நினைத்தெழுந்தான். உடனே அது முறையல்ல வென்பதை யுணர்ந்து, வெட்கத்துடன் தலை குனிந்தவனாய் ஆசனத்திலமர்ந்தான்.

அம் மாது நீலப் பட்டாடை யணிந்து அழகான வேலைப் பாடமைந்த வொரு ரவிக்கையைத் தரித்து மெல்லியதொரு துணியால் முக்காடிட்டிருந்தாள். பார்ப்போர் கண்களைக் கவரும் அழகும் அறிவுமுடைய இம் மங்கை அச்சம், மடம், நாணம் பயிர்ப்பு எனும் அருங்குணங்களை யுடையவளாய், இன்சொல் மிகவுடையவளாய், நற்குணம் நற்செயல் மிகுதியாய்ப் பெற்றவளாய், தன் தந்தை சிமாண்டனிஸின் மனக்குறைகளை நீக்கவந்த மார்க்கவதியாய் திகழ்ந்தாள். இவளே அவரின் ஏகபுதல்வி எஸ்தர். சில வருடங்களுக்கு முன்புதான் இவள் தாய் உயிர் துறந்தனள். அன்று முதல் தன் தந்தைக் குதவியாயிருந்து பல வகைப் பணிவிடைகளையும் புரிந்துவந்தாள். அன்னம் போலும் மென்னடையுடன் தன்னருகில் வந்துநின்ற மகளைத் தகப்பன் அன்புடன் நோக்கினன். "மகளே, அந்தக்கோப்பையில் திராக்ஷாரசம் வார்த்து இவ்வாலிபருக்குக் கொடு" என மொழிந்தான் சிமாண்டனிஸ். அவ்விதமே எஸ்தரும் தான் கொண்டுவந்த வெள்ளிக் கிண்ணத்தில் ரசத்தை ஊற்றி யூதாவினருகிலிருந்த

மேஜைமேல் வைத்தாள்; அவனது அழகில் ஈடுபட்டாள். பிரகாசம் பொருந்திய அவனது முகத்தை உற்றுநோக்கியவளாய், "இதைப் பருகுங்கள்" என்றாள். அவனும் தன்னைப் பரிவுடன் உபசரித்து நின்ற மாது சிரோன்மணியை அன்புடன் பார்த்தான். தன் முன் வைக்கப்பட்ட ரசத்தைப் பருகினான்.

சிமாண்:— நீர் யூதனென்கிறீரே, உமது சொந்த ஊர் எது?

யூதா:— நான் பிறந்து வளர்ந்தது ஜெருசலேம்.

சிமாண்:— ஜெருசலமா! ஜெருசலேம்; ஜெருசலம்; ஆம், அங்கொரு பிரபு இருந்தார். அவருக்கு நான் உதவியாயிருந்தேன். பெரிய வியாபாரம் செய்தோம். முடிவில் இக் கெதிக்கு ஆளானேன்.

யூதா:—எனது தந்தை பெயர் பென்ஹூர் பிரபு என்பார்கள். அவரிடம் சிமாண்டனிஸ் என்ற ஒரு காரியஸ்தர் இருந்ததாகச் சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறேன். நீர்தானோ அம்மனிதன் என்பதை யறிந்து கொள்ளவே இங்கு வந்தேன்.

சிமாண்:— (ஆத்திரத்துடன்) என்ன! என்னை யறிந்து கொள்ளவா வந்தீர். எனக்கும் ஹூர் பிரபுவுக்கு முள்ள சொந்தம் என்ன வென்பதை நீர் அறியுமுன் நீர் அவரது புத்திரன் என்பதை ரூபிக்கவேணும். இல்லாவிட்டால், உமது கபட நாடகம் என்னிடம் செல்லாது.

யூதா எழுந்து நின்றான். உதடுகள் பட படவென துடித்தன; பேச முயன்றான், முடியவில்லை. கண்களில் நீர் ததும்ப, செய்வது இன்னதென அறியாமல் தனது கரங்களால் முகத்தை மூடிக்கொண்டு, "இனி நான் என்ன செய்வேன்" என்று சொல்லி அழுதான்.

சிமாண்:—ஏன் அழவேண்டும்; நீர் என்ன பெண்பிள்ளையா? சுத்தவீரரான பென்ஹூர் பிரபுவின் குமாரர் உம்மைப்போல ஒருபோதும் கோழையரா யிருக்கமாட்டார்.

யூதா:—ஐயா, சண்டைக் கப்பலில் அடிமையாயிருந்த என்னைக் கார்த்து இரட்சித்து தனது மகனாக ஸ்வீகரித்த உரோமைத் தளகர்த்தர் குவிண்டஸ்ஆரியுஸ் பிரபுவும் இறந்து போனார். என்னை அருமையாய்ப் பேணிவளர்த்த தாயும் எனதன்பான சோதரியும் இப்போதிருக்குமிடம் தெரியவில்லை. அவர்களைப் பற்றி எனக்கு அறிவிப்பீரானால் அது ஒன்றேபோதும்; வேறொன்றும் வேண்டாம். நான் ஹூர் பிரபுவின் மகன்தானா வென்பதை அறியவேண்டுமானால் என்னுடன் இப்பொழுதே உரோமாபுரிக்கு வாரும். அல்லது................

சிமாண்:—வெகு வேடிக்கை. நடைப்பிணமாக விருக்கும் என்னையா உரோமை நகருக்கு கூப்பிடுகிறீர். ஹூர் பிரபுவின் புதல்வர் கவர்னரைக் கொல்ல முயன்றாரென்ற குற்றத்திற்காக அச் சண்டாள உரோமர்கள் எனக்குச் செய்த துன்பம் போதாதோ! ஹூர் பிரபுவின் மகனைத்தேடி உரோமைக்கு வந்திருப்பதாக வறிந்து அத் துஷ்டர்கள் என்னுயிரை வாங்கி விட்டுமென்ற தந்திரமாயிது? அரசாங்கத்தாரிடம் லஞ்சம் வாங்கிக் கொண்டு உளவு தெரிந்து போக வந்த வேவுகாரரோ நீர்?

யூதா:—ஐயா பெரியவரே, உமக்கு அந்த சந்தேகம் வேண்டாம். உண்மையாய் மெய்யான கடவுளுக்கு முன்பாக சத்தியம் செய்கிறேன். நான் சொல்வதை நம்பும். மெய்யாகவே பென்ஹூர் பிரபுவின் ஏக புத்திரன் நான்தான். இன்றோடு எட்டு வருஷங்களாகின்றன. கவர்னரின் பவனியைக் காண ஜெருசலத்திலுள்ள எங்கள் வீட்டின் கூரையிலேறிய எனது அஜாக்கிரதையால் ஓடு சரிந்து புதிய கவர்னரின் தலையில் விழுந்ததேயன்றி, கவர்னரைக் கொலை செய்ய உண்மையாகவே நான் முயற்சிக்கவில்லை. கொடிய துஷ்டன் மேசலா என்ற எனது விரோதியின் சூழ்ச்சியினாலே என் தாயும் தங்கையும் அந்தோனியோவின் கோபுரத்திலடைக்கப்பட்டார்கள். என்னைக் கப்பல் தண்டுவலிக்கும் அடிமையாக்கினார்கள். இரண்டு வருடம் அடிமை வேலை செய்தேன். கொள்ளைக்காரருடன் நடந்த கடல் போரில் அதிர்ஷ்ட வசமாக கப்பல் தலைவர் குவிண்டஸ்

பிரபுவின் உயிரைக் காப்பாற்றினேன். அப் பேருதவிக்காக என்னை அவர் புத்திரனாக ஸ்வீகரித்துக் கொண்டார். என் தாயையும் தங்கையையும் சிறையினின்று மீட்டு என்னிடம் சேர்ப்பதாக எனக்குத் தேறுதல் கூறினர். சென்ற ஐந்து வருஷமாக உரோமாபுரியில் கலைகள் பல கற்றேன். படைப் பயிற்சியும் பெற்றேன். துன்பம் நீங்கி இன்பமடையும் காலம் நெருங்கி வருகிறதாகவெண்ணி மனப்பால் குடித்து வந்தேன். என்னை அன்பாய் வளர்த்த தந்தை ஆரியுஸ் பிரபு என்னைப் பலவிதத்திலும் மேன்மைப்படுத்தினர். கடற் போரில் புரிந்த பெரும் ஆற்றலுக்காக உரோமை மன்னர் எனக்கு பொற் கிரீடம் நல்கினர். நான் யுத்த வீரனான பின் பல வெற்றிக் கொடிகளையும், ஒப்பிட முடியாத பரிசுகளையும் பெற்றேன். இறுதியில் எனது வளர்ப்பு தந்தையுமிறந்தார். அவரது திரண்ட சொத்துகள் சகலமும் எனக்கே சொந்தமாயின. ஆயினு மென்ன ? இன்று அவையெல்லாம் பாழடைந்தவைபோலாகி விட்டன; அதிர்ஷ்ட ஹீனனான என்னால் என் அன்னைக்கும் தங்கைக்குந்தான் துன்பம் விளைந்ததென எண்ணி இருந்தேன். ஆனால், என்பொருட்டு உமக்கு வந்த துன்பமோ ஒழியாத தாகக் காணப்படுகிறதே. சண்டாளனான நான் எவ்விதம் அதைத் தீர்க்கப்போகிறேன். உம்மிடமுள்ள ஐஸ்வரியத்தை நான் விரும்பி வரவில்லை. அதையடைந்து மேன்மை பெற வேண்டுமென்றும் விரும்பவில்லை. என் நேசத் தாயையும் தங்கையையும் காணும் வழி தெரிந்துகொள்ளவே இங்கு வந் தேன். நீர் அவர்களைப்பற்றி ஏதாவது நிச்சயமாகச் சொல்ல முடியுமென்றே நினைத்திருந்தேன். அதற்கு மாறாக ஏமாற்ற மடைந்தேன். நான் அடிமைத்தனம் நீங்கி தனவந்தனானதும், கலைஞனானதும், போர்வீரனானதும், இவைகளால் எனக்கேற் பட்ட வாழ்வும், சகல சுகமும் இன்றோடு ஒழியட்டும். எனது உயிரை இன்றே மாய்த்துக்கொள்கிறேன்.

சிமாண்:—தற்கொலை புரிவதோ உம் போன்ற வீரனுக் கழகு? கேளும் எனக்கு நேர்ந்த துன்பத்தின் வரலாற்றை. ஹூர்

பிரபுவிடம் நான் சொண்ட உண்மை விசுவாசப் பெருக்கால் அவர் மனைவி மக்களுக்கு நேரிட்ட துன்பத்தை நீக்க, ஜெருசலே முக்குப் போனேன். துக்கம் மேலிட்டவனுய் பல வகையிலும் முயற்சி செய்தேன். அவர்கள் எங்கு போனுர்களென்பதை அறிய முயன்றேன். அதனுல் துஷ்ட உரோமையதிகாரிகளின் கையில் சிக்கினேன். அத் துஷ்டர்கள் எனக்கு பல துன்பங்கள் செய்தார் கள். கடாசியில் என்னை நீர் காணும் நிலைமையில் விட்டு வைத் திருக்கிருர்கள்.

யூதா:—ஐயோ! நானறியாமற் செய்த குற்றம் உம்மை இக் கெதிக்கு ஆளாக்கிற்றே!! அக் கஷ்டத்தைப் போக்க என் உயிருள்ள வரை பெரிதும் முயற்சிப்பேன். உமக்குத் தீங்கு விழைத்த சண்டாளர்களை சும்மா விடேன். வர்மந்திர அவர் களைப் பழி வாங்குவேன். இதுவே என் சபதம். விடை பெற்றுக் கொள்கிறேன், நமஸ்காரம்.

சிமாண்டனிஸின் மனம் இளகினது; தனது சிறிய எஜ மானை ஏற்றுக் கொள்ளலாமாவென்று ஆலோசனை செய்து கொண்டிருந்தான். யூதாவோ நிற்கவில்லை. பைத்தியம் பிடித்த வனைப்போல வெளியிற் சென்று விட்டான். சிமாண்டனிஸ் மனம் கலங்கினுன். பெருங்கவலையால் பீடிக்கப் பட்டவனைப் போல காணப்பட்டான். வெகு ஆத்திரத்துடன், "முல்லா!....முல்லா!!" என உரக்கக் கூவி அழைத்தான். க்ஷணப் பொழுதில் அவன் அங்கு ஓடி வந்து பணிவுடன் வணங்கி நின்றுன்.

சிமாண்:—முல்லா, நீ உடனே போகவேண்டும். இந்தப் பையிலுள்ளதை உன் சிலவிற்கு வைத்துக் கொள்ளு. சற்று முன் இங்கிருந்து வெளியிற் போன ஒரு வாலிபனைப் பார்த்தாயா?

முல்லா:— ஆம். அவன் வீட்டுக் காவல்காரனிடம் ஏதோ கேட்டுக் கொண்டிருக்கிறுன்.

சிமாண்:— சரி, அவனைப் பின் தொடர்ந்து அவன் போகு மிடமெல்லாம் நீயும் போ. உன்னை இன்னுமென்று மட்டும் வெளி

யிட்டுக் கொள்ளாதே. எப்படியாவது அவனை சிநேகம் பண்ணிக் கொள்ளு. அவனை விட்டு அகலாமல் அவன் நடபடிக்கைகளைப் பற்றி அனுதினமும் நீ எனக்கறிவிக்கவேண்டும். சுறுக்காய்ப் போ.

முல்லாவும் தன் எஜமானன் கொடுத்த பணப்பையை வாங்கிக்கொண்டு துரிதமாய் வெளியிற் சென்றான். சிமாண்டனிஸ் முக மலர்ச்சியுடன் எஸ்தரைப் பார்த்து "மகளே, இன்று நான் காணமற் போன தொரு புதையலைக் கண்டடைந்தேன். இந்த நாள் நமக்கொரு பாக்கியமான நன்னாள்" என உரைத்தான்.

எஸ்தர்:— அப்பா, விளங்கச் சொல்லுங்கள். காணமற் போன புதையலா! அது என்ன?

சிமாண்:— ஆமாம், புதையல். அது ஒரு அருந்தனம்........ அடி இராக்கேல், என் தேவி, என் கஷ்ட நிலைமையைக் காணப் பொறுமல் உயிர் நீத்த உன் பிரிவாற்றுமையால் நானடைந்த துயரமும், என் மனக்கவலையும் இன்று தான் ஒருவாறு நீங்கிற்று. நமது அருமைப் புதல்வி எஸ்தர் இனி க்ஷேமமடைவாள்.

எஸ்தர்:—தந்தையே, நீர் சொல்வதொன்றும் புரியவில்லையே. விஷயமென்ன? எனக்கதை அறிவிக்கலாகாதா.

சிமாண்:—மகளே, இப்பொழுது இங்கு வந்து போனவர் காலம் சென்ற நமது எஜமான் பென்ஹூர் பிரபுவின் புத்திரன்

எஸ்தர்:—அப்படியிருக்க, அவர் மனம் புண்ணாக ஏதேதோ சொல்லி விரட்டி விட்டீர்களே.

சிமாண்.—நீ அப்படி நினைப்பது தவறு. நானோ நடைப்பிணமாகி விட்டேன். நான் ஆற்றமுடியாத விஷயத்தை அவரே கவனிக்கட்டுமென்று அப்படிச் செய்தேன். அவரை நான் ஏற்றுக்கொண்டிருந்தால் தனதருமைத் தாயையும், தங்கையையும் தேடும் வேலையை நிறுத்திவிடுவார். உன்னிடம் காதல் கொண்டு உல்லாசமாய்க் காலங் கழிக்க.....................

எஸ்தர்:—அப்பா, என்ன?

சிமாண்:—கண்ணே, நீ அறியாப்பிள்ளை. நானதைக் கவனித்தேன். எத்தனையோ பேர் பென்ஹூர் பிரபுவின் புத்திரரென்று சொல்லிக்கொண்டு இங்கு வந்தார்கள். அவர்கள் முன்னே உன்னை வரச் சொன்னதுண்டா? இல்லை. ஆனால், இன்று என் உயிரினுமினிய எஜமானின் புதல்வர் என்முன் வந்து நின்றபொழுதே, என் எஜமானே என்முன் பிரத்தியக்ஷமாகிவிட்டாரென்று மெய் மறந்து உன்னைக் கூவியழைத்தேன். நீ அவருக்குத் திராக்ஷ ரசம் வார்த்தபோது நான் அவரை ஒரு பொருட்டாயெண்ணாமல் பேசியதையும் பொருட்படுத்தாமல், நீ "பருகுங்கள்" என்றதும், அவர் அப் பானத்தைக் குடித்தார். நானவருக்கு மனத்துயருண்டாகும் விதம் பேசி அவர் மனதில் பெருந் துக்கத்தை உண்டாக்கினேன், அவரோ இடையிடையே உன்னையே பார்த்து தன் மனதைத் தேற்றிக் கொண்டவராகக் காணப்பட்டார். இங்கிருந்து போகும்பொழுது அவரால் எனக்கேற்பட்ட கஷ்டங்களுக்குத் தக்க பரிகாரம் செய்வதாகவும் கூறினர்.

எஸ்தர்:—ஆஸ்திக் குரியவர் வந்தபோது நீர் அவற்றை அவரிடம் ஒப்பிக்காதிருந்தது நியாயமாகுமா?

சிமாண்:—பெரும்பாடுபட்டு சம்பாதித்த சொத்துக்களை அவரிடம் ஒப்புவித்துவிட்டால், அனாதைகளான நீயும் நானும் என்ன செய்வது? இந்நாட்டிலோ நமக்குதவி செய்ய உறவினர் எவருமில்லை. பொருளிழந்தபின் நாம் பரதேசிகளாவது நிச்சயம்.

எஸ்தர்:—அப்பா, ஏன் அப்படி சொல்கிறீர்கள். இப் பட்டணத்திலுள்ள தனவந்தர்களெல்லாம் நமது சொந்தக்காரர்களல்லவா. நம்மிடம் எவ்வளவோ பிரியமாக நடந்துகொள்ளுகிறார்களே.

சிமாண்:— பொருளும் ஆஸ்தியும் நம்மிடம் மிகுந்திருப்பதினால் தான் நம்மைப் பெரிதும் விரும்பித் தேடி வருகிறார்கள்.

எஸ்தர்:— அப்படியானல், நமது சொந்த நாடு எது? இங்கு எப்படி வந்தோம்?

சிமாண்:— கண்மணி, அது ஒரு பெருங் கதை. சொல்கிறேன், கேள். என் தாயும் தகப்பனும் எபிரேய தேசத்தவர்கள். இன்னும் நகரில் என்னைப் பெற்று வளர்த்தார்கள். அவர்கள் அடிமைகளாகயிருந்ததால் பணத்திற்காக பென்ஹூர் பிரபுவினிடம் என்னை விற்றுப் போட்டார்கள். அப்போது எனக்கு வயது 13. அவர் என்னை அலெக்ஸாண்டிரியா பட்டணத்திலிருந்த அவருடைய வியாபாரக் கிட்டங்கியில் வேலை செய்யச் சொன்னர். சில வருஷங்களின் பிறகு என்னை அடிமைத்தனத்தினின்றும் நீக்கினர். ஜெருசலேமுக்கு கூட்டிக் கொண்டுபோய் கல்வி கற்கும்படி செய்தார். படிப்பு முடிந்த பின் வியாபார சம்பந்தமாக என்னைப் பல தேசங்களுக்கும் கூட்டிக் கொண்டு போனர். என்னுடைய திறமைக்குத் தக்கபடி நல்ல சம்பளமும் கொடுத்தார். மற்ற வேலைக்காரர்களுக்கு மேலாளாக வைத்தார். பிறகு தனியே வியாபாரம் செய்துவரும்படி என்னிடம் பல கப்பல்களையும் ஒப்புவித்தார். என் நல்ல உழைப்பினல் பெருத்த லாபமுமடைந்தார். பல வருஷங்களின் பின் நான் ஜெருசலேமுக்குத் திரும்பியபோது, அன்பின் பெருக்கால் எனக்காக அவர் ஒரு பெரிய விருந்திட்டார். நான் விரும்பியதுபோல அவர் வீட்டில் பணிப்பெண்ணுகயிருந்த உன் தாய் இராக்கேலை எனக்கு மணம் முடித்து வைத்தார். தமது வியாபாரத்தை நடத்தி வரும்படி என்னையும் உன் தாயையும் இந்த ஊருக்கு அனுப்பிவைத்தார். சில வருடங்கள் சென்று, பிரபு கப்பல் கவிழ்ந்து கடலில் மூழ்கி யிறந்துபோனர். அதனல் நாங்கள் அனுபவித்த துயரம் கொஞ்சமல்ல. அவரது தேவி கொண்ட துக்கம் சொல்ல முடியாது. அவ்வம்மையிடம் பிரபுவின் சொத்துக்களையெல்லாம் ஒப்புவித்தேன். அவர்கள் என்னையே சகலத்தையும் பொறுப்புடன் மேல்பார்த்து வரும்படி நியமித்தார்கள். நானும் வெகு உண்மையுடன் உழைத்தேன். பத்து வருஷங்கள் வரை ஒரு குறைவுமின்றி வியாபாரம் ஓங்கி வளர்ந்தது. கிராட்டஸ் கவர்னரை, யூதா கொல்ல

முயன்ற குற்றத்திற்காக என் எஜமானியையும் பிள்ளைகளையும் பெருந் தண்டனைக் குள்ளாக்கியதையறிந்து நான் ஜெருசலத்திற்கு ஓடினேன். மேசலாவென்ற துஷ்டன் துர்ப்போதனையால், கிராட்டஸ் கவர்னர் என்னைப் பிடித்து உபத்திரவித்தான். சித்திர வதை செய்து என்னை முடவனுக்கினான். எனது எஜமானின் கப்பல்கள் முதலிய சொத்துக்களை யெல்லாம் பறிமுதல் செய்தான். ஆனால், ரொக்கமாக ஒரு பெருந் தொகையை மறைத்து வைத்திருந்தேன். உபத்திரவம் நீங்கிய பின் வியாபாரம் செய்ய அனுமதியளிக்க உரோமையரசருக்கு மனுச் செய்தேன். அவர் அங்கீகாரம் பெற்று, வியாபாரமும் ஆரம்பித்தேன். முன்னிலும் பதின் மடங்கு லாபகரமாக வியாபாரம் நடந்து வருகிறது. நம்மிடமுள்ள ஆஸ்தியளவு இந்நாட்டில் வேறு யாரிடமுமில்லை. ஆனல் அவைகளை விட நீயே எனக்கு விலை மதிக்கப்படாத மாணிக்கம். உன்னை வரிக்க எத்தனையோ பேர் எண்ணினர்கள். ஆனல்.........................

எஸ்தர்:—அப்பா, என்ன அரும்பாடுபட்டு சம்பாதித்திருந்த போதிலும் நீர் ஹூர் பிரபுவின் அடிமையே. என்னைப்பற்றி நீர் ஏன் கவலைப்பட வேண்டும். நம்மிடமிப்போது வந்துபோன யூதாவென்ற பூமானுக்கு நீரும் நானும் முழுதும் சொந்தம். அவர் சித்தப்படிதானே நாம் நடக்க வேண்டும். நம்மையும் நமது ஆஸ்தி பாஸ்திகளையும் அவரிடம் ஒப்படைத்து விடுவதே நியாயம். அவர் நம்மை ஆதரித்தாலும் சரி, அல்லது அகதிகளாக்கினலும் சரி, எல்லாம் தெய்வச்சித்தம் போலாகட்டும்.

சிமாண்டனிஸ், "அறிவிற் சிறந்த என் மகளே, உன்னைப் பெற்ற நானே பாக்கியவான். கடவுள் நம் மெண்ணத்தைப் பூர்த்தி செய்ய வேண்டும்" என்று சொல்லிக் களிகூர்ந்தான்.

---

# எட்டாம் அத்தியாயம்.

## வழிப்போக்கன் முல்லா

சிமாண்டனிஸின் வீட்டை விட்டு வெளியேறிய நம் கதா நாயகன் செய்வ தின்னதென அறியாமல் மிக மனச் சோர்வுடன் மெய் மறந்து கால் சென்ற வழியாகச் சென்று கொண்டிருந்தான். பற்பல எண்ணங்கள் அவன் மனதில் உதயமாயின. கடைசியில் மனத் தெளிவடைந்து 'கடவுளைக் குறை கூறுவதும் பழித்துப் பேசுவதும் நியாயமல்ல; எல்லாம் ஈசன் செயல்: எது வரினும் நம் நன்மைக்கே' என்று தேறுதலடைவதே நல்லது என சிந்தித்தவனாய், "சர்வ ரக்ஷக ஜெகதீசா, யாருமற்ற அனாதையான நான் உன் பிள்ளையல்லவோ. நீரே என் தஞ்சமும் உறைவிடமும்: எனக்கு வரும் துன்பங்களை அமைதியுடன் நான் சகிக்கப் போதுமான பலத்தையும் பொறுமையையும் எனக்குத் தாரும். அனாதரக்ஷகா அகிலாண்டகோடி பிரமாண்ட நாயகா, ஆதி மூலனே, அடியார்க்கெளியனே, சகல லோகாதி காரண கர்த்தனே, சத்திய மறை மூலனே, அமல விமல தூயனே, இதுவரை நீர் எனக்குச் செய்துள்ள நன்மைகள் அனந்தமாயிருக்க நான் நம்பிக்கை யிழத்தல் நியாயமோ. எல்லாம் உமது கிருபை. என்னுடையன யாவும் உம்முடையதே. உமது கடைக்கண்ணோக்கே என் பாக்யம்." என்று தனக்குள் புலம்பிக் கொண்டே ஊருக்கு வெளியில் இரு மருங்கிலும் பெருத்த மரங்களடர்ந்த ஒரு சாலையை அடைந்தான். மாலை வெளிச்சங் குறைந்தது. இருளும் அதிகரித்தது. மரக் கொப்புகளில் தூங்கிக்கொண்டிருந்த வெளவால்களெல்லாம் உணவு தேட வெளிக்கிளம்பின. பட்சிகள் அதனதன் கூடுகளில் போயடைந்தன. பூரணச் சந்திரன் வானத்தில் ஜொலிப்புடன் பிரகாசித்துக் கொண்டிருந்தான். அச்சாலை வழியாக அநேக ஜனங்கள் கூட்டங் கூட்டமாக போய்க்கொண்டிருந்தார்கள். தனக்கு சமீபமாக தொடர்ந்து வந்து கொண்டிருந்தவனைப் பார்த்து "ஐயா, இந்த ஜனக்கூட்டம்

எங்கு போகிறது'' எனக் கேட்டான் யூதா. (தொடர்ந்து வந்து கொண்டிருந்தவன் முல்லா என்பது வாசகர்களுக்கு சொல்லாமலே விளங்கும்.)

முல்லா:— ஐயா இவர்களெல்லாம் டவினி சோலைக்குப் போகிறார்கள். நாளைக்கு அங்கு வருஷ உற்சவம். நான் இந்த ஊருக்கு முதலாவதாக இன்றுதான் வந்தேன். இருட்டிவிட்டதால் உங்களைக் கேட்டுத் தெரிந்து கொண்டு அங்கு போகலாமென்று உங்கள் பின்னால் வந்தேன். ஆனால் நீங்களும் புதிய ஆள் போலிருக்கிறதே.

யூதா:— ஆமாம்: நானும் புதியவனே. இன்று பிற்பகலில் தான் இந்த ஊருக்கு வந்து சேர்ந்தேன்.

முல்லா:— அப்படியானால் இப்பொழுது எங்கு போகிறீர்கள்?

யூதா:— எங்குமில்லை; சத்திரத்துக்குத் தான் போகவேண்டும்.

முல்லா:— இந்த ஊரில் அறிமுகமானவர்கள் எனக்கு யாருமில்லை. எனது சொந்த வூர் பெத்லகேம். ஜாதியில் யூதன்; என்னையும் உங்களுடன் சத்திரத்துக் கழைத்துச் சென்றால் தங்களுக்குப் புண்ணியமாயிருக்கும்.

யூதா:— யூதனா! மெத்த சந்தோஷம். ஆனந்தமாய் என்னுடன் வாரும். நானும் ஒரு யூதன்; உமது சகோதரன். நீர் ஏதோ அலுவலாய் இங்கு வந்திருக்கிறீர் போலும்.

முல்லா:— இல்லை, இல்லை. என் தாய் தந்தை எனக்குப் பிரியமில்லாத பெண்ணைக் கலியாணம் செய்யும்படி தொந்திரவு செய்ய அவர்களுட னிருப்பது சரியல்லவென்று நினைத்து அவர்களறியாமல் இங்கு வந்து விட்டேன்.

யூதா:— ஐயோ பாவம்! உலகில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு கவலை; விதவிதமான துன்பம், வகை வகையான துயர்.

நானோ தந்தையை இழந்து, தாயும் தங்கையு மிருக்குமிடம் தெரியாமல் பரிதபிக்கிறேன். உமக்கோ தாயும் தகப்பனும் இருந்தும் அவர்களால் உமது மனதிற்கு அமைதியில்லாமல் போய்விட்டது. இனி நீர் என்ன செய்யப் போகிறீர்?

முல்லா:— தேச சஞ்சாரம் செய்யலாமென்று நினைத்திருக் கிறேன்.

யூதா:— அதற்கு ஏராளமான பொருள் வேண்டுமே.

முல்லா:— அதற்கொரு குறைவுமில்லை; தேவைக்கு அதிக மாகவே கையில் பணமிருக்கிறது. அதிருக்கட்டும் தாய் தங்கை யிருக்குமிடம் தெரியாமல் தயங்குவதாகச் சொன்னீர்களே, அதின் விபரம் என்ன?

யூதா தன் வரலாற்றை ஆதியோடந்தமாகச் சொல்லி முடித்தான். முல்லாவும் அதை வெகு கவனமாய்க் கேட்டான்.

முல்லா:— இந்த ஊரிலுள்ள உங்கள் தந்தையின் காரியஸ் தன் சிமாண்டனிஸ் உங்களை வஞ்சித்து விட்டான் அல்லவா, அவனைச் சும்மா விடப்படாது.

யூதா:— ஐயோ பாவம்! அவர் குற்றமற்றவர். அவர் கேட்டிற்கும் நான் தான் காரணம். அவர் இருக்கும் நிலைமை யைக் கண்டால் நீர் இவ்விதம் பேசமாட்டீர். என் தந்தையின் உண்மையுள்ள ஊழியக்காரர் அவரே. அவருக்கேற்பட்டிருக் கும் துன்பத்தை நீக்குவதாகவும் அவருக்குத் தீங்கிழைத்த சண் டாளர்களைப் பழி வாங்குவதாயும் அவர் முன்னால் இன்று சபதம் செய்திருக்கிறேன்.

முல்லா:— உரோமை அரசாங்கத்தில் பெரும் பதவியி லுள்ள அதிகாரிகளல்லவா உங்களுக்கும் அவருக்கும் கெடுதல் செய்ததாகச் சொல்லுகிறீர்கள். அப்படியிருக்க உங்கள் சபதம் எப்படி நிறைவேறும். அப்படிப் பழிவாங்க முயற்சி செய்தால் இன்னும் பெருங் கஷ்டத்திலல்லவோ சிக்கிக் கொள்ளுவீர்கள்.

யூதா:— குற்றமற்ற எங்கள் மேல் பழி சுமத்தி எங்களைத் தண்டித்த சண்டாளர்களின் வாழ்வுக்கொரு அழிவு நிச்சயமாயுண்டு. நீதியுள்ள தெய்வம் அவர்களைச் சும்மா விடாது. இப்பூமியிலேயே அவர்கள் செய்த பாவாக்கிரமங்களுக்குத் தக்க தண்டனை ஏற்படாமலா போய்விடும். நீரும் நானும் உயிருடனிருப்போமானல் விரைவில் சகலமும் காண்போம். மகா மேன்மை பொருந்திய உரோமை மன்னரின் ஆட்சியை கொடுங்கோலரசு என யூத குலம் புகலுவதும் பிசகே. நானும் ஓர் காலத்தில் அவ்விதமே எண்ணியிருந்தேன். உரோமையிலிருந்தபோதே அவர்களின் மேன்மையான நீதியின் மாட்சியைக் கண்டேன். என் ஸ்வீகார தந்தை எனக்கு வைத்துப்போயிருக்குந் திரண்ட சொத்தை யெல்லாம் செலவிடுவேன். நீதியுள்ள அரசருக்கு மனுச் செய்வேன்: அவர் மீது நான் கொண்டுள்ள ராஜ விசுவாசமும் கடந்த ஐந்தாண்டுகளாக நான் புரிந்திருக்கும் பரோபகாரச் செயல்களுமே எனது மனுவுக்குப் போதுமான சிபார்சாக நிற்கும்.

முல்லா:— உங்கள் முயற்சி நற்பலனைக் கொடுக்கக் கடவுள் கருணை புரிவாராக.

முல்லாவின் உற்சாகம் நிரம்பிய வார்த்தைகள் யூதாவுக்கு ஊக்கத்தைக் கொடுத்தன. தன்னையுமறியாமலே முல்லாவின் கைகளைப் பிடித்திழுத்து அன்புடன் மார்புறத் தழுவி மினவியவனய் "எனது ஜீவிய காலத்தில் முதன் முதல் ஒரு யூத சகோதரனை மினவும் மிகவும் பாக்கியம் இன்றே கிட்டியது" என மொழிந்தான் யூதா.

முல்லா:— (மனம் பூரித்தவனய்) பிரபு வம்சத்தைச்சார்ந்த தங்களின் பேரன்பைப் பெற உதவி புரிந்த ஆண்டவனுக்கு அனந்தகோடி நமஸ்காரம். என்னை இன்று முதல் தங்களின் வேலையாளாகப் பாவித்துக் கொள்ளுங்கள். நீங்கள் எங்கு சென்றாலும் நானும் அங்கு வருவேன். ஈட்டி முனையில் என் உயிர் போவதாயிருந்தால் கூட தங்களுக்கு ஊழியஞ் செய்ய பின்

வாங்கமாட்டேன். வேலையில்லாத் திண்டாட்டத்தினாலோ, பொருளை இச்சித்தோ இவ்விதம் பகருகிறேனென்று எண்ண வேண்டாம். தங்களின் குற்றமற்ற வார்த்தைகளும், தாங்கள் கொண்ட மேலான மனத்திடமும், அடியேனிடம் காண்பித்த பேரன்புமே தங்களிடம் என்னைப் பந்தப்படுத்தி விட்டது.

யூதா:— ஆஹா! தேவன், தேவாதி தேவன், சகல லோக நாதனின் அருளை இன்றே நானடைந்தேன். ஆற்றுவாரின்றி, தேற்றுவாரின்றி, தன்னந்தனியனாய் அனாதையாயிருந்த எனக்கு ஹிதமான வார்த்தைகளைச் சொன்ன உம்மை எனது வேலைக்காரனாகவா........இல்லை, இல்லை, எனக்குதவி புரிய கடவுளனுப்பிய தூதன், அன்பு நிறைந்த பாங்கனெனவே ஏற்றுக்கொள்ளுகிறேன். நண்பரே, வாரும் வெகு நேரமாகிவிட்டது. சத்திரத்துக்குப் போய் இராப் பொழுதைப் போக்குவோம். நீர் காண விரும்பிய டவினி சோலைக்கு நாளைக்குப் போகலாம். நானும் உம்முடன் வருகிறேன்.

முல்லாவும் இதற்கிசைந்தான். இருவரும் துரிதமாய் நடந்து சத்திரத்தை யடைந்தனர். அசனத்தை முடித்துக் கொண்டு சத்திரத்திலுள்ள ஒரு அறையைக் குடிகூலிக் கமர்த்தி அதில் இருவரும் இராப் பொழுதைப் போக்கினர்.

## ஒன்பதாம் அத்தியாயம்.

### உற்சவமும் உறவும்.

பொழுது புலர்ந்ததும் காலைக் கடன்களை முடித்துக் கொண்டு யூதாவும் முல்லாவும் பசியாற்றிக் கொண்டனர். பிரயாணிகளில் அநேகர் சத்திரத்திலிருந்து டவினி சோலைக்குப் புறப்பட்டார்கள். இருவரும் அவர்களைப் பின்பற்றினர். பட்டணத்துக் கோட்டைக் கதவுகளைத் தாண்டியதும் பெரியதொரு கூட்டங் காணப்பட்டது. கால்நடையாகப் போகிறவர்களையும், கோவேறு கழுதை, குதிரை, ஒட்டகம் முதலிய வாகனங்களின் மீதேறிச் செல்லுபவரையும், வண்டிகளிலும், ரதங்களிலும் செல்லுவோரையுங் கண்ட யூதாவின் மனம் சிறிது அமைதியடைந்தது. நடந்து செல்பவர்களின் உற்சாகமும், சந்தோஷ குதூகலக் கொண்டாட்டமும் அவன் மனதிலுறைந்திருந்த கவலையைச் சற்றே மாற்றியது. ரஸ்தாவின் இருபுறங்களிலும் ஒழுங்காக வளர்க்கப்பட்ட ஒலிவு, தேவதாரு, சவுக்கை, ஆல் முதலிய பலவித மரங்கள் அடர்த்தியாக உயர்ந்து வளர்ந்திருந்ததினால் அவைகள் கதிரவன் கிரணங்களை மறைத்து பாதசாரியாகப் போகும் மக்களைக் கடாக்ஷிப்பவை போல தலையை அசைத்து இன்பக்காற்றை உண்டு உமிழ்ந்து இறைத்து நின்றன.

யாத்ரீகர்கள் அணிந்திருந்த ஆடைகள் பலவித வர்ணமுள்ளவைகளாயும், விலையுயர்ந்தவைகளாயும், பரிமள கந்தம் நிரம்பியவைகளாயு மிருந்தன. அவைகளில் படிந்துள்ள நறுமணத்தை மரங்களிலிருந்து வீசும் மந்தமாருதம் நுகர்ந்து வீசியெறியவே, அது வழி நடப்பவரின் மனதுக் கின்பத்தை உண்டாக்கிற்று. ஜனங்களிடையே பல பல விநோத வேடிக்கைகளும், ஆடல் பாடல்களும் மிகுந்திருந்தன. எங்கு பார்த்தாலும் வாத்திய கோஷமும், சங்கீத முழக்கமும், தலையாட்டங்களும், நடன நாட்டியங்களுமே மிகுந்திருந்தது. பிரார்த்தனைக்காரர்கள் நவ நவமான உடை யுடுத்தி பல காணிக்கைகளை ஏந்திக்

கொண்டும், ஆடு மாடு முதலியவைகளை குளிப்பாட்டி அலங்கரித்து நடத்திக் கொண்டும் சென்றனர். அவர்களைச் சுற்றிப் பலர் வேடிக்கை பார்த்துக்கொண்டே நடந்தனர். மலை மீதிருந்த டவினி சோலைக்குள் சகலரும் சென்றனர். சோலையில் பெருமிதமாக நிறைந்திருந்த பருத்த மரங்கள் 'ஆ'வென்ற அலரலுடன் அவர்களை யழைப்பது போலக் குமுறிக் கிளையோடு கிளையிழைந்து நின்றன. அப் பூஞ்சோலையின் அழகை அளவிட்டுரைப்பது அசாத்தியம். எங்கு பார்த்தாலும் பசும் புற்றரைகள் அணிவகுத்தன போல அடுக்கடுக்காய்க் காணப்பட்டன. அங்கங்கே தொட்டிகளில் வளர்க்கப்பட்ட பல நிற இலைகளையுடைய செடிகளில் அநேகவித நூதன மலர்கள் நெருங்கி நின்று வாசனைகள் பல கலந்து இசைந்து செறிந்திருந்தன. கண்ணுக் கினிமை யளிக்கும் மலர்கள் நிரம்பிய செடிகள் ஓரிடத்தில் சூழ்ந்து கவிந்து விளங்கின. பலநிற வண்டினங்கள் மலர்களிலிருந்த தேனை யுண்டு ரீங்காரம் செய்து கொண்டு ஆகாயத்திற் கிளம்பின. பக்ஷிஜாதிகள் பல இன்பமாய்க் கூவிக்களித்து விளையாடின. இயற்கைக் காட்சிகளையும், மலர்களின் தோற்றத்தையும், பக்ஷிகளின் இன்ப நிறங்களையும் தோற்கடிக்கக் கூடியதாய் பலவித வேலைப்பாடமைந்த ஒரு கம்பத்தின்மேல் அமைக்கப்பட்ட சிறந்ததொரு சிம்மாசனத்தில் கண்ணுக் கினிய காக்ஷியளிப்பதாய் புன்னகை பூத்த முகத்துடனும் பவளம் போன்ற வதனத்துடனும் ஒரு மாது அமர்ந்திருப்பதுபோல ஒரு சிலை காணப்பட்டது. அதுவே டவினி தேவதையின் சிலை. யூதா முதலில் இவ்விக்கிரகத்தை உயிருள்ள கன்னிகை யென்றே எண்ணினான். அத் தேவதையின் முன்பாக அநேக பீடங்கள் அமைக்கப் பட்டிருந்தன. அவைகளினருகில் நீண்ட அங்கியும் கோணலான தலைப்பாகையுமணிந்த பூசாரிகள் பலர் நின்று பிரார்த்தனைக்காரர்கள் உண்டியல்களில் காணிக்கைகள் போடுவதைக் கவனித்துக் கொண்டும், பலியிடக் கொண்டுவந்துள்ள ஆடு, கிடா, மாடு, சேவல், கோழி, புரு, முதலியவைகளையும் அபிஷேகத்திற்குத் தேவையான களப வகைகள், நெய், பால் எண்ணை முதலியவற்றையும் ஏற்றுக் கொண்டு மிருந்தனர்.

பகல் 12 மணி. அப்பொழுது தலைமைப் பூசாரி "தேவிக்கு நைவேத்தியம்" என உறக்கக் கூவினன். அதிர்வெடிகள் "படாங்" என இடிமுழக்கம் போல சப்தித்தன. ஆங்காங்கு தூங்கிக் கொண்டிருந்த ஆராய்ச்சி மணிகள் கலகல வென சப்தித் தொலித்தன. பேரிகைகள் முழங்கின. 'பம் பம்' மென சங்க நாதங்கள் பல கிளம்பின. மேள தாளம் சப்திக்க, எங்கு பார்த் தாலும் சங்கீதக் கருவிகளின் இன்னிசையே பரவியது. தேவ தாசிகள் சிலர் டவினி தேவியின் சிலையின் கீழே சூழ்ந்து நின்றனர். அவர்களில் மூவர் சிலையின் பின் பக்கமிருந்த ஏணி வழியாக யேறினர்கள். தேவிக்குப் பின் பக்கமாக நின்று ஒருத்தி பட்டுக்குடை ஒன்றை விரித்துப் பிடித்தாள். ஏனையோர் வெண்சாமரை வீசினர். கீழே நின்றவர்கள் சோபனம் பாடி ஆனந்தமாய் நடனமாடினர். அங்கங்கே அகிற்கட்டைகள் புகைக்கப்பட்டன. பூசாரிகளில் பலர் தூபக் கலசங்களை எடுத்து வீசினர். தலைமைப் பூசாரி நைவேத்தியச் சடங்குகளை ஆரம்பித் தான். அச்சோலையில் கூடியிருந்த பக்தகோடிகளனைவரும் "தேவ தேவி நமோ நம" என கோஷமிட்டனர். நாட்டுப்புறத் திலிருந்து வந்திருந்த யாத்ரீகர்கள் குலவையிட்டுக் கூத்தாடி னர். சிலர் சிலம்பம், ஒயில் போட்டார்கள்; சிலர் கரகமாடினர். இவ் வேடிக்கைகளைக் காண மனமற்றவனாக, யூதா தனது நண் பன் முல்லாவுடன் ஜனத்திரளை விட்டு விலகி தனியே நின்று கொண்டிருந்தான். ரூபலாவண்ணியமுள்ள மங்கையரின் தோற் றம் அவனுக்கு அவனது தாய் தங்கையை நினைப்பூட்டிற்று. என்ன செய்வான்; பாவம்! இன்னும் சற்று நேரம் ஜனத்திரளி லிருந்தால் துக்கம் மிகுதியாகி விடுமென எண்ணி, தனது நண்ப னுடன் சற்று தூரத்தில் ஒதுக்கிடமாய் காணப்பட்ட ஒரு சோலைக்குச் செல்லும் பாதை வழியாய் சென்றான்.

அப்பாதையின் இருபக்கங்களிலும் பலவித உயர்ந்த மரங்கள் ஏராளமாய் நின்றன. போகப்போக மலையின் உச்சிக்குப்போவது போலத் தோன்றியது. பாதையும் செங் குத்தாயிருந்தது. திரும்பிப் பார்க்கையில், டவினிசோலை வெகு

தூரத்தில் சிறியதொரு தோட்டம் போலக் காணப்பட்டது. அங்கங்கே நானுவித செடிகளும், கொடிகளும் நவமான நிறங் களையுடைய காட்டுப்புஷ்பங்களால் மறைக்கப்பட்ட பெரும் புதர் களுங் காணப்பட்டன. மலையின் இரு சரிவுகளினின்றும் சில சில இடங்களிலிருந்து உற்பத்தியான நீர்ச்சுனைகள் குன்றுகளுக் கிடையே காணப்படும் கணவாய்களில் விழுந்து அங்கிருந்து நீரோடைகளாக மாறி, அவையாவும் ஓரிடத்தில் ஒன்று சேர்ந்து "ஜல ஜல" வென்ற சப்தத்துடன் ஓடி உயரமான வொரு விடத்திலிருந்து "சோ" வென்ற இரைச்சலுடன் கீழே யிருக்கும் பாறைகளில் விழுவதும், அங்கங்கேயிருந்த பள்ளத் தாக்குகளில் தடாகம் போல நிரம்பியிருப்பதும், எஞ்சிய தண்ணீர் "குடு குடு" வென வழிந்தோடுவதும், எங்கு பார்த்தா லும் பசேலென்றுள்ள மலைகளின் சிகரங்களும் சோலைகளும் ஏரிகளும் அவைகளுக்கருகே அமைந்துள்ள சிறு சிறு வீடுகளும் குடிசைகளும், குச்சில்களும், தூரத்தில் தோன்றும் சிகரங்களில் காணப்படும் காட்டு மாடுகளின் கூட்டமும், இரை தேடியலையும் செந்நாய்களின் தோற்றமும், கான்களில் நீரருந்தி நிற்கும் கேழை, ஆடு, மான், பன்றி முதலியவைகளின் வனப்பும் பூதா வின் மனக்கவலையைச் சற்று மாற்றின.

மணி மூன்ருயிற்று. இயற்கைக் காட்சிகளில் ஈடுபட்டவர் களாய் இருவரும் சுமார் நாலுமைல் தூரத்திலிருந்த மலை உச்சியை அடைந்தனர். மலையின் மறு பக்கத்தின் வழியாக அடிவாரத்தை யடைந்து ஊருக்குள் போக நினைத்து மலையை விட்டிறங்கினர். மலையில் பாதிதூரம் இறங்கிய பின் அடிவாரத்திலிருந்த வொரு சமவெளி காணப்பட்டது. அங்கு ஜனங்கள் திரளாய்க் கூடியிருப் பதையும், எக்காளங்கள் ஊதப்படுவதையுங் கண்டான்.

பூதா:—நண்பா, அடிவாரத்தில் காணப்படுவது என்ன கூட் டம். அங்கு எதற்காக எக்காளங்கள் ஊதப்படுகின்றன?

முல்லா:—குதிரைப் பந்தயம் நடக்கப் போவதாக கேள்வி. இடம் அதுவாகத்தானிருக்க வேண்டும். ஆமாம் அதோ சிலர் குதிரை மீதேறிச் செல்லுகின்றனர்.

யூதா:—நாமங்கு போய்ச் சேர்வதற்குள் பந்தயவோட்டம் முடிந்துவிடுமோ. எப்படியிருந்தாலும் சரி. வாரும் நாமிருவரும் அங்கு போய்வரலாம்.

முல்லா:—ஆகா வாருங்கள் போகலாம். பந்தயவோட்டத்தில் உங்களுக்கு இவ்வளவு பிரியமிருக்குமெனத் தெரிந்திருந்தால் நேரே அங்கேயே போயிருக்கலாம்.

யூதா:—அப்படிப் போயிருந்தாலும் பந்தயத்தில் கலந்து கொள்ளுவதும் சாத்தியமாயிருந்திருக்காது. இந்தப் பந்தயமெல்லாம் என்று முதல் ஆரம்பம்?

முல்லா:—இன்றுதான் ஆரம்பமென்று சொல்லிக் கொண்டார்கள்.

யூதா:—அப்படியானல் அடுத்த பந்தயத்திற்கு என் பெயரைப் பதிவுசெய்யவேண்டும். ஆனல் அதற்குத் தகுந்த குதிரைகளும் இரதமும் வேண்டுமே. வகையாய்க் கிடைக்குமானல் ஒரு கை பார்க்கலாம். வேகமாக வாரும். போய்ப் பார்ப்போம்.

இருவரும் வேகமாகச் சென்றனர். ஒருமணி நேரத்திற்குள் பந்தய வோட்டம் நடக்குமிடத்தை யடைந்தனர். வேடிக்கை பார்க்க நின்றுகொண்டிருந்த ஜனக்கூட்டத்திற்குள் புகுந்தனர். வசதியான ஓரிடத்தில் போய் நின்றனர். ஓட்டம் ஆரம்பிக்கவில்லை யெனக் கண்டு சந்தோஷமடைந்தனர். பந்தய ஓட்டத்திற்குத் தயாராகவிருந்த ரதங்களும் வீரர்களும் சுமார் கால் மைல் தூரத்திற்கப்பாலிருந்ததால் அவர்களை இன்னாரின்னாரென யூதா தெரிந்துகொள்ள முடியவில்லை. ஓட்டமும் ஆரம்பமானது. கூட்டத்திலிருந்தவர்கள் அவரவருக்குப் பிரியப்பட்ட வீரர்களுக்கு உற்சாகமான வார்த்தைகளைச் சரமாரியாகப் பகர்ந்து கொண்டிருந்தனர். முடிவில் அதிகக் கம்பீரத் தோற்றமுள்ள ஒரு உரோமை வாலிபனே வெற்றியடைந்தான். அவன் யாரென அறியும் பொருட்டு சற்று நெருங்கிப் போய்ப் பார்த்

தான் யூதன். பாலப் பருவத்தில் தன் நேயத்தைக் கொள்ளை கொண்டு இறுதியில் தனக்குப் பெருங்கேட்டை விளைவித்த சண்டாளன், துரோகி மேஸலா வெனவறிந்தான். அக்கினியில் விழுந்த புழுவென அவன் அங்கம் துடித்தது. அவன் மனதில் வேரூன்றியிருந்த குரோதம் விவரிக்கக் கூடாததாயிருந்தது. துடித்தெழுந்த கோபத்தையொருவாறு தணித்தவனுய், தன்னை விடாமல் பின்பற்றிவந்த நண்பன் முல்லாவின் கையை இறுகப் பிடித்தான். "இவன் தான் அந்த உரோமை நாய். எங்கள் கேட்டிற்குக் காரணமாயிருந்தவன். இவனை இன்றே கொன்று தொலைக்க எனக்குப் போதுமான பலம் உண்டு. என்றாலும், தக்க சமயம் வாய்க்கும்போது இவனை ஒரு கை பார்ப்பேன்" என்று மெதுவாக முல்லாவின் காதிலுரைத்தான். அவனும் "ஆம், ஆம், அதுதான் சரி; அவசரப் படாதேயுங்கள்" என்றான்.

அச்சமயத்தில் எக்காளம் ஒன்று ஊதப்பட்டது. சமீபத்திலிருந்த மேடைமீது ஒருவன் ஏறி நின்றான். சகலரும் அவன் பக்கமாகத் திரும்பினர்கள். யாவரும் கேட்கும் விதமாய் பலத்த சப்தத்துடன் "சகோதரரே, இதற்கடுத்த எட்டாம் நாள் நடக்கவிருக்கும் பந்தய ஓட்டத்தில் கலந்து கொள்ள விருப்பமுள்ளவர்கள் இன்று முதல் மூன்றுநாட்களுக்குள் தங்கள்பெயரைப் பதிவு செய்து கொள்ளலாம். நான்கு குதிரைகள் பூட்டிய இரத வோட்டம் ஞாபகம்" எனச் சொல்லி முடித்தான். யூதாவின் மனம் துடித்தது. "ஆகா அத்துஷ்டனை முறியடிக்க இதுவொரு நல்ல தருணமே. யாவருங் காண அவன் மேல் பழியும் தீர்த்துக் கொள்ள வேண்டும்" என்று மனதில் எண்ணினவனுய்ப் பக்கத்தில் நின்று கொண்டிருந்த மனிதனிடம் 'ஐயா, நல்ல குதிரைகளையுடைய வியாபாரி யாராவது சமீபத்திலிருக்கிறார்களா?' எனக் கேட்டான். "உமக்கெந்த விதமான குதிரை வேண்டும்?" என வினவினன் கும்பலிலிருந்த மனிதன். "பந்தய ஓட்டத்திற்குப் பொருத்தமான குதிரைகள் தான்." என்றான் யூதன். "இதற்காக நீர் குதிரைகளை விலைக்கு வாங்க வேண்டாம். என்னுடன் வாரும்; சமீபத்தில் ஷேக் இஷ்டரீம் பிரபுவின் கூடாரமிருக்கிறது.

அவர் தம்மிடமுள்ள குதிரைகளைத் திறமையுடன் ஓட்டி பந்தயத்தை ஜெயித்தவர்களுக்கு தக்க சன்மானம் அளிப்பதாக விளம்பரம் செய்திருக்கிறார்." எனப் பகர்ந்தான் அம் மனிதன். யூதாவின் மனம் சந்தோஷத்தால் பொங்கியது. முல்லாவையும் அழைத்துக் கொண்டு அம்மனிதனைப் பின் பற்றினன். மூவரும் இஷ்டரீம் பிரபுவின் கூடாரத்தை நோக்கிச் சென்றனர்.

பந்தய ஓட்டம் காணவந்தவர்கள் சகலரும் அவரவர் வாசஸ்தலங்களுக்குத் திரும்பினர். பந்தய ஓட்டத்தின் பெருமைகளைப் பேசிக் கொண்டே ஜனங்கள் வழி நடந்தனர். எட்டாம் நாள் நடக்கவிருக்கும் பந்தயத்தில் அன்று வெற்றியடைந்த உரோமனே ஜெயமடைவானென்று பேசிக் கொண்டனர். முல்லாவோ பின்னல் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே நடந்து வந்தான். சுமார் பத்து கெஜ தூரத்தில் ஒட்டகம் ஒன்று வந்து கொண்டிருந்தது. அதின் மேல் அழகு சௌந்தர்யமுள்ள ஒரு யுவதியும், நரை திரை மிகுந்த வயோதிகன் ஒருவனும் ஏறியிருந்தார்கள். அவர்களைத் தொடர்ந்து சற்று தூரத்தில் குதிரை பூட்டிய இரதம் ஒன்று வேகமாய் வந்து கொண்டிருந்தது. இரதம் ஓட்டிவந்தவன் "ஹேய்! ஹோ!" வென எச்சரிக்கை செய்தான். யூதா சத்தம் வந்த திசையை நோக்கினன். இரதம் செல்லுவதற்கு இடம் கொடுத்து விலக ஒட்டகை மீதிருந்த பெண் முயற்சி செய்தும் முடியவில்லை. சில நிமிஷங்களில் ஒட்டகத்தின் மேல் இரதம் ஏறிவிடும் போலத் தோன்றினது. உடனே யூதா வேகமாய் வந்துகொண்டிருந்த இரதத்தை நோக்கி ஓடினன். முன்புறம் நின்றபடியே இரதத்தின் நுகத்தடியில் ஒரு கையையும், குதிரையின் நெற்றிப் பட்டையில் இன்னொரு கையையும் போட்டுப் பிடித்துப் பலமாய்த் தள்ளினன். குதிரையும் அவ்வதிர்ச்சியால் முன்னங் கால்களைத் தூக்கித் தொப்பெனத் தரையைக் கால்களால் அடித்து நின்றது. இரதமோட்டி வந்தவன் நிலை தடுமாறிக் கீழே விழுந்து குதிரையின் பின்னங்கால்களால் உதைக்கப்பட்டான். ஜனங்கள் மத்தியில் சற்றுமுன் வெற்றி மாலை சூடப்பெற்று கம்பீரமாய்த்

தோன்றிய உரோமனின் முகம் வெட்கத்தால் நிறம் மாறி தன் இரதத்தை நிறுத்தியவனை ஏறிட்டுப் பார்த்ததும் தலை குனிந்தான். ஒட்டகத்தின் மீதிருந்த பெண்மணியையும் பெரியவரையும் நோக்கி "தவறுதலேற்பட்டு விட்டது: மன்னிக்க வேண்டும், அபாயம் ஒன்றும் இல்லையே" என வினயமாய்க் கேட்டான். அப்பெண்ணோ அவன் மேல் இரக்கங்கொண்டவள் போலக் காணப்பட்டாள். "எங்களுக்கொரு துன்பமும் இல்லை: ஆனால் இரதத்திலிருந்து கீழே விழுந்த உமக்கு ஏதாவது பலமான அடியோ" எனக் கேட்டார் பெரியவர். "அப்படியொன்றுமில்லை" என்று வெட்கத்துடன் பதிலுரைத்து விட்டு தாவி ஏறி இரதத்தில் உட்கார்ந்தான். தன் மேல் நேசப் பார்வை செலுத்திய மாது சிரோன்மணியின் பேரழகில் ஈடுபட்டவனாய் அவள் மேல் தன் அன்பான பார்வையைச் செலுத்தி விட்டு இரதத்தை ஓட்டிக்கொண்டு அப்பால் சென்றான்.

யூதாவோ பற்களை நெற நெற வெனக் கடித்து தன் விரோதி போவதைக் கோபமாய்க் கவனித்து நின்றான். "வீண் டாம்பீகன், அகங்காரி, மிலேச்சன். ஜனங்கள் போகும் பாதையில் இவனுக்கென்ன இவ்வளவு அவசரம்; அடே அடுத்த பந்தயத்தில் உன் அட்டகாசத்தைத் தொலைக்கிறேன் பார்." என்றான். அங்கு நின்ற ஜனங்கள் அதை ஆமோதித்தவர்கள் போலக் கைகளைத் தட்டிக் கரகோஷம் செய்தனர். ஒட்டகத்தின் மீதிருந்த பெண்மட்டும் அதை ஒப்புக்கொள்ளாதவள் போல உரோமை வீரனைப்பற்றி ஏளனமாக அதிக பேச்சுகள் ஏற்படாதிருக்க யூதனைக் கூவியழைத்து, "ஐயா நீர் செய்த உதவிக்கு நன்றி பாராட்டுகிறோம். தாகம் அதிகமாயிருக்கிறது. அதோ தெரிகிற நீரோடைக்குச் சென்று இப்பாத்திரம் நிறையத் தண்ணீர் கொண்டுவந்து கொடுத்தால் மெத்த உபகாரமாயிருக்கும்" எனப் பகர்ந்தாள். அவனும் அப்படியே சென்று பாத்திரம் நிரம்ப ஜலம் கோரிக் கொண்டு வந்து கொடுத்தான். சிறுமியும் கிழவனும் தாக சாந்தி செய்தனர். பெரியவர் யூதனை அன்புடன் நோக்கினர். "அப்பா சுத்த வீரனான நீ இன்று

எமக்குப் புரிந்த பேருதவிக்கு என்ன கைம்மாறு செய்வோம்" என மொழிந்தார். "நான் அவ்வித மொன்றும் எதிர் பார்க்க வில்லை. உங்களுக் கேற்பட விருந்த ஆபத்து விலகியதே போதும்." என்றான் யூதா. "தம்பி, உன்னுடன் சாவகாசமாகப் பேசி உன்னை யாரெனத் தெரிந்து கொள்ள வேண்டும். நீ எங்கிருக் கிறாய்?" எனக் கேட்டார் வயோதிகர். "பெரியவரே, தற் போது நானொரு நாடோடி; ஸ்திரமாய் நான் எங்குமிருப்ப தில்லை. அதோ தெரிகிற கூடாரத்திற்கு இப்பொழுது போய்க் கொண்டிருக்கிறேன். என்றான் யூதன். "நானும் அங்கு தான் போகிறேன்; அது எனது நண்பர் ஷேக்இஷ்டரீமுடையது. உனக்கு அங்கென்ன அலுவல்?" எனக் கேட்டார் கிழவர். "பந்தய ஓட்டத்திற்குத் தயாராகவிருக்கும் குதிரைகளைப் பார்க்கப் போகிறேன்" என்றான் யூதன். "நல்லது உனக்கு வேண்டிய உதவிகளைச் செய்யும்படி எனது நண்பரிடம் சொல்லு கிறேன்; சுறுக்காய் அங்கு வந்து சேர்." என்று சொல்லிக் கொண்டே வயோதிகர் ஒட்டகத்தை நடத்திக்கொண்டு கன வேகமாய்ச் சென்றார்.

யூதா எதிர் பாராத இந் நிகழ்ச்சியின் பயனைத் தனக்கு ஏற் படவிருக்கும் பெரும் உதவியை மனதில் சிந்தித்துக் கடவுளை வாழ்த்தினான். சிறிது தூரம் சென்றபின் அவர்களுடன் வந்த மனிதன் "ஐயா அதுதான் அக்கூடாரம்" என்றான். "மெத்த உபகாரம், போய்வாரும்" என அன்பாய்ப் புகன்றான் யூதா. அம் மனிதனும் அவர்களை விட்டு அப்பால் சென்றான்.

யூதா:—நேசா, இரதத்திலிருந்து கீழே விழுந்த எனது சத்துருவைக் கொன்று அப்பொழிதே பகை தீர்த்திருப்பேன்....

முல்லா:—அது தகாத எண்ணம். 'பொறுமை கடலினும் பெரிது,' 'பொறுமையுடையோர் புகழை யடைவர்,' என்பதை மறவாதேயுங்கள்.

யூதா:—புகழ்ச்சியோ, இகழ்ச்சியோ; என் சபதம் நிறை வேற வேண்டும். என்னைப் பெற்ற மாதாவையும் என் உயிரினும்

இனிய தங்கையையுங் காண வேண்டும். அவர்கள் இருக்கும் இடத்தை இச் சண்டாளன் ஒருவனே அறிவான். இவன் மாண்டு போனல் அந்த இரகசியமும் இவனுடனே மறைந்து போகும். அதனல்தான் இன்னும் சில காலம் உயிருடனிருக்கட்டும் என விட்டு விட்டேன்.

முல்லா:—இரதத்திலிருந்து கீழே விழுந்து எழுந்ததும் அவன் உங்களைக் கவனித்ததை நான் பார்த்தேன்.

பூதா:—ஆனல் நான் தானென அவன் அறிந்து கொள்ளவில்லை. அறிந்திருந்தால் என்னை விட்டு அகன்று போயிருக்க மாட்டான்..... நான் கடற்போரில் செத்து மடிந்ததாக வல்லோ அவன் உறுதியாய் நம்பியிருக்கிறன் இருக்கட்டும், அம்மடையன். யூத சிங்கமான என் கையின் பலத்தை விரைவில் அனுபவிப்பான். அவன் எனக்கு இழைத்த தீங்கிற்குத் தகுந்த சன்மானத்தைப் பெறும் நாள் நெருங்கி வருவதை அவன் அறியாதிருப்பதே நன்மை. இன்று பந்தயத்தில் அவனடைந்த பெருமையைக் காற்ருய்ப் பறந்து போகச் செய்ய ஆண்டவன் அநுக்கிரகிப்பார்.

முல்லா:—நிச்சயமாய் ஆண்டவன் நமது பக்கம்தானிருக்கிறர். நீங்களே தவருமல் ஜெயமடைவீர்களென்பதையும் சற்றுமுன் நிரூபித்துக் காட்டி விட்டீர்கள். ஜெயம் இனி நம்முடையது தான் சந்தேகமில்லை.

பூதா:—பொழுது அஸ்தமித்து விட்டது. அறிமுக மில்லாத ஷேக் இஷ்டரீம் என்பவரை இராக் காலத்தில் காணுவது நல்லதல்ல வென நினைக்கிறேன்.

முல்லா:—வாஸ்தவம்தான்; பட்டணம் இங்கிருந்து இன்னும் 3 மைல் தூரமிருக்கலாம். இன்று வெகுதூரம் நடந்திருப்பதால் எனக்கும் அதிகக் களைப்பாயிருக்கிறது.

பூதா:—தோழரே, என்னல் உமக்கு எற்பட்ட திரேக உபாதையை எவ்விதம் தீர்ப்பேன்..... (சுற்றிப் பார்த்துவிட்டு)

அதோ ஒருவன் இரண்டு ஒட்டகங்களை ஓட்டிக்கொண்டு வருகிறான். வாடகைக்கு விடுவானென்றே நினைக்கிறேன். கேட்டுப் பார்ப்போம்.

முல்லா ஒட்டகக் காரனிடம் சென்று அவ்விரண்டு ஒட்டகங்களையும் வாடகைக்குப் பேசி முடித்து இருவரும் அதின் மேல் ஏறிக் கொண்டு பட்டணத்தை நோக்கிச் சென்றனர். ஷேக் இஷ்டரீமுடைய தோட்டத்தின் ஒரு பகுதி ரஸ்தாவின் சமீபத்திலிருந்ததால் யூதா அதின் வளப்பமான தோற்றத்தையும் செழிப்பான நிலைமையையுங் கண்களைக் கவருங் காக்ஷிகள் நிறைந்திருப்பதையும், அப் பூங்காவனத்தின் ஒரு பாரிசத்தில் ஸ்படிகம் போன்ற நீரையுடைய பெரியதொரு ஏரி அழகுபட வளைந்து இருப்பதையுங் கண்டு ஆனந்தித்தான்.

யூதா:—முல்லா, இத் தோட்டத்தின் அழகைப் பாரும். இஷ்டரீம் பிரபுவின் முன்னோர்கள் இப் பூஞ்சோலையை உண்டாக்க ஏராளமான பணத்தைச் செலவிட்டிருக்க வேண்டும். பட்டணத்திற்குள் தூசி படிந்த மாளிகையில் வசிப்பதைவிட இந்தத் தோட்டத்தில் ஒரு குடிசை கட்டி அதில் குடியிருப்பதே ஆரோக்கியம்.

முல்லா:—இந்தத் தோட்டம் அவருக்குப் பூர்வீகமான சொத்தல்லவென்று சொல்லிக் கொள்ளுகிறார்கள்.

யூதா:—அப்படியானால் இத்தோட்டத்தை விலைக்கு வாங்கியிருப்பாரோ.

முல்லா:—இல்லை. இதைப்பற்றி ஒரு பெரிய கதை சொல்லிக் கொள்ளுகிறார்கள். இஷ்டரீம் என்பவரின் பாட்டன் பூட்டனெல்லாம் பரம்பரை குதிரை வியாபாரிகளாம். வெகு காலத்திற்கு முன் அவர்களில் ஒருவர் இத்தேசத்து மன்னர் வேற்றரசனோடு சண்டையிட்ட சமயம் அவருக்கு வேண்டிய குதிரைகளையும் ஆட்களையும் கொடுத்து உதவி செய்தாராம். மன்னரும்

மனமகிழ்ந்து அவருக்கும் அவர் சந்ததியார்களுக்கும் பிரபு பட்டம் கொடுத்தாராம். பற்பல நன் கொடைகளும் நல்கினாராம். அவ் வெகுமதிகளுள் இந்தத் தோட்டமும் ஒன்றும்.

யூதா:—ஏதேது நீர் பெத்லகம் என்ற சிற்றூரைச் சேர்ந்தவராயிருந்தும் எவ்வளவோ விஷயங்களைத் தெரிந்திருக்கிறீரே. சரி, இந்தப் பிரபு உரோமர்களுக்கு ரொம்பவும் வேண்டியவரோ.

முல்லா:—இல்லை, இல்லை. உரோமர் என்றாலே மிகவும் அருவருப்படைவாரெனக் கேள்வி.

யூதா:—பேஷ். அப்படியானால் நமக்கனுகூலமாகத் தானிருப்பார்.

மூல்லா:—அதற்கு சந்தேகமில்லை: நாம் இனி காலத்தை வீணுக்கக் கூடாது. இன்று எட்டாம் நாள் இரத ஓட்டம். அநேக ஏற்பாடுகள் செய்ய வேண்டியிருக்கிறது. இஷ்டரீம் பிரபு ஒரு புண்ணிய புருஷரெனச் சொல்லுகிறார்கள். தயவு செய்து நான் சொல்லுவது போல நீங்கள் நடக்க வேண்டும். இன்றிரவே அவரைக் கண்டு நீங்கள் பேச வேண்டும். உங்களை அவரிடம்சேர்த்துவிட்டு பட்டணத்திற்குள் செல்லுகிறேன். அதிகாலையில் எழுந்து பந்தய ஓட்டத்திற்காகச் செலுத்த வேண்டிய துகையைக் கொடுத்து உங்கள் பெயரைப் பதிவு செய்து விட்டு இங்கு வந்து உங்களை சந்திக்கிறேன்.

யூதா:—அருமை நண்பரே, உண்மையாக திக்கற்றுத் தயங்கிய எனக்கு உதவிபுரிய கடவுள் அனுப்பிய தேவ தூதர் தான் நீர்.

முல்லா:— வீண் புகழ்ச்சி எதற்கு? வாருங்கள் அக் கொட்டாரத்திற்குப் போவோம்.

இருவரும் வேகமாக ஒட்டகங்களை நடத்திக் கூடார வாயிலை அடைந்தனர். முல்லா, பிரபு இருக்காரா வென்ற விபரங்களைத் தெரிந்து வருவதாய்ச் சொல்லி யூதாவை வெளியே நிறுத்தி விட்டு உள்ளே சென்றான். பிரபுவைக் கண்டு

"மஹாராஜ், நான் சிமாண்டனிஸின் வேலையாள். சமுகங் காண யூத வாலிபர் ஒருவர் வெளியே காத்திருக்கிறார். அவருக்கு வேண்டிய உதவியளிக்கும்படி என் எஜமான் உங்களிடம் அறிவிக்கச் சொன்னார். ஆனால் இவ்விதம் அவர் சிபார்சு செய்திருப்பதையும் நான் அவருடைய வேலையாள் என்பதையும் அவ்வாலிபர் அறியாமல் இரகஸ்யமாய் வைத்துக் கொள்ளும்படி மன்றாடுகிறேன்" என்றான். "அப்படி இரகசியமாயிருந்து கொண்டு உதவி செய்வதில் விசேஷம் அதிக மிருக்கவேண்டும் என்றே நினைக்கிறேன்" என்றார் பிரபு. "உண்மைதான். வெளியிலிருப்பவர் காலஞ்சென்ற எங்கள் எஜமான் பென்ஹூர் பிரபுவின் ஏக புத்திரர்.... மன்னிக்க வேண்டும் அவரே தமது தேவைகளை உங்களிடம் தெரிவிப்பார். தயவு செய்து விடை கொடுங்கள். பட்டணத்திற்குப் போகவேண்டும்" என வணக்கத்துடன் பகர்ந்தான் முல்லா. பிரபுவும் தலையை அசைத்தார். அவனும் அவருக்கு மரியாதை செய்து வெளியிற் சென்றான். "உள்ளே போங்கள். பிரபு உங்கள் வரவை எதிர் பார்த்திருக்கிறார். உங்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்வார். நான் போய் காலையில் திரும்பி வருகிறேன்." என்று சொல்லிக்கொண்டே முல்லா பட்டணத்திற்குப் போகும் ரஸ்தாவை நோக்கி ஒட்டகத்தை ஓட்டினான். சற்று நேரம் யூதா தனது நண்பன் போவதைப் பார்த்துக் கொண்டே நின்றான். ஒரு வேலையாள் வெளியில் வந்து அவனை உள்ளே வரும்படி சைகை செய்தான். அவனும் கூடாரத்திற்குள் நுழைந்தான்.

---

## பத்தாம் அத்தியாயம்.

### நல்லவர் உறவும் நற்போதகரின் செய்தியும்.

வேலையாளின் பின்னல் சென்ற யூதா பல கொடிகளால் அலங்கரிக்கப்பட்ட ஒரு நடைக் காவனத்திற்குள் சென்றான். அங்கே உள்ளங் கவரும் உகந்த பரிமள கந்தம் தூவி நிற்கும் பல்வித மலர்களையுடைய செடிகளைத் தாங்கிய தொட்டிகள் அழகுபட இரு பக்கங்களிலும் வரிசையாக வைக்கப்பட்டிருந்தன. நாலாபக்கங்களிலும் கண் கொளாக் காக்ஷிகள் நிறைந்திருந்தன. காக்ஷி சாலைக்குள் வந்துவிட்டோமாவென ஐயுற்றவனாய் அங்குமிங்கும் பார்த்துக் கொண்டே சென்றான். அருகில் காணப்பட்ட ஒரு சமவெளியில் பிரபுவின் பணியாளர்களில் சிலரை ஒரு வீரன் வில், வாள், வேல் முதலியனவகளை உபயோகிக்கும் விதத்தைக் கற்றுக் கொடுத்துக் கொண்டிருக்கும் நேர்த்தியைக் கண்ணுற்றான். அவ் வீரனது கட்டளைப்படி வினயமாய் வித்தை கற்பவர்கள் அனைவரும் வளர்ந்து பருத்த சிவந்த மேனியையுடைய அரபியர்களாகத் தோன்றினார்கள். ஆயுதப் பயிற்சியிலும் படைப் பயிற்சி யூகத்திலும் அவர்கள் காட்டும் ஆவல் மெச்சத் தக்கதாயிருந்தது. இத்தனை திறமை வாய்ந்த ஏவலாளர்களையுடைய ஷேக் இஷ்டரீமைப் பிரபு என்பது பிசகு. அவரை ஒரு அரசரென்றழைப்பதே தகுமெனத் தீர்மானித்தான். அவன் தீர்மானத்திற் கிசைய அக் கொட்டாரம் பல பிரிவுகளாகத் தொகுக்கப் பட்டிருந்தது. ஒட்டகங்களுக்கென ஒரு கூடாரமும், குதிரைகள் நிற்க ஒரு கூடாரமும், மந்தை மந்தையாக மாடுகள் தங்க ஒரு கூடாரமும், பால் கொடுக்கும் ஆடுகளைக்கட்ட ஒரு கூடாரமும், வாத்துகள் பலவித கோழி வகைகள், புறாவினங்கள் முதலியவைகள் வசிப்பதற்காயுள்ள பெருங் கூடுகளைக் கொண்டுள்ள ஒரு கூடாரமும், அவைகளை கவனித்து வரும் வேலையாட்கள் வாசஞ் செய்வதற்கென அங்கங்கே அமைக்கப்பட்ட பல அழகான டேராக்களும் கண்டோர் மனதைக் களிப்பிக்கும்

தன்மையுடன் கூடி விளங்கின. யூதா இக் காக்ஷிகளில் ஈடுபட்டவனாய் தன்னையறியாமலே ஓரிடத்தில் நின்றான். முன்னே சென்ற வேலையாள் யூதாவைக் கவனிக்காமல் சற்று தூரத்தில் காணப்பட்ட அழகான தொரு பெரிய கூடார வாயிலையடைந்தான். தன்னுடன் வந்த வாலிபன் சற்று தூரத்தில் நிற்பதைக்கண்டு அவனிடம் விரைவாய்ச் சென்று: "உங்களுக்காக எஜமான் காத்துக் கொண்டிருக்கிறார்" என்றான். யூதாவும் வேகமாய் நடந்து கூடார வாயிலை அடைந்தான். அத்தேச வழக்கம்போல பல வேலையாட்கள் ஓடிவந்து அவனை உபசரிக்கவாரம்பித்தனர். அவனது காலுரைகளைக் கழற்றினான் ஒருத்தன். அழுக்குப்படிந்த அவன் ஆடையைக் களைந்தான் வேறொருவன். சுத்தமான விலையுயர்ந்த வொரு போர்வையால் அவன் மேனியை மூடினான் மற்றொருவன். புதிய ஆடைகளை அணிந்து கொள்ள அவனுக்குதவி செய்தான் இன்னுமொருவன்.

இவ் வுபசாரங்கள் முடிந்தவுடன், இராஜ தேஜசுள்ள முக வசீகரமுடைய ஒரு பூமான் குளிர்ந்த பார்வையுடனும் அன்பு பூத்த தோற்றத்துடனும் எதிரே வந்து கரங்களை மேலே உயர்த்தி, "ஆண்டவனுடைய அருள் வாலிபரான உம்மீது நீடித்து நிற்பதாக" என்று ஆசி கூறி அவனை அழைத்துக் கொண்டு போய் தமது ஆசனத்திற்கருகே அமரச் செய்தார். யூதா மிகவும் பயபக்தியுடன் அப் பெரியாருக்கு முன் வணங்கி மரியாதை செய்து, "தர்மகுண சம்பன்னரான தங்களுக்குக் கடவுள் தீர்க்கமான ஆயுளையும் குறையாச் சமாதானத்தையும் அருள்வாராக" என்று சொல்லி தனக்குக் காண்பிக்கப்பட்ட விடத்திலுட்கார்ந்தான். ஒரு வேலையாள் உடனே ஓடிவந்து ஜலத்தால் அவன் கைகளையும் கால்களையும் கழுவி துவாலையினால் துடைத்தான்.

அதுவரை யூதாவைக் கூர்மையாய்க் கவனித்துப் பார்த்துக் கொண்டிருந்த பிரபு, "பசியுடன் புசிப்பவர்கள் பலமான ஆயுள் உள்ளவர்கள். அதுவன்றி சுவையின் பொருட்டுப் புசிப்பவர்களுமுண்டு. வாலிபராகிய நீர் இவ்விரு வகையில் எவ்வகையைச் சார்ந்தவர்" எனக் கேட்டார்.

யூதா:— பிரபு, பசி கண்டு புசிப்பவர்களில் நான் ஒருவன். எனக்கு இப்போதுள்ள பசியின் வேகத்தைப் பரீக்ஷிக்கப் பிரியமுண்டானால் தங்களுடன் உணவருந்தத் தயாராயிருக்கிறேன்.

ஷேக்:— மெத்த சந்தோஷம். உமது பசியைத் தீர்க்கும் பாக்கியம் இன்றெமக்குக் கிடைத்தது. ஒரு மேன்மையென்றே எண்ணுகிறேன். எனது நண்பர் ஒருவர் விருந்தினராக இங்கு வந்து அதோவிருக்கும் கூடாரத்திலிருக்கிறார். அவரை அழைத்து வரும்படி ஆளனுப்பி யிருக்கிறேன். அவர் வந்ததும் அசனத்திலமருவோம்...........முதலில், நீர் யாரென்பதை நானறிய மிகவும் ஆசிக்கிறேன்.

யூதா:— தங்களின் முகதரிசனங் காணவந்த நானே என்னை இன்னானென அறிவித்திருக்க வேண்டும். அப்படியிருக்க, முன் பின் அறியாத தாங்கள் என்னை அன்புடன் உபசரித்து அழைத்து வரச் செய்த அளவுகடந்த அன்பின் பெருக்கைக் கண்ணுற்ற நான் செய்வதின்னதெனவறியாமல் பெருஞ் சிந்தனைக் குள்ளானேன். மன்னிக்க வேண்டும்.

ஷேக்:— ஆண்டவன் எனக்கேராளமாய் அருளியிருக்கிறார் என்னைத்தேடி என் இல்லத்திற்கு வருமனைவரையும் யார் என்ற விசாரணையில்லாமலே அவர்களுக்குதவி புரிவதும் அன்னம் அளிப்பதுமே எனது அயராத அலுவலும் ஆவலும்.

யூதா:— ஐயா, நான் ஜாதியில் யூதன். ஒரு உரோமைப் பிரபுவின் அபிமான புத்திரன். என்றாலும், யூதேயா நாட்டிலும் ஏனைய நாடுகளிலும் அனியாய அக்கிரமங்களை நிகழ்த்தி வரும் உரோமை அதிகார வர்க்கத்தினர் அனைவரையும் கொன்று குவிக்க வேண்டுமென்ற ஆவலுள்ளவர்களில் நானும் ஒருவன். பந்தய இரத ஓட்டத்தில் தனக்கு நிகரில்லை யென்ற மமதை பிடித்த மேஸலா வென்ற துஷ்ட உரோமனின் அகங்காரத்தை அடக்க வேண்டுமென்ற ஆவலினால் தான் தங்களுடைய உதவியைத் தேடி இங்கு வந்தேன்.

ஷேக்:— நீர் கொண்ட எண்ணம் பலிதமாகும்படி கடவுள் கருணை புரிவாராக. உமக்கு நான் அதற்குதவியாகச் செய்ய வேண்டியதைக் கூசாமல் கேளும். நான் அதைக் கோணாமல் கொடுக்கிறேன்.

யூதா:— தாங்கள் விளம்பரம் செய்திருப்பது போல் தங்களிடமுள்ள குதிரைகளில் எதை வேண்டுமானாலும் அடக்கி என் மனப்படி நடத்திப் பந்தயத்தில் வெற்றி பெறத் தங்களாதரவை எனக்களிக்கும்படி தங்களை மன்றாடுகிறேன்.

ஷேக்:— நீர் அவ்வளவு சாமர்த்திய முள்ளவரென்பதை முதலில் ருசுப்பித்தால் தான் உமக்கு வலிமை மிகுந்த என் குதிரைகளைக் கொடுப்பேன். கரடி புலி சிங்கம் முதலியவைகளுடன் போர்புரியும் வல்லமையுள்ள வீரர்களானாலுஞ்சரி, பெரிய சேனைகளை அடக்கியாளுந் திறமை வாய்ந்த தளகர்த்தனானாலுஞ் சரி, விளம் மிகுந்த குதிரையை அடக்கி ஆளுவதும் தன்னிஷ்டப்படி அதை நடத்துவதும் அரிய செயலாகும். மூர்க்கத்தன மிகுந்த என் குதிரைகள் ஓட்டுபவர்களின் உயிருக்கே ஆபத்தை விளைவிக்கக்கூடும்.

இவ்விதம் இருவரும் பேசிக் கொண்டிருக்கும் பொழுது வயது மிகுந்த ஒரு வயோதிகர் கையில் ஊன்று கோலைப் பிடித்தும், மற்ற கையைத் தன்னை அழைக்க வந்த வேலையாளின் தோளின் மேல் போட்டுக் கொண்டும் அங்கு வந்து சேர்ந்தார். அவருடைய அன்பு நிறைந்த பார்வையும், தளர்ந்த நடையும், சாந்தமுள்ள தோற்றமும் சகலர் மனதையும் தன் வசப்படுத்திக் கொள்ளும் காந்த சக்தியுடையது போலத் துலங்கிற்று. வயது முதிர்ச்சியால் அவரது முதுகு சற்றே வளைந்து அவருடைய திரேக பரிமாணம் குறுகி விட்டது போலக் காணப்பட்டது. அவருக்கு சுமார் 90 வயது இருக்கலாம். நீல நிறமுள்ள உடுப்பைத் தரித்து, அதின் மேல் மிகவும் விலைபெறக்கூடிய பீதாம்பரம் ஒன்றை யோக வஸ்திரமாகத் தரித்திருந்தார். ஷேக்கும் யூதாவும் எழுந்து நின்று அப் பெரியாருக்கு மரியாதை செய்

தனர். ஷேக் இஷ்டரீம், "நண்பரே, உயர்ந்த நன்மையைப் பயக்கும் நற் சமாதானம் உம் மனத்தில் நிலைத்து நிற்பதாக" என்றார். பெரியவரும் தலையை அசைத்துக் கொண்டு, "உத்தம குணம் நிரம்பிய பூமானே, உமக்கும் உமதருகிலிருக்கும் வாலிபருக்கும் கடவுள் குறையாக் கீர்த்தியையும் உன்னத சமாதானத்தையும் அளிப்பாராக" என்று ஆசிர்வதித்து வாழ்த்தினர். அவர் ஒரு எகிப்திய தேசத்தவர் போலக் காணப்பட்டார். யூதா அவரை உற்று நோக்கினன்: அன்று மாலையில் மங்கையுடன் ஒட்டகையில் ஏறிவந்த கிழவன் தானெனக் கண்டு சந்தோஷித்தான்.

ஷேக்:—அறிவிற் சிறந்த அந்தணரே, இவ் வாலிபர் யூத ஜாதியைச் சேர்ந்தவர். ஒரு உரோமைப் பிரபுவின் ஸ்வீகார புத்திரன்: பந்தய ஓட்டத்திற்காக என் குதிரைகளைக் கேட்கிறார். ஆனல் இதுவரை அவைகள் எந்த இரதத்திலும் பூட்டப் படவில்லை. தங்களைக் கவனிக்கும் வேலையாட்களுக்கும் அவைகளைப் பாதுகாத்து வரும் எனக்கு மட்டுமே அவைகள் கீழ்ப் படிதலுள்ளவைகளாயிருக்கின்றன. அப்படியிருக்க ஏனையோர் இவைகளை இலகுவில் வசப்படுத்துவது சாத்தியமான காரியமாகுமா?

பல்தசார்:—ஆமாம். உமது குதிரைகள் உயர்ந்த வர்க்கத்தைச் சார்ந்தவைகளென்றும், மிகுந்த பராக்கிரமமுள்ளவையென்றும் சகலருக்கும் தெரியும்.

ஷேக்:—இவர் திடகாத்திரமுள்ளவராகவும், திடசித்தமுள்ளவராகவும் ஊக்கமான நெஞ்சமுள்ளவராகவும் காணப்படுகிறார். கடவுள் இவரைக் கடாக்ஷிக்கவேண்டும்.

பெரியவர் யூதாவை அணுகி உற்றுப் பார்த்தார்: "ஆ நீர் தானா தம்பி, தைரியம் புருஷ லக்ஷணம். உமது முயற்சி நற்பலனை யளிக்கக் கடவுள் கருணைபுரிவார். நீர் பயப்படவேண்டாம்." எனக் கூறி, அவனது முதுகை அன்புடன் தட்டிக் கொடுத்தார். எகிப்தியக் கிழவனின் செய்கையைக் கண்டு ஷேக் வியப்படைந்து, "பல்தசார், இவரை உமக்கு எப்படித் தெரியும்?" எனக் கேட்டார்.

பல்தசார்:—இன்று மாலையில் எங்களுக் கேற்பட்ட பெரும் ஆபத்திலிருந்து உயிர் காப்பாற்றிய இளங்குமரன் இவர்தான்.

ஷேக்:—ஓகோ உமது ஒட்டகத்தின்மீது ஏற விருந்த இரதத்தின் குதிரையைப் பிடித்து நிறுத்தினவர் இவர் தானு?

பல்தசார்:—உண்மையாகவே தேவன் எங்களுயிரைக் காப்பாற்ற இவரை அனுப்பாதிருந்தால் இந்நேரம் எங்கள் ஆவி மறு லோகம் போயிருக்கும்.

ஷேக்:—உயிரையே திரவமாக மதித்து எனது தோழரான இவருக்குச்செய்த பேருதவியை, நீர் எனக்குச் செய்ததாக ஏற்றுக்கொள்ளுகிறேன். சுத்த வீரனுன உம்மை என் விருந்தினராக ஏற்றுக்கொண்ட என் பாக்கியமே பாக்கியம்.

யூதா:—ஐயா, மனச் சாட்சியின் ஏவுதலுக்கிசைந்து நான் மனிதனுய்ப் பிறந்ததின் கடமையைச் செய்தேனன்றி வேறு ஒன்றுமில்லை.

ஷேக் இஷ்டரீம் பிரபு சந்தோஷத்தால் மனம் பூரித்தார்: யூதாவின் இரு கரங்களையும் அன்புடன் பற்றியிழுத்த வண்ணம், "வாரும் எங்களிருவருடன் வயிராறப் புசியும்." எனப் பகர்ந்தார். "ஆம், ஆம், இவர் பசிக்களையால் மிகச் சோர்ந்திருக்கிருர்." என்று சொல்லிக்கொண்டே, பல்தசார் யூதாவின் தோளின்மேல் கையை வைத்தார். மூவரும் சாப்பாட்டறைக்குள் சென்றனர்.

அவ்வசன சாலை மிகவும் நீளமானதாக விருந்தது: அதின் நடுவில், ஒரு கம்பளம் விரிக்கப்பட்டிருந்தது. ஒரு பக்கத்தில் பெரியதொரு தட்டு மேஜை காணப்பட்டது. அதின் மத்தியில் தெளிந்த நீரையுடைய ஒரு கண்ணுடி கூஜாவும், அதைச் சூழ்ந்து பலவித நிறமுடைய தட்டுகளும், கோப்பைகளுங் காணப்பட்டன. அவைகளிலுள்ள அறுசுவை யுணவுகளிலிருந்து "புகு புகு" வெனக் கிளம்பிய ஆவி அமிர்தம் போன்ற நறுமணத்தை வெளியிட்டது. அம் மேஜையின்

மூன்று பக்கங்களிலும் போடப்பட்டிருந்த ஆசனங்களில் இஷ்டரீம், விருந்தினர் இருவருடன் அமர்ந்தார். உடனே ஒரு வேலையாள் ஜலங்கொண்டு வந்து கைகழுவ அவர்களுக்கு உதவி செய்தான். பிறகு மூவரும் எழுந்துநிற்க, அங்கே ஏவிய வேலைகளைச் செய்யக் காத்திருந்த பணியாளர்களும் மௌனமாய் எழுந்து நின்றனர். அப்பொழுது ஒருவன் வீணையை எடுத்து சுதி மீட்டி வாசித்தான். ஷேக்கும் அவனது ஆட்களும் பின் வரும் பாட்டை இன்னிசையுடன் பாடினர்:—

பரம ஔஷதம் தருணம் ஈந்திடுவீர்
ரக்ஷக தேவா தின முமதடி
மனம் சேர அருள் புரிவீர். (பரம)

அருள் மழை இதமாய்ப் பொழியும் வேதா
அனைவரையும் ஆண்டு நடத்தும் நாதா
அல்லல் மிகுந் துயரகற்றும் போதா
அற்புதா உயர் நற்பிதா—வா (பரம)

கருணைமொழி யிதம் பகரும் வாசா
கவலைக ளொழிந்திட வருள் பரமேசா
தயையுடன் எமக்கிதம் தரும் பிரகாசா
தர்ம ராஜனே மனு போஜனே—கார் (பரம)

மாயை யாமிவ் வுலக வாழ்வு
மாற்றறியாத் துய ராக்குந் தீது
மாதவனடி பணிந்தே யிருப் போர்க்கு
மா பெரும் சுக சௌபாக்கிய முண்டு (பரம)

பாட்டு முடிந்ததும், பல்தசார் "எழில் மிகும் தேவா, ஏகதேவா, எல்லா உயிர்களுக்கும் இதமளிக்கும் நாதா, இன்றெமக்குப் புரிந்த பேருதவிகளுக்கு நன்றியுடன் தோத்திரம் புரிகிறோம். இதோ நாங்கள் உமதருளினால் புசிக்கவிருக்கும் புசிப்புகளையும் ஆசீர்வதித்து இன்றிரவில், அடியோரை யாதொரு பொல்லாப் பணுகாமல் பாதுகாத்து ரக்ஷிக்கும்படி தேவரீரை மன்றாடு

கிறோம்'' என்று உரத்த சத்தமாய் ஜெபம் சொன்னார். பின்னர் மூவரும் தங்களின் முன் படைக்கப்பட்ட உண்டிகளை ஆவலுடன் அருந்தினர். உண்டபின் ஷேக் தன் பிறகேயிருந்த துணித் திரையைச் சிறிது விலக்கினார். உடனே மிகுந்த லக்ஷணமுடைய ஒரு முரட்டுக் குதிரை தலையை மட்டும் வெளியில் நீட்டினது. ஷேக் ஒரு ரொட்டித்துண்டை எடுத்து நீட்ட, குதிரையும் அதை வாயினால் கவ்வி அசைபோட்டுத் தின்றது.

பல்தசார்:—உம்முடைய குதிரைகளெல்லாம் மெச்சத்தகுந்த அழகும், அறிவும், ஆற்றலும் உள்ளவைகள். நீர் அவைகளிடம் காண்பிக்கும் தந்தைக்குரிய அன்பு மிகவும் பாராட்டத்தக்கது.

ஷேக்:—என்னிடமிருக்குங் குதிரைகள் உயர்ந்த பாரசிக வர்க்கத்தைச் சார்ந்தவை. அரபியர்களான எங்களுக்குக் கடவுள் குதிரைகளையும், ஒட்டகங்களையும் கொடுத்து ஆசீர்வதிக்காதுபோனால், எங்கள் ஜீவியம் நிர்ப்பாக்கியமுள்ளதாகி விடும். இவைகளே எனது ஆஸ்தி; எனது புகழும் பெருமையும். அப்படியிருக்க, இவைகளை எங்களின் பிள்ளைகளைப்போல வளர்க்க வேண்டுவது நியாயமல்லவா?

பல்தசார்:—பராக்கிரம முள்ளவைகளாகவும், சாதுத்தன முள்ளவைகளாகவுங் காணப்படும் இப் பரிகளைக் கொண்டு நமது வாலிபர் பந்தய ஓட்டத்தில் தவறாமல் ஜெயம் பெறுவா ரென்பதில் சந்தேகமில்லை.

யூதா:—தெய்வ கிருபையாலும், தங்களிருவருடைய நல் வாக்கினாலும் வெற்றி உறுதியாய் எனக்குத்தானென நம்புகிறேன். சாதுவாகத் தோன்றும் குதிரைகள் குணத்தில் மூர்க்க முள்ளவைகளாகத் தானிருக்கும். அன்றியும், இவைகள் இதுவரை இரதத்தில் இணைக்கப் படாதவைகளாயிருப்பதால் பந்தய ஓட்டத்திற்கு முன் இப்பரிகளைப் பல முறை பழக்க வேண்டும்.

ஷேக்:—தம்பி, நாளைக்குக் காலையில் உமது வசம் எனது குதிரைகளை ஒப்புவிப்பேன்; உமது இஷ்டம்போல அவைகளைப்

பழகலாம். உம்மைப்பற்றி எனக்கு அதிகமான நம்பிக்கை ஏற்பட்டுவிட்டது. பந்தயத்தில் நீர் தான் வெற்றி பெறுவீர்: நான் விளம்பரம் செய்துள்ள பரிசையுமடைவீர்.

யூதா:— ஐயா, பேரும் பெருமையும் நான் விரும்பவில்லை. தங்களிடமிருந்து பரிசுபெற வேண்டுமென்றும் எண்ணவில்லை. என் விரோதியான அப்பாதகனை முதலில் தோற்கடிக்க வேண்டும். இரண்டாவது அவன் மேல் பழிதீர்த்துக் கொள்ளவேண்டும்.

பல்தசார்:— என்ன! உத்தமராகக் காணப்படும் உமக்குமா விரோதிகளிருக்கிறார்கள்! உலகமெங்கும் அக்கிரமம் அதிகரித்து விட்டது. இரக்ஷணியத்தின் காலம் நெருங்கி விட்டது. அருட் பெருங் கடவுள் பூமியில் யூதர்களின் இராஜ வம்சத்தில் உலக இரக்ஷகராக அவதரித்து 32 வருடங்களாகின்றன. அவரும் இப்பொழுது ஜெருசலமிலும் அதற்குச் சமீபமான ஊர்களிலும் தமது இரக்ஷண்ய அலுவலை ஆரம்பித்துக் கணக்கற்ற அற்புத ஆச்சரியங்களைச் செய்து வருகிறாரென்ற வதந்தி எங்கும் பரவியிருக்கிறது. பிறந்தபோது அவரைத் தரிசிக்கும் பாக்யம் நான் பெற்றேன். மறுமுறையும் அவரைக் கண்டு அவர் பாத சேவை செய்த பிறகு தான் நான் சாகவேண்டுமென்று ஆசிக்கிறேன். அவர் அனுக்கிரகிக்க வேண்டும்.

யூதா:— ஐயா பெரியவரே, நானும் யூதன் தான். எனது சொந்த ஊர் ஜெருசலம். ஆனால் நீங்கள் கூறும் இராஜ வம்சத்தவரான உலக இரக்ஷகரைப் பற்றி ஒன்றுங் கேள்விப் பட்டதில்லை.

பல்தசார்:— அப்படியானால், நீர் கடந்த இரண்டு வருஷங்களாக ஜெருசலத்தில் இருந்திருக்க மாட்டீரென்று உறுதியாய்ச் சொல்லுவேன்.

யூதா:— வாஸ்தவம்: சென்ற ஐந்து வருஷங்களாய் உரோமாபுரியில் இருந்தேன்.......துஷ்ட உரோமச் சிறுவனிடம் நான்

கொண்ட நேசம் எனக்குக் கேடாய் முடிந்தது. என் ஜாதியினரை மிகவும் நேசித்திருந்தால் அப் பேராபத்து எனக்கேற்பட்டிராது. ஐயா, தாங்கள் குறித்துப் பேசின உலக இரக்ஷகரைப் பற்றிய வரலாற்றைச் சுருக்கமாகச் சொல்லுங்கள். ஜெருசலம் போனதும் அம் மகானை நானும் தரிசிக்க வேண்டும்.

ஷேக் :—பல்தசார், நீர் பெரிய வானசாஸ்திரி யென்றும் மனுக்குலத்திற்கு இரக்ஷணியத்தைக் கொடுக்க மனுவுருவெடுத்த பெரியானைப் பிறந்த மூன்றும் நாள் நீர் தரிசிக்கச் சென்றீர் என்று மட்டும் நானறிவேன். அதின் விருத்தாந்தங்களை இன்று நீர் சவிஸ்தாரமாகச் சொல்ல வேண்டும். வாருங்கள் அந்த முத்த வெளியில் உட்கார்ந்து சம்பாஷிக்கலாம்.

ஷேக் குறித்துப்பேசிய முத்த வெளியில் மூன்று ஆசனங்கள் போடப்பட்டன. நிஷ்களங்கமாயிருந்த வான மண்டலத்திலிருந்து பூரணச் சந்திரனின் பிரகாசம் குறைவுபடாமல் ஜொலித்துக்கொண்டிருந்தது. மந்தமாருதமும் ஒப்பற்ற மலர்களின் உயர்வான நறுமணத்தை வாரி வீசிற்று. ஷேக்கும் அவர் விருந்தினரும் ஆசனங்களிலமர்ந்தனர்.

யூதா:— (பல்தசாரை நோக்கி) தாங்கள் எகிப்தியர் என்றும் பெரிய வானசாஸ்திரி யென்றும் ஷேக் அவர்கள் சொல்லுவதால் தங்களைப் பற்றியும் நானறிய தெரிவிக்க வேண்டும்.

பல்தசார்:— அப்படியா, நல்லது சொல்லுகிறேன் கேளுங்கள். பொன் விளையும் பூமியையுடைய நைல் நதி பாயும் எகிப்து தேசத்தவன் நான். என் குல மூதாதைகள் தமது பூர்வீக ஞானத்தை ஜலப் பிரளயத்தினின்று ஆண்டவனது கடாக்ஷத்தால் அற்புதமாய்க் காப்பாற்றப்பட்ட நோவா என்பவரின் புத்திரர்களிடமிருந்து கற்றுக்கொண்டதாகச் சொல்லப்படுகிறது. நான் அலெக்சாண்டிரியா நகரில் பிறந்தவன். எனது தாய் தந்தை உயர்ந்த வங்கிஷபதிகள்; பெரும் தனவந்தர்கள். நிரம்ப என்னைக் கல்வி கற்கச் செய்தனர். படிப்பு முடிந்ததும் சாஸ்திர

சம்பிரதாயத்தில் என் கவனம் சென்றது. பிறகு மத ஆராய்ச்சியும் செய்தேன். என் தேசத்தவரிடையே இருவித மார்க்கங்கள் தோன்றியிருந்தன: ஒருசார்பார், கடவுள் ஒருவரே உண்டு என வழிபட்டுவந்தனர். மற்றொரு கூட்டத்தார், அவரவர் இஷ்டத்திற்கும் மனதிற்கும் உகந்தவிதம் எண்ணிக்கையில்லாத தெய்வங்களை உண்டுபண்ணி அவைகளை ஆராதித்து வந்தனர். இவ்விரு தரப்பாரின் கொள்கைகளும் ஆசார அனுஷ்டானங்களும் பலவிதம் முரண்பட்டவைகளாயிருந்தன. ஆதி முதற்பொருள் அசரீரியாயிருக்கவேண்டும். சமஸ்த உலகங்களுக்கும், அவைகளில் காணும் சர்வகோடி ஜீவராசிகளுக்கும் ஆதி கர்த்தா அவரே. அவைகளைப் படைப்பதும், காத்து இரக்ஷிப்பதும், முடிவில் அவைகளின் நன்மை தீமைக்குத் தகுந்தவிதம் அவைகளை ஆட்கொள்ளுவதும், அன்றி சிக்ஷிப்பதும் அவரது ஆற்றலே. அவர் அசரீரியாயிருப்பதினாலேயே, எவர் கண்ணுக்கும் புலப்படுகிறதில்லை என்ற பல உண்மைகளையும் தெரிந்துகொண்டேன். அறியாமையெனும் அந்தகாரத்தில் அமிழ்ந்தியிருக்கும் மக்களுக்குப் புத்தி புகட்டவும், நானறிந்த விஷயங்களை எடுத்துரைக்கவும், பலமான முயற்சிகளைச் செய்தேன். பகிரங்கமான இடங்களில் என் கொள்கைகளை எடுத்துரைத்தேன். ஆனால், என் போதனையைக் கேட்டவர்கள் பைத்தியம் பிடித்தவனென்று பரிகசித்து என்னை நிந்தித்தார்கள். ஜனங்கள் மத்தியிலிருப்பது வெறுப்பாகத் தோன்றினது. மனித சஞ்சாரமில்லாத காட்டிற் கோடினேன். காய்கனி கிழங்கு முதலியவைகளை உண்டு பித்துப் பிடித்தவனைப்போல் அலைந்து திரிந்தேன். "தெய்வம் உண்டா? ஒருவர் உண்டு என்றால் அவரைப்பற்றி மக்களிடையே பலவித அபிப்பிராய பேதங்கள் தோன்றக் காரணம் என்ன? கடவுள் இரக்கமுள்ளவரானால் பிறப்பு, இறப்பு, என்பதின் உண்மை இரகஸ்யத்தை எனக்கு அறிவிக்கட்டும்" என்ற சிந்தனை அதிகரிக்கவே ஊணுறக்கமில்லாமல் நாளுக்கு நாள் கடுந்தவம் புரியலானேன். பல மாதங்கள் கழிந்தன; பலன் கிட்டவில்லை. கடவுளின்மேல் நான்கொண்ட நம்பிக்கையும் குறைய வாரம்பித்தது ஓர் நாள் ஆகாரத்திற்காக நான்

பகல் முழுதும் வெகுதூரம் அலைந்து திரிந்தேன்; ஒன்றும் அகப் படவில்லை. பொழுதும் போய்விட்டது: பசிக் களையால் மெய் சோர்ந்து கீழே விழுந்தேன். மயக்கம் தெளிந்து எழுந்த போது, எங்கும் இருள் சூழ்ந்திருந்தது. அச்சமயம், என் முன்னே ஒப்புயர்வற்ற ஜோதி பிரகாசம் திடீரென்று தோன்றி என் கண்ணொளி மங்கிப்போகும்படி செய்தது. அதை உற்றுப் பார்க்கவும் முடியாமல் தரையில் முகம் குப்புற விழுந்தேன். உடனே, மணியோசையென தேவதூதர் அசரீரியாய் பின்வரு மாறு சொன்னார்:— 'ஏ பக்தனே, நீ செய்த கடுந்தவத்தால் கடவுளின் அருளுக்குப் பாத்திரனானாய். இப் பரந்த உலகின் பல பாகங்களிலும் எண்ணிக்கையில்லா மக்கள் தெய்வத்தை மனதில் தியானித்து, ஆதி மனிதனும் மனுஷியும் இழந்த மோக்ஷ பேரின்ப வாழ்வை மனுக்குலம் அடையவும் உலகோர் உய்யும் வண்ணம் நல் வழிகளைப் புகட்டும் நன் மறையைப் போதிக்கவும், ஆதி வேதப் பிரமாணத்தில் எழுதியிருப்பது போல உலக இரக்ஷகர் விரைவில் அவதரிக்க வேண்டுமென் றும், இடைவிடாமல் எளிதில் இயம்புதற்கரிய அருந்தவமும், ஜெபமும் செய்ததின் பயனாய், அருட்பெருங் கடவுள் தமது அளவில்லா இரக்கச் சிந்தையால் உலகோரை இரக்ஷிக்க மனு மகனாய் இன்று அவதரித்திருக்கிறார். ஒரு நூதன நக்ஷத்திரம் வானத்தில் இன்று தோன்றியிருக்கிறது; அது உமக்கு வழி காட்டியாயிருக்கும். எழுந்து அதைப் பின்பற்றிப் போவீரானால் உம்மைப்போல் நக்ஷத்திரத்தைப் பின் தொடர்ந்துவரும் வேறு இருவரும் உம்மைச் சந்திப்பார்கள்."

இந் நற்செய்தியை எனக்கறிவித்த தேவதூதரும் மறைந் தார். அவர் தெரிவித்தபடி என் தலைக்கு நேரே, வானத்தில் மிகுந்த பிரகாசமுள்ள ஒரு நவீன நக்ஷத்திரத்தைக் கண்டேன். அது முன்னே வழிகாட்ட நானும் என்னை அறியாமல் வெகு தூரம் நடந்தேன்; அரபியா தேசத்தின் எல்லைக்குள் போய்ச் சேர்ந்தபோது, காஸ்பார் என்ற ஒரு கிரேக்க சாஸ்திரியையும் மெல்கியோர் எனும் நாமம் பூண்ட இந்திய தபசியையும் சந்தித்

தேன். எங்களுக்கு வழிகாட்டியாயிருந்த நக்ஷத்திரம் ஜெருசலம் நகருக்கு வந்ததும் மறைந்து போயிற்று. கோட்டை வாசல் காக்கும் வீரரிடம் யூதர்களின் இராஜா பிறந்திருக்கும் இடம் எது என்று கேட்டோம். அவர்கள் எங்களை அவ்வூர் அரசனான ஏரோதனிடம் கொண்டு போய் விட்டார்கள். அவன் எங்களை இன்னாரின்னாரென்று விசாரித்து அறிந்த பின், "வேதப் புத்தகத்தில் யூதரின் இராஜா பெத்லகமில் பிறப்பதாகத் தான் எழுதப்பட்டிருக்கிறது. பிறந்திருக்கும் அப்பாலகனைத் தரிசித்தபின் நீங்கள் இங்கு வந்து அவர் இருக்குமிடத்தை அறிவியுங்கள். நானும் அவரைக் கண்டு வணங்கவேண்டும்! என்று கூறி எங்களை அனுப்பிவைத்தான். நகர வாசல் தாண்டினதும், முன் எங்களுக்கு உதவியாயிருந்த நக்ஷத்திரம் மறுபடியும் தோன்றி எங்களுக்கு வழிகாட்டிச் சென்றது. பெத்லகமுக்கு அருகில் ஒரு மலைக் குகைக்கு மேல் அது போய் நின்றது. அக் குகை தான் குறிக்கப்பட்ட இடமெனத் தெளிந்து அதற்குள் நுழைந்தோம். அது ஒரு மாட்டுத் தொழு. யூதர்களின் இராஜா பெரியதொரு அரண்மனையில் பிறந்திருப்பாரென்று நாங்கள் எண்ணியிருக்க, சகல சுகங்களுக்கு மூலமும், சகல கர்வங்களை அடக்குகிறவரும், சர்வ வியாபகரும், அகண்ட பரிபூரணரும், ஐம்புலன்களை வென்ற அதிபதியும், நிகரற்ற வல்லமையுள்ளவரும், காலச் சக்கிரத்தை நடத்துகிறவரும், உருவமற்றவரும், சகலத்துக்குங் காரணமானவரும், எல்லாவற்றிலும் வியாபித்திருப்பவரும், எளிதில் எவராலுங் கண்டறியப்படமாட்டாதவரும், பக்தி ரூபமானவரும், எல்லா உலகத்தாராலும் வணங்கப்படுவதற்குரியவருமான சர்வ ஜீவதயாபர சொரூபன், பாழடைந்த மாடடை குடிலில் ஜெனித்திருந்தார். வைக்கோலாலும் கந்தைத் துணிகளாலும் மூடப்பட்டிருந்தார். ஆனால் காற்று உள்ளே நுழைவதற்குக்கூட வழியில்லாதிருந்த அக் குடில் ஜோதிப் பிரகாசத்தால் ஜொலிக்க, பரிமள கந்தம் வீச, தேவதூதர் தோத்திரக் கீதம்பாட, அழகே உருவாய் அவதரித்த நாதன் குழந்தை வடிவாய்த் தோன்றிய ஆண்டவர் எங்களைத் தமது திருநேத்திரங்களால் கடாக்ஷித்து ஆசீர்வதிப்பது போலக் கரங்களை உயர்த்தினார். அந் நேரத்தில்

மோக்ஷ பேரின்ப பாக்கியத்தின் ஆனந்தத்தையே அனுபவித்தோம். அவ் வின்பத்தை வார்த்தைகளால் வருணிப்பது மிகவும் அசாத்தியம். அன்று எனக்குக் கிடைத்த பாக்கியத்தின் நினைவொன்றே என்னை ஆனந்தக்கடலில் ஆழ்த்துகிறது. உண்மையைக் கண்டடைய நான் செய்த கடுந்தவத்தின் பயனே இவ் வித மகத்தான நன்மையை எனக்களித்தது.

“திவ்விய பாலகன் அருகில் அவரைப் பயின்றெடுத்த அன்னை அழகு சோபனத்துடன் தோன்றினர். முழந்தாட்படியிட்டு பாலகனான ஆண்டவனை வணங்கினர். மற்றொரு பக்கத்தில், விருத்தாப்பியர் ஒருவர் கரங்களைக் கூப்பி பிறந்த கர்த்தனை ஆராதித்து நின்றார்.

“நீதியும் தருமமும் குறைந்து பர்பம் அதிகரித்த கொடுமையைப் போக்கவோ, பயங்கரமானவர்களையும், துஷ்ட சித்தமுள்ளவர்களையும், இரக்ஷிக்கும் ஒப்புயர்வற்ற அலுவலை நடத்தவோ, மண்ணுலகில் என்றும் மாறாத நித்திய சமாதானத்தைத் தூய மனதுள்ளவர்களுக்கு ஈயவோ, ஆகாயம், பூமி ஜலம், முதலிய சகல பூதங்களுக்கும் ஆதாரமா யிருப்பவரும், பிரத்தியக்ஷ ஞான சொரூபியாய் விளங்குபவரும், அளவற்ற, ஆனந்த வடிவானவரும், அகண்டமாய் ஏக ரூபமாய் பிரகாசிப்பவரும், இயம்புதற்கரிய சர்வ லக்ஷணங்களும் பொருந்தியவருமான ஆதிநாதன் அவனியில் மாடடை குடிலில் மனுவுரு வெடுத்தது விந்தையிலும் விந்தையே.

“நாங்கள் மூவரும் அவரை ஆராதித்தோம்; கொண்டு போன காணிக்கைகளை அவர்முன் சமர்ப்பித்தோம். தேவ திருவுளம் எங்களை அப்பால் போய்விடும்படி ஏவினது. அதற்கிசைய அங்கிருந்த அம்மையாரிடமும் பெரியவரிடமும் விடை பெற்றுக் கொண்டு குடிலை விட்டு வெளியேறினோம். வானத்தி லிருந்த நவீன நக்ஷத்திரமும் வேறு வழியாக எங்களை நடத்திச் சென்றது.”

"சில நாட்களின் பின் எரோதரசன் வஞ்சகம் வெளியா யிற்று. அவன் வேதப் புத்தகத்தில் பிறக்கப்போகிறதாகச் சொல்லப்பட்டிருக்கும் யூதர்களின் இராஜா தன்னுடைய இராஜரீகத்திற்குக் கெடுதி விளைவிப்பாரோவென்று பயந்து, அவர் இருக்கும் இடத்தை அறியவும் முடியாமல் தனது இராஜ்யத்திலிருந்த இரண்டு வயதுக்குட்பட்ட சகல தலைச்சன் பிள்ளைகளையும் கொலை செய்தான். அவ்விதம் அவன் கொன்ற குழந்தைகளின் எண்ணிக்கை சுமார் இரண்டாயிரத்திற்கு மேற் பட்டதென்று கணக்கிட்டார்கள். இச் சம்பவம் நடந்து அனேக வருஷங்களாய் விட்டன. திவ்விய இரக்ஷகர் துஷ்ட எரோதன் கையில் சிக்கவில்லை; அவரும் தமது இரக்ஷணிய அலுவலை ஆரம்பித்துவிட்டார்."

ஷேக்:—ஆமாம்: தெய்வ சக்தியாலே அவரியற்றும் அற்புத ஆச்சரியங்களைப் பற்றி பலர் பேராச்சரியத்துடன் என்னிடம் தெரிவித்திருக்கிறார்கள்,

யூதா:—ஆகா அப்படியா! அவ்வாண்டவனை நானும் காண வேணும்: அவரே என் மனக்குறையைப் போக்க வந்த நற் போதகர். நான் அவரை முழுதும் நம்புகிறேன்.

பல்தசார்:—உன் விசுவாசம் உன்னை இரக்ஷிக்கும். (ஷேக் இஷ்டரீமைப் பார்த்து) அருமை நண்பரே, வெகுநேரமாகி விட்டது; இனி நித்திரைசெய்யப் போகலாமா.

"ஆம்" என ஷேக் மொழிந்தார். யூதாவின் வலது கரத்தைப் பற்றிக் கொண்டு எழுந்து நின்றார்.

"உங்களுக்கு சமாதான முண்டாவதாக" என்றார் பல்தசார். அவ்விதமே ஷேக்கும் யூதனும் பெரியவரை வாழ்த்தினர். பிறகு மூவரும் அவரவர் அறைக்குப் போய்ப்படுத்து அயர்ந்து நித்திரை செய்தனர்.

## பதினொன்றும் அத்தியாயம்.

---

### மகளின் ஏக்கம் தந்தையின் தாகம்.

இரவு மணி ஒன்பது இருக்கும். சிமாண்டனிஸூம் அவன் மகள் எஸ்தரும் வீட்டின் மேல்கட்டிலிருந்து பின் வருமாறு சம்பாஷிக்கலாயினர்:—

சிமாண்டனிஸ்:— மகளே, உன் உபத்திரவத்திற்காக நேற்றிரவு வெகுநேரம் வரை காத்திருந்தேன். இன்றுவது நேரத்துடன் தூங்கவேண்டும்.

எஸ்தர்:— என்னப்பா, இரவில் தூங்கவில்லையானல் பகலில் தூங்க நமக்கு எவ்வளவோ நேரமிருக்கிறது. நாம் நித்திரை போனபின் மூல்லர வந்தாலும் வரலாம்: எஜமான் தூங்கிவிட்டாரென நினைத்துக் காலையில் வந்து பார்க்கலாமென்று போய்விட்டால் என்ன செய்வது. உடனே கவனிக்க வேண்டிய காரியமாயிருந்தால், அது எப்படி ஆகும்? காலா காலத்தில் கவனியாத குற்றம் நமக்குத்தானே பெரும் நஷ்டத்தை யுண்டாக்கும்.

சிமாண்:— நமக் கென்ன நஷ்டம்? நீ பேசுவது வேடிக்கையாக விருக்கிறதே.

எஸ்தர்:— நமது சின்ன எஜமானுக்கு ஏற்படும் கஷ்டம் நமக்கு நஷ்டமில்லையா?

சிமாண்:— மகளே, உனக்கென்ன பைத்தியம் பிடித்துவிட்டதா? அவ்வாலிபனுடன் எவ்வளவு காலம் பழகியிருக்கிறாய். நேற்றுப் பகலில் ஒரு தடவை அவனைக் கண்டதற்குள் அவன் மேல் உனக்கு ஏற்பட்ட நேசபாசம் அளவிட முடியாதபடி பெருகினது பேராச்சரியம் தான். ஆயினும் நீ அறியாச் சிறுமி: உலகானுபவ மில்லாதவள். நமது எஜமான் மகனெனச் சொல்லிக்

கொள்ளும் அவ்வாலிபனை முற்றிலும் நாமறிய வேண்டாமா. நல்லவனோ, துர்நடத்தையுடையவனோ, குடிகாரனோ, குடிகேடனோ! உண்மையாக நமது எஜமானின் புத்திரனோ; அன்றி நம்மை ஏய்க்க வந்த மோசக்காரனோ: தீர்மானமாக யாதொன்றும் அறியாமல் நாம் எதையும் நம்பக்கூடாது. சென்ற முல்லா திரும்பிவரட்டும்; அவசரப்படாதே.

எஸ்தர்:— அப்பா, உண்மையாக நீங்கள் தான் பேசுகிறீர்களா என்ன? நேற்று நீங்கள் அவரைப் பற்றிப் புகழ்ந்து பேசின அருமையான வார்த்தைகள் இதற்குள் மாறினது ஆச்சரியமாயிருக்கிறது.

சிமாண்:— எஸ்தர், பலமுறையும் அதைப்பற்றி யோஜித்துப் பார்த்தேன். தீர்க்கமாய்த் தெரிந்துகொள்ளாமல் நாம் எதையும் முடிவு செய்யக்கூடாது.

எஸ்தர்:—பன்னிப் பன்னி யோஜிப்பதும், எண்ணி எண்ணிப் பார்ப்பதும், நேரத்திற்கொரு தீர்மானம் செய்வதும், உங்களின் இயற்கையான சுபாவமாயிற்றே. நீங்கள் அவரைப் பற்றி என்ன சொன்ன போதிலும் நான் அவர் மீது, கொண்டுள்ள நல்லெண்ணத்தை ஒரு போதும் மாற்றமாட்டேன். தந்தையே, நீங்கள் நித்திரை செய்யுங்கள்; நான் விழித்திருந்து ஏதாவது தகவல் வருகிறதா வென்று காத்திருக்க அனுமதியுங்கள்.

சிமாண்:— என் அருமை மகளே, நீ அறியாப்பிள்ளை: போய் நித்திரை செய்; காலையில் இதைப்பற்றி யோஜிக்கலாம்.

எஸ்தரோ சிறிது நேரம் மௌனமாய் நின்றாள். "அப்பா எனக்குத் தூக்கம் வரவில்லை....'' என்று கூறிப் பெருமூச்செறிந்தாள். சிமாண்டனிஸனும் என்ன சொல்வதென்றறியாமல் தயங்கினான். மகளின் தலையை கையினால் வருடினான்.

சியாண்:— என் செல்வமே, அவ்வாலிபன் மேல் நீ ஏன் வீண் கவலை கொள்ள வேண்டும்?

எஸ்தர்:— பிதாவே, "அகத்தின் அழகு முகத்தில்" என்பார்கள். அறிவு, ஆண்மை, ஈகை, இரக்கம் முதலிய நற்குணங்களை யுடையவராகக் காணப்படும் அப்பேரழகனைக் கண்டது முதல் என்னை அறியாமலே அவர் மட்டில் எனக்கொரு வித பிரீதி ஏற்பட்டிருக்கிறது.

சிமாண்:—பிரீதியா! அதென்ன பிரீதி? அப்படியானால் அரும்பாடு பட்டு நான் தேடிய பொருட்களையெல்லாம் வழியில் வந்துபோன அவ்வாலிபனுக்கு நீயே பிடுங்கிக்கொடுத்து விடுவாய் போலிருக்கிறதே.

எஸ்தர்:— எவ ரெவருக்கு எதெது சொந்தமோ, அதை அவரவர் அடைய வேண்டுவது தானே நீதி. உங்களுடைய பூர்வீக நிலைமைதான் என்ன? யார்கொடுத்த பொருளைக்கொண்டு இவ்வளவு பெரிய தனவந்தரானீர்கள்? அவர் தந்தையல்லோ உங்கள் உயர்வுக்குக் காரணம்.

சிமாண்:— எஸ்தர், உன் தந்தையான என்னை இழிவு படுத்திப் பேசுவது நியாயமா? எனது எஜமான் எனக்குப் பேருதவி புரிந்தது உண்மையானாலும், அவருடைய புத்திரனின் செய்கையால் தானே இப்பொழுது நடைப்பிணமாக விருக்கிறேன். கவர்னரைக் கொல்ல முயன்ற அத்துஷ்டனுக்கா என் ஆஸ்திகளைக் கொடுக்கச் சொல்லுகிறாய்? பேஷ்!

எஸ்தர்:— பிதாவே, கோபிக்க வேண்டாம், பொறாமை குரோதத்தால், விரோதிகள் அவர்மேல் அனியாயமாய்ப் பழி சுமத்தினார்கள் என்று நேற்று நீங்கள் தானே தெரிவித்தீர்கள் ......அவர் கூறிய ஒவ்வொரு வார்த்தையையும் நீங்கள் சரியாகக் கவனிக்கவில்லையா? அவர் இங்கு பொருளை விரும்பி வரவில்லையென்றும் தன் தாய் தங்கை இருக்கும் இடத்தை அறிந்துபோக வந்ததாகவும் சொன்னாரே. அப்படியிருக்க நீங்கள் அவரைப்பற்றி அவதூறாகப் பேசுவது நியாயமல்ல.

சிமாண்:—மகளே, வீணாக ஏன் என்னுடன் எதிர்த்துப் பேசுகிறாய். அவ்வாலிபன் தயவுதான் உனக்கு இனி வேண்டும் போலிருக்கிறது.

எஸ்தர்:—அப்பா, தங்கள் மனம் வருந்தும்படி தப்பிதமாக நான் ஒன்றும் சொல்லவில்லையே.

சிமாண்:—சொல்லவில்லைதான். ஆனால் இனி அவ் வாலிபனைப் பற்றி என்னிடம் ஒன்றும் பேசாதே.

முல்லா பட்டினத்திற்குள் வந்தபொழுது மணி ஒன்பதுக்கதிகமாயிருக்கலாம். நேரே தன்னுடைய வீட்டுக்குப் போகாமல் தனது எஜமானின் மாளிகையை அடைந்தான். மேல்மாடியில் தீபம் எரிந்துகொண்டிருப்பதைக் கண்டான். வாயிற் காப்போனிடம் சொல்லிக்கொண்டு மேல்கட்டுக்கு வேகமாய் ஏறிச் சென்றான்.

திடீரென முல்லா தங்கள் முன் வந்து நிற்பதைக் கண்ட தந்தையும் மகளும் சற்று நேரம் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டே நின்றனர். "ஏது இவ்வளவு சுறுக்காய்த் திரும்பி விட்டாய். நீ பின் பற்றிப் போன யூதன் சமாச்சாரம் என்ன?" என்று கேட்டான் சிமாண்டனிஸ்.

முல்லா நிகழ்ந்த சகல காரியங்களையும் ஒன்றும் விடாமல் சொல்லி முடித்தான்; துக்கத்தால் துயருற்றிருந்த எஸ்தரின் முகம் சந்தோஷத்தால் பிரகாசித்தது. தனது அன்பைக் கவர்ந்த யூதாவெனும் யுவனின் போற்றலைக் கேட்டு மகிழ்ந்தாள். தனது தந்தையினுடைய எஜமானின் உண்மைக் குமாரன் சகல உயர் குணங்களையுமுடைய புண்ணிய புருஷன் என்று முல்லா பகர்ந்த வார்த்தைகள் அவள் செவிகளில் அமிர்தம் போலப் புகுந்தன. தைரியமும் ஆண்மையும் மிகுந்த காந்தன் யூதா பந்தய இரதவோட்டத்தில் கலந்து கொள்ளப் போவதை அறிந்து அதில் அவரே வெற்றியடைய வேண்டுமென்று கடவுளை நினைத்து உள்ளுறத் தொழுதாள். தன் தந்தை என்ன சொல்லப் போகிறாரோவென ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். சிமாண்டனிஸ் வெகு நேரம் வரை ஆழ்ந்த யோஜனையிலிருப்பவனைப் போலக் காணப்பட்டான்.

சிமாண்:—முல்லா, நீ மிகவும் கெட்டிக்காரன். நாளைக்குக் காலையில் தவறாமல் அவர் பெயரைப் பதிவு செய்து விடு; பந்தயத்தில் சேர எவ்வளவு பணங்கட்ட வேண்டும்?

முல்லா:—தங்களுக்குத் தெரியாததல்லவே.

சிமாண்:—சரி சரி. சகல செலவுகளுக்கும் இந்தப் பையிலுள்ளதை வைத்துக் கொள்ளு.

முல்லா:—இதற்காகவே அவர் என்னிடம் பெரியதொரு தொகையைக் கொடுத்திருக்கிறார்.

சிமாண்:—அதை அவரிடமே கொடுத்து விடு; இதிலுள்ளதை எடுத்துச் செலவு செய். வெகு நேரமாகி விட்டது. நீயும் களைத்துப் போயிருக்கிறாய்; நேரே வீட்டுக்குப் போய் இளைப்பாறு; நாளைக்குக் காலையில் நமது சின்ன எஜமானுடைய வேலையை முடித்துக் கொண்டு என்னிடம் வா. அந்தப் பந்தய ஓட்டத்தை நானும் காண வேண்டும். அதற்கு முன் இஷ்டரீமின் கூடாரத்திற்குப் போய் நமது சின்ன எஜமானுடன் பேசி அவருக்குத் தைரியம் சொல்ல வேண்டும்.

சந்தோஷத்தால் முல்லாவின் முகம் மலர்ந்தது. தலை வணங்கித் தனது எஜமானிடம் விடை பெற்றுக் கொண்டு அப்பால் சென்றான்.

சிமாண்டனிஸ் மௌனமாயிருந்தான். தன் மகளை எதிரிட்டுப் பார்க்க வெட்கினான்; எஸ்தரும் என்ன செய்வதெனத் தோன்றாமல் திகைத்தாள். சில நிமிஷங்கள் சென்று "அப்பா எனக்குத் தூக்கம் அதிகமாயிருக்கிறது, நான் போகலாமா?" என்றாள்.

சிமாண்:—ஆமாம், உனக்குத் தூக்கம். எனக்கோ துக்கம். இதுவரை பெரும்பாடு பட்டுத் தேடிய ஆஸ்தியையெல்லாம் கொடுத்து விட வேண்டுமே. பணமெல்லாம் போன பின் நாமென்ன செய்வது என்ற கவலையே என்னை வாட்டி வதைக்கிறது.

எஸ்தர்:—அவர் உங்களிடமிருக்கும் திரவியத்தை ஒரு போதுங் கேட்கமாட்டார். அப்படியே அவர் கேட்டு வாங்கிக் கொண்டாலும், மீண்டும் அதை உங்களிடமே திரும்பக் கொடுத்து விடும்படி என்னுலான முயற்சிகளைச் செய்வேன். உறுதியாய் நம்புங்கள்; கவலையை ஒழித்து சந்தோஷமாயிருங்கள்.

சிமாண்:—அவரிடம் எனக்காக பரிந்து பேச உன்னிடம் அவ்வளவு விசேஷ சக்தி என்ன உண்டு? நீயோ ஒரு அடிமையின் மகள்.

எஸ்தர்:—(முன் பின் யோஜிக்காமல்) உண்மைதான்; நானும் அவருடைய அடிமையே; அவரைக் கண்ட நேரம் முதல் என் உடல், பொருள், ஆவி மூன்றையும் அவருக்கே அர்ப்பணம் செய்து போட்டேன்.

சிமாண்:—என்னென்னமோ சொல்லுகிறுயே. தெளிவாகச் சொல்லு.

எஸ்தர்:—என்னைப் பரிவுடன் பாதுகாத்துவரும் பிதாவே, நான்.......அவரை...........(என்று கூறி வெட்கத்தால் தலை குனிந்தாள்)

சிமாண்:—(சிரித்துக் கொண்டே) அவரை நீ காதலிக்கிறுய் என்று சொல்லு. ஆனுல், உன் விருப்பம் போல அவரும் எண்ணினுல் நீ பாக்கியவதிதான். ஒரு பிரபுவுக்கும் அடிமையின் மகளுக்கும் என்ன பொருத்தமுண்டு? உலகம் அவரை நிந்திக்குமென்று அவர் நினைத்தால் என்ன செய்வது?

எஸ்தர்:—நான் கொண்ட எண்ணம் நிறைவேற நிச்சயமாய்க் கடவுள் கடாக்ஷிப்பார் என்ற உறுதியான விசுவாசம் எனக்கு உண்டு. ஆனுல் ஒரேயொரு உதவிமட்டும் தாங்கள் எனக்குச் செய்ய வேண்டும்.

சிமாண்டனிஸ் தன் மகளுடன் ஆரம்பத்தில் கடுமையாய்ப் பேசியதை நினைத்து வருந்தினுன்: அவன் கண்களி

விருந்து கண்ணீர் பெருகியோடினது; பேச முடியாமல் நாக் குழற்றது. தன் நேச மகளை எறிட்டுப் பார்த்தான்: எஸ்தர் தன் தந்தை அழுவதைக் கண்டாள். "ஆ! அப்பா, நீங்கள் ஏன் அழவேண்டும்? பாவி நான் செய்த குற்றமென்ன?" எனக் கேட்டுக் கொண்டே, அவனை இறுகக் கட்டிப் பிடித்தாள். அவனும் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு மகளை அன்புடன் உற்று நோக்கி "கண்மணி, நற்குணவதியான உன்னைப் பெற்ற நானே பாக்கியவான். உன் மன நிலையை அறியும் பொருட்டே பலவிதமாகப் பேசி உனக்கு வருத்தத்தை யுண்டு பண்ணினேன். உனக்காக உயிர் வாழும் எனக்கு ஆஸ்தி பாஸ்தி ஒன்றும் வேண்டாம். நீ சுகமடைந்திருப்ப தொன்றே போதும். ஆனால், நமது எஜமானரின் புதல்வர் உன்னை மணந்துகொள்ள இசைவாரா வென்பதுதான் பெருங் கவலையாயிருக்கிறது. பெண்ணாய்ப் பிறந்தோருக்கு எக்காலத்திலும், பிறந்தது முதல் உயிர் துறக்கும் வரை பிறருதவியிருக்க வேண்டிய தவசியமாயிருக்கிறது. சிறு பருவத்தில் பெற்ற தாயின் அயராத கவனிப்பு, பாலப் பருவத்தில் பெற்ற பிதாவின் பொருளுதவியும், போதுமான கண்காணிப்பும், மங்கைப் பருவத்தில் கொண்ட கணவனின் வாழ்க்கைத் துணை, கிழத்தன மடைந்தபோது பெற்ற மக்களின் ஊழியம், முதலியவைகளே அவர்களின் துயரற்ற வாழ்விற்கு இன்றியமையாச் சாதனங்களாயிருக்கின்றன. உன்னைப்பெற்ற தாய் உன்னை அருமையாய்ச் சீராட்டிப் பாராட்டி வளர்த்தாள். அவள் இறந்து இன்றோடு ஐந்து வருஷங்களாகின்றன; அன்றுமுதல் உன் கவலை எனக்கேற்பட்டு விட்டது. உன்னை மணக்க எத்தனையோ பேர் முயற்சி செய்தார்கள்; என் மனம் இசையவில்லை. நீயும் அவர்களை லக்ஷியம் செய்ய வில்லை. தற்போதோ நீ நமது சின்ன எஜமானை நினைத்திருக்கிறாய்: உன் விருப்பத்தை அவர் ஏற்றுக்கொண்டால் நானே மேன்மை யடைந்தவனாவேன்" எனப்பகர்ந்தான்.

எஸ்தரோ கீழ்க்கண்ட விதம் சிந்திக்கலாயினள்:—

'இந்நாட்டில் பெண்ணாய்ப் பிறந்தவர்க்கு இருக்கும் கஷ்டங்கள் அனந்தம்: அவர்கள் இஷ்டப்படி எங்கும் செல்ல முடி

யாது; அவர்கள் விருப்பம் போல எவருடனும் வார்த்தை யாடுவது மாகாது. காதல் கொண்டவருடன் களித்துப் பேசுவதுங் கூடாது: அவர்கள் இஷ்டம் போல எங்கும் தனித்துச் செல்லுதலும் தகாது; சுருக்கமாகச் சொன்னால், பெண்கள் அடிமைகளாகவே பாவிக்கப் படுகின்றனர். சில விஷயங்களில் இவ்வித கட்டுப்பாடு நன்மை பயப்பதானாலும், பலவகைகளிலும் இவ் வழக்கம் பெருங்கேட்டையே விளைவிக்கிறது. பெண்களின் சுக வாழ்வைக் கெடுத்து விடக் கூடியதாயு மிருக்கிறது. என்னை அடிமையின் மகள் என்று என் தந்தை சொல்லுவது போல உண்மை அடிமையாக நானிருந்தால் என் வாழ்வு இன்ப வாழ்வாகவே யிருக்கும். பணம் என்ற மமதை எனது சுய உரிமைகளையும் இழக்கச் செய்து விட்டது."

சிமாண்:—கண்மணி, ஒரே வொரு உதவியென்றாயே அதென்ன? சொல்லு.

எஸ்தர்:—வேறொன்று மில்லையப்பா, (வெட்கத்தால் நாணமுற்று) நீங்கள் அவரைக் காணப்போகும் போது என்னையும் அழைத்துச் செல்ல வேண்டும்.

சிமாண்:—அவசியம் அழைத்துச் செல்லுகிறேன்: கடவுள் நம் எண்ணம் நிறைவேறக் கருணைபுரிய வேண்டும்; வெகு நேரமாய் விட்டது. போய் நிம்மதியுடன் நித்திரை செய்: காலையில் முல்லா வந்ததும் ஷேக் இஷ்டரீமின் கூடாரத்திற்குப் புறப்படலாம்.

எஸ்தரின் கவலை நீங்கிற்று. அவள் தந்தையின் பாதங்களைத் தொட்டு கண்களில் ஒற்றிக்கொண்டு இரவு வந்தனம் சொல்லிவிட்டுப் படுக்கை அறைக்குச் சென்றாள். சிமாண்டனிஸனும் தானிருந்த ஆசனத்திலேயே சாய்ந்த வண்ணம் நித்திரை செய்தான்.

மறுநாட் காலையில் முல்லா யூதாவின் பெயரைப் பந்தய இரத மோட்டுபவர்களின் ஜாபிதாவில் பதிவு செய்தான்.

உடனே தன் எஜமானுடைய மாளிகையை அடைந்தான்; மாளிகையின் வாசலில் குதிரைகள் பூட்டிய இரதம் ஒன்று தயாராயிருப்பதைக் கண்டான்.

முல்லாவைக் கண்டதும் ஒரு வேலையாள் அவனிடம் ஓடிவந்து "உங்களை உடனே ஷேக் இஷ்டரீம் பிரபுவின் கூடாரத்திற்குப் போய் அவரிடம் நமது எஜமானும் அவர் மகளும் வருவதாகத் தெரிவிக்கச் சொன்னார்" என்றான். அப்படியே அவனும் தன் ஒட்டகத்தை விரைவாய்ச் செலுத்திக் கொண்டு அப்பால் சென்றான்.

---

## பனிரெண்டாம் அத்தியாயம்

### காதல் வெளியாதல்

மறு நாள் காலை போஜனம் முடிந்ததும் பல்தசார் தன் மகளுடன் நகரத்திற்குப் போய் வருவதாய் விடை பெற்றுச் சென்றார். ஷேக் இப்ராஹீம் நான்கு பலாட்டியமான குதிரைகளை ஒரு இரதத்தில் பூட்டச் செய்து யூதாவிடம் ஒப்புவித்து, தனது தோட்டத்தின் அருகேயிருந்த ஒரு சமவெளியில் ஓட்டிப் பார்க்கும்படி சொன்னார். யூதாவும் சொற்ப நேரத்திற்குள் அப்பரிசகளைப் பழக்கப்படுத்தினான். மன ஊக்கத்துடன் பயமின்றி இரதத்தை வேகமாய்ச் செலுத்தினான். ஷேக் இப்ராஹீம் வெகு ஆச்சரியமடைந்தார்; ஆனந்தமும் கொண்டார்; யூதனின் திறமையைப் பெரிதும் புகழ்ந்தார். ஏரிக்கரையின் மேல் இரதத்தை ஓட்டிப் பார்க்கலாமாவென ஆசை கொண்டு வினவினார். "சரி அப்படியானால் நீங்களும் இரதத்தில் ஏறிக் கொள்ளுங்கள்" என்றான் யூதன். அவன் விருப்பியபடி ஷேக்கும் இரதத்தில் ஏறிக்கொண்டார்.

இரதம் கூடாரத்தை விட்டு வெளியேறிற்று. அங்குள்ள பணியாளர் சகலரும் புதிதாக இரதத்துடன் இணைக்கப்பட்ட குதிரைகளை அடக்கி ஓட்டும் யூதாவின் வல்லமையைப் பற்றிப் புகழ்ந்து பேசிக்கொண்டே வெளியில் வந்து கூட்டமாய் நின்றனர். ஏரியின் குளிர்ந்த காற்றுப் பட்டதும், பரிகள் பறந்து வேகமாய்ச் செல்ல வாரம்பித்தன. அச்சமயம் ஏரியின் கீழ் கோடிக்கரையில் ஒருவன் குதிரையின்மேல் ஏறிப் போய்க் கொண்டிருந்தான். அவன் தனக்குப் பின்னால் வேகமாக வந்து கொண்டிருந்த இரதத்தைக் கண்டு தன் குதிரையை நிறுத்தி வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தான். இரதம் அவனுக்குச் சமீபமாக வந்துவிட்டது. இரதம் வந்த வேகத்தின் அதிர்ச்சியால் அவன் குதிரை மிரண்டு துள்ளிக் குதித்து ஓடினது.

இவ்விதம் மிரளும் என்பதை எதிர்பாராதிருந்ததால் அது ஓடின வேகத்தில் கீழே தள்ளப்பட்டுப் பொத்தென விழுந்தான்; மூர்ச்சை யற்று மயங்கிக் கீழே கிடந்தான்; அவனது வலது கை ஒடிந்து போயிற்று.

யூதா உடனே இரதத்தை நிறுத்தினன்; இஷ்டரீம் பிரபுவும் கீழே இறங்கித் தமது கூடாரத்தை நோக்கி கைகை செய்தார். அங்கு நின்று வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்த வேலையாட்கள் வேகமாய்த் தங்கள் எஜமானிடம் ஓடிவந்தார்கள். அவர் உத்தரவுப்படி சிலர் மிரண்டோடின குதிரையைப் பிடிக்கச் சென்றனர். மற்றவர்கள் கீழே விழுந்து கிடந்தவனை வீரியின் உள்ளே தூக்கிச் சென்று அவன் மேலிருந்த வஸ்திரத்தைக் கிழித்து தண்ணீரில் நனைத்து ஒடிந்து தொங்கின கையை ஒன்று சேர்த்து வைத்துக் கட்டினர்; அவன் முகத்திலும் தண்ணீர் தெளித்தனர். அவனும் மூர்ச்சை தெளிந்து வலி பொறுக்க முடியாமல் கதறினன். அவன் கீழே விழுந்த இடத்தில் உரையிடப்பட்ட ஒரு கடிதம் கிடந்தது. அதின் வாய் கிழிந்து போயிருந்தது. ஷேக் அதை எடுத்து தமது சட்டை ஜேபியினுள் போட்டுக்கொண்டு வலிபொறுக்க முடியாமல் அலறிக் கொண்டிருக்கும் உரோமை வீரனிடஞ் சென்ருர். "அப்பா, வருந்தாதே; உன்னை என் கூடாரத்திற்கு எடுத்துச் சென்று விரைவில் நீ சுகமடையும்படி செய்கிறேன்" என்ருர். "ஐயா, என் எஜமான் மேஸலா என்னிடம் ஒரு முக்கியமான கடிதத்தைக் கொடுத்து சிசரியாவிற்கு அனுப்பி வைத்தார். எனக்கு இப்படி ஆபத்து வந்துவிட்டதே; என்ன செய்வேன்! கடிதம் மகா அவசரம் என்ருரே" என்று சொல்லிக்கொண்டே மற்ற கையினுல் தன் சட்டைப் பைகளில் தேடிப்பார்த்து, "ஐயையோ அதைக் காணுமே; தவற விட்டுட்டா என் தலையை வாங்கி விடுவதாகவல்லோ சொன்னர்" என்று கூறிப் பிரலாபித்தான். "பயப்படாதே; அக்கடிதத்தைத் தேடி எடுத்து உன்னிடம் சேர்ப்பிக்கிறேன்" என்று சொல்லிக்கொண்டே, ஷேக் அவனைக் கூடாரத்திற்குத் தூக்கிக்கொண்டு போகும்படி உத்திரவிட்டார். இரதத்தில் ஏறிக்கொண்டு கூடாரத்திற்கு ஓட்டும்படி யூதாவிடம்

தெரிவிக்கவே, நொடிப்பொழுதில் அவனும் இரதத்தைக்கூடாரத்திற்குள் கொண்டுபோய்ச் சேர்த்தான். இருவரும் கைகால் முகம் சுத்தம் செய்து புதிய ஆடைகளை அணிந்து கொண்டு ஒரு அறைக்குள் போய் உட்கார்ந்தனர். முல்லா திடீரென்று அங்கு வந்து வெகு பணிவுடன் தலை வணங்கி, "தங்கள் இருவரையும் காண சிமாண்டனிஸும் அவர் குமாரத்தியும் வந்து கொண்டிருக்கிறார்கள்" என்றான். யூதா ஒன்றும் அறியமுடியாமல் முல்லாவையே பார்த்துக்கொண்டிருந்தான்; அவனும் தன் நண்பன் திகைப்புடன் தன்னையே கவனிப்பதைக்கண்டு புன்னகை புரிந்தான்.

பிரபுவின் உத்திரவுப்படி அங்கு மூன்று ஆசனங்கள் போடப்பட்டன. அச்சமயத்தில் சிமாண்டனிஸை இருவர் கைத்தாங்கலாய்க் கூட்டிக்கொண்டு வர அவன் மகள் தலையில் முக்காடணிந்து நாணத்துடன் தன் தகப்பன் பிறகே வந்து கொண்டிருந்தாள். "தேவன் நண்பர் ஷேக் இஷ்டரீமுக்கும் அவருடனிருக்கும் எனது சின்ன எஜமானுக்கும் நற்சமாதானத்தை ஈவாராக" என ஆசி கூறிக்கொண்டே அங்கிருந்த ஒரு ஆசனத்திலமர்ந்தான். அவன் மகள் எஸ்தரோ புன்னகை பூத்த முகத்துடன் தன் இரு கரங்களையும் கூப்பி இருவரையும் நமஸ்கரித்து வணங்கியவளாய்த் தன் தந்தையின் ஆசனத்திற்குப் பின்னே நின்றாள். எஸ்தர் நீங்கலாக அங்கிருந்த நால்வரும் தமக்கு முன் வெள்ளிப் பாத்திரங்களில் வைக்கப்பட்ட பானத்தைப் பருகினர்.

"நண்பரே, இதோ உமதருகிலிருப்பவர் தான் காலஞ் சென்ற என் எஜமானின் புதல்வர், இவரை எட்டு வருஷங்களுக்கு முன் பார்த்திருக்கிறேன்; தற்போதோ இவர் மிகவும் புஷ்டியாகவும் தாட்டிகமுள்ள வாலிபராகவும் காணப்படுகிறார். இரண்டு தினங்களுக்கு முன் என் இல்லந் தேடி வந்தபோது இவரை இன்னாரெனத் தெரிந்து கொண்டேன். ஆனால் இவரின் தற்கால உண்மை நிலையை அறிய வேண்டுமென்றே ஏற்றுக்கொள்ளாமல், எனது வேலையாள் இதோ நிற்கும் முல்லா வென்பவனை இவர் பின்னே அனுப்பி உண்மை

களை யெல்லாம் அறிந்து கொண்டேன். கடந்த ஐந்து வருஷங்களாக பென்ஹூர் பிரபுவின் புதல்வன் யூதா நான்தானென்று சொல்லிக்கொண்டு வந்தவர்கள் அனேகர்; அதெல்லாம் ஒரு பெரிய கதை. சாவகாசமாக அவைகளைப் பற்றிப் பேசிக்கொள்ளுவோம்.... ஷேக், எனது எஜமானருக்குத் தாங்கள் காண்பித்த அன்பிற்கும், செய்த பேருதவிக்கும், முதலில் தங்களுக்கு நன்றி கூறுகிறேன். (யூதாவைப் பார்த்து) பல கஷ்ட துன்பங்களையும் அனுபவித்து எங்களிடம்வந்துசேர்ந்த என் எஜமானே, தங்கள் தந்தை என்னிடம் ஒப்புவித்த சொத்துக்கள், ஒன்று நூருய்ப் பெருகி யிருக்கின்றன. அவைகளைச் சார்ந்த சகல சாசனங்களும் இதோ இந்தச் சிறு பெட்டிக்குள் இருக்கின்றன. ஏற்றுக் கொண்டு எனது இல்லத்திற்கு வந்து, அங்குள்ள சகல ஐஸ்வரியங்களையும் ஒப்புக்கொள்ளும்படி மன்றாடுகிறேன். தங்கள் மனம் நோகும்படி நான் செய்த குற்றத்தை மன்னித்து அடியேனை ஆதரிக்க வேண்டும்'' எனக் கூறி இரு கரங்களையும் கூப்பினன். யூதா மெய் மறந்தவனுய் சிமாண்டனிஸைக் கட்டிப் பிடித்து அரவணைத்தான். "எனது தந்தையின் உண்மையுள்ள காரியஸ்தனுன உமக்கு, நிர்ப்பாக்கியனுன என் தவறுதலான நடத்தையால் ஏற்பட்ட கஷ்டங்களுக்குத் தக்க பரிகாரம் செய்ய வேண்டிய கடன் என் மேற் சுமந்திருக்க, நீர் அரும் பிரயாசையுடன் தேடி வைத்திருக்கும் சொத்துக்களையும் பூஸ்திதிகளையும் நானடைவதோ நியாயம், அவைகளை நீர் வைத்துக்கொள்ள இசையாவிடில் அதோ நிற்கும் உமது அருமை மகள் எஸ்தருக்குச் சொந்தமாக்குகிறேன்'' என உரைத்தான்.

சிமாண்:— இல்லை, இல்லை, அவைகள் தங்களுடையவைகளே. உங்கள் தந்தைக்கு எப்படி நான் அடிமையாயிருந்தேனே அவ்விதமே நான் மட்டுமல்ல, இதோ நிற்கும் என் மகளும் தங்கள் அடிமையே; சாகும் வரை தங்களுக்கும் தங்கள் தாய் தங்கைக்கும் ஊழியம் செய்யத் தயாராயிருக்கிறேம்.

யூதா:— என்ன! என் தாய் தங்கைக்குமா!! அப்படியானல் அவர்கள் இருக்கும் இடத்தை நீர் அறிவீரா?

சிமாண்:— ஐயோ இதென்ன கொடுமை! அவர்களிருக்கு மிடத்தை நான் அறிந்திருந்தால் என்னிடமுள்ள ஐஸ்வரியத்தை யெல்லாம் செலவிட்டு அவர்களை மீட்க வழிதேடியிருக்க மாட்டேனா?

பூதா:— அவர்களை நான் காண்பேனா, அன்றி மனக்கவலை யால் மடிந்து சாகவேண்டியது தானோ, என் அருமைத் தாயை யும் சகோதரியையும் எங்கோ மறைத்து விட்டான் அப்பாவி சண்டாளன், தூர்த்தன், துரோகி மேஸலா வென்ற உரோமை நாய். ஆ அம்மா, தங்கா, எங்கிருக்கிறீர்கள்? எவ்வித மிருக்கிறீர்கள்? யாருங் காணமுடியாத அந்தோனியோ வின் இருட்டறைகளிலேயே இன்னும் இருக்கிறீர்களா? அல்லது கஷ்டம் தாழாமல் உயிர் துறந்தீர்களோ! தெய்வமே, அவர்கள் கேட்டிற்குக் காரணம் நானல்லவோ! நீர் என்னையே முழுதும் தண்டிக்க வேண்டியதிருக்க, குற்றமற்ற என் மாதாவை யும் மாசற்ற மங்கையான என் தங்கையையும் தண்டிப்பது நியாய மல்லவே! உயிருடனே நான் அனுபவிக்கும் வேதனை கொஞ்சமா! மனச் சமாதானமில்லாமல் நான் படுந் துயர் அள விடுந் தன்மைய தல்லவே. பதினாயிரம் தரம் மாண்டாலும் இவ் வளவு துக்கம் உண்டாகாதே! அத்துக்கம் என் நெஞ்சைப் பிளந்தும், என் உயிரைப் போக்காமல் சித்திரவதை செய்து என்னைத் தொல்லைப்படுத்துகிறதே! பிள்ளைகளைப் பெற்ற தாய் மார்கள் அவர்களால் ஆறுதலனுபவிக்க வேண்டியதிருக்க, பாவி யாகிய என்னைப் பத்து மாதம் சுமந்து பெற்ற தாய்க்கு என்னால் ஒருவித உதவியும் ஆதரவுமில்லையே! அடா பாதகா, என் அடி வயிறு பற்றி யெரிய என் அன்னையையும் சோதரியையும் எங்கு கொண்டு போய் ஒளித்தாய்? அடே, உன்னுடைய கெடுமதிக்கு முடிவு நெருங்கிவந்து விட்டது. தவறாமல் உன்னை ஒரு கை பார்ப்பேன், பார்க்கிறேன், பார்க்கிறேன். (என்று சொல்லி பலவிதம் புலம்பி அழுதான்.

சிமாண்:— எஜமானே. நீங்கள் கொண்ட சபதத்தை ஜெயத்துடன் நிறைவேற்ற வேண்டுமானால், மனத் தைரியத்தை

இழப்பது நல்லதல்ல; அந்த நீசன் மேஸலா நமக்குச் செய்த தீங்கிற்குத் தக்க பரிகாரத்தைச் செய்யும்படி நாம் முயற்சிக்க வேண்டும்; இரண்டாவதாகப் பழிக்குப் பழி வாங்கவேண்டும்.

இஷ்டரீம் பிரபு மௌனமாயிருந்து, தனக்கு முன் நிகழ்ந்த பேச்சுக்களைக் கேட்டுக்கொண்டும் தன் சட்டைக்குள்ளிருந்து எடுத்த கடிதத்தை திரும்பத் திரும்ப வாசித்துப் பார்த்து ஆச்சரியமடைந்தவராய், என்ன செய்யலாமென்ற சிந்தனையுடனிருந்தவர், சிமாண்டனிஸ், "பழிக்குப் பழி" என்றதும், "அதற்குத் தக்க வழி" என்று ஆரம்பித்தவர், "தனியே நாமிருவரும் இதைப் பற்றிப் பேச வேண்டும்" எனக் கூறினர்.

ஷேக்:— (யூதாவைப் பார்த்து) எனது வாலிப நண்பரே, அத்துஷ்டனைத் தண்டிக்கவும், அவனது அக்கிரமத்தை வெளியாக்கி உங்கள் தாயையும் தங்கையையும் மீட்பதற்கான வழிகளைத் தேடவும் வேண்டிய வேலை எங்களைச் சார்ந்தது. உமக்கு இனி அக் கவலை வேண்டாம். அக் கேடுகெட்ட மடயனை, முதலில் நீர் பந்தய ஓட்டத்தில் ஜெயிக்கவும், அவனது, அகங்காரத்தை அடக்கவும் வேண்டுவதின் கவலைதான் இனி உமக்கிருக்கவேண்டும். நீர் இங்கிருந்தால் உமது துக்கம் அதிகரித்துக்கொண்டே யிருக்கும். முகத்தைச் சுத்தம் செய்து கொண்டு முல்லாவுடன் தோட்டத்திற்குள் போய்வாரும்.

சிமாண்:—ஆமாம். முல்லா, நமது எஜமானையும் எஸ்தரையும் அழைத்துப்போய், கூடாரங்கள் ஒவ்வொன்றையும் இப் பூங்காவனத்தின் விசேஷமான இடங்கள் பலவற்றையுங் காண்பி.

ஷேக்:— அதுதான் சரி. பகல் போஜனம் அருந்தும் நேரத்திற்கு நீங்கள் மூவரும் வந்தால் போதும்.

அவ்விதமே அம் மூவரும் எழுந்து வெளியிற் சென்றனர். ஷேக்கும் தன் ஆசனத்தை சிமாண்டனிஸினருகில் இழுத்துப்

போட்டுக் கொண்டார். அங்கிருந்த வேலையாளை, வெளியில் போய் நின்று, உள்ளே யாரும் வராமல் பார்த்துக் கொண்டிருக்கும்படி உத்திரவிட்டார். வேலையாளும் தலை வணங்கி அப்பால் சென்றான். ஷேக் தன் கையிலிருந்த லிகிதத்தை சிமாண்டனிவிடங் கொடுத்து "இதை வாசித்துப் பாரும்" என்றார். அக் கடிதம் கீழ்க்கண்ட விதம் வரையப் பட்டிருந்தது.

(தற்போது) அந்தியோகியா,
........டிஸம்பர், 4.

நண்பர் வலிரியஸுக்கு,

வணக்கம் பல. இந்த மாதம் முதல்தேதி நடந்த பந்தய ஓட்டத்திற்கு வருவீரென்று வெகுவாய் எதிர் பார்த்திருந்தேன். வராத காரணம் என்னவோ, வருகிற 8-ம் தேதிதான் முடிவான பந்தய வோட்டம். அதற்கு நீர் இங்கிருக்க வேண்டு மென்பதை முன்னிட்டே இக்கடிதத்தை என்னிட முள்ள உண்மையான போர் வீரன் வழியாக உமக்கனுப்பியிருக்கிறேன். காரணம்; "யூதா" என்ற நாமத்துடன் ஒருவன் இரதவோட்டத்திற்காகத் தன் பெயரைப் பதிவு செய்திருக்கிறான். நிச்சயமாய் அவன் எனது பழைய விரோதியான யூதா வென்ற யூதன் என்பதில் கிஞ்சிற்றும் சந்தேகமில்லை. நேற்று இரு முறை அவனைப் பார்த்தேன். நமது பகைவன் ஷேக் இஷ்டரீமின் கூடாரத்திலிருக்கிறான். உம்மைக் கொல்ல முயன்றானென்பதாக சுமார் எட்டு வருஷங்களுக்கு முன் இவன்மேல் குற்றஞ்சாட்டி, அவனைச் சாகும்வரை படைக் கப்பலில் தண்டு வலிக்கும் அடிமையாகவும், இவன் தாயையும், தங்கையையும் ஜென்மச் சிறை வாசம் செய்யும்படியும், யாதொரு விசாரணையின்றி நீர் தண்டித்து, அவர்கள் குடும்ப சொத்துக்களைப் பறிமுதல் செய்து, அவைகளை அரசருக்குக் கொடாமல் நாமிருவரும் பங்கிட்டுக்

கொண்டோம் என்பதை மறந்திருக்க மாட்டீர். இதுவரை பயமில்லாமல் வாழ்ந்துவந்த நமக்கு, மாண்டுபோன விரோதி மீண்டு வந்திருப்பது எவ்வித முடிவிற்கோ, தோன்றவில்லை; எனக்கு மிகவும் பயங்கரமாயிருக்கிறது. மூன்று வருஷங்களுக்கு முன் கொள்ளைக்காரருடன் நடந்த கடல் போரில் குவிண்டஸ் ஆரியுஸை ஓர் அடிமை உயிர்காப்பாற்றினதாகவும், அதனால் அவர் அந்த அடிமையைத் தன் மகனாக சுவீகரித்துக்கொண்டாரென்றும் கேள்விப்பட்டோமல்லவா. இவன்தான் அவ்வடிமை; ஏனெனில் இவன் தன் பெயரைப் பந்தய ஜாபிதாவில் "யூதா" மாஜி குவிண்டஸ் ஆரியுஸின் அபிமான புத்திரன் என்று பதிவு செய்திருந்தான். நான் அதை "யூதா," ஓர் யூதன் என்று அச்சிடும்படி ஏற்பாடு செய்திருக்கிறேன். நமது பழய விரோதி யூதா வெளியில் வந்துவிட்டான். நாமவனுக்குச் செய்துள்ள தீங்கிற்காக பழி வாங்காமல் நம்மைச் சும்மா விடமாட்டான். அவனை நான் கவனித்துக்கொண்டிருக்கிறேன். இஷ்டரீமின் கூடாரத்தை விட்டு வெளியில் வந்தால், அவன் உயிரை வாங்கி நமது பயத்தை நீக்கிவிடுவேன். எதற்கும் நீர் இக்கடிதத்தைப் பார்த்தவுடனே இங்கு வரவேண்டும். ஏதாவது ஒரு குற்றத்தைச் சாற்றி மறுபடியும் அவனை சிறை சேர்க்கவேண்டும். காலதாமதம் நமக்குப் பெரும் ஆபத்தை உண்டாக்கும். உடனே வாரும். மகா அவசரம்; மற்றவை நீர் வந்த பின்.

இங்ஙனம்,

உமது வரவை எதிர்பார்த்திருக்கும்,

உண்மையுள்ள நண்பன்

மேஸலா.

கடிதத்தை வாசித்துமுடித்த சிமாண்டனிஸுக்கு உண்டான ஆத்திரங் கொஞ்சமல்ல. கோபத்தால் அவன் கண்கள் சிவந்தன, கைகள் நடுங்கின, மீசை படபடவெனத் துடித்தது. பற்களைக் கடித்தான்; என்ன செய்வதெனத் தெரியாமல் தத்தளித்தான்.

ஷேக்:—கடவுள் சர்வ வல்லமையுள்ளவர். நீதி நியாயமுள்ளவர். அக்கிரமம் எவ்வளவு காலம் நிலைத்துநிற்கும்? உண்மை வெளியாக வேண்டிய காலம் வந்துவிட்டதினால்தான், இக்கடிதம் நமது கையில் சிக்கினது. இது ஆண்டவன் கிருபையல்லவா.

சிமாண்:—கொடிய உரோமரின் கைகளால் நாய்கள் போல நாம் அடிபடுவதும் ஆண்டவன் கிருபைதான். நமது நாடு என்று விடுதலையடையும்? நமது அடிமைத்தனம் என்று நீங்கும்?

ஷேக்:—நாட்டின் விடுதலையைப் பற்றிப் பின்பு யோசிக்கலாம். ஹூர் பிரபுவின் குடும்பத்தைக் காப்பாற்ற ஏதாவது ஒரு வழி செய்ய வேணும்: என்ன சொல்லுகிறீர்?

சிமாண்:—இவ் விஷயத்தில் நீர் என்ன செய்யச் சொன்னாலும் நான் பின் வாங்கமாட்டேன். எவ்வளவு பொருள் தேவையானாலும் செலவிடத் தயாராயிருக்கிறேன்.

ஷேக்:—அப்படியானால் சரி, சற்று பொறும்................... அடே, யாரங்கே.

"இதோ நான்தான் எஜமான்" என்று சொல்லிக்கொண்டே ஒரு வேலையாள் உள்ளே வந்தான்.

ஷேக்:—(அவனைப் பார்த்து) நீ போய் இன்று காலையில் குதிரையிலிருந்து கீழே விழுந்த அந்த வீரனை இங்கழைத்து வா.

வேலையாளும் உடனே வெளியில்போய் சில நிமிஷங்களில் கட்டுகளுள்ள வலது கையைக் கழுத்தின் கீழே தொங்

கின ஒரு சிறு துணித் தொட்டியில் போட்டவனுன ஒரு வீரனை உள்ளே கூட்டிக்கொண்டு வந்து நிறுத்தினன். "நீ வெளியில் போயிருந்து யாரும் இங்கு வராமல் பார்த்துக் கொள்ளு" என்ருர் ஷேக். "புத்தி" என்று சொல்லிக்கொண்டே அப் பணியாளன் வெளியிற் சென்ருன். ஷேக் தன் முன் நின்ற வீரனைச் சற்றுநேரம் உற்று நோக்கிக் கவனித்தார். பிறகு அவனுடன் கீழ்க்கண்டவாறு சம்பாஷிக்கலாயினர்:—

ஷேச்:—உன் பெயர் என்ன?

போர் வீரன்:—என்னை சசலூஸ் என்பார்கள்.

ஷேச்:—நீ உண்மையாகவே போர் வீரன் தானு? அல்லது காரியத்திற்காக உன் எஜமான் போர் வீரனைப்போல உடுத்திக் கொள்ளச் செய்தானு?

போர் வீரன்:—ஆண்டவனே, கடவுள் சாக்ஷியாக நான் உண்மையான போர் வீரன் தான்.

ஷேச்:—(பரிகாசமாய்ச் சிரித்துக் கொண்டு) அடடா. நீதிதவருு இராயனுடைய போர்வீரனே. ஆமாம், அனியாயத்தைத் தவிர மற்றெந்தக் காரியத்தையும் நீங்கள் செய்வதில்லையெனக் கேள்விப் பட்டிருக்கிறேன்.

போர்வீரன்:— ஐயா சாமி, நான் இது வரை அப்படியொன்றும் தப்பிதமாகச் செய்ததில்லை.

ஷேக்:— ஒகோ, இதுதான் ஆரம்பமோ? பாவம்? நீ என்ன செய்வாய்.

போர் வீரன்:— நீங்கள் சொல்லுவதென்ன வெனத் தெரியவில்லை தயவு செய்து தெளிவாய்ச் சொல்லுங்கள்.

ஷேக்:— அப்படியா, (தன் கையிலிருந்த கடிதத்தைக் காண்பித்து) காலையில் நீ குதிரையிலிருந்து கீழே விழுந்ததும் காணுமென்று தேடின கடிதம் இதுதானே.

போர் வீரன்:— அதின் உறை கிழிந்திருக்கிறதே! ஐயையோ என் உயிரை எடுத்து விடுவார்களே. தர்மப்பிரபு, என் பெண் சாதி பிள்ளைகள் முகத்துக்காக அதை என்னிடங் கொடுத்து விடுங்கள்.

ஷேக்:— இக் கடிதத்திலுள்ள விஷயத்தை நீ அறிவாயா?

போர் வீரன்:— சத்தியமாய் எனக்கொன்றும் தெரியாது. ஆனால், வெகு அந்தரங்கமான கடிதம் என்று மட்டும் என் எஜமான் என்னிடம் சொன்னார்.

ஷேக்:— உன் எஜமான் இரகஸ்யமாய்ச் செய்யும் அக்கிரம வேலைகளிலெல்லாம் ஒத்துழைப்பது தான் உன் வேலையோ?

போர்வீரன்:— மகராஜ், அக்கிரமமென்று தெரிந்தால் அவ் வேலையைச் செய்ய ஒரு போதும் இசைந்திருக்கமாட்டேன்.

ஷேக்:— அப்படியானால் குற்றமற்ற ஒரு வாலிபனை அவன் குடும்பத்துடன் நாசமாக்க வேண்டுமென்றெழுதியுள்ள இக் காகிதத்தை எடுத்துச் செல்ல எப்படி ஒப்புக்கொண்டாய்? உரோமை மன்னரின் ஆக்ஞையோ இது.

போர்வீரன்:— பிரபு, மன்னிக்கவேண்டும். நீங்கள் சொல்லுவது விளங்கவில்லை; தயவு செய்து தெளிவாய்ச் சொல்லுங்கள்.

ஷேக்:— குற்றமாகத் தெரியும் எந்த வேலையை நீ செய்வதோ, அதை ஆதரிப்பதோ இல்லையென்பது உண்மையானல் என் அருகில் வந்து நின்று இதை நீயே வாசித்துப்பார்.

போர்வீரனும் ஷேக்கின் பக்கத்தில் நின்று அவர் பிடித்திருந்த கடிதத்தை ஆவலுடன் வாசித்தான்.

போர்வீரன்:— ஆ! அனியாயம்!! அனியாயம்!!! அடாது செய்பவன் படாது படுவான் என்று சொல்லுவார்கள். ஆனால் இதை எழுதினவன் கை முறிய வேண்டியதிருக்க, இதை எடுத்து வந்த என் கையல்லோ ஒடிந்து போயிற்று!

சிமாண்:— அவன் கைகளையும் நீதியுள்ள ஆண்டவன் விரைவில் வாங்கிவிடுவான்.

ஷேக்:— (அன்புடன் வீரனை நோக்கி) அப்பா, நீ மிகவும் நல்லவன். விரைவில் உன் கை சுகமடையும்படி செய்கிறேன். என்னுலும் இதோ விருக்கும் சிமாண்டனிஸின் முயற்சியாலும் கூடிய சீக்கிரம் நீ மேன்மையடைவாய். துஷ்டன் மேஸலாவின் சூழ்ச்சிகளையும், வலிரியஸின் வஞ்சக வேலைகளையும், உரோமை இராயனுக்கு அறிவிக்கப் போகிறேம். இக்கடிதத்திற்கு நீ சாக்ஷி கூறவேண்டும். என்ன சொல்லுகிறுய்?

போர் வீரன்:—(சிறிது நேரம் யோஜித்தபின்) நல்லது. உண்மை எப்படியும் வெளிபாகாமல் இராது இவ் விஷயத்தில் நீங்கள் சொல்லுவது போல நடந்து கொள்ளுகிறேன்; என்னை மட்டும் காப்பாற்ற வேண்டும்.

சிமாண்:—சகலூஸ், பயப்படாதே. மெய்யான தெய்வம் சாக்ஷியாய், உன்னைக் காப்பாற்றுவேன்.

ஷேக்:—(அங்கு நின்று கொண்டிருந்த வேலையாளைப் பார்த்து) இந்த வீரனை அழைத்துப் போய் விருந்தினர் தங்கும் கூடாரத்தில் வசதியான இடத்தில் இருக்கும்படி வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து, நீயுங் கூடவேயிருந்து கவனித்துக்கொள்.

வீரனை அழைத்துக் கொண்டு வேலைக்காரன் வெளியிற் சென்றுன்: ஷேக் மலர்ந்த முகத்துடன் சிமாண்டனிஸைப் பார்த்து, சந்தோஷத்தால் மனம் பூரித்தான். சிமாண்டனிஸ் தனது எஜமானியையும் அவர் மகளையும் மீட்க வழிகாட்டிய கடவுளை மனமாற வாழ்த்தினுன். இஷ்டரீம் பிரபு தமது கணக்கர்களில் ஒருவனை அழைத்துவரச் செய்து, வலிரியஸும் மேஸலாவும் பென்ஹூர் பிரபுவின் குடும்பத்திற்கிழைத்த தீமைகளையும் இன்னும் செய்ய நினைத்துள்ள கொடுமைகளையும், சவிஸ்தாரமாக எடுத்துரைத்து சகலூஸ் போர்வீரனுடைய வரலாற்றையுந் தெரிவித்து அநியாயமாய்த் தண்டிக்கப்பட்டவர்களை

விடுவிக்கவும் அக்கிரமிகளைக் கண்டிக்கவும் வேண்டுமென்று, உரோமை அரசருக்கு ஒரு மனுவை எழுதி முடித்தனர். ஷேக்கும் சிமாண்டனிஸும் அதில் கையொப்பம் வைத்தனர். முல்லாவை மட்டும் அழைத்து வரும்படி ஒரு வேலையாள் தோட்டத்திற்குள் அனுப்பப்பட்டான். சற்று நேரத்தில் முல்லாவும் அங்கு வந்து சேர்ந்தான். சிமாண்டனிஸ் தயாரிக்கப்பட்ட மனுவை அவனிடம் காண்பித்து "முல்லா, இம் மனுவை உடனே அரசருக்கு அனுப்பவேணும். இதை நமது தலைமைக் காரியஸ்தன் வசம் அனுப்பலாமா?" என்று கேட்டான். "ஆமாம், அவர் தான் இதற்குத் தகுந்த ஆள்: அவரை சீக்கிரம் அனுப்பினுல் நல்லது" என்ருன் முல்லா.

சிமாண்:—நீ இப்பொழுதே போய் அவனை இங்கழைத்து வா.

முல்லாவும் தலையை அசைத்துக்கொண்டு வெளியிற் சென்ருன்.

II

ஷேக்குடன் தனியே பேச வேண்டுமென்ற கருத்தோடு எஸ்தரையும் யூதாவையும் தோட்டத்திற்குள் கூட்டிக் கொண்டு போய் வரும்படி சிமாண்டனிஸ் முல்லாவை அனுப்பினது வாசகர்களுக்கு ஞாபகமிருக்கலாம். அவ்விதமே முல்லா அவ்விருவரையும் அழைத்துச் சென்று தோட்டத்தின் பல பாகங்களையும் காண்பித்து விட்டு, தோட்டத்தின் மத்தியில் அழகாய் அமைந்தவொரு தடாகத்தின் கரையில் மூவரும் உட்கார்ந்து, அதின் வனப்பையும் மேன்மையான தோற்றத்தையுங் கண்டானந்தித்துக் கொண்டிருந்தனர். அச்சமயத்தில் தான் ஷேக்கின் வேலையாள் முல்லாவை மட்டும் அவனுடைய எஜமானழைப்பதாகக் கூட்டிக்கொண்டு போனுன். எஸ்தரும் யூதாவும் வெகுநேரம் மௌனமாய் உட்கார்ந்திருந்தனர். சென்ற முல்லா திரும்பவில்லை. யூதா சற்று தூரத்தில் உட்கார்ந்திருந்த கன்னிகையான எஸ்தரின் மாசற்ற முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தான். அவளோ நாணமுற்றவளாய்த் தலைகுனிந்த வண்ணமிருந்தாள். "எஸ்தர்," என்றழைத்தான் யூதா. "எஜமான்" எனப் பகர்ந்து இன்முகம் காட்டி எழுந்து நின்ருள் எஸ்தர்.

யூதா:— முல்லாவை இன்னுங் காணேமே. நாம் ஏன் இங்கு உட்கார்ந்திருக்க வேண்டும்? வீட்டிற்குப் போவோமா?

எஸ்தர்:— மத்தியானம் சாப்பிடும் நேரத்திற்குத்தானே நம்மை வரச் சொன்னார்கள்.

யூதா:— அதுவரை இங்கென்ன செய்வது...... சரி அதோ மிதந்துகொண்டிருக்கும் படகில் நாம் இருவரும் ஏறி, இந்த தடாகத்தைச் சுற்றி வரலாமா?

எஸ்தர்:— ....... எஜமான், தங்கள் சித்தம் போலாகட்டும் தங்களுடைய அடிமையான எனக்கு நன்றாய்த் தண்டுவலிக்கத் தெரியும்.

யூதா:— அடிமையா! "அடிமை" என்ற வார்த்தையைக் கேட்பதே எனக்கு வெறுப்பாயிருக்கிறது. அதிலும் தண்டு வலிக்கும் அடிமை என்றாலோ, என் அங்கமெல்லாம் ஆடிவிடுகிறது. என்னையும் அடிமையாக்கினார்கள். நான் அப்பொழுது பட்ட பாடு போதும். அதின் நினைவொன்றே எனக்குப் பெருந் திகிலை உண்டாக்குகிறது. இனிமேல் அவ்வார்த்தையைச் சொல்லாதே.

"ஐயனே, அடியாள் அறியாமற் சொன்னேன்: மன்னிக்க வேண்டும்." என்று சொல்லிக்கொண்டே எஸ்தர் முழந் தாட் படியிட்டு வணங்கினாள். யூதா விரைந்தோடி தன்னையும் அறியாமலே, அப்பூங் கொடியாளின் கரங்களைப்பற்றித் தூக்கி நிறுத்தினான். மறு க்ஷணத்தில் அவளைக் கட்டிப்பிடித்து மார் புறத்தழுவி அவளது பிரகாசமுள்ள அழகான கன்னத்தில் ஒரு முத்தங்கொடுத்தான். "அடி கட்டழகி, உன்னைக் கண்டது முதல் உன்மேல் நான்........" என்று கூறிய வண்ணம் அவளது தலையை மார்புடன் சேர்த்து அணைத்தான். எஸ்தரோ எதிர் பாராத இச் சம்பவத்தின் இன்ப உணர்ச்சியைத் தாழ மாட் டாமல் பெருமூச்சு விட்டாள். தான் செய்தது தகாத காரிய

மென நினைத்தான் யூதா. உடனே அம் மங்கையை விட்டு விலகி நின்றான். "பெண்மணி, எனது மிருக சுபாவம் உன்னிடம் இப்படி நடந்து கொள்ளச் செய்துவிட்டது: என்னை நீ மன்னிப் பாயா?" எனக் கேட்டான்.

எஸ்தர்:— பேஷ். நானா மன்னிக்க வேண்டும்? குலத்திலும், குணத்திலும், செல்வத்திலும், குன்றாத மேன்மை படைத்த தேவரீருக்கு என் தந்தையும் நானும் முழுதும் சொந்தமாயிருக் கும் பொழுது........... ஆனால் ............

யூதா:—அப்புறம் என்ன? ஏன் மௌனம்? சும்மா சொல்லு.

எஸ்தர்:—என்னுடன் தாங்கள் பந்தப் படுவீர்களானால், தங் களுக்கு உலக நிந்தனை உண்டாகுமே யென்று தான் கவலையடை கிறேன்.

யூதா:—அடி என் அலங்கார சொரூபி, உலக நிந்தனை நமது ஆனந்தத்திற்கு ஓர் குறைவையும் உண்டாக்காது. ஆனால் என் உயிரினுமினிய மாதாவையும், அருமைச் சோதரியையும் கண்டு பிடித்தவுடன் தெய்வசாக்ஷியாக உன்னை மணந்து கொள்ளுவேன்: இதுவுண்மை.

எஸ்தர்:—ஆண்டவனே, தேவரீர் சித்தம் எனக்குப் பெரும் பாக்கியம்.

"அப்படியானால் என் அருகில் வா" என யூதா அழைக்க, "வந்தேன்," எனப்பகர்ந்து யூதாவின் அருகில் வந்து நின்றாள் எஸ்தர். காந்தி வீசும் அவ்விருவரின் நேத்திரங்களும் மின்சார சக்தி பெற்றவை போலக் காணப்பட்டன. ஆனந்தப் பரவசனாய் நம் கதா நாயகன் எஸ்தரின் அதரத்தில் அன்புடன் ஒரு முத்தம் ஈந்தான். சிறிது நேரம் சென்று இருவரும் தடாகத்திலிருந்த ஓடத்தில் ஏறினர். தன் மனதைக் கொள்ளை கொண்ட எஸ் தரின் இஷ்டம்போல யூதா படகில் சுக்கானைப் பிடித்திழுக்க,

(பாட்டு)

எஸ்தர் தண்டு வலிக்க வாரம்பித்தாள்: படகும் நகன்றது; இருவரும் பின்வரும் பாட்டை இன்பமாய்ப் பாடினர்:—

யூதா:—

மந்தமாருதம் வீசுதே மணம்
சொந்தமென்றன் தேவி கொஞ்சிடும் இவ்வாவி (மந்த)
கந்தம் வீசும் நாரி காதலி சிங்காரி
சுகந்த மணவாரி சுகிப்போம் நாம் தேவி (மந்த)

எஸ்தர்:—

மாசில்லா நேசா தூய உல்லாசா
மந்தமாருத மிருமன உறைவாசா
மகிழ்வோம் நாம்கூடி மாபரன் நாடி
இயற்கை யமைத்த அவ்வீசனைத்தேடி (மாசி)

யூதா:—

கொஞ்சிடும் கிள்ளை அஞ்சுகம் இதோபார்
ரீங்கார வண்டுகள் கோரிடும் மலர்நேர் (கொஞ்)
மதிநிகர் மின்னே துணையண்ண கண்ணே
மாமணம் செய்ய எண்ணினேன் என் பெண்ணே (கொஞ்)

எஸ்தர்:—

அன்பிற் சிறந்த மன்னு மணிவண்ணு
அடிமையானன்றோ அரசியாதல் நன்றோ (அன்)
உலகம் பழிக்கும் உற்றோர்கள் சிரிக்கும்
ஒய்யார உம் எண்ணம் பலியாதொழிக்கும் (அன்)

யூதா:—

ஜாதியென்ற பேதம் என்றும் நில்லாது
காதலென்ற நாதம் எக்காள மூதும்போது (ஜாதி)
உண்மைக் காதலரை பிரிக்க இயலாது
உண்மையறியாமல் நீ சொல்வதேது (ஜாதி)

எஸ்தர்:—

நடிக்கும் மயிலும் இசைக்கும் குயிலும்
ஓடும் மடமானும் உறுமும் சிங்கமும் (நடி)
ஒன்ருய் காட்டில் வாழும் உயர்வாக சீராய்
உத்தமா உன்கருணை செப்புவதெவ்வாருய் (நடி)

யூதா:—

இருகண் விருந்தே இருதய மருந்தே
இன்னிசைக்குயிலே இசைந்தாடு மயிலே (இரு)
இனியெந்தனுவி எனதல்ல மேவி
இயம்பு உன்சித்தம் இரப்பனே நித்தம் (இரு)

எஸ்தர்:—

ஆதமின் நாளாய் ஆறுதல் அளிக்கும்
ஆர்வமிகுயூத அருங்குலமன்றே (ஆத)
சீரிய ரோமர் சிறந்த மணாளா
சித்தம் கெலித்தது இத்ததி என் வாழ்நாள் (மாசி)

யூதா:—

ஆதியனாதி பரம்பொருள் ஈசா
ஆர்வ மனத்தை ஆசியளி நேசா (ஆதி)
நேயன் சவரிநாதன் துதிபரமேசா
மரிய இருதயம் மாண்பாய்க்கார் விசுவாசா (ஆதி)

தோட்டத்திற்குள் சென்றவர்கள் சாப்பாட்டு நேரம் ஆகியும் வராதிருப்பதைக் கண்டு ஆச்சரியமுற்றவர்களாய் சிமாண்டனிஸூம் இஷ்டரீமும், ஒரு வண்டியிலேறிக்கொண்டு தோட்டத்தைச் சுற்றிப் பார்த்து விட்டு தடாகத்தை யடைந்தனர். படகிலிருந்தபடியே மேற்கண்ட விதம் பாடிக் கொண்டிருந்த யூதாவையும் எஸ்தரையுங் கண்டு நேத்திரானந்தங் கொண்டனர். காதலர் இருவரும் கரையின் மேல் நிற்கும் வண்டியையும் அதற்குள்ளிருந்து தங்களை இருவர் கவனித்துக்

கொண்டிருப்பதையும் பார்த்துக் கரையேறினர். அதற்குள் வண்டி வேகமாக அப்பால் சென்றுவிட்டது. வண்டியிலிருந்து தங்களைப் பார்த்தவர்கள் யாராயிருக்கலாமெனப் புரியாமல் அவ் விருவரும் கூடாரத்தை யடைந்து கால் கை முகம் சுத்தம் செய்து கொண்டு அசன சாலையை அடைந்தனர். அங்கு அவர் கள் வரவை எதிர்பார்த்திருந்த ஷேக்கும் சிமாண்டனிஸும் அவர்களுக்கு நல்லாசி கூறினர். வழக்கம்போல தேவஸ்துதி முடிந்தது. பிரபுவும் தமது விருந்தினருடன் சந்தோஷமாய் உண்டு களித்தார்; இடை இடையே தமது நண்பனிடம் அவர்களருகிலமர்ந்து போஜன மருந்தும் யூதாவையும் எஸ்தரை யும் கவனிக்கும்படி கண் ஜாடை செய்து இன்பமடைந்தார். உண்டபின் அந் நால்வரும் சிறந்த வேலைப்பாடமைந்த வொரு மண்டபத்தின் மத்தியில் போடப்பட்டிருந்த ஆசனங்களில் அமர்ந்தனர். அந்நேரத்தில் முல்லா தலைமைக் காரியஸ்தனுடன் அங்கு வந்தான். சிமாண்டனிஸ் முத்திரையிடப்பட்ட நீண்ட வொரு உறையைக் காரியஸ்தனிடங் கொடுத்து "வெகு ஜாக்கிர தையாக இதை எடுத்துப்போய் உரோமை மன்னனிடம் சமர்ப் பிக்க வேண்டும். இதைப் பற்றி வேறு யாரும் தெரிந்து கொள் ளாமல் வியாபார ஜோலியாகப் போவதாகச் சொல்லிக்கொள்ளு. மிகவும் கவனமாயிருக்க வேண்டும்," என்றான். அவனும் "இதை என் உயிரே போல என்னுடன் எடுத்துச் சென்று தாங்கள் இட்ட வேலையைத் தவறாமல் திட்டமாய்ச் செய்வேன். இன்று மாலை புறப்படுங் கப்பலிலேயே செல்லுகிறேன்." எனக் கூறி னான். "சர்வ வல்லமையுள்ள கடவுள் நமக்கு ஜெயத்தையும், உனக்கு சுகத்தையும், நம்மெல்லோருக்கும் போதிய நலத்தையும் கொடுப்பாராக," என ஆசீர்வதித்தார் இஷ்டரீம் பிரபு. முல்லா தங்கள் கணக்கப்பிள்ளையைக் கப்பலேற்றி அனுப்பி விட்டு வருவ தாக விடைபெற்று தலைமைக் காரியஸ்தனுடன் வெளியிற் சென் றான். விஷயமின்ன தென்று அறியாமல் எஸ்தரின் முகத்தைப் பார்த்தபடி உட்கார்ந்திருந்தான் யூதா.

---

# பதின்மூன்ரும் அத்தியாயம்.

## பந்தய இரதவோட்டம்

**ப**ந்தய ஓட்டங்கள் நடைபெறுவதின் முதல் நாளே காக்ஷி சாலை மைதானத்தின் வாசல்கள் திறந்து வைக்கப்பட்டன. அன்று பகல் முழுவதும் அநேகர் அங்குவந்து அவரவருக்குக் குறிக்கப்பட்ட இடங்களில் பந்தயக் குதிரைகளையும் இரதம் முதலிய சேகரங்களையும் நிறுத்துவதற்கும், இன்னும் சிலர் தீனி, குடி வகைகளை வைத்து வியாபாரம் செய்வதற்குமான கடைகளுக்காகவும், பலபல கூடாரங்களையும் டேராக்களையும் அடிக்கவாரம்பித்தனர். காக்ஷி மைதான வேலையாட்களோ வேடிக்கை பார்க்க அனுமதிச்சீட்டு வாங்கியவர்கள் வசதியாயிருந்து பார்ப்பதற்காகத் தட்டுத்தட்டான ஏணிப்படிகளையொத்த அகலமான மரப்பலகைகளால் உயர்ந்த மேடைகளையும், வகை வகையான ஆசனங்களையும் அமைத்து, அவைகளில் அமருபவருக்கு சூரியவெப்பம் தாக்காமல் அவைகளுக்கு மேலே வெகு உயரமான பந்தல்களையும் அமைத்தனர். சூரிய அஸ்தமனத்திற்கு முன் சகல ஆயத்தங்களும் முடிவடைந்தன. ஷேக் இஷ்டரீம் பிரபுவின் ஆட்களும் நல்லதொரு இடத்தில் அழகான பெரிய கூடாரமொன்று அடித்து, அதில் பந்தயத்திற்காகக் குறிக்கப்பட்ட குதிரைகளையும், இரதத்தையும் கொண்டு வந்து நிறுத்தினார்கள். மற்றும் தேவையான சகல வித சாமான்களையுங் கொண்டுவந்து நிரப்பினர்கள். அங்கிருந்த சகலரும் இரவு முழுதும் தூங்காமல் கண் விழித்து அவரவர் கூடாரங்களையும், அதிலுள்ள பொருட்களையும் காவல் காத்து, பலவாறு பேசி, பொழுது எப்போது விடியுமென்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். கதிரவனும் அன்று நிகழவிருக்கும் சம்பவங்களை யாவரும் கண்ணாரக் கண்டு களிக்கத் தன் கதிர்களை வீசிக் கொண்டு மேலே கிளம்பினன்.

பந்தய மைதானம் வட்டமானதொரு இடத்தில் வெகு சிங்காரமாய் அலங்கரிக்கப்பட்டிருந்தது. அவ்வட்டமான சம வெளியைச் சுற்றி அழகான பல நிறக் கம்பங்கள் நாட்டப்பட்டிருந்தன. அவைகளின் உச்சியில் பலவித கொடியாடைகள் ஒய்யாரமாய் பறந்து கொண்டிருந்தன. அக்கம்பங்களை யெல்லாம் ஒன்று சேர்ப்பவை போல அலங்கிருதமான மகர தோரணங்கள் அவைகளில் கட்டப்பட்டு மிக விகசிதமாகத் தோன்றின. அம் மைதானம் சுமார் நான்கு மைல் சுற்றளவுள்ளதாயிருந்தது. அதின் உட்பாகத்தின் பலவிடங்களில் கோலமிட்டதைப்போல, வெள்ளைக் கற்கள் வரிசை வரிசையாய் அமைக்கப்பட்டுப் பல பிரிவுகளாகத் தொகுக்கப்பட்டிருந்தன. இருநூற்றைம்பது அடி அகலமுள்ளதொரு ரஸ்தா அம் மைதானத்தின் உள்ளே சுற்றி அமைக்கப்பட்டிருந்தது. அது தான் இரதவோட்டத்திற்காகத் தயாரிக்கப்பட்ட பாதை.

முன்னிடந் தேடிக் கொள்ளும் நோக்கத்துடன் காலைப் போஜனத்தை முடித்துக் கொண்டு, அந்தியோக்கியாப் பட்டணத்திலுள்ள பிரபுக்கள் சகலரும் தமது பரிவாரங்களுடனும், அந் நகர் தனவந்தர்களும், வியாபாரிகளும், சுக ஜீவிகளுமான சகலரும் சூரிய உதயத்திற்கு முன்னே வண்டிகளிலும், வாகனங்களிலும், அக்காக்ஷிசாலையில் வந்திறங்கினர். பட்டணத்துக் கோட்டை மதிலின் மேலிருந்த சூரிய கடிகையில் மணி இரண்டானதும், அதாவது காலை மணி எட்டுக்கெல்லாம், கடல் மடை திறந்தது போன்ற பேரிரைச்சலுடன் கோட்டை வாசலுக்கும், பந்தய மைதானத்திற்கு மாக ஜனங்கள் ஏராளமாக இடைவிடாமல் வந்து கொண்டேயிருந்தனர். சொற்ப நேரத்திற்குள் மைதானத்தில் ஜனத்திரள் ஏராளமாயிற்று. பந்தயவெளியின் மேல்பாகத்தில், ஓராண்டஸ் நதி ஒய்யாரமாய்ப் பாய்ந்து கொண்டிருந்தது. அதின் கீழ்கரையில் ஜனங்கள் ஏராளமாய்க்கூடியிருந்தனர். அவர்கள் யாரையோ எதிர் பார்த்திருப்பது போலத் தோன்றினது. அச்சமயத்தில் போருக்குப் புறப்படுபவர்கள் போல் உடல் முழுதும் கவச மணிந்தவர்களாய் ஆயுதங்கள் தரித்த சுமார் மூவாயி

ரத்துக்கு மேற்பட்ட வீரர் கூட்டமொன்று பலவித சின்னங்களுடனும், கொடிகளுடனும், சல்பியஸ் மலையிலிருந்து கீழிறங்கி வந்து ஆற்றின் கரையை அடைந்தது. அவ்வகண்ட ஆற்றின் மற்றோர் கரை ஒரு தீவாக விருந்தது. அதில் தான் உரோமை அரசாங்க ஏஜண்டு துரையின் வாசஸ்தலம் இருந்தது. அவரும் சற்று நேரத்தில் ஒரு படகிலேறி இக்கரையில் வந்திறங்கினூர். அதிர் வெடிகள் 'திடும் திடும்' என வானைப் பிளந்து பலத்த ஒலிப்புடன் வெடித்தன. வீரர் படையும் அப்பெரியாருக்கு முன் வணங்கி நின்று அவரை வரவேற்றது. வேடிக்கை பார்த்து நின்ற ஜனங்கள் எல்லோரும் கைகளைத் தட்டிக் கரகோஷம் செய்தனர். ஏஜண்டு துரையை அவர்களழைத்துச் சென்று காக்ஷி மைதானத்தின் முக்கியமான இடத்தில் அவருக்காக அமைக்கப்பட்ட ஆசனத்தில் அவரை அமரச் செய்தனர். அந்நேரத்தில் கொம்பு தாரைகள் ஊதப்படும் சத்தங் கேட்கப் படவே, சகலரும் அது கேட்கப்படும் கீழ்த்திசையை நோக்கினர்: அங்கு பலவித குரல்கள் ஒன்று படுவதாலாகும் பெருத்த ஆரவாரமும் அநேக வாத்தியங்கள் ஏககாலத்தில் சப்திப்பதால் உண்டாகும் பலத்த ஓசையும், காது செவிடு படும்படி செய்யலாயின. சற்று நேரத்தில் பந்தய மைதான வாசலில் பிரமாண்டமான வொரு கூட்டம் ஊர் வலம் வருவதாகக் காணப் பட்டது. முன் அணியில் பாடகர்கள் கோஷ்டி ஒன்று வீணை தப்பு தாஸாவுடன் பெருமுழக்கம் செய்து வர, அவர்களின் பின்னே பந்தய ஓட்டங்களை நடத்தும் நிர்வாகியும், நகர பரிபாலக அதிகாரிகளும், பட்டணத்திலுள்ள பிரபல உத்தியோகஸ்தர்களும், பந்தயங்கள் நடத்தத் தெரிந்தெடுக்கப் பட்டவர்களும், பந்தயங்களுக்குப் பொருளுதவி செய்துள்ள நன் கொடையாளர்களும் கண்களைக் கவரும் பலவித விலையுயர்ந்த ஆடைகளணிந்து, கழுத்தில் புஷ்பஹாரங்கள் தொங்க அழகாய் அணி வகுத்து நடந்து வர, அவர்களின் பின்னே மேளதாளங்கள் சப்திக்க, பல்லியம் விம்ம, சங்கு முழங்க, எக்காள சப்தங்கள் கிளம்ப, பூசாரிகள் ஒன்று சேர்ந்து மந்திரங்கள் சொல்லிக் கொண்டே வர, நடன மாதர் சோபனப் புகழ் பாட, பலவித தேவர்களின் விக்கிரகங்களைச் சிலர் மரப் பீடங்

களிலும், சப்பரங்களிலும் வைத்துத் தாங்கி, "ஹாய் ஹோய்.." என்று சொல்லித் தூக்கிக் கொண்டு நடக்க, வேறநேகர் பெரிய தெய்வத்தின் சிலைகளை நாலு சக்கரங்களையுடைய அழகான தேர்களிலும் வைத்திழுத்துப் பெரும் ஆரவாரம் செய்து கொண்டு செல்ல, அதற்கப்பால் பந்தயங்களில் கலந்து கொள்ளப் போகும் வீரர்களும், மல்லர்களும், பயில்வான்களும், ஜவான்களும், இரதமோட்டுபவர்களு மானவர்களுடைய பெரும் கூட்டம் தோன்றியது. இவர்களெல்லாரும் வெகு அழகான உடைகள் உடுத்தியிருந்தனர். இக் கூட்டம் பந்தய மைதானத்தின் உள்ளே நுழைந்து, ஒரு தரம் சுற்றி வந்து நின்றது: சகலரும் அக்காக்ஷியைக் கண்டானந்தித்தனர்; சந்தோஷத்தினால் சிறுவர்கள் கூட்டம் கூட்டமாக நின்று கொக்கரித்துக் கூத்தாடினர். வாலிபர்கள் 'ஆஹா! ஓஹோ!' வென ஆர்ப்பரித்தனர். எங்கு பார்த்தாலும் கொண்டாட்டமும் தலையாட்டமுமாக விருந்தது. தேர்களின் பிறகே போய்க் கொண்டிருந்த பந்தயக் காரர்களைக் கண்ட ஜனங்களுக்கு உண்டான உற்சாகத்திற்கு அளவில்லை. அவரவருக்கு வேண்டிய வீரனின் பெயரைச் சொல்லி, உரக்கக் கூவியழைத்து "ஜே! ஜே!" என்று பேரொலியிட்டுக் கொண்டாடினர்: புஷ்பங்களை வாரி வாரி அவர்கள் மேல் இறைத்தனர்; பூ மாலைகளை அவர்கள் கழுத்தில் சூட்டினர். ஜனத்திரளில் பெருத்த இரைச்சலேற்பட்டது. 'அவன் தான் ஜெயிப்பான்' 'இல்லை, இல்லை' 'இவன் தான் ஜெயிப்பான்' என்று ஒவ்வொருவரும் சண்டையிட்டுப் பந்தயங்கள் கூறிக்கொண்டிருந்தனர். தமக்குப் பிரியமான வீரனுக்காய்க் குறிக்கப்பட்ட நிறமுள்ள சிறு துணிக் கொடிகளை விலை கொடுத்து வாங்கித் தமது ஆடைகளின் மேல் தரித்திருந்தனர். யூதனின் நிறமாகிய வெள்ளையும், உரோமனுடைய வர்ணமான சிகப்புக் கொடிகளுமே நிரம்பியிருந்தன; எது அதிகமென எண்ணிக்கையிடமுடியாததாக விருந்தது. முல்லாவோ, சிகப்புநிற மணிந்தவர்களின் மத்தியில் தனது நண்பனின் வெள்ளைக் கொடியை குத்திக்கொண்டு உட்கார்ந்திருந்தான். அவனுக்கு சற்று அப்பால் ஷேக்கும், சிமாண்டனிஸும், அவன் மகள் எஸ்தரும்

அவர்களருகே இராஜம் என்பவளும், அவள் தந்தை பல்தசாரும் ஆசனங்களில் அமர்ந்திருந்தனர்.

இரதமோட்டிகளின் காக்ஷியே சகலத்திலும் சிறந்ததாயிருந்தது. குதிரைகள் பூட்டிய இரதத்தில் ஒவ்வொரு வீரனும் ஒய்யாரமாய் உட்கார்ந்திருக்க, குதிரைக்காரர்கள் முன்னால் நிற்கும் குதிரைகளை மெதுவாக நடத்திச் சென்றனர்: சாரதிகள் ஒவ்வொருவரும் மார்பையும் முதுகையும் மட்டும் மறைப்பதான பலநிறமுள்ள சிறு சிறு சொக்காய்களைத் தரித்து தலைக்கவச மணிந்திருந்தனர்; அவர்களின் கம்பீரமான பார்வையும், தைரியமுள்ள தோற்றமும் பார்ப்போருக்குப் பரமானந்தத்தை விளைவிப்பதாயிருந்தது. நம் கதாநாயகனோ, யாதோ ஒரு காரணத்தை முன்னிட்டு அநேகமாக, ஏதாவது சூழ்ச்சிக்குள்ளாக நேரிடுமென்ற எண்ணத்தினாலேயே, யாதொரு ஆடம்பரமுமின்றி, தலையில் கவசமுமில்லாமல் வந்து கொண்டிருந்தான்: இவர்களைக் கண்டவுடன், சகலரும் சந்தோஷத்தால் சத்தமிட்டுக் கொண்டாடினர். புஷ்பமாரி பெய்து அவற்றால் இரதங்களையே நிரப்பினர்: கையிலிருந்த புஷ்பங்கள் செலவானதும் ஒரு சார்பார் "மேஸலா, மேஸலா" என்று பேரிரைச்சலிட்டுக் கூவியழைத்தனர். வேறநேகர், "பொனூர் பொனூர்" என வீறிட்டுக் கத்தினர். "ஆஹா என்ன நேர்த்தி! என்ன ஒய்யாரம்! யௌவன புருஷன்! உரோமை தேசத்தவன்: அவனுடைய தேரழகும், குதிரைகளின் சொகுசான நடையும், கண்ணைப் பறிக்குதே! தெய்வமே அப் பூமானுக்குத்தான் வெற்றியளிக்க வேண்டும் என்றாள் பல்தசாரின் மகள் இராஜம். அவளருகிலிருந்த மங்கை எஸ்தரோ, தன் மனதைக் கவர்ந்த காந்தன் யூதாவுக்கே வெற்றியளிக்கும்படி தெய்வத்தை மனதில் தியானித்து மன்றாடினாள். பவனி சென்ற கூட்டம் காக்ஷி மைதானத்திலிருந்து புறப்பட்ட இடம் போய்ச் சேர்ந்ததும் கலைந்தது. பந்தய ஓட்டக்காரர்களில் அநேகர் ஜனக் கூட்டத்தில் கலந்து கொண்டனர். மேஸலாவும் அவனது நண்பர்களிருக்குமிடத்தை அடைந்தான். யூதன் மேலும், உரோமன் மேலும் பல பல பந்தயங்கள் கட்டப் பட்டன. பலகை மேடையிலிருந்த ஒருவன்

"யூதன் தான் ஜெயிப்பான்; நூறு ஷெக்கல் பணம் பந்தயம்" என்றான். "போடா, போடா, உளறாதே. யூதனாவது இரத மோட்டிக் கெலிப்பதாவது. அவனுக் கென்னடா தெரியும் அந்த வித்தை." என்றான் வேறொருவன். "போடா அசடே, அவனைப்பார்: மற்றவர்களைப் பார்க்கிலும் எவ்வளவு திடமான மனதோடு தைரியமாகப் பயமின்றி சாவகாசமாய்ப்போகும் சிங்கார நடையைப் பாரடா" என்றான் முதலில் பேசியவன். "ஆமா, அவன் இரத மெங்கே? குதிரைகளெங்கே? யாருடைய குதிரைகளை எந்தத் தேரிலே பூட்டி ஓட்டப் போகிறான்? வெறும் ஆளாவுலோ போகிறான்" என்றான் மற்றொருவன். "அடடா, நீ விளம்பரச் சீட்டைப் பார்க்க வில்லையா? இந்தா பார்! அவன் ஷேக் இஷ்டரீம்பிரபுவின் குதிரைகளைத்தான் ஓட்டப்போகிறான். அவனை லேசா எண்ணாதே, உரோமையன்களுடைய தந்திர மந்திர மெல்லாம் அவனுக்குத் தெரியும்." எனப் புகழ்ந்து பேசினான் நான்காம் பேர்வழி. அவர்களின் பிறகே உட்கார்ந்திருந்த பெண் ஒருத்தி "உரோமயனைத் தள்ளு குப்பையிலே: யூதசிகாமணியின் முகவசீகரமும், கண்ணியமான தோற்றமும் அவனை வீராதி வீரனென்று சொல்றது போலிருக்கே" என்றாள். உடனே முதலில் பேசியவனுக்கு அதிகமாக உற்சாகம் பிறந்தது. "எவனடா என்னோடே பந்தயங் கட்டுறவன்: யூதனுக்கு நான் நூறு ஷெக்கல் பந்தயம் என்று உறக்கக் கூவினான். அவன் பக்கத்திலிருந்த அந்தியோக்யா நகரவாசி ஒருவன் "அடே முட்டாளே, பெரிய ஒரு பந்தயங் கட்டியிருக்கிறார்களடா: மேஸலா ஜெயித்தால் ஐந்து தாலந்துகள், யூதன் ஜெயித்தால் முப்பது தாலந்துகள் என்று ஓலை யெழுதி யிருக்கிறார்களே. உன் பந்தயம் எம்மாத்திரமடா" என்றான். "ஹா....ஹா....ஹா இவன் தான் அந்தியோக்யாப் பட்டணத்து அசட்டுக் கழுதை. வீணாகக் கத்தாதேடா, அந்த மேஸலாவே தன் மேலே தானே பந்தயங் கட்டி யிருக்கிறான். உனக்கு என்ன தெரியும். சொம்மா வாயை மூடிக்கோ." எனக்கோபமாய்ப் பேசி முடித்தான் முதற் பேர்வழி.

அப்பொழுது பலவித விளையாட்டுகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன: மல் யுத்தங்களும், குத்துச் சண்டைகளும்,

தாவுதல், குதித்தல், ஓடுதல் முதலிய பந்தயங்களுமான நிகழ்ச்சிகள் ஒன்றன் பின் ஒன்ருய் நிறைவேறின. பகல் மணி இரண்டாயிற்று: "படாங் படாங்" எனப் பிடாங்கு வெடிகள் போடப்பட்டன. "இனி இரதவோட்டம் மட்டுந்தான்" என்று சொல்லிக் கொண்டே, பலர் இருப்பிடத்தை விட்டு சற்று அப்பாலிருந்த கடைகளுக்குப் போய் சிற்றுண்டி அருந்தினர். உட்கார்ந்த இடத்தைவிட்டகலாதிருந்தவர்கள், கொட்டாவி விட்டு அட்டவணையைப் பார்த்துக் கொண்டே ஒவ்வொருவரும் வேடிக்கையாகப் பேசிக் கொண்டிருந்தார்கள். ஷேக் இஷ்டரீமும் முல்லாவும் பந்தய வளைவுக்குள் நுழைந்தார்கள்: யூதா புன்னகை பூத்த முகத்துடன் அவர்களை எதிர்கொண்டு வந்தான்; அவனை ஒரு கையால் அரவணைத்து மறுகரத்தால் அவன் முதுகைத்தட்டிக் கொடுத்து, இஷ்டரீம் பிரபு உற்சாக மூட்டினர்.

யூதா:—முல்லா, நான் சொன்னதை முடித்து விட்டாயா?

முல்லா:— வசமாய் அவனே சிக்கிக் கொண்டான். அவன் காதில் விழ சத்தமாய் நான் ஒருவனோடு பந்தயங் கூறிக்கொண்டிருந்தேன். 'ஐந்து தாலந்துகள், மூன்றுக்கு ஒன்று' என்ருன். 'இவ்வளவு தானு' வென்ருன் அவனருகிலிருந்தவன். 'ஐந்துக்கு ஒன்று வைக்கலாமே' என்ருன் மற்றுமொருவன். என்னுடன் முதலில் பேசினவன் சற்று யோசனை செய்தான். அவர்கள் முன்னே உட்கார்ந்திருந்த மேஸலா 'பந்தயம் என்னுடையதாயிருக்கட்டும். ஆறுக்கொன்று' என்ருன். நல்லதென்று சம்மதித்தேன். மேஸலா ஜெயித்தால், ஐந்து தாலந்துகள் வாங்கிக் கொள்ள வேண்டும். நீங்கள் ஜெயித்தால், நமக்கவன் முப்பது தாலந்துகள் கொடுத்துவிட வேண்டும்.

யூதா:— இதென்ன வெறும் வாய்ப் பேச்சுதானு?

முல்லா:— இல்லை, இல்லை, இதோ ஓலை. இதை அவன் கைப்படவே எழுதி வாங்கினேன். நானும் ஒரு எதிரிடை எழுதிக் கொடுத்திருக்கிறேன். இரண்டிலும் முத்திரை யிட்டிருக்கிருேம். இதோ பாருங்கள். (ஓலை யொன்றை நீட்டினுன்.)

யூதா:— (திருப்தியுடன்) பேஷ், பேஷ், முல்லா, உன் சாமர்த்தியம் யாருக்கு உண்டு! நீ மிகவும் கெட்டிக்காரன்.

ஷேக்:— நண்பரே, இந்த அட்டவணையைக் கவனித்துப் பார்த்தீரா? யூதா குவிண்டஸ் ஆரியுஸின் அபிமான புத்திரன் என்றல்லவோ பதிவு செய்ததாக முல்லா சொன்னான். அப்படியின்றி யூதா ஒரு யூதன் என்றல்லவோ அச்சிட்டிருக்கிறார்கள்.

யூதா:— (அட்டவணையைப் பார்த்துவிட்டு) நிபந்தனைகளை மட்டுந்தான் வாசித்தேன். மற்றதைக் கவனிக்கவில்லை; இருக்கட்டும். இதுவும் அவன் ஏற்பாடுதான்.

ஷேக்:— என்றாலும் தோஷமில்லை, மனதைப் பதறவிடாமல் எப்படியாவது நீர் ஜெயித்தால் தான் நமக்கு மரியாதை. இல்லாவிட்டால், நாம் வெளியில் தலைகாட்ட முடியாது. கவனம் வைத்துக்கொள்ளும். மூன்று வளைவு முடியும் வரை ஒரே நிதானமாய்ப் போகவேண்டும். பிறகு கொஞ்சங் கொஞ்சமாய்க் குதிரைகளை விரட்டும், ஞாபகம்!

யூதா:— ஆகா, மறக்கமாட்டேன். தவறாமல் நானே ஜெயிப்பேன்; சந்தோஷமாய்ப் போய் வாருங்கள்.

"ஆண்டவனது ஆசீர்வாதம் உமதுமேல் நிரம்பியிருக்கிறது. அதோ பாரும்; எங்கு பார்த்தாலும், உமது வெள்ளை நிறம் தான் பிரகாசிக்கிறது" என்று ஷேக் சொல்லவே, யூதா வேடிக்கை பார்க்க வந்துள்ள ஜனக் கூட்டத்தை நோக்கினான்: இரு கரங்களையும் கூப்பி நமஸ்கரித்தான். ஜனங்கள் மத்தியில் பேரிரைச்சலுண்டாக "பொனாருக்கு ஜே! பொனாருக்கு ஜே!" என்று ஆயிரக் கணக்கான பேர்களின் குரலொலி பந்தய மைதானத்தில் எதிரொலியிடும்படி சப்தித்தது. "சரி, நேரமாகிவிட்டது. சுகமே போய் ஜெயத்துடன் திரும்பி வாரும்" என்று கூறி, யூதாவை அனுப்பிவிட்டு ஷேக் தனது நீண்ட தாடியைத் தடவிக்கொண்டே முல்லாவுடன் வேடிக்கை பார்க்கும் ஜனங்களின் மத்தியில் போய் உட்கார்ந்து கொண்டார்.

இரதவோட்டத்திற் கென்று அமைக்கப்பட்ட வட்டமான ரஸ்தாவின் கீழ் கோடியில் முன் வரிசையில் ஏழு கம்பங்களும், பின் வரிசையில் ஏழு கம்பங்களும் நாட்டப்பட்டிருந்தன. காக்ஷிசாலே வேலையாட்கள் முன்னும் பின்னுமாக நின்ற அந்த ஸ்தம்பங்களை வெள்ளை நிறமுள்ள கயறுகளால் கட்டி அவைகளின் நடுவில் ஆறு இரதங்களையும் இழுத்து வந்து நிறுத்தினர். முன்னால் நாட்டப்பட்டவைகளுள் இரு கோடியிலிருந்த கம்பங்களின் மேல், ஒன்றில் ஏழு மரக் குண்டுகளையும், மற்றொன்றில் மீன் வடிவத்தைப் போன்ற ஏழு மரப்பாச்சிகளையும் வைத்தார்கள்.

எஸ்தர்:— ஐயா, ஷேக்கவர்களே, அந்தக் கம்பங்களின் மேல் எதையோ வைக்கிறார்களே, அது எதுக்காக?

ஷேக்:— அம்மணி, நீ இதற்கு முன் பந்தயவோட்டம் பார்த்ததில்லையா?

எஸ்தர்:— ஒரு போதும் நான் பார்த்ததில்லை.

ஷேக்:— அவைகளைக் கொண்டு தான் எத்தனை சுற்று ஆயிற்றெனக் கணக்கிடுவார்கள். ஒரு சுற்று வந்தவுடன் முதலாவது இரதம் அந்த எல்லையைத் தாண்டினதும் அந்தக் கம்பத்திலுள்ள ஒரு மரக்குண்டை எடுத்துக் கீழே போட்டு விடுவார்கள். அதே சுற்றில் கடாசியாக வரும் இரதம் அந்த எல்லையைத் தாண்டினதும் மற்ற கம்பத்திலிருந்து நீண்ட ஒரு மரப்பாச்சியையுங் கீழே தள்ளி விடுவார்கள்.

நிகழ்ச்சிக் குறிப்புகளில் கண்டபடி இரதங்கள் அந்தந்தக் கிரமமான நம்பரில் நிறுத்தப்பட்டன. இரதமோட்டும் வீரர்கள் அவரவருக்குக் குறிக்கப்பட்ட நிறமுள்ள சட்டைகளையணிந்து எல்லையை அடைந்தனர். அவர்களின் பந்தயக் குதிரைகளை குதிரைக்காரர்கள் பிடித்து வந்து நிறுத்த, வீரர்கள் சொன்னபடி அவைகள் இரதத்தில் பூட்டப்பட்டன. முதல் கட்டத்தில் மஞ்சள் நிறத்தையுடைய லைஸிப்பஸ் என்ற கொருந்தியனின் தேர். இரண்டாவதாக சிகப்பு நிறமணிந்த மேஸலாவின் இபந்திரம். மூன்றாவதாகயிருந்தது பச்சை நிறம் அடையாளமாக

வுள்ள அத்தீனிய தேசத்து கிளீன்தஸின் கொடிஞ்சி. நான் காவதாய் நின்றது டிஸீயுஸென்ற பைஸாந்தியனின் குயவு. அவனது நிறம் கருப்பு. ஐந்தாம் எல்லையில் ஸிடோனியஞன நீலச் சட்டை தரித்த ஆத்பேத்துஸின் வையம். ஆருவது நின்றது தான் வெள்ளை நிறத்தை அடையாளமாகக் கொண்டுள்ள நம் கதாநாயகன் யூதாவின் அழகிய இரதம். மேற்கூறிய முதல் ஐந்து பந்தயக்காரர்களின் பரிகளெல்லாம் பற்பல பந்தயங் களில் ஜெயமடைந்தவைகள்: யூதாவின் வசமுள்ள ஷேக் இஷ்டரீமின் துரகங்களோ, புதிதாய் முதல் தடவையாக பந்தயத்தில் ஓடுபவைகள். ஆனல் யூதாவின் பெருமையை இரண்டொருவர் நீங்கலாக அப்பெருங் கூட்டத்தில் எவரும் அறிந்ததில்லை. கடந்த மூன்ருண்டிலும் அவன் உரோமை நகரிலுள்ள பிரபலமான மாக்ஸிமியன்காக்ஷி சாலைக்கு வந்த வீரர்களை யெல்லாம் ஜெயிக்க விடாமல் தலைகுனியச் செய்ததும், உரோமையில் நடந்த பிரபல வீரர்களின் போட்டிப் பந்தயக் கொண்டாட்டங்களில் வெற்றி மாலை சூடப்பட்டு உரோமைச் சக்கரவர்த்தியால் பெரிதும் கொண்டாடப்பட்டதும், உலகக் குதிரைப் பந்தயத்தில் தமது திறமையுள்ள குதிரைகளைக் கொண்டு யாவரையும் ஜெயித்து வரும்படி ஆதரவளிக்கப்பட்டதுமான யூதாவின் உயர் தன்மைகளையும், பராக்கிரம மிக்க வீரச்செயல்களையும் யாரறிவார்?

காக்ஷி சாலையின் நாலா பக்கங்களிலும் அமைதி யேற்பட்டிருந்தது. அதிகாரி யொருவன் பந்தய இரதமோட்டிகளை யணுகி, அவர்கள் அனுசரிக்கவேண்டிய விதிகளை விளக்கமாய் எடுத்துச் சொல்லி முடித்து, அவர்களை தயாராகவிருக்கும்படி உத்திரவிட்டான். அவனுக்குச் சற்று முன்னல் ஒருவன் கையில் எக்காள வாத்திய மொன்றை வைத்துக்கொண்டு அதிகாரியின் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான்: இரதமோட்டிகளும், அவரவர் இரதத்திலேறி நின்று குதிரைகளின் லகான் கயிறுகளைத் தங்கள் இடுப்பைச் சுற்றிப் போட்டுக் கொண்டு இடது, கையால் லகானின் மத்தியபாகத்தையும், வலது கையில் சவுக்கையும் பிடித்து தயாராக நின்ருர்கள். இரதங்களுக்கு முன்னே கட்டப்பட்டிருந்த கயிறு அவிழ்க்கப்

பட்டது: எக்காளக்காரன் ஒருதரம் வாசித்து நிறுத்தினதும் பந்தயக்காரர்கள் இரதங்களை ஓட்டவேண்டுமென்பதே ஒழுங்கு. அதிகாரி வாத்தியக்காரனைப் பார்த்து 'தயார்' என தனது கையை உயர்த்தினான். 'உஜார்' என்று சொல்லி இரதமோட்டிகளின் பக்கம் வலதுகையை நீட்டிக்காண்பித்து நின்றான். ஜனக்கூட்டத்தில் "உம்" என்ற சத்தமும் பரபரப்பும் ஏற்பட்டது. ஆவலுடன் சகலரும் எதிர்பார்த்திருந்த நேரமும் வந்தது: எக்காளக்காரனும், ஒருதரம் வாசித்து நிறுத்தினான். தயாராக நின்ற ஆறு இரதங்களும் ஏக காலத்தில் பல பெரிய துப்பாக்கிகளினின்றும் வெடிக்குங் குண்டுகளை போலப் பறந்து செல்லலாயின. வேடிக்கை பார்க்க மேடைகளில் உட்கார்ந்திருந்தவர்களெல்லாம் எழுந்து நின்று ஒருவரை யொருவர் தள்ளிக்கொண்டு தாறுமாறான வார்த்தைகளைப் பிரயோகித்துச் சந்தடி செய்யலாயினர்: பலகைகளின்மேல் ஏறிக்குதித்தனர் பலர், உயரத்தில் போடப்பட்டிருந்த பந்தல் கால்களைப்பற்றி ஏறினர் சிலர்; திடீரென ஏற்பட்ட கலவரத்தால் இந்த வோட்டத்தைக் காணமுடியாமல் பின்னால் தள்ளப்பட்டுத் தத்தளித்தவர்களாய் கூக்குரலிட்டலறினர் அநேகர். அந்நேரத்தில் வீரர்கள் பலர் வெகு சாமர்த்தியமாய் அங்கங்கே உண்டான சந்தடியைப் போக்கி அமைதியை உண்டு பண்ணாதிருப்பரேல், காக்ஷிபார்க்க வந்தவர்களுக்குள் பெருங்கலவர முண்டாகியிருக்கும்.

ஆனால் இரதமோட்டிகளின் நிலைமையோ மிகவும் அபாயகரமானதாயிருந்தது: அவரவருக்கு அளந்து அடையாளமாக்கப்பட்ட நாற்பது அடிப்பாதையை விட்டு விலகிப் போகாமலும், அவனவன் பக்கத்தில் பறந்து செல்லும் தேர்கள் தம்முடைய இரதத்தின்மேல் பாயாமலும்; அவர்களுடைய இரதம் அளவு கோட்டை விட்டு அப்பால் செல்லாமலும் சர்வ ஜாக்கிரதையாக உயிரை வெறுத்துப் பரிகளை விரட்டி யோட்டலாயினர். ஒரே வொரு பார்வையோ, க்ஷணப்பொழுது ஞாபக மறதியோ, ஒரு குதிரையின் கடிவாளம் கைதவறுவதோ, பயங்கரமான ஆபத்தை விளைவிக்குந் தன்மையதா யிருந்தது. கூரிய பார்வையும், திட சித்தமும், உறுதியுள்ள கரமும், தவறாத தீர்மானமுமே அவர்

களுக்கவசியமா யிருந்தது. இந்நிலைமையில் ஜனக்கும்பலி லிருந்து ஒவ்வொருவருக்கும் உரித்தான வீரனை உற்சாக மூட் டுங் கருத்துடன் கிளம்பி யெழுந்த சத்தங்களோ சொற்களோ, கோடையிடியை நிகர்த்த பலத்த பேரிரைச்சலோ, கர்ணகடூர முள்ளவைகளாயிருந்தன. மேஸலாவின் இரதமே யாவற்றிற்கும் முன்னே சென்றுகொண்டிருந்தது. அவன் பிறகே கிளீன்தஸ் வேகமாக ஓடிக்கொண்டிருந்தான். ஆனால் அவனைப் பின்பற்றி துரிதமாக வந்த டிஸியுஸின் இரதம் வளைவான வோரிடத்தில் கிளீன்தஸின் இரதத்தில் மோதி அதைக் குப்புறக் கவிழ்த்திவிட்டு ஓடினது. கொருந்தியனின் இரதம் முன்னே செல்ல ஆரம்பிக்க மேஸலாவுடைய தேரில் நீட்டிக்கொண்டிருந்த அச்சாணியின் கூரான முனை முந்தினவனின் வலது பக்கத்தில் இரண்டாவதாய் நின்ற குதிரையின் முன்னங்காலில் பாய திடீரென அது இரதத் தின் நுகத்தடியில் சாய கொருந்தியனின் தேர் கீழே சரிந்து நொறுங்கிப் போயிற்று. இவ்விதமாகச் சேதமடைந்த வீரர்களை யும், அவர்களின் இரதம் குதிரைகள் முதலியவைகளையும் அதற் கென ஏற்படுத்தப்பட்ட வேலையாட்கள் அவ்வப்போது அப்புறப் படுத்தினார்கள். மேஸலாவின் வீரப்பிரதாபத்தைப் புகழ்ந்து உரோமையர் பெரிதுங் கொண்டாடி ஆனந்தத்தால் கூச்ச லிட்டனர். "அதிர்ஷ்டம் நம்முடையது" என்று கத்தினான் துருஸ் என்ற உரோமையன். "ஆம், ஆம், மேஸலாவுக்கே தான் ஜெயம். ஜோ நம்முடனிருக்கிறார்." என மொழிந்தனர் அவ னது நண்பர்கள். இரண்டு சுற்றுகள் முடிந்தது: மூன்றாவது சுற்று ஆரம்பமாயிற்று; உரோமரின் அட்டகாசத்தைக் கவ னித்த முல்லாவின் சிநேகிதன் சம்பலத் என்பவன் "யூதன் தான் ஜெயிப்பான் நூறு ஸெஸ்தர்தி பந்தயம்" என்று கத்தினான். "சம்மதம்" எனப் பகர்ந்தான் துருஸ். "இன்னும் நூறு ஸெஸ் தர்தி பந்தயம்: கேட்க ஒருவரும் இல்லையா?" என்றான். எவ ரும் அவன் சொன்னதைக் கேட்டதாகத் தெரியவில்லை; மறு படியும் உரக்கக் கூவினான். "மேஸலா! மேஸலா! ஜோ, நம் முடனே" என்று சத்தம் போட்டுக் கொண்டிருந்தனர். அப்

பொழுது உரோமனின் இரதமும் யூதனின் தேரும் வித்தியாச மின்றி சமமாக ஓடிக்கொண்டிருந்தன. மேஸலாவின் ஆட்களோ, தீர் எண்ணத்துடன் பளபளப்பான செம்புப் பட்டயங்களால் சூரிய ஒளியை யூதாவின் கண்களுக்கு நேரே காண்பித்தனர். யூதாவும் சிறிது தத்தளித்தான்: தனது பகைவனை உரோமனை ஒரு பார்வை பார்த்தான்; இன்னும் ஒரே ஒரு சுற்று மட்டுமே, பாக்கி பந்தயம் முடிவடைய. தனது குதிரைகள் தளர்வடையாமல் நிமிர்ந்த தலையுடனிருப்பதைக் கண்டு தனது இரதத்தின் வேகத்தைக் குறைத்தான் யூதா. அவன் பின்னால் டஸியூஸும் ஆத்மேத்துஸும் பேருக்கு மட்டும் இரதங்களை ஓட்டிக்கொண்டு வந்தனர். வஞ்சக நெஞ்சமுள்ள உரோமர்கள் தமது ஜாதியினனையே வெற்றிபெறச் செய்ய சூழ்ச்சிகள் உண்டுபண்ணக் கூடுமோவென யூதா சந்தேகித்தான். நான்காம் சுற்றும் பாதிக்கு மேல் ஆகிவிட்டது: இன்னும் முன்னால் இருப்பது சொற்பதூரமே; தான் கொண்ட சபதம் பலிக்க வேண்டும். வர்மம் பழி தீரவேண்டும். தன் உயிரையே வெறுத்தான். தூய மனதுள்ள தனது நண்பர்களின் மானங்காக்க வேண்டும் என்ற எண்ணம் உதிக்க, முதலில் தன் காதலி எஸ்தரையும் பின்னர் தன் அருமைத் தாயையும் தங்கையையும் நினைத்தான்: தன்னை அறியாமலே ஓர் வித உத்வேகமுண்டாயிற்று.

"மேஸலா ஜெயித்தான்: ஜெயித்துவிட்டான்" என்ற சப்தமே எங்கும் நிரம்பியிருந்தது. ஷேக் இஷ்டரீம் பிரபு, சிமாண்டனிஸ், முல்லா, எஸ்தர் முதலியோருக்கிருந்த நம்பிக்கையும் ஒழிந்தது: உற்சாகமிழந்து போயினர்; ஆனால் யூதா மட்டும் மனோ தைரியத்தை யிழக்கவில்லை. உரோமனுடைய குதிரைகள் களைத்துப்போய்த் தலையைக் கீழே தொங்கப்போடுவதைக் கண்டான். மிகவும் ஊக்கமாய்த் தன் குதிரைகளின் லகான்களைத் தளர்த்தினான். அன்பாய் அப்பரிகளின் பெயரால் அவைகளைக் கூவி அழைத்தான்: இலேசாய் அவைகளைத் தட்டியெழுப்பினான்; தனது இடது கையால் உடலை வளைத்து நிற்கும் லகான் கயிறு

களைத் தாராளமாக வெடுத்து அவைகள் குதிரைகளின் முதுகின் மேல் படும்படி தளர்த்தினன். திடீரென முதுகில்பட்ட உணர்ச்சியால், அதிர்ச்சியுற்ற குதிரைகள் உஸ்ஸென நாற்கால் பாய்ச்சலில் பறக்கலாயின: கயிறுகளை மட்டுங் கெட்டியாகப் பிடித்திருந்தான். அவன் கைகளிலிருந்த வலிமைதான் என்ன? சில வருஷங்களாக அடிமைத்தனத்திலிருந்து கப்பலில் தண்டு வலித்ததால் ஏற்பட்ட முக்கியமான ஒரு அனுகூலமே அது. நான்காம் சுற்று முடிய, அதாவது இரதவோட்டம் முற்றுப்பெற, இன்னும் இருநூறு செஜதூரம் மட்டுமே இருப்பதை உணர்ந்தான். காற்றாய்ப் பறந்து செல்லும் தனது அழகிய அரபிக்குதிரைகளை மறுபடியும் எழுப்பினன். "ஓடு அத்தேர்! இம்! ரீகேல். அந்தாரே, நில்லாதே. ஆல்டுபரா, நீ நல்லவன். ஓய்!–ஹோா! ஹே!" என்று ஒவ்வொரு குதிரையையும் பெயரால் கூப்பிட்டு உற்சாகமூட்டினன். அவைகளும் முன்னைவிடப் பதின்மடங்கு வேகமாக ஓடின. முன்னால் சென்ற மேஸலா அபாயமான வொரு கோடியில் இரதத்தை வளைத்துத் திருப்பவேண்டியதாயிற்று. குதிரைகளின் வேகத்தைக் குறைத்தான்: அவைகளோ பின்னால் வரும் குதிரைகளின் "திடும் திடும்" என்ற காலடி யோசையால் மிரண்டு இரதத்தைக் குறுக்கே இழுக்கலாயின. கும்பலிலிருந்து கிளம்பிய சத்தமும் குறைந்தது: பயத்தாலும் சந்தேகத்தாலும் உரோமர்கள் மனம் தளர்வடைந்தது; யூதா புகலும் உற்சாக மொழிகளே யாவற்றிலும் மேலாக ஒலிக்கலாயிற்று. "பெண்களும் குழந்தைகளும் போற்றிப் புகழ்ந்து பாடும் நக்ஷத்திரங்களின் பெயர் படைத்த பரிகளே, இம்! கொஞ்சந்தான், ஓடுங்கள், ஆம் வெற்றி நமக்குத்தான், ஷேக் இஷ்டரீமுக்கு ஜே!–ஹா!–ஹேய்!! ஆங்காரி ஒழியட்டும். எனக்குக் கேடு நினைத்த நீசன் நாசமாகட்டும். ஹா....ஹா விடாதே....ஸோ....ஹோ!" என்று சரமாரியாகக் கூறிக்கொண்டே குறுக்கே ஓடிக்கொண்டிருந்த உரோமனுடைய இரதத்தின் அருகில்வந்த யூதா தன் தேரின் முன் சக்கரங்களை ஒடித்துத் திருப்பினன். அவனுடைய இரதத்தின் பின் சக்கரம் மேஸலாவின் தேரின் முன் சக்கரத்துடன் பலமாய் மோதவே, இரதத்துடன் குதிரைகளும் குப்புறவிழ, "டாங் டிங்-டிர்..."

என்ற பலத்த சத்தத்துடன், உரோமனின் இரதம் துண்டு துண்டாக நொறுங்கிப்போயிற்று: யூதனின் சயந்தனம் ஒரு பழுதின்றி ஒய்யாரமாக ஓடிப்பறந்து சென்றது; ஸிதோனியனுடையவும் பைஸாந்தியனுடையவும் தேர்கள் வெகு தூரத்தில் வந்து கொண்டிருந்தன, யூதாவோ இரண்டு எல்லைகளையும் தாண்டி வெற்றியடைந்தான்.

சகலரும் 'யூத சிங்கம் யூதாவே, யூதாவே, என்று பெரும் ஆரவாரம் செய்தனர். ஷேக் இஷ்டரீமூக்கும் அவரது சகாக்களுக்கும் உண்டான ஆனந்தம் அளவிட முடியாததாயிருந்தது. வெள்ளைக் கொடிதரித்தவர்கள் சகலரும் ஆனந்தக் கூத்தாடி அவரவர் எதிரிகளிடமிருந்து பந்தயத்தொகைகளை வசூலித்தனர். மூல்லாவோ கையில் ஒரு ஓலைச் சுருளுடன் கைகால் நொறுங்கிப் போய்க் குற்றுயிராகக் கிடந்த மேஸலாவின் அருகில் நின்று கொண்டிருந்தான். சம்பலத் என்பவன் மூல்லாவின் தோளின் மேல் கையை வைத்து, "ஏன் இங்கு நிற்கிறாய்? இவன் உயிர் பெற்றெழுந்தால், பந்தயப் பணத்தை இம்மி விடாமல் வசூலிக்கலாம். ஜெயமடைந்த யூதாவிடம் போகாமல், சாகப்போகிற மடச்சாம்பிராணி கிட்ட வண்டா நிற்கிறாய்?" என்று கூறினான். இருவரும் யூதா வென்ற பென்ஹூரைச் சூழ்ந்து நின்ற கும்பலுக்குள் புகுந்தனர். நம் கதா நாயகனான யூதாவோ, ஆயாசமின்றி சகலருக்கும் சந்தோஷ முகங்காட்டி ஒவ்வொருவரின் வாழ்த்துதல்களையும் ஏற்றுக்கொண்டு மிகவும் வணக்கத்துடன் நின்றுகொண்டிருந்தான். உரோமை அரசாங்க ஏஜண்டு துரையும் தமது ஆசனம் விட்டெழுந்து, யூதாவின் வீரச் செய்கையைப் புகழ்ந்து பேசி யூத குலத்திற்கே மாணிக்கமாய் விளங்கப் படைப் பயிற்சி பெற்று, வல்லமை மிகுந்த இரத ஓட்டப் போட்டியில் உயிரையே திரணமாக மதித்து, அதில் ஈடு பட்டு முழுதும் ஜெயமடைந்த யூதாவின் வீரப் பிரதாபத்தை மிகவும் பாராட்டிப் புகழ்ந்து பேசினர்: அவனுக்கு வெற்றி மாலையுஞ் சூட்டினர்; பரிசுத் தொகை அடங்கிய ஒரு பையையும் அவனுக்குக் கொடுத்தார். அவன் அதை மிகவும் பணிவுடன் பெற்றுத்

தனது பேருபகாரி இஷ்டரீமின் கையில் கொடுத்தான். உரோமர்கள் வெட்கத்தால் தலை குனியலாயினர்: ஏனையோர் யூகாவைப் போற்றிப் புகழ்ந்து கொண்டாடி ஆனந்தித்துக்கொண்டே அவரவர் இல்லம் சென்றனர்.

---

## பதினான்காம் அத்தியாயம்

### பழைய வீடு.

இரத ஓட்டத்தில் ஜெயமடைந்த யூதாவின் வீரப் பிரதாபத்தைப் பற்றி புலவர்கள் நவமான பாடல்கள் இயற்றி புஸ்தக ரூபமாக வெளியிட்டனர்: அப்புஸ்தகங்களை ஏராளமாக வெளிநாடுகளுக்கும் அனுப்பினார்கள்; அவைகளின் விற்பனையால் அனேகர் பெருத்த லாபமடைந்தனர். பாட்டுகளின் மதிப்பிற்குத் தகுந்தாற்போல ஸிமாண்டனிஸனும், ஷேக்கும் புலவர்களுக்குப் பல பரிசுகளை ஈந்தனர்.

பந்தயவோட்டம் முடிந்த முப்பது நாட்களுக்குப் பிறகு ஒரு நாள் காலையில் நம் கதாநாயகன் வெகு கவலையுடன் உட்கார்ந்திருந்தான். ஷேக் இஷ்டரீம் பிரபு அவனருகிலமர்ந்து ஆறுதல் கூறிக்கொண்டிருந்தார்.

ஷேக்:— நண்பரே, வீண் கவலை எதற்கு? உமக்குத் தெரியாமல் நாங்களனுப்பிய மனுவை அரசர் ஏற்றுக் கொண்டு தக்க விசாரணை செய்து நீதி செலுத்துவதாக ஸிமாண்டனிஸின் காரியஸ்தனிடம் தெரிவித்திருக்கிறார்.

யூதா:— நீங்கள் என் பொருட்டு எடுத்துக் கொள்ளும் முயற்சிகளுக்காக நான் மிகவும் நன்றி பாராட்டுகிறேன். கிருபை வைத்து என்னைமட்டும் ஜெருசலம் நகருக்குப்போய் வர அனுமதியளிக்க மன்றாடுகிறேன்.

ஷேக்:— ஆனால், நீர் மட்டும் போய் அங்கென்ன செய்யப் போகிறீர்? அரசருடைய விசாரணையின் முடிவு தெரிந்தபின் நாமெல்லோரும் அங்கு போகலாமே.

யூதா:— இன்னும் என் பொருட்டு நீங்கள் சிரமப்பட நான் ஒருபோதும் சம்மதிக்க மாட்டேன். அரசர் அனுகூலமான

உத்திரவு பிறப்பித்தாலும் சரி, நமக்கு முழுவிரோதமாக தீர்மானித்தாலும் சரி, தனியாக நான் மட்டும் யாருமறியாமல் முதலில் ஜெருசலத்திற்குப் போகவேண்டும், கஷ்டமென் பதையே கண்டறியாத என் தாயும் தங்கையும் எட்டு வருடங் களுக்கு முன் சிறையில் அடைக்கப்பட்டார்கள். அவர்கள் இன்னும் உயிருடன் இருப்பார்களா வென்ற சந்தேகமே என்னை வாட்டி வதைக்கிறது.

ஷேக்:— வீண் சந்தேகங்களுக்கு இடங் கொடுத்து என் மனதைப் புண் படுத்திக் கொள்ளுகிறீர். இன்றைக்கு கப்பலில் நமக்கேதாவது அனுகூலமான செய்தி கிடைக்குமென்ற நினைவு எனக்குண்டாகிறது.

யூதா:— தாங்கள் என் பேரில் கிருபை வைக்கவேண்டும். தனியே செல்வதால் எனக்கொரு அபாயமும் உண்டாகாது; எனது பகைவன் மேஸலா நடக்கமுடியாத முடவனாகிக் கெட் டழிந்தான். அவனால் எனக்கு இனி பயமில்லை. ஆனால், என் மனம் இங்கிருக்க இசையவில்லை. தயவுசெய்து உத்திரவு கொடுங்கள்; நான் ஊர் போய்ச் சேரவேண்டும்.

ஷேக்:— ஒரே பிடிவாதமாய் இருக்கிறீர்.........நீர் வருந்து வதைக் காணவும் எனக்குப் பிரியமில்லை. உமது இஷ்டம்போல் சுகமே போய் வாரும்: ஆண்டவன் உமது மனதுக்கு விரை வில் ஆறுதல் அளிப்பாராக.

தாவியோடி இஷ்டரீம் பிரபுவை யூதா மார்புறத்தழுவி, விடைபெற்றுக் கொண்டு யாதொரு துணையு மின்றி தனியே ஒலிவேத்து மலையை நோக்கிப் புறப்பட்டான். சூரிய அஸ்த மனத்திற்கு வெகுநேரத்துக்கு முன், யூதா அம்மலையின் சிகரத்தை அடைந்தான். மலை உச்சியை அடைந்ததும், பல மானதொரு கையால் பிடித்து நிறுத்தப் பட்டாற் போல ஸ்தம்பித்து நின்றான்: கண்களில் நீர் ததும்பியது; கன்னங் கள் சிவந்தன, பெருமூச்சு விட்டு தலையை அசைத்துக் கொண்டு மார்பில் கையை வைத்து தலைகுனிந்து சில நிமிஷங்கள்

மௌனமாய் நின்றான். அருகிலிருந்த கல்லின் மேல் உட்கார்ந்தான். தலையை மூடியிருந்த வெண்மையான துவாலையை எடுத்து கண்ணீரைத் துடைத்துக்கொண்டு பெருங்கவலைக்குள்ளானான். திடீரென இவ்வித மாற்றம் உண்டாகக் காரணமென்ன? அவனுக்கு முன்னே சற்றுதூரத்தில் அவன் அன்பிற்குகந்த ஜெருசலேம் நகரின் அரிய தோற்றம் அவனுக்கு ஒருவித உணர்ச்சியைக் கொடுத்தது. அங்கல்லோ அவனை அவன் தாய் பதினேழு வருடங்கள் அளவாய் அன்புடன் சீராட்டிப் பாராட்டி வளர்த்தாள்! எட்டு வருடங்களுக்குப் பின், எதிர்பாராமல் அந்நகரைக் காணும் ஆனந்தம் அவனுக்கேற்பட்டதெனினும், பாலப்பருவ முதல் அங்கு அவனுக்கு நிகழ்ந்த சம்பவங்கள் எல்லாம் ஒன்றன்பின் ஒன்றாய்த் தோன்றின: இறுதியில், பெருந்துன்பத்தை உண்டாக்கிய கவர்னரின் பவனி நினைவுக்கு வரவே, தாயையும் தங்கையையும் நினைத்து அழுதான். "அவர்களைக் காண்பேனே!" எனச் சிந்தித்தவனாய், அப்பட்டணத்தில் தனக்கு நிகரில்லையென உயர்ந்து தோன்றிய யூதருடைய கோவில் கோபுரங்களுக்கு அருகே நீளமாய்க்காணப்பட்டதும், தன்னிடமிருந்து வஞ்சக உரோமரால் அனியாயமாய்ப் பறிமுதலானதுமான, தன் தந்தையினுடைய மாளிகையின் மேற்கூரையைக் கண்டான். ஆவேசங்கொண்டவனைப் போல, உடனே எழுந்து விரைவாக மலையினின்றும் கீழிறங்கினான். அடிவாரத்தில் பட்டணத்திற்கு விற்பனைக்காக ஆடுகளை ஓட்டிக்கொண்டு போகும் ஒரு மனிதனுடன் பேசிக்கொண்டே ஜெத்ஸமனித் தோட்டத்தையுங் கடந்து கோட்டைவாசல் வழியாக நகருக்குள் நுழைந்தான். தன்னுடன் வந்த மனிதனிடம் சொல்லிக்கொண்டு பிரிந்து யூதா தனியே தென்பக்கமாக மிகவும் குறுகிய ஒரு சந்தின் வழியாக வேகமாக நடந்து சென்றான். எங்கும் இருள் சூழ்ந்திருந்தது: சிலர் அவனைக்கண்டு ஆச்சரியப்பட்டு வணக்கம் காட்டினர். தாய் தங்கையைப்பற்றி தனக்கு எவ்வித செய்தி கிட்டுமோ என்ற ஏக்கமும், மனோபாதையும், செல்லும் வழிகளிலுள்ள வீடுகளையும் அங்கங்கே நின்று பேசிக்கொண்டிருந்

தவர்களையும் கவனிக்க இடம் கொடுக்கவில்லை. அவன் மனம் மிகச் சோர்வடைந்திருந்தது. வீதியில் நின்ற ஜனங்களோ திடீரென வலிரியஸ் வேலையினின்று நீக்கப்பட்டதையும், போஞ்சுபிலாத்து. முன்னறிக்கை ஒன்றுமில்லாமல் அன்று வேலை ஒப்புக்கொண்ட விந்தையையும் பற்றி பேராச்சரியத்துடன் பேசிக்கொண்டிருந்ததைக் கவனியாமல் வெகுதூரம் நடந்தான். பயங்கரத் தோற்றத்துடன் காணப்பட்ட கரு நிறமுள்ள அந்தோனியோவின் கோபுரத்தின் முன்னே போய் நின்றான். "எனது அருமை தாயும் தங்கையும் சாகாமல் இன்னும் இங்கேயே உயிருடனிருந்தால் அவர்களை விடுவிக்க என்ன செய்வது! ஷேக்கின் வார்த்தையைக் கேளாமல் அவசரப்பட்டு வந்துவிட்டேனே, என்ன செய்வேன், ஒரு பெரிய சைனியம் வந்தால் கூட அசைக்கமுடியாத கற்கோட்டைகளையுடைய இந்தச் சிறைச்சாலைக்குள் திருட்டுத்தனமாய் நுழையவும் முடியாதே! அவ்விதம் உள்ளே சென்றாலும், அவர்கள் எங்கிருப்பார்களென அந்தகாரமான இந்நேரத்தில் எப்படிக் கண்டுபிடிப்பேன்! தெய்வமே, நீரே எனக்குதவி." என்று மனதில் தியானித்தான், என்ன செய்வதெனப் புரியாமல் கோபுரத்தின் முன்னேயிருந்த தெருவின் வழியாகச் சென்று தனது பழைய வீட்டின் வடபக்கம் வாயிலை அடைந்தான். அது பாழடைந்திருந்தது. வாசலுக்கு நேரே ஒரு பலகை தொங்கினது; நெருங்கி உற்று நோக்கி சந்திர ஒளியின் உதவியால், "இந்தமாளிகை சக்கரவர்த்திக்கு சொந்தம்" என்ற வார்த்தைகளை வாசித்து "ஓகோ எங்களை அத்துஷ்டர்கள் இங்கிருந்து அப்புறப்படுத்திய நாள் முதல் இம்மாளிகையை எவரும் விலை கொடுத்து வாங்காதிருப்பது ஆச்சரியமே" என்று தனக்குள் சொல்லிக்கொண்டே, அவ்வீட்டைச் சுற்றிக்கொண்டு தென்பக்கம் வாசலை அடைந்தான். அங்கும் வாசற்கதவுகளிலிருந்த முத்திரைகள் அழியாதிருப்பதையும், சக்கரவர்த்திக்குச் சொந்தமென்ற வாசகத்தையுடைய வேறொரு பலகை தொங்குவதையுங் கண்டான். கோபம் பொங்கி யெழுந்தது, பற்களை

நெற நெற வெனக் கடித்தான்; அப்பலகையைப் பிடித்து இழுத்து அருகில் இருந்த சாக்கடையில் வீசி எறிந்தான். பசியின் கொடுமையாலும், பிரயாணத்தால் ஏற்பட்ட களைப்பினாலும், மனதில் அவ்வப்போது உண்டாகும் கிலேச மிகுதியாலும், நிற்க பலமற்று அவ்வாசற்படிக் கல்லிலேயே படுத்து அயர்ந்து நித்திரைபோனான்.

## II

யூதா விடைபெற்று ஜெருசலத்துக்குப் புறப்பட்ட அன்று மாலையில், ஷேக் இஷ்டரீம் எதிர்பார்த்தது போல உரோமையில் ஒரு நண்பரிடமிருந்து அனுகூலமான கடிதம் ஒன்று வந்தது. அதில், அரசர் வஞ்சக நெஞ்சனான வலிரியஸை சில தினங்களுக்கு முன் வேலையினின்று நீக்கி விட்டதாயும், அவனுக்குப் பதில் போஞ்சுப் பிலாத்து என்பவர் கவர்னராக திடீரென நியமிக்கப்பட்டு அவரும் வேலையை ஒப்புக்கொண்டிருப்பாரென்றும், சிமாண்டனிஸினுடைய மன்றாட்டின்படி பென்ஹூர் பிரபுவின் மக்களையும் மனைவியையும் விரைவில் விடுதலை செய்யும்படி அரசாங்க மந்திரி புது கவர்னர் வசமே அவசர உத்திரவு அனுப்பியிருக்கிறதாகவும் எழுதப்பட்டிருந்தது. இவ்வித நற்செய்தி நிறைந்த கடிதத்தை ஷேக் முல்லா வசங் கொடுத்து யூதா விடம் சேர்ப்பிக்கும்படி தெரிவித்தார். அவனும் இரண்டொரு தினங்களில் ஜெருசலேமுக்குப் போவதாகத் தெரிவித்து அப்பால் சென்றான்.

## III

யூதா ஜெருசலேமுக்கு வந்த தினம் காலையில் தான், புதிய கவர்னர் போஞ்சுப் பிலாத்து சிசரியாவிற்குப் போய் வலிரியஸிடமிருந்து வேலை ஒப்புக்கொண்டார். அன்று பிற்பகல் ஜெருசலமுக்கு யாதொரு ஆடம்பரமுமின்றி விஜயம் செய்து, அந்தோனியோவின் கோபுரமென்ற சிறைச்சாலையைப் பார்வையிட்டார். பென்ஹூர் என்பவரின் மனைவியையும் மகளையும் உடனே தன்முன் கொண்டு வரும்படி உத்திரவிட்டார்; ஆனால் அந்தோ பரிதாபம்! ஒரு குஷ்டரோகி

வெகு காலமாக சிறைவாசம் செய்து மரித்துப் போன ஒரு இருட்டறையில் அவர்கள் எட்டு வருடகாலமாக அடைபட்டிருந்ததால், அவர்களையும் குஷ்டரோகப் பிணி பிடித்து அவர்களின் நிறத்தை மாற்றி திரேகாதியந்தமும் பலவித வீக்கங்களை யுண்டாக்கவே, விகாரமான தோற்றத்துடன் அவர்கள் காணப்பட்டார்கள். இந்நிலைமையிலிருந்த அவ்விருவரையும் சிறைச்சாலை அதிகாரி கவர்னரின் முன் கொண்டு வந்து நிறுத்தினன். "என்ன கொடுமை யிது! பயங்கரமான கொடிய நோயல்லவோ இவர்களைப்பிடித்திருக்கிறது!! ஐயோ பாவம்!!! சரி, இவர்கள் இனி நகருக்குள் வசிக்கத்தகாதவர்களா யிருப்பதால் இவர்களுக்கு வேறெவ்வித நன்மையும் செய்ய முடியாமற் போயிற்றே! ஆம், வேறு வழியில்லை. இன்றிரவில் இவர்களை இவர்களின் உற்றார் எவருமறியாமல் வெளியிலனுப்பி மற்ற குஷ்டரோகிகள் போல நகருக்கு வெளியே குடியிருக்க வேண்டிய ஒழுங்குகளையும் தெரிவித்தனுப்பி விடு. இன்னும் மூன்று தினங்களில் இங்குள்ள கைதிகள் சம்பந்தமான சகல தஸ்தாவேஜுகளையும் நமது பார்வைக்குத் தயாராக நீ வைக்க வேண்டும்" என உத்திர விட்டார். போஞ்சுப் பிலாத்து துரை பின்னர் தமது பரிவாரத்துடன் ஜெருசலம் நகரைச் சுற்றிப் பார்த்து விட்டு அன்று மாலையிலேயே சிசுரியாவுக்குத் திரும்பினர். கவர்னரின் உத்திரவுப்படி அன்று இரவு நகர வீதிகளில் ஜனங்களின் நடமாட்டம் ஒய்ந்த சமயம் பார்த்து சிறைச் சாலை அதிகாரி நம் கதாநாயகனின் தாயையும் தங்கையையும் விடுதலை செய்து வெளியிலனுப்பினன். திடீரென இருவரும் தங்களுக்கு விடுதலையான காரணமறியாமல் தயங்கினர். நீரை விட்டு நீங்கிய மீனைப் போல மயங்கினர்; சாகும்வரை அப்பாழடைந்த அறையிலிருக்க விடாமல் துரத்தி விட்டார்களே என்றேங்கினர். 'எங்கு செல்வது? எப்படி ஜீவிப்பது?' என்ற விசாரமே அவர்கள் மனதை வாட்டி வதைத்தது. "நம்மை இனியாரும் விரும்பமாட்டார்களே; என்றும் தீராத நோயல்லவோ பற்றிக்கொண்டது. கண்டவர் யாவரும் நம்மை அப்பால் போகும்படி மிருகங்

களை விரட்டி யோட்டுவது போலக் கல்லால் அடிப்பார்களே, இனி என்ன செய்வோம்! அம்மா எப்படி உய்வோம்!" என்று திருஷாள் தாயை இறுகக் கட்டிபிடித்துக் கொண்டழுதாள். "குழந்தாய், குற்றமற்ற நம்மைக் கடவுள் கடாக்ஷிப்பார். வீண் கவலை கொள்ளாதே; வா இப்பக்கமாய் போகலாம். சந்தடி செய்யாதே, நம்மை யாராவது பார்த்துக் கொண்டால் உடனே பட்டணத்திற்கு வெளியே துரத்தி விடுவார்கள்" என்றுள் ளாராள்.

திருஷாள்:— அம்மா, நம்மை ஏன் வெளியில் போய்விடும் படி அந்த துரை உத்திரவிட்டார். யூதாவாவது சிமாண்டனி ஸாவது நம்மை விடுவிக்க முயற்சி செய்திருக்கலாமோ!

ஸாராள்:— கண்மணியான என் மகன், அருமந்த புதல்வன் யூதாவை அப் படுபாவிகள் பிடித்த அந்த நாளிலேயே கொன்று போட்டதாக வல்லவோ சொன்னார்கள். என் நேச மகனை எப் படி நாம் காணமுடியும். மறு லோகத்தில்தான்..............

திருஷாள்:— இல்லை, இல்லை, அப்படி அண்ணனைக் கொன் றிருந்தால் நமது நாட்டு வழக்கப்படி எல்லாக் குற்றவாளிகளும் பார்க்கும்படியல்லவோ கொன்றிருப்பார்கள். அண்ணன் சாக வில்லை, ஒரு போதுமில்லை, இது நிச்சயம்.

ஸாராள்:— அப்படியே என் அருமை மகன் உயிருடனி ருந்து நம்மைக் கண்டு கொண்டால், நம்மால் அவனுக் கொரு நன்மையும் உண்டாகாதே; கெடுதல் தானே ஏற்படும். நமக் கேற்பட்டிருக்கும் நோய் அவனையும் பற்றிக் கொள்ளுமே. இக் கோலமாக நம்மையவன் காணவே கூடாது அவன் சுகமாக வாழட்டும், ஆம்; என் நேசமகன் சுகமாக விருக்கட்டும்.

திருஷாள்:— அம்மா, எனக் கொருவித நம்பிக்கை உண்டாகிறது. அநேகமாக நமது வீட்டில் இன்று அண்ணனைக் காணுவோமோ என்னமோ, வாருங்கள்; இப்பக்கமாகப் போய் நமது வீட்டில் யாரிப்போது குடியிருக்கிறார்களெனப் பார்த்துக் கொண்டுபோகலாம்.

மகளின் விருப்பம் போல தாயும் அவ் வீட்டைநோக்கிச் சென்றாள். சந்திரனின் குளிர்ந்த பிரகாசம் எங்கும் பரவி யிருந்தது. பிறர் தங்களைக் கண்டு கொள்ளாமல் மௌனமாக தளர்ந்த நடையுடன் அக்கம் பக்கம் பார்த்துக் கொண்டே வீதியோரமாகவுள்ள மரங்களின் நிழலில் தங்கித் தங்கி எட்டு வருடங்களுக்குமுன் கண்ணீர் பிரவாகமாயோடத் துஷ்டர் துன்புறுத்தி இழுத்துப்போன அவர்களின் பழைய வீட்டின் வாயிலை யடைந்தனர். அங்கு தொங்கின பலகையிலிருந்த வார்த்தைகளை திருஷாள் மெல்லிய குரலில் வாசித்தாள். "சரி இந்த வீடும் தொலைந்தது; அவனும் இறந்தான், இனி நமக் கென்னவுண்டு; நாமிருக்கும் நிலைமையில் இந்த வீடு நமக்குச் சொந்தமாயிருப்பதும் அரசருக்குச் சொந்தமாயிருப்பதும் எல்லாம் ஒன்றே", என்றாள் தாய். மகளோ, "அம்மா, அம்மா, அண்ணன் சாகவில்லை; திரும்பத் திருப்ப அப்படிச் சொல்ல வேண்டாம். எனக்கு அப்படி நீங்கள் சொல்லுவதைக் கேட்க மனவேதனைதான் உண்டாகிறது" என்றாள்.

ஸாராள்:— உன் சகோதரன் உயிருடனிருந்தால் ஏன் இவ்வீட்டை அரசன் கைப்பற்றிக் கொள்ளவேணும். வார் சில்லாத வீடு ஆள்பவனுக்குத் தான் சொந்தம்.

திருஷாள்:— (கையை நீட்டிக்காண்பித்து) அம்மா, அதோ பாருங்கள் யாரோ அங்கு அந்த வாசற்கல்லின் மேல் படுத் திருக்கிறார்கள். அது யாரென்று பார்க்கலாம் வாருங்கள்.

ஸாராள்:— யாராவது வழிப்போக்கனாயிருக்கலாம்; அவனை ஏன் நாம்பார்க்க வேணும்; வேண்டாம். வா, போய்விடலாம். எனக்கு இங்கு நிற்பதே மனவேதனையை உண்டாக்குகிறது.

திருஷாள்:— இராஜ முத்திரைவைத்த வீட்டிற்கு முன் யாரும் தங்கக்கூடாதென்று சொல்லுவார்கள். எதுக்கும் நீங்களே மெதுவாகப் போய் அது யாரென்றுபார்த்து விட்டு வாருங்கள்; நான் இங்கேயே நிற்கிறேன்.

மகளின் விருப்பத்திற்கிசைந்து, தாயானவள் படுத்துறங், கும் மனிதனை யணுகினாள். அச்சமயத்தில் ஆழ்ந்த நித்திரையி

விருந்த அம்மனிதன், பெருமூச்சு விட்டுப் பிறண்டு கொண்டு தலையை மூடியிருந்த துவாலையைத் தூக்கக் கலக்கத்தில் கையினால் பற்றியிழுக்க, நிலவொளியில் அவன் முகம் துலக்கமாகக் காணப்பட்டது; அவனை உற்று நோக்கினாள்; பிரேமை பிடித்தவள் போல சற்று நேரம் நின்று தன் கண்களையே நம்பாமல் அவற்றைக் கசக்கிக் கொண்டு மறுபடியுங் குனிந்து பார்த்தாள்; இதிலும் ஆச்சரியமுங் கொண்டவளாய் திகைப்புடன் நின்றாள்; வானத்தை நோக்கி ஏதோ ஜெபிப்பது போலக் காணப்பட்டாள். ஆழ்ந்த நித்திரையிலிருந்த யூதா "அம்மா! அமரா! எங்கே?" எனப் புலம்பினான். "ஆ தெய்வமே! இதென்ன கனவா அல்லது நினைவா? இல்லை உண்மைதான். ஆம். ஆச்சரியம், இது புதுமையே. இவன் என் மகன் அல்லவோ! ஆனால் நான் அசுத்தமாயிருக்கிறேனே. ஆ! தூக்கத்திலும் என் செல்வன் என்னை நினைக்கிறான். நானவனைத் தொடவுங் கூடாதே" என மனதில் எண்ணிக் கைகளை இறுகப் பிசைந்து கொண்டே நின்றாள். தன்னை விட்டுப்பிரிந்த தாய் அசைவற்று அங்கேயே நிற்பதைக் கண்டு, காரணமின்னதெனவறிய ஆவல் கொண்டு திருஷாள் நின்ற விடத்தை விட்டுத் தாயிடம் செல்ல வாரம்பித்தாள். தாயோ, உடனே எதிரே ஓடிவந்து அவளை நிறுத்தி "மகளே, அவன்தான்" என்றாள். "அண்ணா! ஆ!! அம்மா, நானவரைப் பார்க்க வேணும், அவர் கரத்தைப் பற்றி முத்தமிட வேண்டும்" என்று திருஷாள் கூறினாள். தாயும் தன் மகளை ஆரவணைத்துப் பிடித்துக்கொண்டே, 'நமது உயிர் போனாலும் அவனைத் தொடக்கூடாது. என்னுடன் வா, எட்டி நின்று அவனைப் பார்" எனப் பகர்ந்து அவளை அழைத்துச் சென்று தூரத்தில் நின்று காண்பித்தாள். அச்சமயம் யூதா "ஆ தங்கா!" என்று நித்திரையில் தன்னை அறியாமலே கூறினான். திருஷாள் தன்னையே மறந்தவளாய் தனது தமயன் கரத்தைப் பிடிக்க நெருங்கினாள். தாய், குறுக்கே விழுந்து ஓலமிட வாரம்பித்த திருஷாளின் வாயை ஒரு கையால் மூடி மற்ற கையினால் அவளைப் பிடித்து நிறுத்தி, "என்ன மதியீனம்! நாம் தான் கேடடைந்திருக்கிறோம். அவனாவது உயிர் வாழட்டுமே. ஆச்சரியமான

விதம் அவனைக்காணா நமக்கருள்புரிந்த ஆண்டவன் இப்பெரும் நோயினின்றும் நம்மைக் குணமாக்குவார். விரைவில் நம் துயரையும் நீக்குவார்..........அதோ பார், வீட்டின் பின் பக்கமிருந்து பதுங்கிக்கொண்டே யாரோ ஒரு ஆள் வந்துகொண்டிருக்கிறது. நம்மைக் கண்டு கொண்டால் ஆபத்து; வா, அந்த மரத்தின் பின்னால் ஒளிந்திருந்து அந்த ஆள் போனபிறகு இன்னுமொரு முறை உன் அண்ணனைப் பார்த்துவிட்டுப் போய் விடலாம்" என்று கூறினாள் தாய். அவ்விதமே, திருஷாள் தாயுடன் வேகமாகச் சென்று சற்று அப்பாலிருந்த ஒரு மரத்தின் பின்னே மறைந்து நின்றாள். இருவரும் வீட்டின் மறு பக்கமிருந்து வரும் உருவத்தையே கவனித்து நின்றனர்.

அவ்வுருவம் யூதா படுத்திருக்கு மிடத்திற்கே வந்து சேர்ந்தது; அது ஒரு வயதான கிழவியாகக் காணப்பட்டது. அவளின் உடையிலிருந்து அவள் ஒரு வேலைக்காரியாயிருக்கலாமென இருவரும் யூகித்துக்கொண்டார்கள். அவள் அங்கு படுத்திருந்த மனிதனைக் குனிந்து உற்று நோக்கினாள்; திடுக்கிட்டுக் கையில் பிடித்திருந்த கூடையைக் கீழே போட்டுவிட்டு நாலாபக்கமும் யாராவது வருகிறார்களா வென ஆராய்ந்து பார்த்தாள்; தன் கண்களையே நம்பாதது போல பல முறை குனிந்து பார்த்து பயப்பிராந்தி கொண்டவள் போல மார்பை இருகரங்களால் தாங்கிக்கொண்டே நின்றாள். "ஆ! இது என்ன? என் மனத்தோற்றமா! அன்றி உண்மையாகவே மாண்டு போன அருமைச் செல்வன் யூதா மீண்டும் உயிரோடு வந்து விட்டானா? அல்லது இது பூதகணத்தின் கோளாறா? (மறுபடியும் குனிந்து கீழே படுத்திருந்த வாலிபனைச் சுற்றி வந்து ஆராய்ச்சி செய்து) இல்லை, உண்மையாகவே இவன் யூதா தான்; எவ்வளவு அழகாகத் தோன்றுகிறான்; முகத்தின் களை முன்னிருந்ததைக் காட்டிலும் அதிகமாய் ஒளிவிட்டு வீசுதே. இது வரை எங்கோ சுகமாக இருந்து இங்கு வந்திருக்கிறான் போலிருக்கு" என்று தனக்குள்ளேயே சொல்லிக்கொண்டு கீழே முழந்தாள் படியிட்டு தான் வளர்த்த அருமைப் பூமானின் கரத்தை யெடுத்து அதற்கொரு அன்பான முத்தம் ஈந்தாள்.

அதனால் யூதாவின் நித்திரை கலைய அவன் திடுக்கெட்டெழுந்து உட்கார்ந்து தனக்கு முன் நடுங்கிக்கொண்டிருக்கும் கிழவியை உற்றுப்பார்த்து "ஆ நீயோ! ஆயா, ஏ நல்ல அமரா" என்று சொல்லிக்கொண்டே எழுந்து நின்று கண்ணீர் பிரவாகமாகப் பெருகியோடிய அவளின் கருநிறமான முகத்தில் அன்பாய் ஒரு முத்தங் கொடுத்தான். "அம்மாளும் திருஷாளும் சுகமாக இருக்கிறார்களா? எங்கிருக்கிறார்கள் சொல்லு! என்னை சுறுக்காய் அவர்களிடமழைத்துப் போ....... அமரா, ஏன் பதில் ஒன்றும் சொல்லாமல் அழுதுகொண்டே நிற்கிறாய்? வீண் நேரம் போக்காதே, நானும் உன்னுடன் வருகிறேன். எனதருமை அன்னையையும் சோதரியையும் இப்பொழுதே காணவேண்டும், எழுந்து நட" என்று கூறினான். சில நிமிஷங்களில் இருவரும் வீட்டின் பின்புறமாகச் சென்று மறைந்தனர். அவ்விருவரும் அப்பால் செல்லும் பொழுது திருஷாளின் மனம் துடித்தது; தாங்களிருவரும் உயிருடனிருப்பதை யூதாவுக்கறிவிக்கத் தாயை மன்றாடினாள். ஸாராளோ "வேண்டாம், இப்பொழுது வேண்டாம். அசுத்தமான திரேகிகளான நம்மை அவன் காணக்கூடாது," எனப்பகர்ந்தாள். தாயும் மகளும் துக்கம் பொறுக்கமாட்டாமல் ஒருவரையொருவர் கட்டிப்பிடித்து அரவமின்றி சிறிது நேரம் அழுதனர், கடவுள் தங்கள் கஷ்டங்களைக் கடிதில் போக்கிவிடுவாரென மனதைத் தேற்றிக்கொண்டு அப்பால் சென்றனர்.

## IV.

மறுநாட் காலை பொழுது புலரும் வரை யூதா அமராவுடன் பேசிக்கொண்டிருந்தான். முன்தினம் வலிரியஸ் வேலையினின்று நீக்கப்பட்டதையும், புதிய கவர்னர் போஞ்சுப்பிலாத்து ஜெருசலமுக்கு வந்து பார்வையிட்டுப் போனதையும் அமராவிடமிருந்து யூதா அறிந்துகொண்டான். தாயையும் தங்கையையும் எப்படியும் மீட்கலாமென்ற நம்பிக்கை கொண்டான்; காலைப் போஜனம் முடிந்தபின் பட்டணத்திற்குள் போய்வருவதாக அமராவிடம் சொல்லிக்கொண்டு வெளியே சென்றான். அவனைத் தேடி முல்லா எதிரே வந்துகொண்டிருப்பதைக் கண்டான். முல்லா

முகமலர்ச்சியுடன் யூதாவை வாழ்த்தினன். ஷேக் தெரிவித்த விஷயங்களை அறிவித்து, அவருக்கு உரோமையிலிருந்து வந்த கடிதத்தையுங் கொடுத்தான். அதை வாசித்துப் பார்த்த யூதாவுக்கு உண்டான ஆனந்தத்திற்கு அளவில்லை: தெய்வத்தை மனமாரத் துதித்தான்; எட்டு வருஷங்களுக்கு முன் ஜென்மத்துக்கும் அடிமையாகத் தண்டிக்கப் பட்ட யூதா திடீரென வந்திருப்பதை அறிந்த அவனது உற்றார் உறவினர் சகலரும் அவனைக் காண க்ஷணப்பொழுதில் அங்குவந்து சேர்ந்தனர். எவரோடும் ஒன்றும் சொல்லிக்கொள்ளாமல் அந்தோனியோவின் கோபுரத்தை நோக்கி யூதாவும் முல்லாவும் செல்ல அவர்களின் பின்னே பெரியதொரு ஜனக் கும்பல் சென்றது. அமராவும் அவர்களுடனேயே சென்றாள். சிறைச்சாலை வாயிலை அடைந்தபோது ஜெயிலதிகாரி அங்கு ஜனக்கூட்டம் வரக் காரணமென்னவென்றறிய, தானே நேரில் வந்தான். அவர்களின் முன்னால் யூதா நிற்பதைக் கண்டு ஆச்சரியங்கொண்டான்: கதவைத் திறக்கும்படி உத்திரவிட்டு யூதா, முல்லா, அமரா மூவரை மட்டும் உள்ளே வர அனுமதி யளித்தான். நம் கதா நாயகனின் தாயும் தங்கையும் முந்தின நாள் விடுதலையாகி வெளியிலனுப்பப்பட்டதை மட்டும் அறிவித்தானன்றி அவர்கள் குஷ்டரோகிகளாயிருப்பதைத் தெரிவிக்கவில்லை. அப்படியானல் தங்கள் உறவினரின் வீடுகளுக்கு அவர்கள் போயிருக்கலாமென யூகித்து ஜெயிலதிகாரிக்கு நன்றி கூறி விடை பெற்றுக்கொண்டு, அன்று முழுதும் அன்னுகாரமின்றி பட்டணத்திலிருந்த சகல வீடுகளிலும் நுழைந்து தேடியலைந்தான் யூதா. எங்கும் அவர்களைக் காணமுடியவில்லை. அவர்கள் எங்காவது தன்னைத் தேடிக் கொண்டு சென்றார்களோ, அல்லது ஜெயில் வாசம் செய்த அவமானம் தாழாமல் வேறெங்காவது ஓடிப்போனார்களோ வென்று பல பல விதமான சந்தேகங்கள் அவன் மனதிற் புகுந்து வதைத்தன. முல்லா தனது நண்பன் படுந்துயரைக் காணச் சகியாமல் கண்ணீருகுத்தான். ஷேக் அவர்களிடம் தெரிவித்து அவர்களைத் தேடிப்பார்க்க ஆட்களை நாலா பக்கமும் அனுப்புவ

தாகச் சொல்லிக்கொண்டு புறப்பட்டான். அமராவுக்கு மட்டும் அவ்விருவரும் குஷ்டரோகிகளாகியிருக்கக் கூடுமென்ற பலமான சந்தேகம் உண்டாகியிருந்தது. காரணம் அச்சிறைச்சாலையில் வெகுகாலம் சிறைவாசம் செய்தவர்கள் குஷ்டரோகிகளாகி வெளியில் அனுப்பப்பட்டதை அறிந்திருந்தாள். எட்டு வருடங்களுக்கு முன் மேஸலா சில வீரருடன் தாயையும் மக்களேயும் துராகிர்தமாய் இழுத்துச்சென்ற பொழுது வீட்டிற்குள்போட்டு அடைக்கப்பட்ட இவ்வூழியக்காரியின் உண்மையுள்ள விசுவாசமும், ஸ்திரமான புத்தியும், மன ஊக்கமும், அற்புதமான அறிவு யோஜனேயும் யாருக்குத்தான் வரும். தெய்வத்தையே ஸ்திரமாய் அவள் நம்பி இருந்தாள்.

அதிர்ஷ்ட வசமாய் இவள் அடைபட்டிருந்தது வருஷவாரி சாமக்கிரிகைகளேயுடைய உக்கிராண அறை. அங்கு அவளின் சீமாட்டி ஒரு சிறு பெட்டகத்தில் சிலதங்க நாணயங்களும் நகைகளும் வைத்திருந்தாள். அதிலுள்ள பொருட்களே அப்புறப்படுத்து முன்னே அமராவை அவர்களடைத்துப் பூட்டியது அவளுக்கு வெகு நன்மையாயிற்று. ஆனுல் இரண்டு தினங்கள் வரை அந்தகாரமான அவ்வறையைவிட்டு வெளியேறும் வகை தெரியாமல் அவள் தத்தளித்தாள். கைகளால் தடவித்தடவி ஒவ்வொரு விடமாக ஆராய்ந்து பார்த்தாள். தற்செயலாக அவள்கையில் ஒருசிறிய வாளும் கைரம்பமும் அகப்பட்டது. அவற்றின் உதவியால் வாசற்கதவில் பெரியதொரு துவாரம் செய்துகொண்டு அதின் வழியாக வெளியிற் சென்ருள். தன்னே யாருங்காணுத விதம் பகற்காலத்தில் வீட்டிற்குள்ளேயேயிருந்து; இரவில் தந்திரமாய் வெளியிற் சென்று தனக்குத்தேவையான பொருட்களே வாங்கிக்கொண்டு வருவாள். அம்மாளிகையை எவரும் விலே கொடுத்து வாங்க முன் வராதது இவளுக்கு வெகு சௌகர்யமாயிருந்தது. தனது எஜமானி வைத்துப்போன நகைகளேயெல்லாம் நல்ல விலேக்கு விற்று அதைக்கொண்டு கடந்த எட்டு வருஷமும் ஜீவனம் செய்து வந்தாள். கையிலும் சொற்ப பொருள் வைத்திருந்தாள்.

அதற்குள் யூதா தன்னிடம் வந்து சேர்ந்தது அவளுக்குப் பெரும் புதையல் கிடைத்தது போலிருந்தது. தனது எஜமானியையும் தான் வளர்த்த அருஞ் செல்வி திருஷாளையுங் கண்டடைந்ததால் அதுவே பெரும்பாக்கியமென்ற பேராவல் அவள் மனதில் ஸ்திரமாய் பதிந்திருந்தது.

கவலையால் பீடிக்கப்பட்ட யூதா நோயுற்றவன் போலக் காணப்பட்டான்; வெளியில் எங்கும் செல்லாமல் வீட்டிற்குள்ளேயேயிருந்தான்; ஒருநாள் காலை முன் வாசற் கதவுகளை யாரோ திறந்து கொண்டு உள்ளே நுழைவதை கண்டு பயந்தான். அரசருக்குச் சொந்தமாக்கப்பட்ட வீட்டில் ஆக்கிரமிப்புடன் குடியிருக்கும் குற்றத்திற்காகத் தன்னைப் பிடித்துப் போக வந்திருக்கிறார்களோ வென எண்ணி நடுங்கினான். தன் முன்னே வந்து கொண்டிருந்த உரோமை உத்தியோகஸ்தனைப் பார்த்த வண்ணம் நின்றுகொண்டிருந்தான்.

உரோமை-உத்தியோகஸ்தன்:— பென்ஹூர் பிரபுவின் குமாரனும் மாஜி குவிண்டஸ் ஆரியுஸ் தளகர்த்தனின் ஸ்வீகார புத்திரனுமான யூதாவென்பவர் நீர்தானா?

யூதா:— ஆம், நான் தான்.

உரோ. உத்தி:— அப்படியானால் தேவர்கள் உம்மைக் கடாக்ஷிக்கட்டும். உப்மிட மிருந்து பறிமுதலான இம்மாளிகையை உமக்கே திரும்பவும் சொந்தமாக்கு வதற்காக நானிங்கு வந்திருக்கிறேன்.

யூதா:— நானரசருக்கு மனுக்கொடுக்காமல் இது எப்படியாகக் கூடும்?

உரோ உத்தி:— உமக்காக ஷேக் இஷ்டரீம் கவர்னரைக் கண்டு பேசி முடிவுசெய்தார். இதோ கவர்னர் உமக்கனுப்பியுள்ள உத்திரவு.

(யூதா கடிதத்தைப் பிரித்து வாசித்துப் பார்த்தான்)

யூதா:— இவ்வீடு அரசருக்கு சொந்தமாயிருப்பதும் எனக்குரியதாயிருப்பதும் எல்லாம் ஒன்றே. பெற்ற மாதாவை யும் என்நேச தங்கையையும் இழந்தபின் இம்மாளிகை எனக்குக் கிடைத்ததால் நானடையப் போகும் நன்மை யொன்றுமில்லை.

உரோ. உத்தி:— தம்பி, உலகத்தில் மனிதருக்கு வரும் சுகமும் துக்கமும் கலந்து வருவது இயல்புதானே.

யூதா:— ஆமாம், கலந்தே தான் வரும். ஆனால் என் மட்டிலோ துக்கம் என்ற கொடிய சக்கரம் மாறாமலே ஒரே நிலையில் நின்று சுழன்றுகொண்டு என்னை வதைத்துக் கொண்டேயிருக்கிறது.

உரோ. உத்தி:— அச்சக்கரம் உம்மை விட்டுநீங்கி உருண் டோட வாரம்பித்துவிட்டது. அதின் அதிர்ச்சி இன்னும் உம்மைக் கிடு கிடு வென நடுங்கச்செய்கிறதே தவிர வேறொன்று மில்லை. மனிதவாழ்க்கையில் இன்பம் வருவதும் துன்பம்வருவதும் ஒரே தொடர்ச்சியாகவே தானிருக்கும். உமக்கு ஏற்பட்ட கஷ்ட காலம் சில ஆண்டுகளுக்கு முன்பே நீங்கிவிட்டது. அதிலிருந்து பல நன்மைகள் உமக்கேற்பட்டிருக்கின்றன. இனி மேலும் உமக்கு நல்ல காலம்தான். அதற்கறிகுறியாக மங்களகரமான இந்த நாளில் நீரிழந்துபோனவீட்டை இராயனின் கட்டளைப் படி உமக்குக் கையளித்திருக்கிறேன். தேவர்கள் விரைவில் உம்மைப்பெற்ற அன்னையையும் சகோதரியையுங் காணக் கருணை புரிவார்களாக.

யூதா:— ஐயா, தாங்கள் கூறும் தேறுதல் மொழிகள் என் மனதிற்குப் புத்துயிரளிக்கின்றன. தங்கள் பரிவாரத்துடன் தாங்கள் சிலதினங்கள் என்னுடன் இங்கு தங்கிப் போவது எனக்குப் பெரும் ஆனந்தத்தை யுண்டாக்குமென நினைக் கிறேன்.

உரோ. உத்தி:— மெத்த உபகாரம். அறிவிலும், புத்தியி லும், சாமர்த்தியத்திலும் மேம்பாடுடைய உம்முடன் சம்பா ஷிப்பது எனக்கும் வெகு ஆனந்தமாகவேயிருக்கிறது. என்று

லும், தற்போது உம்முடனிருக்க அவகாசமில்லை. அவசர வேலைகள் பல ஏற்பட்டிருக்கின்றன; அன்றியும் இந் நாட்டில் சில காலமாக வெளிவந்து அற்புத ஆச்சரியங்களைச் செய்து அரிய போதகங்களைப் புகட்டி தேவகுமாரன் எனக்கூறி இரக்ஷண்ய அலுவலை நடத்துவதாகப் பகர்ந்து ஊரூராகப் போய்க் கொண்டிருக்கும் நஸரேனுவாகிய சேசு என்ற மகானைக்காண ஒரு அரிய சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கிறது. அவர் இன்று பொற்பரா என்ற ஊருக்கு விஜயம் செய்கிறார். நாங்கள் உடனே அங்கு போக வேண்டும்.

யூதா:— அந்த மகானு! ஐயா, உங்களுடன் நானும் வரலாமா; அப்பெரியாரை நான் அவசியங்காண வேண்டும். என் மனக்குறையை எப்படியும் அவர் போக்கி விடுவார் என்ற ஸ்திரமான நம்பிக்கை எனக்குண்டு.

உரோ. உத்தி:— அப்படியானால் வாரும் போகலாம்.

யூதா அமராவிடம் தெரிவித்துக்கொண்டு உரோமை உத்தியோகஸ்தருடன் வெளியிற் சென்றான்.

---

# பதினைந்தாம் அத்தியாயம்

## குஷ்டரோகிகள்

யூதா உரோமை வீரருடன் வெளியிற் சென்றவுடன் அமாரா ஒரு சிறு கூடை நிறைய ரொட்டி, பழங்கள் முதலிய உணவு பொருட்களையும் ஒரு மண் ஜாடியையும் தூக்கிக்கொண்டு குஷ்டரோகிகள் வசிக்கும் இடத்தை நோக்கிப் புறப்பட்டாள். அது ஊருக்கு வெளியில் சற்று தூரத்தில் பாறைகளடர்ந்த ஓர் இடம்; அங்கு பழையகாலத்துக் கல்லறைக் குகைகள் பல காலியாக விருந்தமையால் குஷ்டரோகிகள் வெயில், மழை, இரவு காலங்களில் தங்குவதற்கு அவை வசதியான விடுதிகளாய் இயற்கையாகவே அமைந்திருந்தன. மரித்தவுடன் அடக்கம் செய்யப்பட்ட இடங்கள் கொடிய நோயுற்ற அம்மக்களுக்கு உறைவிடமானதும் ஆண்டவனனுக்கிரகமே. ஊருக்குத் தென் கோடியில் 'என்ரக்கல்' என்ற ஒரு பெரிய கிணறு இருந்தது. இதிலிருந்து தான் நகரவாசிகள் குடிப்பதற்காக ஜலம் கொண்டு போவார்கள். ஆனால் ஜலம் சேந்திக் கொடுப்பதற்கு பல வேலையாட்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். அவர்கள் ஒவ்வொருவரும் அவரவர் முறைப்படி கிணற்றிற்கு வந்து தமது வேலையைக் கவனித்துக்கொள்ளுவது வழக்கமாயிருந்தது. இக்கிணற்றோரம் போகும் பாதை வழியாகத்தான் குஷ்டரோகிகள் வசிக்குமிடத்திற்குப் போகவேண்டும். அமாரா கொண்டுவந்த கூஜாவில் தண்ணீர் ஊற்றலாமாவென கிணற்று வேலைக்காரன் கேட்டான். "இப்போது வேண்டாம்" என்று சொல்லி கூஜாவைக் கீழே வைத்துவிட்டு நாலா பக்கமும் சுற்றிப் பார்த்துக்கொண்டே நின்றாள். நகரத்திலிருந்து தண்ணீர் எடுத்துப் போகவரும் ஸ்திரீகள், கூட்டங் கூட்டமாக வந்தனர். தண்ணீர் இறைப்பவன் ஓய்வின்றி ஒவ்வொருவர் குடங்களையும் தண்ணீரால் நிரப்பிக் கொண்டே யிருந்தான். அச்சமயத்தில் சில குஷ்டரோகிகள் கிணற்றிற்கு 30 கெஜத்திற் கப்பால் பாத்திரங்களை முன்னால்

வைத்து நின்றுகொண்டு "ஐயா தண்ணீர், ஐயா தண்ணீர்" என்று சத்தமிட்டுக்கொண்டிருந்தார்கள். "வந்துவிட்டதடா சனியன்கள், விழுந்த பாடுமில்லை. ஒழிந்தபாடுமில்லை. இதெல்லாம் தொலைந்தால்தான் இந்த ஊருக்கு சேமம்" என்று சொல்லிக்கொண்டே தண்ணீர் இறைத்து அமராவின் பாத்திரத்தில் ஊற்றினுன்.

அந்நேரத்தில் "போகாதீங்க. இப்படி வாங்க, அங்கே போகப்படாது" என்று பல குஷ்டரோகிகள் சத்தமிட்டனர். தண்ணீர் இறைப்பவன் திரும்பிப் பார்த்தான். இரண்டு பெண் பிள்ளைகள் கையில் பாத்திரமில்லாமல் கிணற்றுக்கு சமீபமாக வந்துகொண்டிருப்பதைக் கண்டு சிறு கற்களை யெடுத்து அவர்களை எறிய முயன்முன். "ஐயோ பாவம்! அவர்களைக் கல்லா லடிக்காதே" எனக் கதறிக்கொண்டே அமரா அவர்களை உற்று நோக்கினுள். அவர்களின் தலை முடி நரைத்துப்போயிருந்தது. ஆனுல் அவர்கள் கிழியாத வஸ்திரங்களைஉடுத்தியிருந்தார்கள். குஷ்டரோகிகளின் ஒழுங்குகளைத் தெரிந்துகொள்ளாத புதிய ஆட்கள் போலத் தோன்றியது. என்றுலும் அவர்கள் யாரெனக் காணமுடியாத விதம் உருமாறியிருந்தனர். அவர்கள் யாராயிருக்கலாமெனவறிய அமரா அவர்களின் பின்னே சென்முள். அச்சமயம் அவ்விருவரில் ஒரு பெண் "அமரா" வென அழைத்தாள். "யார் என்னைக் கூப்பிட்டது?" என்று சொல்லி திகைத்து நின்றுள் அமரா. மறுபடியும் அப்பெண்மணி "அமரா" வென்ருள். அமரா பேராச்சரியமடைந்தவளாய் "நீ யார்?" என வினவினள்.

வாரரள்:— நீ யாரைத் தேடுகிருயோ அவர்கள் தான் நாங்கள்.

தனது எஜமானியின் குரலோசை யெனத் தெளிந்த அவ் வேலைக்காரி சரேலெனத் தரையில் முழந்தாட் படியிட்டாள்.

அமரா:— தேவி, என் சீமாட்டி, உங்களை நான் காணச் செய்த ஆண்டவனுக்கு கோடி நமஸ்காரம் (என்று சொல்லி முழந்தாளிலிருந்து கொண்டே முன்னே நகர்ந்து சென்ருள்).

ஸாராள்:- நில்லு அமரா, கிட்டவராதே. நாங்கள் குஷ்ட ரோகிகள்.

அமராவோ கைகளால் முகத்தைமூடிக்கொண்டு தேம்பித் தேம்பி பலமாய் அழுதாள். கிணற்றோரத்திலுள்ள ஸ்திரீகள் சகலரும் அப்பரிதாபமான காக்ஷியைக்கண்டு மனங்கலங்கினர்.

அமரா:- தாயே அம்மணி இந்த நோக்காடு உங்களுக்கு எப்படி வந்துச்சோ தெரியலியே.

ஸாராள்:- அந்த துஷ்டன் கிராட்டஸ், செத்து ஒழிந்து போகட்டுமென்று எங்களிருவரையும் குஷ்டம் பிடித்த ஒரு இருட்டறையில் போட்டடைத்தான். எட்டு வருஷமங்கிருந்தும் நாங்கள் சாகவில்லை. புது கவர்னர் வந்தவுடன் எங்களை விடுதலை செய்தார். மேலும்........

அமரா:- யூதா வீட்டிற்கு வந்திருக்கிறார்.

ஸாராள்:- ஆமாம், அவன் வந்திருப்பது எங்களுக்கும் தெரியும். முந்தாம் நாள் இராத்திரியில் நமது வீட்டு வாசற்படிக் கல்லில் படுத்துத்தூங்கிக்கொண்டிருந்ததையும் நீ அவனை எழுப்பியது முதலிய சகலத்தையும் நாங்கள் பார்த்துக்கொண்டிருந்தோம்.

அமரா:- அப்படியானால் நீங்கள் ஏன் எங்களிடம் வரவில்லை?

ஸாராள்:- நாங்கள் இந்த நிலைமையிலிருப்பதை அவனறிந்தால் அவனுக்கது ஆபத்தாக விருக்குமல்லவா. என்னருமை மகனை கைகளால் தொடவோ கட்டிப்பிடித்து அவனுக்கன்பாய் ஒரு முத்தம் கொடுக்கவோ பாவி யெனக்குப் பாக்கியமில்லாமல் போய்விட்டதே. அமரா, நீ உண்மையாகவே அவனை நேசிக்கிறாயா.

அமரா:- ஏனப்படிக் கேக்கிறீங்க. அவருக்காகவும் உங்களுக்காகவும் என் உயிரை வேண்டுமானாலும் கொடுக்கிறதுக்கு எப்பவும் தயாராயிருக்கிறேன்.

ஸாராள்:— அப்படியானல் நீ எங்களைப் பார்த்த விஷயத்தை யும் எங்கிருக்கிறோம் எப்படியிருக்கிறோ மென்பதையும் அவனி டம் தெரிவிக்காதே. எங்களைப் பிடித்திருக்கும் இக்கொடிய நோய் அவனையும் பற்றிக்கொள்ளப்படாது. நீ மட்டும் காலை யிலும் மாலையிலும் எங்களுக்குத் தேவையான ஆகாரம் முதலிய பதார்த்தங்களைக் கொண்டுவந்து கொடு. எனது செல்வ மகனைப் பற்றி எங்களிடம் அடிக்கடி தெரிவித்துக்கொண்டிரு. ஆனல் எங்களைப்பற்றி மட்டும் அவனிடம் ஒன்றும் சொல்லாதே ஞாபகம்.

அமரா:— அம்மா, ஓயாமல் உங்களிரண்டு பேரையுங்காண வேணும்னு ஏக்கமாயிருக்கிற யூதா கிட்டச் சொல்லாமே இருக் கணும்னு அது எப்படி முடியும்!

ஸாராள்:— அவனும் எங்களைப் போல குஷ்டரோகியாகப் படாதென்ற எண்ணம் உனக்கிருந்தால் யூதாவிடம் ஒன்றும் தெரிவிக்காதே. இன்று சாயங்காலம் வா, பேசிக்கொள் ளுவோம்.

அமராவும் தலையை அசைத்தாள். அவளது எஜமா னியோ முன்னே வைக்கப்பட்ட கூடையையும் தண்ணீர் ஜாடி யையும் எடுத்துக் கொண்டு மகளுடன் அப்பால் சென்றாள். சற்று நேரம் சென்று துக்கம் நிறைந்த முகத்துடன் வீட்டை நோக்கித் திரும்பினள் அமரா.

## II

வசந்தகாலம் துவங்கியது. மேற்கு திசைக் கடலிரு ந்து கிளம்பி யெழுந்து வீசிய சுகமான காற்று தேகத் திற்காரோக்கியத்தைக் கொடுக்க, யூதேயா நாட்டுமக்கள் சகல ரும் சந்தோஷமடைந் திருந்தனர். யூதாவோ தன் தாய் தங்கை இருக்குமிடம் தெரியாமல் வெகு கவலையுடனிருந்தான். அவனுக் குத் தெரியாமல் காலையிலும் மாலையிலும் அமரா அவன் தாய்க்கும்

தங்கைக்கும் தேவையானவைகளைக் கொண்டுபோய்க் கொடுத்து வந்தாள். தன் எஜமானியையும் திருஷாளையும் கொடிய பிணி பற்றிக்கொண்டதேயென்ற கவலை பிடித்தவளாய் சதா துக்கம் நிறைந்த முகத்துடனே காணப்பட்டாள். எவருடனும் அதிக மாய் வார்த்தையாடுவதுமில்லை. பன்னிப் பன்னிக் கேட்கும் யூதாவிடம் தனது எஜமானிகளின் உண்மை நிலையைப்பற்றிச் சொல்லவில்லை.

தனதருமைத்தாயைப்பற்றியும் தங்கையைப்பற்றியும்யாதொன்றும் அறிந்துகொள்ளமுடியாமல் அதனால்தனக்கேற்பட்ட அளவில்லாக் கவலையைமாற்றும் விதமாய் நம் கதாநாயகன் உத்தம நற்போதகர் நசரேனுவாகிய சேசுகிறீஸ்து காதர் விஜயம் செய்யும் ஊர்களுக்கு அடிக்கடி போவான். அத்தேவகுமாரனின் அரிய போதகங்களைக் கேட்டு மகிழ்வான். அவரியற்றும் அற்புத ஆச்சரியங்களைக் கண்டு ஆனந்தமடைவான். அவர்கூறும் ஆறுதல் மொழிகளைக்கேட்டு மனதை சமாதானப்படுத்திக்கொள்ளுவான். ஓர் நாளிரவு வெகுநேரமாகியும் யூதா வீட்டிற்கு வரவில்லை. அமராவின் மனதில் பலவித சந்தேகங்கள் கிளம்பின. தனது பிறப்பு, வளர்ப்பு பென்ஹூர் பிரபு தன்னை அடிமையாக வாங்கினது, அதின் பின் நடந்த சகல சுகதுக்கங்கள் நிறைந்த நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றும் அவள் மனதில் தோன்றின. துக்கம் தாழமாட்டாமல் கண்ணீருகுத்தாள். அங்கு யூதா வீட்டிற்குள் நுழைந்து வந்திருப்பதையுங் கவனியாமல் அழுதுகொண்டிருந்தாள். தன்னைக் காணாததால்தான் அவ்விதம் அழுகிறாளென நினைத்து அவளருகில் ஓடிவந்து அவளது கையைப் பிடித்து தூக்கி நிறுத்தினான்.

யூதா:— ஆயா, நீ ஏன் அழுகிறாய்? எவ்வளவோ தைரியசாலியாயிருந்த நீ பெரிய கோழையாக மாறி விட்டாயே. நான் உனக்கொரு நல்ல சமாச்சாரம் சொல்லப் போகிறேன். அழாதே எழுந்து போய் முகத்தைக் கழுவிக்கொண்டு வா.

ஒன்றும் சொல்லாமல் முகத்தைக் கழுவிக்கொண்டு அமரா அங்கு வரவே யூதாவும் கை, கால், முகம் சுத்தம்

செய்து புதிய உடைகளை யணிந்து அவள் தயாராகத் தன்னை எதிர்பார்த்துக் காத்திருக்கும் முன் கட்டிற்கு வந்தான்.

யூதா:— கதை கேட்கிறதென்றால் என் ஆயாவுக்குப் பிரீதி அதிகம்.

அமரா:— கதையும் வேணும் கிதையும் வேணும். நீ என்னமோ நல்ல சேதியின்னுயே அது என்னன்னு கேக்கலாம்னு வந்தேன். அதிருக்கட்டும் முதல்லே சாப்பாட்டை முடிச்சுக்கோ.

யூதா:— நான் சாப்பாட்டை முடித்துக் கொண்டுதான் அந்த ஊரைவிட்டுப் புறப்பட்டேன். நீ இன்னும் சாப்பிடவில்லையென்று தெரிகிறது. நீ போய் சாப்பிட்டு விட்டு வா. அதின் பிறகு பேசலாம்.

அமரா:— எனக்கு ஒடம்புக்கு நல்லா இல்லெ. சாப்பிடாமப் படுத்துக்கிட்டா நல்லது.

யூதா:— உனக்கு உடப்பு மட்டுமா நல்லாயில்லை. மனதுங் கூட சரியாயில்லையென்று நினைக்கிறேன். கூடிய சீக்கிரம் நம்மைப் பிடித்திருக்கும் கஷ்டகாலமெல்லாம் விலகிப்போகுமென்று எனக்கொருவித நம்பிக்கை யுண்டாகி யிருக்கிறது.

அமரா:— உனக்கு அப்படியிருக்கு, எனக்கோ உசுரு உடலை விட்டு எப்போ ஓடிப்போகுப்னு கவலெயாயிருக்கு.

யூதா:— அந்தக் கவலையெல்லாம் கூடியசீக்கிரம் ஒழிந்து போகும்; பயப்படாதே. நமது மனக்குறையைப்போக்க வல்ல நாதன் நாளைக்குக் காலை சுமார் 10மணிக்கு இந்த ஊருக்கு வருகிறார்.

அமரா.— யாரு? எந்த நாதன், எங்கிருந்து வாரார்? அவரால் நமக்கென்ன செய்யமுடியும்?

யூதா:— அவரால் சகலமும் முடியும். உலகத்திலுள்ள சகலபொருட்களையும் கீழ்ப்படியச்செய்யும் வல்லமையுள்ளவர். ஆகாசம், பூமி, ஜலம் முதலிய சகல பூதகணங்கள் அவர் உத்திரவிட்ட மாத்திரத்தில் கீழ்ப்படிகின்றன. "இம்" என்றவுடனே பேய்கள் தாம்பிடித்திருந்தவர்களை விட்டு "இதோ போகிறோம், போகிறோம்" என ஓலமிட்டு ஓடுகின்றன. சகலவியாதியஸ்தரும் அவர் ஆடையைத் தொட்டு சொஸ்தமடைகின்றனர். செத்துப் போனவர்களுக்கு உயிர் கொடுக்கிறார். சாகவிருந்த ஜெயிர் என்பவன் மகளை அவர் ஆச்சரியமான விதமாய்ச் சுணமாக்கியதையும், எரிக்கோ என்ற குருடனுக்குக் கண்ணொளி கொடுத்ததையும், நெடுநாளாக திமிர்வாதவியாதியால் அவஸ்தையுடன் படுத்த படுக்கையிலிருந்த ஒருவனைப் பார்த்து நீ எழுந்து உன் கட்டிலை எடுத்துக் கொண்டு உன் வீட்டுக்குப் போ என்றவுடனே அவன் எழுந்து அவ் வாண்டவரைப் புகழ்ந்து கொண்டாடி தான் படுத்திருந்த கட்டிலைத் தூக்கிக் கொண்டு போனதையும், ஐந்து அப்பத்தைப் பகிர்ந்து அவர் 5000 பேருக்கமுதளித்ததையும், குஷ்டரோகிகளை அவர் தொட்ட மாத்திரத்திலேயே அவர்கள் பூரண சுகமடைந்து தேவ தோத்திரம் செய்து கொண்டு போனதையும், மரித்துக் கல்லறையிலடக்கப்பட்ட இலாசருக்கு மூன்றும் நாள் உயிர் கொடுத்ததையும், இன்னும் இது போன்ற அனேக அதிசய அற்புதங்களையும் நானே நேரில் கண்டேன். அவர் இந்தப் பலஸ்தீன் நாட்டுப் பட்டணம் பட்டிக் காடுகளில் சுற்றித் திரிந்து மகா உன்னதமான போதகங்களை போதிக்கிறார். தப்பறைகளைத் தகர்த்தெறிகிறார். அஞ்ஞான குருட்டாட்டத்தை விரட்டியோட்டுகிறார். கள்ளக் குருக்களைக் கண்டிக்கிறார். பொய்ப் போதகங்களைத் தாக்கி அவைகளை அறவே யொழிக்க வெகு அதிகாரத்துடன் உத்திரவிடுகிறார். உண்மையாக ஆதிவேதப்பிரமாணத்தில் சொல்லப்பட்டிருக்கும் மனுக்குலத்தை இரக்ஷிக்க மனித வேடம் பூண்டு அவதரித்த மேசியா இவரே. இவர்செய்யும் ஒவ்வொரு கிரியையும் ஆச்சர்யத்தை யுண்டாக்குகிறது. அவரது அரிய செயல்கள் யாவரையும் பிரமிக்கச் செய்கிறது. அவர் புகலும் அமிர்த

வசனங்களோ கேட்பவர் மனதைப் பரவசப் படுத்துகின்றன. எவருடனும் இவர் ஒப்பிடப்படத்தகாத வராயிருக்கிறார். சிநேகம், பொறுமை, தாழ்ச்சி முதலிய நற்குணங்களைப் பூண்ட ஆண்டவனாயிருக்கிறார். தமது போதகங்களைச் சகலரும் மனதில் சதா சிந்திக்கும் விதமாய் பல உவமைகளைக் கொண்டு எடுத்துரைக்கிறார். உண்மையாகவே இவர் மனுவுருவெடுத்த தெய்வமென்பதில் ஆக்ஷேபணையில்லை. ஆனால் அவருக்கும் சத்திராதிகள் ஏற்பட்டுவிட்டார்கள்.

அமரா:– நீ சொல்றது வேடிக்கையாகத்தானிருக்கு. எல்லாருக்கும் உதவி செய்ற இவருக்குமா விரோதி இருக்காங்க?

யூதா:– ஆமாம், தன் தேசம், தன் ஜாதி, தன் மதம் என்ற பேதம் சிறிதும் பாராட்டாமல் சகலரையும் ஒரே சீராய் அளவிட்டுக் கருணையுடன் கடாக்ஷிக்கும் அப்புண்ணியவான் செய்யும் அரிய காரியங்களைக் கண்டு நமது யூத குருக்களும் பிரதான ஆசாரியனும் பொறாமை மிகக்கொண்டு அவரை எப்படியாவது கொன்றுபோட வேணுமென்று சதியாலோசனை செய்து கொண்டிருக்கிறார்கள்.

அமரா:– அவரைக் கொன்னு இவன்களுக்கென்ன புரோசனம்? காலங் கெட்டுப் போச்சு.

யூதா:– ஆமாம், காலமும் கெட்டுப்போச்சுது. உலகமும் கெட்டுப்போயிற்று. அதிலும் நம் யூதேயா நாடு முழுதும் கெட்டுப்போய்விட்டது. நன்மை பல செய்துவரும் நாயகன் இயற்றும் தெய்வீகச் செயல்களைக்கண்டு ஜனங்கள் அவரைப் பின்பற்றுவதையறிந்த துஷ்ட குருகுலத்தார், எங்கே "தமது அதிகார வல்லமைக்குக் கேடுவருமோ வெனப் பயந்து அப்புண்ணிய புருடனின் மேல் வீண் பழி சுமத்தி நாட்டின் சமாதானத்திற்கே தீங்கிழைத்து வருவதாக இராயனிடம் குற்றஞ்சாட்டிக்கொண்டு வருகிறார்கள்.

அமரா:- ஆமா, அவருக்குத்தான் தெய்வம் உதவியாயிருக்குன்னியே, அப்படின்னு இந்தப் பயலுங்களை உடனேக்குடனே ஒளிச்சிடலாமே.

யூதா:— ஆனால், அவர் போதகங்கள் மிகவும் உன்னதமானவை. 'உன் மாற்றானையும் நேசி' 'உனக்குத் தின்மை செய்பவருக்கும் நன்மை செய்.' 'நீ உன்னை நேசிப்பது போல் உன் பிறனையும் நேசி' என்கிறார். மனுக்குல இரக்ஷணியத்திற்காகத் தமது உயிரைக் கொடுக்கப் போவதாகவும் சொல்லுகிறார்.

அமரா:— அட பாவமே! எல்லாத்துக்கும் உதவியாயிருக்குறவர் செத்துப்போனா யாருக்கு நட்டம். மொதல்லே அவர் பொண்டாட்டி புள்ளெங்கதான் என்ன செய்யும். ஆமா, அவருக்கு எவ்வளவு சொத்து இருக்கும்?

யூதா:— ஆயா, அவர் பரமதரித்திரர். குடும்பஸ்தரல்ல, மூவாசைகளையுங் கடந்த ஞானி. தரித்திரம், நிறை, விரத்தத்துவம், துன்பம் என்னும் புண்ணியங்களையே அவர் அணிந்திருக்கிறார்.

"நரிகளுக்கு வளைகளும் ஆகாயத்துப் பறவைகளுக்குக் கூடுகளுமுண்டு. மனுமகனுக்கோ தலை சாய்க்க இடமில்லை" (a) என்று சொல்லுகிறார். அவர் கீர்த்தி, பேர், பெருமை எதையும் விரும்புகிறதில்லை. அவர் செய்யும் அபார செயல்களைக் கண்டு ஜனங்கள் அவரைப் பிடித்து தங்களுக்கு இராஜா வாக்கிக் கொள்ள முயற்சிப்பதை அவர் அறிந்து, மலையின் மேல் ஏறி சில காலம் தனிவாசம் செய்தாராம்.

அமரா:— அவர் எது வரைக்கும் படிச்சிருக்கார்?

யூதா:— படிப்பா? அவர் யாரிடமும் கல்வி கற்கவுமில்லை. எந்தப் பாடசாலையிலும் சேர்ந்து படிக்கவுமில்லையாம். படியாத இவருக்கு கல்வி கேள்விகள் எப்படி உண்டானதென்றே எல்லோரும் ஆச்சரியப்படுகிறார்கள். பள்ளிக்கூடத்தில் படியாத இவருக்கு இவ்வளவு மேன்மை ஏற்படுகிறதேயென்று அநேகர் காய்மகாரப்படுகிறார்கள். யூதகுருக்களின் குரோதம் நாளுக்கு

(a) மத்தேயு 8-20

நாள் அதிகரித்துக் கொண்டேயிருக்கிறது. "வானமும் பூமியும் ஒழிந்துபோம். என் வார்த்தைகளோ ஒழிந்து போகாது" (b) என்கிறார் அவர் சிஷர்களைப்பார்த்து "உலக முடிவு பரியந்தம் எந்நாளும் உங்களோடு கூட இருக்கிறேன்" (c) எனக்கூறுகிறார். "நானே நல்ல மேய்ப்பன். நல்லமேய்ப்பன் தன் ஆடுகளுக்காக தன் ஜீவனைக் கொடுக்கிறான்." (d) என்று சொல்லுகிறார் அவர் செய்யும் ஒவ்வொரு கிரியையும் வெகு அதிகாரத்துடன் செய்கிறார். உலகத்திலுள்ள வஸ்துக்கள் யாவும் சொன்னவுடனே கீழ்ப்படியும்படி செய்கிறார்.

அமரா:— அப்படீன்னு, அவர் பெரிய மந்திரவாதியாகத் தானிருக்கணும்.

யூதா:— சீ சீ பைத்தியக்காரி, உன் மண்டையில் களிமண் தானிருக்கிறது. சொன்னதை யெல்லாம் கவனியாமல் மந்திரவாதி என்கிறாயே. மந்திரவாதிக்கு தந்திரோபாயங்கள் அதிகம் உண்டு. அவனுக்கு நேரமுங் காலமும் வரணும். எங்கே விஷயம் வெளியாய் விடுமோ என்று பயப்படுவான். மந்திரங் கால் மதி முக்கால் இல்லாமல் அவனால் எதுவும் சாதிக்கமுடியாது. அவனுடைய செய்கை நேரத்திற்கொரு நிலைமையைக் கொடுக்கும். தலைவலியைக் குறிப்பிட்ட நேரத்தில் போக்கினாலும் இரண்டொரு தினங்களில் அது முன்னைவிடப் பதின் மடங்கு அதிகக் கொடூரத்துடனே திரும்பிவிடும். இம் மகானுடைய வேலைகளோ, அப்படிப்பட்டதல்ல. ஓர் எஜமானைப் போல உலகத்திலுள்ள சகல பொருட்களையும் அடக்கி ஆளுகிறார். புயற்காற்றைப் பார்த்து "நில்" என்றவுடனே அது நிற்கிறது. பிசாசுகளை நிமிஷ நேரத்தில் துரத்துகிறார். வியாதியஸ்தருக்குப் பூரணசுகம் கொடுக்கிறார். செத்துப்போனவர்களுக்கு உயிர் கொடுக்கிறார். குஷ்டரோகிகளை க்ஷணப்பொழுதில் முழுதுங் குணமாக்குகிறார். அவர் உண்மையாக நம்மை இரக்ஷிக்க மனிதனாய் அவதரித்த தெய்வம். அவரை நான் முழுதும் விசுவசிக்கிறேன்.

(b) மத்தேயு 24-35
(c) மத்தேயு 28-30 } (d) அருளப்பர் 10-11

அமரா:- அவரைக் காணுமலே, அவர் செய்யிறதாக நீ சொல்லுற புதுமையைப் பாராமலே, அவர் தெய்வமுனு நானும் நம்புகிறேன். நம்ப கவலையை அவசியம் தீப்பார். இன்னிக்குத் தான் எனக்கு நல்ல தூக்கம் பிடிக்கும். யூதா எங்கண்ணு, நீ ரொம்பக் கெட்டிக்காரன். அந்த ஆண்டவர் நம்ப ஊருக்கு வாராருன்னியே, அவரு எந்த வழியா வருவாரு?

யூதா—குஷ்டரோகிகள் தங்கியிருக்கும் மலைக்குச் சமீபமாக வந்து 'என்ரக்கல்' கிணறுப் பக்கம் போகும் பாதை வழியாக வருவார்.

அமரா:— அப்போன்னு, குஷ்டம் புடிச்சவுங்க எல்லாரும் சுகமா வாங்க,

யூதா— ஆமா, ஆமா, அதற்கென்ன சந்தேகம். அமரா நீ என் கூடவே வா. எல்லாத்தையும் நன்ருகப் பார்க்கலாம்.

அமரா— எனக்கு மூன்னாலே எந்திரிச்சினுத்தான் ஒன்னோடே வருவேன். இல்லாட்டி ஒனக்கு முன்னே நான் அங்கே ஓடிப் போவேன்.

யூதா—ஏ பைத்தியம், அவர் காலை 10 மணிக்குத் தான் வருவார். சாப்பிட்டுவிட்டு சாவகாசமாகப் போகலாம்.

அமரா:— என்னைத் தடுக்காதே. வெடியவும் நாம் போயிருவேன். காலையிலே எங்கேயாவது சாப்புட்டுக்கோ. எனக்கு அரை நாள் மட்டும் நீ லீவு குடுக்கனும்.

யூதா:— (வேடிக்கையாகச் சிரித்துக் கொண்டே) ஆயா, அரை நாள் மட்டுமல்ல. ஆறு மாதம் வேண்டுமானாலும் சரி. இல்லை, இல்லை, உன் வாழ்நாள் முழுவதுமே உனக்கு உபகாரச் சம்பளம் தருகிறேன். அப்புண்ணிய போதகரின் புத்திகளைக் கேட்டு அவரை நீ பின்பற்றினாலே உனக்குப் பெரும் பாக்கியம். எனக்குப் பேரானந்தம்.

யூதாவும் அமராவும் கவலை நீங்கியவர்களாய் அவ்விரவை ஆனந்தமான நித்திரையில் போக்கினர்.

---

# பதினாறும் அத்தியாயம்.

## சுகமும் சுபமும்

மறுநாள் அதிகாலையில் யூதாவிடம் சொல்லிக்கொள்ளாமல் அமரா வீட்டைவிட்டு ஊருக்கு வெளியே சென்று குஷ்ட ரோகிகள் வசிக்கும் மலையை அடைந்தாள். தனது எஜமானியும் மகளும் வசிக்கும் குகைக்குள் போய் நின்றாள். அவளைக் கண்ட தாயும் மகளும் ஆச்சரியமும் திகிலுங்கொண்டனர். அமராவோ சற்றும் நிதானிக்காமல் நெடுஞ்சாங்கிடையாய் அவர்கள் பாதத்தில் விழுந்தாள்.

"அடி பாதகி, அமரா உனக்குக் கிறுக்குப்பிடித்து விட்டதா என்ன! என்ன காரியம் செய்தாய். உனக்கே கெடுதலை உண்டுபண்ணிக்கொண்டாயே. இனி எங்களுக்கு உதவி செய்பவர்கள் யார்? என்னருமை மகனுக்கு உண்மையுடன் ஊழியஞ் செய்ய யாருண்டு? நீயும் கெட்டாய்: நாங்களும் கெட்டோம். இனி நாமெல்லோரும் செத்துமடிய வேண்டியதுதான்" என்றாள் ஸாராள்.

அமரா:- (சந்தோஷமான முகத்துடன்) தாயே, ஒங்க ரெண்டு பேருக்கும் நல்ல சேதி கொண்டாந்திருக்கேன். கோவிக்காதிங்க, நமக்கு நல்லகாலம் வருது, வந்துவிட்டது, ஆமா வந்திருச்சு.

திருஷாள்:- ஏ கிறுக்குப்புடிச்ச ஆயா, என்ன வந்திருச்சு? உனக்கும் குஷ்டம்தான் வந்துவிட்டது.

அமரா:- "தாயே, எனக்கு அது வந்தா வரட்டும். உனக்கும் அம்மாவுக்கும் அது மாறினப் போதும்."

(என்று சொல்லிக்கொண்டே அமரா திருஷாவைக் கட்டிப்பிடித்து முத்தமிட்டாள்.)

திருஷாள்:- அம்மா, அம்மா, ஆயாவுக்கு உண்மையாகவே கிறுக்குப் புடிச்சிருக்கு. ஓடிவந்து இவள் பிடிப்பிலிருந்து என்னை எடுத்து விடுங்க. என்னைக் கசக்கிப் பிளிந்திருவாள் போலிருக்கிறது.

அமராள்:- ஏ ராஜாத்தி, கோவிக்காதே, எனக்கு கிறுக்கில்லை: உன்னை நானு? ........ (என்று சொல்லிக்கொண்டே திருஷாவை விட்டுவிட்டு அவளது எஜமானியின் முன் முழந்தாட் படியிட்டாள்)

ஸாராள்:- அமரா, என்ன என்றுமில்லாத கூத்து இன்று!

அமரா:- அப்புறமுஞ் சொல்றேன்: இனி நம்பலுக்குப் பயமில்லை. சேசு சாமி அந்தப் பாதையிலே வரப்போரார்; ஜெருசலத்துக்கு வாரார். அவரு கண்ணால் பார்த்தாலே போதுமாம். எல்லாரும் கொணமாகுறுகளாம். குஷ்டம் புடிச்சவுங்க எவ்வளவோ பேரு சுகமாயிட்டாங்களாம்.

ஸாராள்:- உனக்கு இந்தக் கதையை யார் சொன்னது.

அமரா:—ஏன், யூதா தான் சொன்னார். அவரும் இன்னும் கொஞ்ச நேரத்திலே வந்திருவார்.

திருஷாள்:—என்ன! அண்ணா!! இங்கு வரப்போகிறாரா!! ஏனம்மா நம்மைப்பாத்தா அண்ணனுக்கு அடையாளம் தெரியுமா?

அமரா:—அவர் இங்கு வரமாட்டார். அந்தச் சாமியைப் பார்க்க வருவார்.

(ஸாராள்:—யூதாவா உன்னை இங்கனுப் பினான்)

அமரா:—அவருக்கு நீங்க எங்கே இருக்கீங்கன்னே தெரியாது. சாமி ஜெருசலத்துக்கு வந்ததும் கஷ்டம் தீந்து போகுமுனுமட்டுஞ் சொன்னர். வெள்ளென ஏந்து அவருக்குத் தெரியாமே நாமட்டும் வந்துட்டேன்.

ஸாராள்:—நீ கூறும் சேசுசாமிக்கு சொந்தவூர் எது?

அமரா:—அவரு புறந்தது பெத்லகமாம்.

ஸாராள்:—உலகத்தை இரக்ஷிக்க யூதர்களின் இராஜா பிறந்திருப்பதாக வானத்தில் தோன்றின நூதன நக்ஷத்திரத்தைக் கொண்டு சாஸ்திரிகள் வெளியிட, ஜெருசலத்திலும் யூதேயா நாடு முழுதுமுள்ள ஜனங்கள் பல வருஷங்களுக்கு முன் வெகு பிரமாதமாகப் பேசிக்கொண்டது என்ஞாபகத்திற்கு வருகிறது. நீ சொல்லும் சாமி அவராகத் தானிருக்க வேண்டும். இப்பொழுது அவருக்கு முப்பது வயதுக்கு அதிகமாகவே இருக்கலாம். ஆம், அவர்தான். நிச்சயமாய் அவர்தான்.

திருஷாள்:—அவர்தான், அவர்தான் என்றல் யாரம்மா அவர்?

ஸாராள்:—உலக மீட்பராக அவதரித்த ஆண்டவர் மேசியா தான் அவர். அடி கண்ணே திருஷா, நம் கஷ்டத்தை அவர் கடிதில் போக்கிவிடுவார். விரைவில் நமது பழய வீட்டிற்குப் போய்ச் சேருவோம். அங்கு யூதாவுடன் இனிது வாழும் நேரம் நெருங்கிக் கொண்டிருக்கிறது. இனி நமக்குக் கவலையில்லை. வா சுறுக்காய் சாப்பிட்டுவிட்டுப் போகலாம்.

இருவரும் உண்டபின் அமரா முன்னே செல்ல, தாயும் மகளும் அவளைப் பின்தொடர்ந்து சென்று ஒலிவேத்து மலையோரமாயுள்ள சாலையை அடைந்தனர். அங்கிருந்த ஒரு கற்பாரை யோரமாக நின்று சேசுக் கிறீஸ்து பெருமான் வரவை வெகு ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர்.

II

காலை பத்துமணிக்கெல்லாம் பெரியதொரு ஜனக்கூட்டங்காணப்பட்டது. ஜனங்களில் அநேகர் மரக்கிளைகளைத் தறித்து வழியில் பரப்பினார்கள். தங்கள் வஸ்திரங்களையும் விரித்தார்கள். சகலரும் ஒலிவ மரக்கொப்புகளைக் கையிலேந்தி "தாவீதன் குமாரனுக்கு ஓசன்னா! கர்த்தரின் நாமத்தால் வருகிறவருக்கு ஓசன்னா! உன்னத தேவனுக்கு ஓசன்னா! ஓசன்னா !" என்று செல்லி ஆர்ப்பரித்தனர். கூட்டத்தின் மத்தியில் அழகே உருவாய் அவதரித்த ஆண்டவர் சேசுக்கிறீஸ்து பெருமான் ஒரு கோவேறு கழுதையின் மேல் ஆரோகணித்திருந்தார். மாசற்ற அவரது திரு முகத்தின் ஜோதி ஒளி அவரைச்சூழ்ந்திருந்த சகலருடைய மனதையும் கவர்ந்திருந்தது. கூட்டம் பட்டணத்தை நெருங்க நெருங்க ஓசன்னா, ஓசன்னா என்ற பேரொலி மிகவும் பலமாக சப்திக்கலாயிற்று. ஜனங்கள் குருடர்களையும், செவிடர்களையும், மூடவர்களையும், நெடுநாள் நோயுற்றோரையும், பேய் பிடித்தவர்களையுங் கொண்டு வந்து நிறுத்தினார்கள். அருள்வடிவான ஆண்டவரும் அமைதியாய் சகலரையும் குணப்படுத்திக் கொண்டே சென்றார்.

இப்பெருங் கூட்டத்தின் ஒரு கோடியில் யூதாவும் ஒலிவ இலை தாங்கி பக்தி சிரத்தையால் ஆண்டவரைத் தோத்தரித்து 'ஓசன்னா' வென்ற கீதத்தைப் பாடிக் கொண்டிருந்தான். அவன் தாயும் தங்கையும் சற்றுதூரத்தில் நிற்பதையும் அவன் அறியவில்லை. அவனது தாய் "திருஷா, என் கண்மணி, அதோ பார், அந்த மகான் மேசியா வந்து விட்டார். வா, சீக்கிரமாய் இப்படிவா" என்றாள். இதற்குள் கூட்டம் நெருங்கிவந்துவிட்டது. "குழந்தாய், நாம் இன்னும் சமீபமாகவிருந்தால் தான் நமது சத்தம் அவருக்குக் கேட்கும். வேகமாய் வா" எனத் துரிதப்படுத்தினாள் ஸாராள். இந்நேரத்தில், திருஷாளுக்கு கால்களிலிருந்த இரணங்களின் வேதனை அதிகமாயிருந்தது. எழுந்து நடக்க முடியாமல் தள்ளாடிக் கீழே விழுந்தாள். அதன்பின் மயமாய்த் திகழ்ந்த நாதன் தமது திருக்கண்களால் அவர்களைக் கடாக்ஷித்தார். தாம் ஏறியிருந்த வாகனத்தை நிறுத்தினார். இதைக்

கண்ட ஸாராள் தன் மகளோடு அந்த விடத்திலேயே முழந் தாட்படியிட்டு "ஓ ஆண்டவரே! எங்கள் நல்ல தேவனே! எங்களுக்குற்ற துன்பத்தை நீர் அறிவீர். சித்தமிரங்கி எங்களைக் குணமாக்கும். எங்கள் மேல் இரக்கமாயிரும்" என்று கெஞ்சி மன்றாடினாள். "அப்படிச் செய்ய, வல்லமை எனக்குஉண்டு என்று நீ நம்புகிறாயா?" என வினவினார் சேசு பெருமான். "தீர்க்கதரிசிகளால் புகழப்பட்டவரும் நீரே, உலகத்தை இரக்ஷிக்க உருவாய் வந்த மேசியாவும் நீரே, உம்மால் சகலமும் முடியுமென்று உறுதியாக விசுவசிக்கிறேன்.' என்றாள் ஸாராள். "ஸ்திரீயே, உன் விசுவாசத்தைக் கண்டு மெச்சினேன். நீ விரும்புகிறது போல் உங்களிருவருக்கும் பூரணசுகம் உண்டாவதாக" எனக் கூறினார் சேசு கிறிஸ்து நாதர். தாயும் மகளும் அக் கணமே திரேகத்தில் நூதன பலம் உண்டாகியிருப்பதை அறிந்து ஆனந்தித்தனர். பவனியும் அவர்களைக் கடந்து போயிற்று. "உன்னத பர மண்டலத்திலிருக்கும் ஆண்டவருக்கே புகழ். அவர் நமக் கீந்த தேவ குமாரனுக்குத் தோத்திரம்! தோத்திரம்!! தோத்திரம்!!!" என்று பலத்த குரலுடன் தாயும் மகளும் ஆண்டவரை ஸ்துதித்தனர்.

கூட்டத்தின் கடாசி ஆளாகப் போய்க்கொண்டிருந்த யூதா சத்தம் வந்த திசையை நோக்கினான். விகாரமான தோற்றத்தையுடைய இரண்டு ஸ்திரீகளையும் அவர்களுக்கு முன்னால் அமரா நிற்பதையுங்கண்டான். "அமரா, அமரா இங்கென்ன செய்து கொண்டிருக்கிறாய்!" என்று கேட்டுகொண்டே அவர்களை அணுகினான். அமராவோ சந்தோஷத்தால் கண்ணீர் பிரவாகமாய்ச் சிந்தினாள். அவன் முன்னே மண்டியிட்டு பேச முடியாமல் மௌனம் சாதித்தாள். பின்பு "என் தங்கமே, எஜமானே, நீங்களும் நானும் கும்பிடுஞ்சாமி எவ்வளவு நல்லவர் என்று அளவிட்டுச் சொல்ல யாரால் முடியும்" என உரைத்தாள். அவளுக்குச் சற்று இப்பால் நிற்கும் ஸ்திரீயின் மேல் யூதாவின் பார்வை சென்றது. அவளினருகே நின்று கொண்டிருந்த மங்கையையுங் கண்டான். அவர்களை அறிய

முடியாமல் அமராவின் தலையில் ஒரு கையை வைத்த படியே ஸ்தம்பம் போல் நின்றான். "ஏன் இன்னும் யோஜனை அவங்கதான்...........என்று அமரா சொல்லி முடிக்கும் முன்னே, யூதா தன்னருமைத் தாய் தங்கையின் மீது விழுந்து அவர் களைக் கட்டிப் பிடித்து ஆனந்த பாஷ்பம் சொரிந்தான். அவ னது தாய் ஸாராளோ அவனது கைகளினின்று விடுவித்துக் கொண்டு பழய நினைவினால் "அப்பா மகனே, என் அருமைக் கண்மணி, நில்லு, நில்லு; எங்களைத் தொடாதே. நாங்கள் அசுத்த திரேகிகள்" என்றாள். "இன்னும் ஏன் சந்தேகம். அப் பரமநாதன் உங்களுக்குப் பூரண சுகம் கொடுத்திருக்கும் பொழுது நமக்கினி என்ன பயம்" என மொழிந்தான் யூதா.

மறுபடியும் மூவரும் ஒன்று சேர்ந்து கோவெனக் கதறி அழுதனர்.

யூதா:— அம்மா, நமக்கிவ்வளவு சந்தோஷத்தைக் கொடு த்த அவர் யார் என்பதை நீங்கள் அறிவீர்களா?

ஸாராள்:—ஏன் அவர்தான் உலகோருக்கு இறவாத இன் பத்தை ஈயும் மனுமகனான மேசியா; உலக ரக்ஷகர்!

யூதா:- தாயே, என்னை எட்டு வருஷங்களுக்கு முன் கைதி யாக்கி துஷ்ட உரோமர் கடுமையாகத் தண்டித்தனர். நஸரேத் தூருக்கருகில் அக்கொடிய துஷ்டர்கள் குற்றுயிராகும் வரை என்னை வதைத்தனர். அப்பொழுதுங் கருணை வடிவான இந் நாதன்தான் அங்குவந்து என்னைக் கடாக்ஷித்து ஆசீர்வதித்தார்; மேலும் துன்பம் செய்யாதிருக்க அச்சண்டாளர்களுக்கு நல் லுணர்வுங் கொடுத்தார். இப்பொழுதோ உங்களிருவருக்கும் நற்சுகம் தந்தார்: என் உயிரே போன்ற உங்களைக் கண்டடையக் கருணையும் புரிந்தார். அவரது அருட் பெரும் ஆற்றல் யாரால் அளவிட்டுரைக்க முடியும்! வாருங்கள் அந்த நற்போதகரின் பின்னால் நாமும் செல்லுவோம்.

அந் நால்வரும் வேகமாய் நடந்து ஜனங்களுடன் சேர்ந்து "ஓசன்ன! ஓசன்ன!" என்று ஆனந்தமாய் ஆண்டவரைக்கொண்டாடினர். "மனுக்குலத்தை மீட்கத் திருமேனி கொண்ட நாதா, ஞானங் கமழும் நற்போதா, நீக்கமற நிறைந்திருக்கும் அகண்ட பரிபூரணா, அநாதியாய் ஆனந்த வடிவாய் அத்தியந்தவியப்பும் அன்பின் பெருக்கும் செப்பரிய சர்வ ஞானமும் குறையாக் கரை காணா கருணை வள்ளலே, நித்திய நிமலனே, புண்ணிய நன் மாதிரியாய் நவமாய்த் திருப்போதக மூட்டும் நடு நாயகமே, பிறவா முதல்வனே, உண்மை மார்க்கத்தை உரைக்கப் பரகதி பாக்கியத்தின் உரிமையைக் கொடுக்க அன்பாய் அவதரித்த ஆனந்த வடிவழகா, தேவரீருடைய தெய்வ மகிமையையும் திருச் செயல்களையும் போற்றிப் புகழ்வது எவ்விதம்? அடியோருக்குத் தேவரீர் புரிந்திருக்கும் பெருதவிகளுக்கு எவ்வித நன்றி புரிவோம்" என இயம்பி பற்பல விதமாய் புகழ் கூறிக் கொண்டே சென்றான் யூதா. ஜனங்களும் உரத்த குரலோடு 'ஓசன்ன ஓசன்ன' வென்று உற்சாகமாக மொழிந்தனர். அக் கூட்டம் ஜெருசலமுக்குள் பிரவேசிக்கவே நகர மாந்தரும் அப்பவனியில் கலந்து கொண்டனர்.

யூதாவையும் அவன் தாய் தங்கையையுங் கண்ட யூதர்கள் மிகவும் சந்தோஷித்தனர். அவர்களுடைய மாளிகைக்குச் சென்று அவர்களுடன் ஆனந்தித்தனர்.

## III

இன்னும் என்ன சொல்ல வேண்டும்? பல நாட்கள் சென்று யூதா, தாய் தங்கையுடன் அந்தியோக்கியாப் பட்டணத்திலுள்ள சிமாண்டனிஸின் வீட்டிற்குப் போனான். சில மாதங்களின் பின் எஸ்தரை மணந்து கொண்டான். நம் கதாநாயகனின் தங்கை திருஷாளோ முல்லாவைக் காதலித்தாள். இதையறிந்த தாயும் யூதாவும் குலப் பெருமையை எண்ணாமல் முல்லாவுக்கே திருஷாளை மணமுடித்துவைக்க, அவ்விருவரும் இல் வாழ்க்கையை இனிது நடத்தலாயினர்.

ஷேக் இஷ்டரீம் பிரபுவோ பார்த்தியருடன் போர் புரிந்துகொண்டிருந்தார். அவர் போருக்குப் புறப்படுமுன் தமது கொட்டாரத்தையும் அத்துடன் சேர்ந்த பூஞ்சோலையையும் யூதா பந்தய இரதவோட்டத்தில் வெற்றிபெற்றதின் ஞாபகார்த்தமாக மண மக்கள் இருவருக்கும் சன்மானமாகக் கொடுத்தார்.

சுபம்!

அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்.
தமிழியல் துறை.

இப் புஸ்தகம் வேண்டுவோர் கீழ்க்கண்ட விலாசத்திற்கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம், தபால் சார்ஜ் பிரத்தியேகம்:—

Mr. வி. மரிய இருதயம் பிள்ளை,

இன்கம்டாக்ஸ் ஆபீஸ், காரைக்குடி.

(இராமநாதபுரம் ஜில்லா.)

பெங்கால்

எலெக்டிரிக் பல்புகள்

பாரத் விசிரிகள்

**G. E. C.**

பிரபல ரேடியோக்கள்

தினசரி உபயோகத்துக்கு தேவையுள்ள

**எல்லா சாமான்களும்**

**ஸ்டேஷனரிகளும்**

அநேக ஸ்வதேசி சாமான்களும்

மருந்துகளும்

கிடைக்கும் இடம்:-

ஸாரதா ஸ்டோர்ஸ்,

(A. V. அன் ஸன்ஸ் கட்டிடம்)

காரைக்குடி.

தந்தி:-"Aevisons" போன் நிர். 10.

பிராஞ்ச:- A. V. அன் ஸன்ஸ், பரமக்குடி. S. I. R.